வெளியீடு 12-2-2007

Issued 12-2-2007

757
12.06.07
13/06/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஆகஸ்ட் 10, 2006—தொகுதி 9—எண் 2**

**Thursday the 10th August, 2006 —Volume 9—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**islative Assembly Secretariat, Chennai - 600 009**

D
V 211, 31'P01
P06.9.2
227423

[Price Rs. 3.00

10-8-2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 259-281 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) 'எல்காட்' நிறுவன நில விற்பனையில் முறைகேடுகள் | 281-291 |
| (ஆ) தொட்டபெல்லூர் கிராம, விவசாயி ஒருவர் தற்கொலை செய்துகொண்டது | 291-294 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| பாலுசெட்டிசத்திரம் பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பம் மற்றும் காயமுற்றோருக்கு நிதியுதவி | 294-298 |
| **4. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 299-458 |
| * மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான் | 299, 339, 431-438 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. என். செல்வராஜ் | 319,339,340,342 352,409-431 |
| திரு. ஆர். வைத்திலிங்கம் | 339-345, 347-353 |
| *திரு. எல்.பி. தர்மலிங்கம் | 353-362 |
| *திரு. ஆர்.எம். பழனிசாமி | 362-370 |
| *திரு. கே.எல். இளவழகன் | 370-377 |
| *திரு. ப. டில்லி பாபு | 377-384 |
| திரு. தி. இராமசாமி | 384-389 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 389-394 |
| திரு. எஸ். மணி | 394-397 |
| திரு. இரா. இராம் பிரபு | 397-403 |
| *திரு. செ. தாமோதரன் | 404-409 |
| **5. அறிவிப்பு**— | |
| சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் உணவு விடுதிக்கு அனுமதி வழங்கிய கோப்பு பார்வையிடுதல்-முன்னாள் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து பத்திரிகைக்கு அளித்துள்ள செய்தியும், அது தொடர்பான உண்மை நிலையும் | 456-457 |
| **6. அரசினர் தீர்மானம்**— | |
| விதி 32–ஐத் தளர்த்தல் | 457 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 458 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 25, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்"

சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள், அவையின் நோத்தையும் நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 21, திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**21—**

### பேருந்து நிலையம்

**•579—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகள், தாம்பரத்தைக் கடந்து செல்வதால், அங்குள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தை நவீனமயமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக, தாம்பரம் நகராட்சிப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான இடத்தில், கணினி முன்பதிவு, தொலைபேசி, Wireless, பயணிகள் நிழற்குடை போன்ற வசதிகளுடன்கூடிய பேருந்து நிலையம் அமைக்கப்பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அப்பேருந்து நிலையத்தை நவீனப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகரத்திலே, பேருந்து நிலையத்திற்கு மட்டும், சற்றேறக்குறைய 4 இலட்சம் மக்கள் வந்து செல்கின்றார்கள். அதை இன்னும் நவீனப்படுத்திச் செயல்படுத்த முடியுமா என்று தங்கள்மூலமாகத் தெரிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான இடம். அதிலே நாம் அதிக அளவுக்கு எதையும் விரிவுபடுத்திச் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல; அங்கு நகர மன்றத் தலைவராக இருந்தவர். நல்ல தோதான இடம் மட்டும் அவர்கள் தருவாரேயானால், உரிய முறையிலே, பெரிய அளவிலே அந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தேசிய நெடுஞ்சாலையிலே இடம் கிடைப்பது என்பது மிகப் பெரிய கஷ்டம். இடப்புறத்திலே இரயில்வே இலாகாவுக்குச் சொந்தமான இடம் ஓரளவிற்கு இருக்கின்றது. வலப்புறத்திலே மத்திய அரசுக்குச் சொந்தமான இடம், மத்திய இராணுவத்திற்குச் சொந்தமான இடம் 30.6 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தைப் பெற, மாண்புமிகு [illegible] கடந்த மாதம் பாரதப் பிரதமர் அவர்களிடம், [illegible] பல்வேறு நலத் திட்டங்களுக்காக முக்கிய

227423
சென்னை-600 008



கோரிக்கைகள் வைத்ததிலே, அந்தக் கோரிக்கையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாகப் பரிந்துரை செய்யப்பட்டு, நம்முடைய முதல்வர் அவர்கள், பாரதப் பிரதமரிடம் அளித்திருக்கின்றார்கள். அந்த இடத்தை எப்படியாவது பெற்று, அந்தப் பேருந்து நிலையம் அமைக்க ஏற்பாடு செய்தால் தாம்பரம் மக்களுக்கு இப்போது இருக்கின்ற பிரச்சினைகளில் முக்கியமான பிரச்சினையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற அந்தப் பிரச்சினை தீரும் என்று பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. டி. ஆர். பாலு அவர்களும், இதற்கான முயற்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கடிதத்தை வைத்து, அங்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இடம் கிடைக்குமானால், மிகச் சிறப்பான ஒரு பேருந்து நிலையத்தை அங்கே உருவாக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியிலேயுள்ள அந்தப் பேருந்து நிலையத்தைச் சுற்றி ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளபடியால், அங்கே பொதுமக்கள் அதிகமாக அவதிக்கு உள்ளாகிறார்கள். அதேபோல், ஒரு நிரந்தர bus depot-ம் இல்லை. அங்கு bus depot இல்லாததால், அங்கே வந்துபோகிற, வெளியூரிலிருந்து வருகின்ற மக்கள், பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அதனால், அங்கே ஒரு bus depot அமைத்துத் தருவார்களா என்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—35

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தாம்பரத்தைப் பற்றியது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அங்கே ஆய்வு செய்து, அங்கு அந்த bus depot அமைந்தால், பயன்பெறும் அளவிலே இருக்குமானால், அதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஆகஸ்ட் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருந்தேன். அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சம்பந்தம் இல்லாதது. கேள்வி நேரத்தில் கேட்கிறீர்களே? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களுக்குச் செல்கிற விரைவுப் பேருந்துகளும், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் ஏராளமாக, தாம்பரம் வழியாகச் செல்கின்றன. சென்னையினுடைய நுழைவாயிலாக தாம்பரம் இருக்கிறது. அங்கே அதனால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. சாலை ஓரங்களிலே இந்தப் பேருந்துகளை நிறுத்துகிறபோது, நேராகச் செல்கின்ற வாகனங்கள், lorry-கள், car-கள் போன்ற வாகனங்கள் செல்வதற்கு மிகப் பெரிய இடைஞ்சலாக இருக்கிறது. விரிவாக்கம் அதிகமாகச் செய்யவில்லை என்று சொன்னாலும்கூட, ஏற்கெனவே, தாம்பரத்திலே இரயில் நிலையத்தின் உள்ளே வந்துசெல்வது போன்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, நம்முடைய நகரப் பேருந்துகள் உள்ளே வந்து செல்கின்றன; அதைப்போல, இதுபோன்ற விரைவுப் பேருந்துகளும், நெடுந்தூரம் செல்கிற பேருந்துகளும் செல்வதற்கு இரயில்வே துறையிடம் சொல்லி, கொஞ்சம் குறுகிய அளவாவது இடம் எடுத்து, பேருந்துகள் மட்டும் உள்ளே வந்து செல்கிற மாதிரியான ஓர் அமைப்பினை ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசு முயலுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுமுகம் வேலுவுக்கு வேண்டியவர். அவர் எங்களுக்கு வாங்கித் தந்தால், நிச்சயம் bus-களை உள்ளே விடுவதிலே எங்களுக்கு ஒன்றும் சிரமம் இல்லை. நிச்சயமாக உள்ளே விடலாம். முயற்சி எடுங்கள்; நாங்களும் உங்களோடு இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதிக்கு உட்பட்ட பொறையாரிலிருந்து, கும்பகோணம்,



2006 ஆகஸ்ட் 10]

நாகப்பட்டினம், சிதம்பரம், மயிலாடுதுறை இப்படிப் பல ஊர்களுக்குச் செல்லக்கூடிய பேருந்துகள் எல்லாம் வந்து செல்கின்றன. அங்கே பேருந்து நிலையம் வேண்டும் என்பது, அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. நிலமும் அரசு கையகப்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. பேருந்து நிலையம் எப்போது அமைக்கப்படும் என்று உங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையங்கள் அமைப்பது உள்ளாட்சித் துறையினுடைய பணி. உங்களுடைய கோரிக்கை, நமது உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

### பேருந்து வசதி

***656—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் நகரைச் சுற்றியுள்ள கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் நகரைச் சுற்றியுள்ள கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து நகரப் பேருந்துகள், தனியார் பேருந்துகள் மற்றும் Mini பேருந்துகள் ஆகியவைமூலம் போதிய நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வழியாக வரும் அரசுப் புறநகர் பேருந்துகள், மாணவர்களையும், பொதுமக்களையும் ஏற்றி இறக்கிச் செல்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வழியாக 256 நடைகளும், S.K.P. பொறியியல் கல்லூரி வழியாக 226 நடைகளும்,

அருணை பொறியியல் கல்லூரி வழியாக 136 நடைகளும், கலைக் கல்லூரி வழியாக 224 நடைகளும், நகரப் பேருந்துகள், தனியார் பேருந்துகள் மற்றும் Mini பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரைச் சுற்றிச் செல்லக்கூடிய பேருந்துகள் இல்லை. இப்போது சொல்கிற பேருந்துகள், அதிக அளவு பயணிகளை ஏற்றி வருவதால் மேற்கொண்டு யாரையும் ஏற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நகரை மட்டும் சுற்றிவரக்கூடிய பேருந்துகள் ஏற்கெனவே விடப்பட்டு, அவற்றை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே திருவண்ணாமலை நகரில் இந்தக் கல்லூரிகளையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தையும் இணைத்து நகரப் பேருந்துவிட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டால், புதிய பேருந்துகள் அந்தப் பகுதியிலே விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நகரப் பேருந்து விடப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பேருந்து விடும்போது, அதிக அளவிலே தொடர்ந்து வராததால், பொதுமக்கள் ஏறுவது சிரமமாக இருக்கிறது. ஆக நகரத்தைச் சுற்றி விடும்போது ஒரே நேரத்திலே 4 route-களாக விட்டு அந்தப் பேருந்துகளை இயக்கினால், நல்ல வருவாயும் கிடைக்கூடியதாக இருக்கும்; மக்களுக்கும் வசதியாக இருக்கும். ஆகவே, அப்படி 4 route-களைக் கொண்ட ஒரு town bus-ஐ நம்முடைய திருவண்ணாமலை நகரில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகள் பயன்பெறும்வகையிலே, தேவையான அளவிற்கு அதைப்பற்றிப் பரிசீலித்து, பேருந்துகள்விட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில், அரசு மருத்துவமனை, அடுக்கம்பாறை பகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இரவு நேரங்களில் பயணிகள் செல்வது பெரும் பிரச்சினையாக இருப்பதால், புதிய பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு இரவு நேரங்களில் town bus விடுவதை உறுதி செய்யமுடியுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் இதே கோரிக்கையை அவர்கள் எழுத்துமூலமாகத் தந்தார்கள். அது, அங்கிருக்கின்ற நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது; ஆய்வு செய்து, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முதலாக பள்ளி மாணவர்களுக்கு இலவச bus pass வழங்கி, கிராமப்புறத்து மாணவர்கள் படிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கிய, முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய ஆட்சியில், இப்போது மிக உட்பகுதியில் இருக்கிற கிராமப் பகுதிகளில் பேருந்துகள் இயக்கப்படுவது இல்லை. Mini பேருந்துகள் விடுகிற திட்டத்தை உருவாக்கி, போக்குவரத்து வசதிகளைப் பெருக்கியிருக்கிற இந்த அரசு, அப்படிப்பட்ட சிறிய கிராமங்களிலிருந்தும் சென்று படிக்கின்ற மாணவர்களுக்கு, இலவச bus pass வழங்கி, அந்த Mini bus-க்கு உரிய கட்டணத்தையும் அரசே ஏற்றுச் செலுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கொள்கை முடிவாக அரசு எடுத்து இருக்கிறது. நகரப் பேருந்துகளில் மட்டும்தான் அந்த bus pass-கள் ஆங்காங்கே வழங்கப்பட்டு வருகின்றன. குக்கிராமங்களில் செல்கின்ற இடங்களில் அந்த வசதிகள் தேவைப்படுமானால், ஆய்வு செய்து அதையும் உரிய முறையிலே அனுமதி பெற்றுதான் அதைச் செய்ய முடியும். உரிய முறையில் அனுமதிக்காக, இந்தத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் செல்லும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஆகஸ்ட் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் தொகுதியில், ஸ்ரீமுஷ்ணம் சிறப்புப் பேரூராட்சியிலிருந்து சிதம்பரம் மற்றும் சேத்தியாத்தோப்புக்கு, காலையில் 6–30–க்கு ஒரு பேருந்தும், அதனை அடுத்து சுமார் 9–00 மணியளவில் ஒரு பேருந்தும் இயக்கப்படுகின்ற காரணத்தால், பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும், பொதுமக்களும் கடுமையான நெரிசலில் சிக்கித் தவிக்கின்ற நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. புதிதாக வழித்தடங்களை இயக்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மானியக் கோரிக்கையிலே தெரிவித்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கு அவசியம் தேவை என்று எழுதித் தந்தாலும் அதை ஆய்வு செய்து, அப்படித் தேவை என்பது உறுதி செய்யப்பட்டால், உடனடியாக அங்கே பேருந்துகள்விட இயலும். இப்போது 17,000 பேருந்துகள் என்பதில் ஏற்கெனவே 1,100 பேருந்துகள், கிராமங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்துகள் எல்லாம் நகரத்தை நோக்கி வந்துவிட்ட காரணத்தால், அந்தக் கிராமங்களும் பயன்பெறத்தக்க வகையிலே புதிய பேருந்துகள் விடப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே, ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அங்கு பேருந்து விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் மூன்றடைப்பு ஒரு முக்கியமான இடம். மதுரை, நெல்லையிலிருந்து வருகிற bus-கள் அந்த மூன்றடைப்பிலும், நாங்குநேரியிலும் நிற்பதில்லை. அதற்கு நமது அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், எழுத்துமூலமாகவே தங்கள் பகுதியிலே எவ்வளவு பேருந்துகள் விட வேண்டும் என்று என்னிடம் தந்திருக்கிறார்கள். அங்கே மதுரை



2006 ஆகஸ்ட் 10]

போக்குவரத்துக் கழகத்திலே கொஞ்சம் பேருந்துகள் குறைவாக இருக்கின்றன; போதவில்லை. அதனால்தான் ஒருமாத காலத்தில் புதிய பேருந்துகள் வந்தவுடன், அந்தப் பகுதிக்குத் தேவையான பேருந்துகள் விடப்படும் என்று ஏற்கெனவே அவருக்குத் தெரிவித்திருக்கிறேன். வெகுவிரைவிலே, புதிய பேருந்துகள் வந்த பிறகு, அந்தப் பகுதிக்கு bus விரிவாக்கம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 23, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

## வீட்டு மனைகள்

***1364—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை போன்ற நகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றி விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரு நகரங்களிலே, வீட்டு வசதி வாரியம் பல ஆண்டுகளுக்கு முன்னாலே நிலத்தைக் கையகப்படுத்தி, இன்னும் அவை வீட்டு மனைகளாக மாற்றப்படாமல், வழங்கப்படாமல் இருக்கக்கூடிய மனைகள் எவ்வளவு? அவற்றை உடனடியாக முன்னுரிமை அடிப்படையிலே—ஏனென்றால் சில நேரங்களிலே இது Board-க்குதான் செல்ல வேண்டும்; Board தீர்மானம் போட வேண்டும் என்றெல்லாம் காலம் கடந்துகொண்டு வருகிற காரணத்தினாலே, அவரவர்கள் அதை ஆக்கிரமித்து விடுகிறார்கள். ஆகவே, இந்த ஆக்கிரமிப்பையெல்லாம் தடுக்கின்றவகையிலும்—இன்னும்

சொல்லப்போனால், ஆந்திராவிலே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் 2 ground இடமும், 10 இலட்சம் ரூபாய் வட்டியில்லாத கடனும் கொடுக்கிறார்கள். அதேபோல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையிலே அதுபோன்ற மனைகள் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—45

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, சென்னை சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகர்கோயில், விழுப்புரம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய நகரங்களில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள், வீட்டு மனைகளாக மேம்பாடு செய்யப்பட்டு, மாற்றியமைத்து, அவற்றையெல்லாம் வாரியம் விற்பனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், ஒருசில இடங்களில் சென்னை போன்ற நகரங்களில், இன்னும் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்படாமல், சிறிய பகுதிகள் ஆங்காங்கே துண்டு துண்டாக இருக்கின்றன. அதற்குக் காரணம், ஏற்கெனவே திட்டமிடுகிறபோது, யாராவது வழக்குமன்றத்திற்குச் சென்றிருந்தால், அந்தப் பகுதியை மட்டும் நீக்கிவிட்டு மற்றவை plot-களாகப் போடப்பட்டு, விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களுக்கும் இப்பொழுது விரைந்து செயல்பட வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, குறைகளைத் தவிர்க்க வேண்டும் என்று பார்க்கும்போது, அணுகு சாலைகள் தேவைப்படுகின்றன. அந்த முயற்சியில் இப்பொழுது வாரியம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. விரைவில் அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்திவிட்டு, அவற்றையும் விற்பனைக்குக் கொண்டுவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆந்திர சட்டமன்றத்தைப்போல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீட்டு மனைகள் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் முடிவு செய்வார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நகர், கே.கே. நகர், இந்திரா நகர் போன்ற பகுதிகளிலே இன்னும்கூட விற்கப்படாத மனைகள் இருக்கின்றன. சில மனைகள் தமிழ்நாடு Housing Board control-ல் இருக்கக்கூடிய காரணத்தினாலே,





அவற்றை அந்த Board-தான் வழங்க வேண்டும், அவற்றை நம்முடைய அமைச்சர், தன்னுடைய உரிமையைப் பயன்படுத்திக் கொடுக்க இயலாது என்ற நிலை இருக்கின்றது. ஆனால், Board என்று வைத்துக் கொண்டிருக்கிறபோது, கடந்த காலத்தில் பார்த்தோம் என்று சொன்னால், Board-இனுடைய ஒப்புதல் இல்லாமலேயே, பல மனைகள் வழங்கப்பட்டுவிட்டன. அதுவும் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டன என்றெல்லாம் இதே அவையிலே எழுப்பப்பட்டு, அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, அந்தவகையில் எவ்வளவு மனைகள் இன்னும் சென்னை, மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்குள்ளே விற்கப்படாமல் இருக்கின்றனவோ, அவற்றை உடனடியாக எடுத்து, இதுபோன்ற முன்னுரிமை அடிப்படையிலே வழங்குவதற்கு, அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அவருடைய மானியத்திலே, விரும்பத்தக்க, எல்லோருமே மகிழத்தக்கவகையிலே ஒரு அறிவிப்பைக் கொடுத்தார்கள். அதாவது எல்லாருக்கும், சட்டமன்ற உறுப்பினர் யாராவது service connection கேட்டால், உடனடியாக வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதேபோல இங்கே...(சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்தை பதிவு செய்கிறார். சட்டமன்ற உறுப்பினர் பெயரில் இணைப்பு இதுவரை இல்லாமல் இருந்தால், அவர்களுக்கு ஒரு முன்னுரிமை அளிக்கப்படும் என்றுதான் சொன்னேனே தவிர, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்று சொல்லவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே அடிப்படையிலே எந்தெந்த சட்டமன்ற உறுப்பினருக்குச் சென்னையிலே வீடோ, வீட்டு மனையோ இல்லை என்று சொன்னால், அதேவகையிலே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திரா நகரில், விரைவில் 42 ground இடங்கள் ஏல முறையில் விற்பனை செய்வதற்கு, பத்திரிகையில் அறிவிப்பு வரும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கலந்துகொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஆகஸ்ட் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக, முகப்பேர், நொளம்பூர், அண்ணா நகர், இந்திரா நகர், சாஸ்திரி நகர் இன்னும் தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு இடங்களிலே நிலங்கள் கையகப்படுத்தப்படும் என்று 4(1) Notice கொடுக்கப்பட்டு, அந்த 4(1) Notice—க்குப் பின்னால், எந்தப் பணியும் நடைபெறாமல் அப்படியே இருக்கிறது. சிலர் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த 4(1) Notice-க்குப் பின்னால், அரசாங்கத்திலே அனுமதி பெற்று, அந்த நிலங்களை அவர்களே பெற்றுக் கொண்டு, அதற்குப் பின்னாலே அவர்கள் plot போட்டு விற்றுவிட்டார்கள். இன்னும் சில இடங்களில் N.O.C. பெற்றிருக்கிறார்கள். சில இடங்களில் வசதி இல்லாதவர்கள், ஏழைகள் N.O.C. பெற முடியாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு N.O.C. கொடுக்க அரசு ஆவன செய்யுமா; அதேபோன்று, அந்த மனைகளுக்கு N.O.C. கொடுக்க முடியாவிட்டால், அந்த வீட்டு மனைகளை, மனைகளாகப் பிரித்து, C.M.D.A. அப்ரூவல் பெற்று, பொது ஏலத்திலே விற்பனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பிரச்சினை, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறபோது, முதல் கட்டமாக 4(1) Notice கொடுக்கப்படுகிறது. அடுத்த கட்டமாக, 6 ஆம் number notice கொடுக்கிறபோது, Award pass செய்யப்படுகிறது. இந்த நிலையில் பலபேர் வழக்குமன்றத்திற்குச் செல்கின்ற காரணத்தினால், அவற்றையெல்லாம் உடனடியாகப் பிரித்து, வீட்டு மனைகளாகப் பிரித்து, விற்பனைக்குக் கொண்டு வரமுடியாத சில சூழ்நிலைகள் இருந்தன. எனவே, வழக்குமன்றத்திலே நிலுவையில் உள்ள அதுபோன்ற இடங்கள் காலியாக இருக்கின்றன. இன்னும் சில இடங்கள் குறித்து, வழக்குமன்றத்திற்குப் போயிருந்த சிலபேர், என்னைச் சந்தித்து, 'வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறோம்' என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அவையெல்லாம் அதிகாரிகளைக் கொண்டு



2006 ஆகஸ்ட் 10]

பேச்சுவார்த்தைமூலம் பேசப்பட்டு வருகின்றன. விரைவில் அதற்கெல்லாம் ஒரு நல்ல தீர்வு காணப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கையகப்படுத்துவதற்கு 4(1—ஏ) Notice வழங்கியபின்பும், அந்த இடங்களை, அந்த இடத்தினுடைய உரிமையாளர்கள் வீட்டு மனைகளாக—unapproved lay-out ஆகப்—பிரித்து 20, 30 ஆண்டுகளுக்குமுன் விற்றுவிட்டார்கள். அந்த இடங்களில் அனைவரும் வீடுகளைக் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதுபோன்ற பகுதிகளுக்கு வாரியம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதையும், இந்த 4(1—ஏ) Notice—ஐ எதிர்த்து வழக்காடுகின்ற நில உரிமையாளர்கள்மீது, வாரியத்தின் சார்பில் முறையான வழக்கறிஞர்களை வைத்து வழக்காடாமல் விட்டதால், கடந்தகாலங்களில் பலபேர் அதிலே கூடுதலாக அந்த இடங்களைப் பெற்றிருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது; அதுபோன்ற இடங்களைப் பெற மீண்டும் 4(1—ஏ) notice வழங்க முடியுமா; அதுபோன்ற குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், கடந்த ஒன்றரை மாத காலமாக கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மூன்று வகையாக நாங்கள் வகைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒன்று commercial flats; எங்கெல்லாம் வணிக வளாகங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு உள்ளதோ, அவற்றை ஒரு பகுதியாகவும், வீட்டு மனைகளாக உருவாக்கப்படவேண்டியவை இரண்டாவது வகையாகவும், மூன்றாவதாக உள்ள இடங்களில் flats கட்டவேண்டியது என்றும், எந்த இடத்திலே flats கட்டினால் உடனடியாக விற்கமுடியும்; எங்கே வீட்டு மனைகளாகப் போட்டால் உடனடியாக விற்க முடியும் என்றும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டு வருகிறது. அந்த வேலை முடிந்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல இதுபோன்ற குளறுபடிகள், சிக்கல்கள் அனைத்தும் தீர்த்து வைக்கப்படும். யாரேனும் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான

[2006 ஆகஸ்ட் 10

இடத்தை ஆக்கிரமித்திருந்தால், அவர்கள்மீதும் இந்த அரசு தைரியமாக, உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தொகுதியிலே, 413 நபர்களுக்கு, ஆதி திராவிடர் மக்களுக்கு, நிலம் ஆர்ஜிதம் செய்து, அதிலே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஒரு வீடு, ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 4 கோடியே 13 இலட்சம் ரூபாயில் வீடுகள் கட்டுவதற்கு tender விடப்பட்டுள்ளது. தேர்தல் காரணமாக அந்தப் பணி துவங்கப்படாமல் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணியைத் துவங்குவதற்கும். அந்த இடத்திலிருந்து பெயர்ந்து, ஆதி திராவிடர் மக்கள் சென்றுவிட்டால் bus-stand விஸ்தரிப்புக்கு, N.H. Road 209-லே இருக்கக்கூடிய அந்த இடம் மக்களுக்குச் சௌகரியமாக இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பிருக்கும் என்பதால், அந்த மக்கள் வேறு இடத்திற்குச் செல்வதற்கும், அந்த மக்கள் அங்கே குடியமர்வதற்கு வீடுகள் கட்டித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற தகவல் சரியானதாக இருந்தால், உடனடியாகத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 24, திரு. கே.வி. ராமநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

### குடியிருப்பு வசதி

***1671—திரு. கே.வி. ராமநாதன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஆகஸ்ட் 10]

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, புனாட்சி ஊராட்சி, மணக்காடு காலனியில் நிலம் வழங்கி வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பவானி தொகுதிக்குட்பட்ட புனாட்சி ஊராட்சியில், மணக்காடு காலனியிலே வசிப்பவர்கள், வீடு இல்லாமல், இடம் இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வீட்டிடம் வழங்கி, வீடு கட்டித் தர அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புனாட்சி ஊராட்சிக்கு உட்பட்ட ஒரு துணை கிராமம், மணக்காடு என்பது. எனவே, சின்னஞ்சிறு சிற்றூர்களில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் நிலத்தைக் கையகப்படுத்தி, பெரிய திட்டங்கள் தீட்டுவதற்கு வாய்ப்பில்லை. குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலே, இப்போது மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலேதான் இந்தத் திட்டங்களின்கீழ் செய்வதற்கு அமலில் இருக்கின்றன. எனவே, இப்போதைக்கு எடுத்துச் செய்ய இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் குடிசைகளில் வாழ்கின்றவர்களுக்கு மத்திய அரசு 80 சதவீதமும், மாநில அரசு 20 சதவீதமும் மூலதனத்தில்—கிட்டத்தட்ட மத்திய அரசு கொடுக்கின்ற நிதியை இலவசமாகவே கொடுத்து—VAMBAY Scheme என்ற திட்டத்தின்கீழ் புதிய வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற பணி நடைபெற்று வருகிறது. கடந்தகாலங்களில், மத்திய அரசு ஒதுக்கிய நிதியில்

[2006 ஆகஸ்ட் 10

கிட்டத்தட்ட 10 சதவீதத்திற்கும் குறைவான வீடுகளே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு டாக்டர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில், மத்திய அரசு ஒதுக்குகின்ற நிதியை முழுமையாகப் பயன்படுத்தி, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் குடிசைகளில் வாழும் ஏழையெளிய மக்களுக்கு, முழுமையாக, வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே மாநில அளவில் எவ்வளவு வீடுகளைக் கட்டவிருக்கிறோம் என்ற பதிலைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். 2013 ஆம் ஆண்டுக்குள் அந்தத் தகுதி உள்ள இடங்களில் எல்லாம் வீடுகள் கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தமிழகம் முழுமையுமாக இருக்கின்ற காலனிகளில், தொகுப்பு வீடுகள், ஒரு பஞ்சாயத்திற்கு 10 வீடுகள் என்று கொடுக்கிறார்கள். ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகுதான், மறுபடியும் அவர்களுக்குப் பத்து வீடுகள் கிடைக்கும் என்கின்ற நிலையிருக்கின்ற காரணத்தினால், காலனிகளிலே வசிக்கின்ற மக்களுடைய வீடுகளை, குடிசைப் பகுதிகளாக இருக்கின்ற அவற்றைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் எடுத்துக்கொண்டு, அவர்களுக்குக் கல்லாலான வீடுகளைக் கட்டித் தருவதற்குரிய திட்டம் ஏதேனும் அரசிடம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது, உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்டது. எனவே, குடிசை மாற்று வாரியத்திற்கு அப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கு இப்போது வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட, கோவை மாநகர் செல்வபுரம் பகுதியிலே, வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகள் பழுதடைந்து, அவற்றின் மேற்பகுதி கீழே விழுகின்ற அபாயம்



2006 ஆகஸ்ட் 10]

இருக்கிறது. அங்கு வசிக்கின்ற கீழ்த்தட்டு மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவற்றைப் பழுதுசெய்ய, அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக வீட்டு வசதி வாரியம் இதுபோன்ற பணிகளை மேற்கொள்ளவில்லை. புதிய இடங்களை உருவாக்குவது, புதிய திட்டப் பணிகளை மேற்கொள்வது அல்லது வீடுகளைப் பழுது நீக்கம் செய்வது போன்ற பணிகளைச் செய்யவில்லை. எனவே, இந்த ஆண்டு எங்கெல்லாம் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் பழுது நீக்கம் செய்யப்பட வேண்டுமோ, பழுது நீக்கம் செய்யப்படும். அதே நேரத்தில் எங்களுடைய பளுவைக் குறைத்துக்கொள்கின்ற வகையில், வீட்டு வாடகையும் உயர்த்தப்படலாம் என்பதும் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால், என்னுடைய திருப்போரூர் தொகுதியிலுள்ள மறைமலை நகர், திருக்கச்சூர் பகுதிகளில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வணிக வளாகம், யாருக்கும் பயன்படாமல் பூட்டியே உள்ளது. அதேபோன்று, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, திருக்கச்சூர் பகுதியிலும், காட்டாங்கொளத்தூர் பகுதியிலும் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு, பொது மக்களுக்குப் பயனில்லாமல் இருக்கிறது. இவை பொது மக்களுக்குப் பயன்படும்வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 10–00

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை மாலை 4.00 மணி அளவிற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய அலுவலக அறைக்கு வருகை தருவார் என்றால், அந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று, துறை அதிகாரிகளோடு பார்வையிட்டு என்ன செய்ய முடியும் என்பதை ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

## கண்ணகி கோயில்

***87—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேனி மாவட்டம், கூடலூர் அருகில் கேரளா எல்லைக்குள் உள்ள கண்ணகி கோயிலுக்குத் தமிழர்கள் செல்வதற்கு, கேரள அரசு தடை விதித்திருப்பது குறித்து அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், தடையை நீக்கிட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கூடலூர் கிராம எல்லைக்குள் "வண்ணத்துப்பாறை" என அழைக்கப்பெறும் மலைப் பகுதியின் உச்சியில் சுமார் 5,000 அடி உயரத்தில் கண்ணகி கோட்டம் எனும் "மங்களா தேவி" கோயில் அமைந்துள்ளது. மேற்படி கோயில் தமிழ்நாட்டு எல்லைக்குள் அமைந்திருந்தபோதிலும், கோயிலுக்குச் செல்லும் பாதை, கேரள வனப் பகுதியில் உள்ளதால், கேரள அரசின் அனுமதி பெற்றுச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இருப்பினும், ஒவ்வோராண்டும், சித்ரா பௌர்ணமி அன்று மட்டும், தடையின்றி வழிபாடு செய்யும்பொருட்டு, தமிழகம் மற்றும் கேரள அரசின் அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் தேக்கடியிலிருந்து கண்ணகி கோயில் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள, அந்தக் கோயிலுக்குச் செல்லும் வழியில், 4 Check Post-கள் உள்ளன. கடந்த முறைகூட, இந்து அறநிலையத் துறை அதிகாரி அவர்கள், செயலாளர் அவர்கள் அந்தக் கோயிலுக்குச் சென்றபோது, செல்லக் கூடாது என்று தடை விதித்தார்கள். பின்பு, கேரள மாநில அந்த மாவட்ட ஆட்சியரிடமும், மாவட்ட வனத் துறை அலுவலரிடமும் அனுமதி பெற்று, அந்தக் கோயிலுக்குச் சென்றபோது, கேரள வாகனத்தில்தான் செல்ல வேண்டும்; தமிழ்நாடு அரசு வாகனத்தில்



செல்லக் கூடாது என்று தடை விதித்தார்கள். ஆகவே, முல்லைப் பெரியாறு பிரச்சினையில் இருக்கின்ற சிக்கலைப் போல, இந்தச் சிக்கலையும் தீர்வு செய்து, அந்த வழியில் செல்வதற்கு, அந்தத் தடையைத் தளர்த்துவதற்குண்டான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கண்ணகி கோயில் அமைந்திருப்பது தமிழ்நாட்டினுடைய எல்லையாக இருந்தாலும், அங்கு செல்ல வேண்டுமானால், தேக்கடி சென்று, அங்கிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு, Jeep-இல்தான் பயணிக்க முடியும். ஆகவே, அந்தச் சாலை, கேரள வனப் பகுதியில் அமைந்திருக்கிறது. வனச் சட்டதிட்டங்களின்படி முறையாக அவர்களிடத்தில் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை உறுப்பினரும் நன்கு அறிவார்கள். ஏற்கெனவே 1893—வது வருடம் மேற்கொள்ளப்பட்ட survey-இன்படி தமிழ்நாடு அரசுக்குப் பாத்தியமான இடத்தில்தான் கோயில் அமைந்திருக்கிறது. இது, இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட எல்லைப் பிரச்சினை என்ற காரணத்தாலும், வனப் பகுதியாக இருக்கிற காரணத்தாலும், ஆண்டுதோறும் அன்றாடம் அங்கே பக்தர்கள் சென்று வருவதற்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலை. காரணம், இக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதி, தமிழ்நாடு மற்றும் கேரள வனப் பகுதி; பெரியார் புலிகள் சரணாலயப் பகுதியிலும் அமைந்துள்ளது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1917 ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி நடத்திய 1893—1896—ல் நடத்தப்பட்ட survey-இலும், 1917-ல் சர்வேயிலும், எல்லைகாட்டும் வரைபடத்தில் நடத்திய survey-இலும், அது தமிழ்நாட்டிற்குத்தான் சொந்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1959 ஆம் ஆண்டுவரைக்கும், அதிலே கண்ணகி கோயில் தமிழ்நாட்டில்தான் உள்ளது. அதற்கான பிரச்சினை, கேரள அரசுடன் அப்போது எழவில்லை. ஆனால், 1976 ஆம் ஆண்டு அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போது கூடலூரில், சீரமைப்புக் குழு ஒன்று, அன்றைக்கு முதல்வராக இருந்த மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்களைச் சந்தித்தபோது, அவரால் சாலை அமைப்பதற்காக

[2006 ஆகஸ்ட் 10

20 இலட்சம் ரூபாய் தரப்பட்டு, அது பாதியிலேயே நின்றதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில், அந்தச் சாலையைப் பயன்படுத்துவதற்கு, கேரள அரசு தடை செய்யுமானால், இன்னொரு வாய்ப்பும், வழியும் வசதியும் இருக்கின்றது. கூடலூரில், பளியங்குடியிலிருந்து அந்தக் கண்ணகி கோயிலுக்குச் செல்கின்ற ஒரு வழி இருக்கின்றது. அதற்கு மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்ஜி.ஆர். அவர்கள், ரூ.60 இலட்சம் ஒதுக்கி, அந்தத் திட்டம் இன்னும் நிறைவேறாமல் இருக்கின்றது. 6.42 கிலோமீட்டர் கொண்ட அந்தப் பாதை, வனப் பகுதிக்குச் சொந்தமான பாதை. மரங்கள் இல்லை; புல்வெளியாகத்தான் இருக்கின்றது. 1915, 1935 ஆகிய அந்த வனத் துறை வரைபடத்திலே தெளிவாக இது footpath என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. எனவே, கேரளா வழியே செல்கின்ற அந்தச் சாலையை நம்மால் பயன்படுத்த முடியாவிட்டாலும்கூட, பளியங்குடியிலிருந்து கண்ணகி கோயிலுக்குச் செல்கின்ற அந்தச் சாலையைச் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா என்று நான் உங்கள்மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து, இந்தக் கோயிலுக்கு நடைபாதைமூலமாகச் செல்வதற்கு ஒரு வழி இருக்கின்றது. தமிழ்நாட்டு எல்லையிலுள்ள பளியங்குடி கிராமத்திலிருந்து, ஏழு கிலோ மீட்டர் தூரத்திற்கு 12 அடிக்கு அகல நடைபாதை உள்ளதாக, இன்றைக்கும் கிராமப் பதிவேடுகளில் விவரங்கள் உள்ளன. ஆனால், அது மிகவும் செங்குத்தான மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், அதன் வழியாக பெண்கள் மற்றும் வயதானவர்கள் நடந்து ஏறிச் செல்வது மிகவும் சிரமமானதாகக் கருதப்படுவதாலும், இப்பகுதி வழியாகச் சாலை ஒன்று போட, கடந்த 1976 ஆம் ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பிறகு அது கைவிடப்பட்டுள்ளது. தற்போது, கேரள அரசு, jeep செல்கின்ற பாதையாக, அவர்களுடைய வனப் பகுதியில் சாலை அமைத்துள்ள காரணத்தால், தமிழகப் பகுதியிலிருந்து மற்றொரு சாலை, இக்கோயிலுக்கு அமைக்க வேண்டிய அவசியம் இல்லையெனக் கருதப்படுகிறது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் க. அன்பழகன்.



2006 ஆகஸ்ட் 10]

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், பூம்புகாரில் நம் உயிரினும் மேலான தலைவர் முதல்வர் அவர்களுடைய உணர்வுபூர்வமான திட்டமாக, பூம்புகாரின் கடற்கரையை ஒட்டியமைந்துள்ள கற்புக்கரசி கண்ணகியினுடைய சிலையை, அறநிலையத் துறைமூலம் எடுத்து, கண்ணகிக்குக் கோயில் என்ற வழிபாட்டுத் தலம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால், பதில் அளிப்பேன் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மிக முக்கியமான கேள்வி, விவாதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கண்ணகி கோயிலுக்குச் செல்வதைக் கேரள அரசு தடை செய்வதுபற்றி இங்கே கருத்து சொல்லப்படுகிறது. குறிப்பாக, நேற்றைய முன்தினம் நடைபெற்ற வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது, இங்கே அந்தக் கருத்துக்களை நான் வலியுறுத்தினேன். நமது மாநில எல்லைகளை வரையறுப்பதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும். அதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, ஒகேனக்கல்லில் அதே பிரச்சினை இருக்கிறது; குற்றாலம் பகுதியில் அதே பிரச்சினைகள் இருக்கின்றன. இப்படிப் பல இடங்களில் அந்த எல்லை வரையறைப் பிரச்சினைகள்; அவற்றைத் தீர்வு காண்பதற்கு ஒரு சுமூகமான முயற்சியை நம்முடைய தமிழ்நாடு அரசு எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தப் பிரச்சினையைப் பேசுகிறபோது, இது சூடாக மாறிவிடாத ஒரு எச்சரிக்கைத் தன்மையோடு அணுகவேண்டிய நிலை இருக்கிறது என்பதை நானும் உணர்கிறேன். ஆனால், கோயில் என்று சொல்கிறபோது, கேரள மாநிலத்திலோ, ஆந்திர மாநிலத்திலோ பல்வேறு முக்கிய கோயில் வழிபாடுகளுக்கு, நம்முடைய தமிழக மக்கள்தான் அதிகமாகச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அப்படி அங்கேயெல்லாம் செல்கிறபோது, அது வருமானம் வருகிற காரணத்தினாலே அனுமதிக்கப்படுகிறது. இந்தக் கண்ணகி கோயில் என்பது, ஒரு வழிபாட்டுக்குரிய இடம் என்று உரிமையோடு நாம் வழிபாடு செய்யும்

முயற்சியை எடுக்கிறபோது, தடுக்கப்படுகிறது என்று சொன்னால், இதைப்பற்றிய ஒரு தனித்த முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, நம்முடைய தமிழர்கள் அங்கே வழிபாடு செய்வதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்பதோடு, அந்தத் தடையை நீக்குவதற்கான முயற்சியையும் எடுக்கவேண்டும். தேவையானால், நம்முடைய உரிமையை நிலைநாட்டுகின்ற வகையிலே, ஒரு தனிப் பாதையை அமைப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்குமானால், அதைப்பற்றியும் இந்த அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், திரு. சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அண்டை மாநிலங்களோடு சுமூகமான உறவுகளை வைத்துக்கொண்டு, நமக்குத் தேவையான காரிய அனுகூலங்களைப் பெறுவதிலே எப்போதும் கவனமாக இருப்பார்கள் என்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, இந்த எல்லைப் பிரச்சினையிலும், அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தி, அந்தக் கோரிக்கைகளுக்கு, உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பார்கள் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த இந்த மண்ணில், ஆங்காங்கே புற்றீசல்கள்போல், வேப்ப மரக் கோயில்களும், தெருவோரக் கோயில்களும் உருவாகி, கிராமப்புறத்திலே இருக்கிற அறியாமையில் வாழ்கிற அந்த மக்கள், தங்களின் நேர்த்திக் கடன் நிறைவேற வேண்டுமென்பதற்காக, பச்சிளங் குழந்தைகளை நரபலி கொடுக்கின்ற ஒரு கொடுமை, இந்த மண்ணிலே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட, கடந்த மாதம் ஒரு நரபலி சம்பவம் ஏற்பட்டு, மிகப் பெரிய சர்ச்சைக்குள்ளாகி, குற்றவாளிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன், மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை.





**திரு. தி. வேல்முருகன்:** இல்லை, இல்லை. இது சமூகப் பிரச்சினை. இதற்கு மூலக் கேள்வி தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை.

**திரு. தி. வேல்முருகன்:** ஒரேயொரு நிமிடம். ஆதலால், இதுபோன்ற நரபலி கொடுக்கின்ற சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்கள்மீது, நம்முடைய தமிழக அரசு, மணல் குவாரிகளைக் கொள்ளையடிப்பவர்கள்மீது குண்டர் சட்டம் பாய்வதைப்போலவும், உணவுக் கடத்துபவர்கள்மீது குண்டர் சட்டம் பாய்வதைப் போலவும், இந்தப் பச்சிளங் குழந்தைகளை நரபலி கொடுக்கின்ற போலிச் சாமியார்கள்மீதும் குண்டர் சட்டம் பாய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கண்ணகி சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தது. இப்போது வேப்ப மரத்திற்குச் சென்றிருக்கின்றது. சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம், முறைகேடுகளைப் பற்றியெல்லாம் காவல் துறையினர் கவனித்துக் கொள்வார்கள் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) 'எல்காட்' நிறுவன நில விற்பனையில் முறைகேடுகள்

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, Speaker Sir, ...

**முனைவர் மு. தம்பிதுரை:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்து இருக்கிற சோழிங்கநல்லூரில், ஏற்கெனவே

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இருந்தபோது, அரசு நிறுவனமான 'எல்காட்' நிறுவனத்திற்குச் சொந்தமான 123 ஏக்கர் நிலத்தை, Cognizant Technologies என்கிற நிறுவனத்திற்கு 20 ஏக்கரும், அதேபோல, Megasoft என்ற நிறுவனத்திற்கு 25 ஏக்கரும், அதேபோல, Benchmark Softech என்ற நிறுவனத்திற்கு 25 ஏக்கரும், அதேபோல, Proton Web என்ற நிறுவனத்திற்கு 3 ஏக்கரும், Advance Software என்ற நிறுவனத்திற்கு 50 ஏக்கர் நிலத்தையும், 1–3–2006 அன்று அமைச்சரவை கூடி, ஒரு அரசாணை பிறப்பித்து, அடிமாட்டு விலைக்கு, இப்படிக் குறைந்த விலைக்கு அவர்கள் நிலத்தை எந்த அடிப்படையிலே விற்றார்கள்? 48 இலட்சம் ரூபாய் ஒரு ஏக்கர் நிலம் என்று அவர்கள் விற்றதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட முறைகேடுகளைச் செய்து, குறைந்த விலைக்கு, 1,000 கோடி ரூபாய் பெறுமானம் இருக்கிற, மதிப்பு இருக்கிற நிலத்தைத் தாரை வார்ப்பதற்கு முயற்சி எடுத்து, அரசாணை பிறப்பித்த, முன்னாள் அமைச்சரவையில் இருந்தவர்கள் அல்லது அதற்குக் காரணமானவர்கள் செய்த தவறு என்ன? (குறுக்கீடுகள்) எந்த அடிப்படையிலே கொடுத்தார்கள்? அப்படித் தவறு செய்தவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? (குறுக்கீடுகள்) இப்போதுதான் 20–7–2006 ஆம் தேதி, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதைப் பரிசீலித்து, அந்த ஆணையை இரத்து செய்திருக்கிறார்கள். அதற்காக, இந்த 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை மீட்டுத் தந்ததற்காக, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (கூச்சல்–குழப்பம்) பொதுச் சொத்தைக் காப்பாற்றவேண்டிய கடமையில் இருக்கக்கூடியவர்கள், (கூச்சல்–குழப்பம்) பொறுப்போடு நடந்து கொள்ளக்கூடிய முன்னாள் அமைச்சரவையைச் சார்ந்தவர்கள், எப்படி, எந்த அடிப்படையிலே, குறைந்த விலைக்கு அதை விற்றார்கள் என்பதையும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் கேட்டு அமைகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) அவர்... (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** டேய், வேலூருக்கு உயிரோடு போகமாட்டாய். டேய், ஞானசேகரா, வேலூருக்குப் போகமாட்டாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)





**திரு. சி. ஞானசேகரன்:** எந்த அடிப்படையிலே குறைந்த விலைக்கு இவர்கள்,...

**திரு. விடியல் எஸ். சேகர்:** பேரவைத் தலைவர் அவர்களே. உறுப்பினருக்குப் பாதுகாப்புத் தேவை. (குறுக்கீடுகள்) எங்களுடைய உறுப்பினருக்குப் பாதுகாப்புத் தேவை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினருக்குப் பாதுகாப்புத் தேவை. (கூச்சல்–குழப்பம்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையிலே அடிமாட்டு விலைக்கு அவர்கள் விற்றார்கள் என்பதை... (கூச்சல்–குழப்பம்)

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினருக்குப் பாதுகாப்புத் தரவேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய துணைக் கொறடாவிற்குப் பாதுகாப்புத் தரவேண்டும். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள்.

(உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. சி. ஞானசேகரனைப் பார்த்து கையை நீட்டி ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் உயிரோடு போகமாட்டேன் என்று அவர் மிரட்டுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லியாகிவிட்டது அல்லவா? (கூச்சல்-குழப்பம்) சொல்லியாகிவிட்டதா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2006 ஆகஸ்ட் 10

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அவன் போகமாட்டான் வேலூருக்கு. *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட்டால் நடவடிக்கை எடுப்பேன். அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது, யாராவது குறுக்கிட்டால் நடவடிக்கை எடுப்பேன். அமைதியாக உட்காருங்கள். *(கூச்சல்—குழப்பம்)* நீங்கள் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். அமைச்சர் எழுந்து நின்றாகி விட்டது, உட்காருங்கள். *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..... *(கூச்சல்—குழப்பம்)*

*முற்பகல் 10—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள், திரு. பொள்ளாச்சி ஜெயராமன், பொள்ளாச்சி ஜெயராமன், நீங்கள் அனாவசியமாக அவை நடவடிக்கைக்கு இடையூறு பண்ணுகிறீர்கள். நடவடிக்கை எடுப்பேன். நீங்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். *(குறுக்கீடுகள்)* திரும்பத் திரும்பச் சொல்கிறேன், அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், 20—7—2006 அன்று தமிழக அமைச்சரவை கூடி எடுத்த முடிவுபற்றி இங்கே ஒரு கேள்வி எழுப்பினார். இதிலே எந்தவிதமான அரசியல் உள்நோக்கமும் இல்லை. கடந்த ஆட்சிக் காலத்திலே, அதிலேயும் தேர்தலுக்கு முன்னால், இரண்டு மாதங்களுக்கு முன்னால் எடுக்கப்பட்ட முடிவை மாற்றி, இப்போது இந்த அரசு ஒரு முடிவு எடுத்திருக்கிறது. அந்த முடிவின்மூலம், தமிழக அரசுக்கு ஏறக்குறைய கோடிக்கணக்கான ரூபாய் இலாபம் வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் அவர் சுட்டிக்காட்டினாரே தவிர, குறிப்பிட்டு ஒரு முன்னாள் அமைச்சர்மீதோ அல்லது யார்மீதும் குற்றம் சுமத்தவில்லை. எந்த முன்னாள் அமைச்சர்மீதும் குறிப்பிட்டு, யார்மீதும் குற்றம் சுமத்தவில்லை. *(குறுக்கீடுகள்)*



2006 ஆகஸ்ட் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதி. திரு. அரி, அமைதியாக இருங்கள். திரு. அரி, அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எனவே, அமைச்சரவையிலே எடுக்கப்பட்ட முடிவின்படிதான், இந்த அரசு அதை அமல்படுத்த ஆணை பிறப்பித்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இதிலே, ஓர் உறுப்பினர் விளக்கம் கேட்டால் பாவமாயில்லை. நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்கலாம். ஆனால் எல்லோரும் எப்போதுமே எழுந்துநின்று கூச்சல்போடுவது என்பதை ஒரு முறையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவராகிய நீங்கள் இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லி முடிக்கட்டும். சொல்லி முடிக்கட்டும்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடன் zero hour—இல் இதுமாதிரி பிரச்சினைகளை எழுப்பலாம் என்ற உரிமையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன், இரண்டே வரியில் அதைச் சொல்லி முடித்திருக்கலாம், ஏற்கெனவே, அவை இன்றைய நாளிதழ்களில் எல்லாம் வந்திருக்கின்றன. அந்தப் பிரச்சினையை இரண்டே வரியில் சொல்லி முடித்திருக்கலாம். ஆனால், அவர் ஒரு திரைக்கதை வசனத்தைப்போல எழுதி வைத்துக்கொண்டு, 10 நிமிடங்கள் இங்கே படித்து, வேண்டுமென்றே இந்தச் சபை ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெறுவதைத் திட்டமிட்டு தடுக்கின்றவகையில்தான் ஞானசேகரனுடைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. யார் தவறு செய்தாலும் — இன்றைக்கு ஆளுகின்ற பொறுப்பில் நீங்கள் இருக்கின்றீர்கள் — சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் அரசு கையில் இருக்கின்றது. எடுப்பதற்குரிய நடவடிக்கையை யாரும் இங்கே தடை சொல்லவில்லை. ஆனால், திட்டமிட்டுக் கொச்சைப்படுத்துகின்றவகையில், ஞானசேகரன் இதுபோன்ற நடவடிக்கைகளை தினந்தோறும் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதைத் தடுப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்த மாதிரி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதை இனிமேலாவது அனுமதிக்கக் கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று, அவர் பேசுவது எந்த... *(குறுக்கீடுகள்)* கொஞ்சம் பொறுங்கள், கொஞ்சம் பொறுங்கள்.

பேசுகின்ற கருத்தைத்தான் சொல்ல வேண்டுமே தவிர, மாற்றுக் கருத்துச் சொல்லக்கூடாது. அதேநேரத்திலே, உங்கள் உறுப்பினர்களிடம் மிரட்டுகின்ற பழக்கம் எல்லாம் இருக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) அந்தமாதிரி மிரட்டுகின்ற வேலைகள் எல்லாம் வைத்துக்கொள்ளக் கூடாது. தெரியுமில்லையா? மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள், மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் ஆறு கோடி மக்கள் வாழ்கின்ற தமிழகத்தில், 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே அமர்ந்திருக்கின்றோம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று சில கண்ணியங்கள் இருக்கின்றன. பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்து, உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், அரசுக்கு ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று வருத்தத்தோடு ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள். அந்தச் செய்திக்கு மாற்றுக் கருத்துச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அதிலே யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களைப் பார்த்து, 'நீ உயிரோடு வேலூருக்குப் போகமாட்டாய்' என்று சொல்வது, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். அமைதியாக இருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், இப்படி ஒரு சாதாரண மூன்றாம் தர உறுப்பினர் போன்று பேசுவது நியாயமா? இப்படிப்பட்ட உறுப்பினர்களுக்கா மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்? அந்த உறுப்பினர்கள், வாக்களித்த மக்களுக்கு..

(முற்பகல் 10–20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், எச்சரிக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள் முதலிலே.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முறையில் இந்த உறுப்பினர்கள் பேசுவார்களேயானால், அது எங்கேபோய் முடியும்? ஓர் உறுப்பினர் இங்கே பேசுவதற்குக்கூட முடியாமல் இருக்கின்ற நிலை ஏற்படுகிறது. அச்சுறுத்தப்படுகிறார்கள். அச்சுறுத்தப்படுவது மட்டுமல்லாமல், 'உயிரோடு வேலூருக்குப் போகமாட்டாய்' என்று சொல்வது, எந்தவிதத்திலே நியாயம்? அதற்கு



நீங்கள் என்ன பாதுகாப்பு அளிக்கப்போகிறீர்கள் என்பதை இந்த மன்றத்திலே கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மன்னிக்கவும். உட்கார்ந்து கொண்டே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். அ.தி.மு.க. ஆட்சியினுடைய காலக்கட்டம், 25–2–2006 அன்று நடைபெற்ற அ.தி.மு.க. அமைச்சரவைக் கூட்டத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், சோழிங்கநல்லூர் கிராமத்திலே, அரசு நிறுவனமான ELCOT–க்குச் சொந்தமான 123 ஏக்கர் நிலத்தை, Cognizant Technologies நிறுவனத்திற்கு 20 ஏக்கர், Megasoft நிறுவனத்திற்கு 25 ஏக்கர், Benchmark Softech நிறுவனத்திற்கு 25 ஏக்கர், Proton Web நிறுவனத்திற்கு 3 ஏக்கர், Advance Software நிறுவனத்திற்கு 50 ஏக்கர் என்று ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப்பட்டது. ஏக்கர் ஒன்றுக்கு 48 இலட்சம் ரூபாய் என்று விலை நிர்ணயமும் செய்யப்பட்டது. அ.தி.மு.க. அமைச்சரவையின் முடிவையொட்டி, 1–3–2006 அன்று அரசாணைகளும் வெளியிடப்பட்டன. அதற்குப் பிறகு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் செயல்பாட்டிற்கு வந்ததால், 123 ஏக்கர் நிலத்தை ஐந்து நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை, 7–3–2006 அன்று நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், இப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்ட இந்த நில விற்பனையை, நான் சொல்லவிருக்கின்ற பின்வரும் காரணங்களால் இரத்து செய்யலாம்:

(1) ELCOT நிறுவனத்தால், ஆலோசனை நிறுவனம் தேர்வு செய்யப்பட்டதில் நடைமுறை விதிகள் மீறப்பட்டுள்ளன.

(2) ஆலோசனை நிறுவனத்தால் பின்பற்றப்பட்ட நடைமுறை, வெளிப்படையாக இல்லாமலும், தன்னிச்சையாகவும் உள்ளது.

(3) அனைத்து நடைமுறைகளும் அவசர கதியிலே, மூன்று நாட்களுக்குள் முடிவு செய்யப்பட்டுள்ளது. பரிந்துரைமீது ELCOT நிறுவனத்தால் சரியான கவனம் செலுத்தப்படாமல் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(4) ஆலோசனை நிறுவனத்தின் அறிக்கை, பரிசீலனை மற்றும் ஆய்வு செய்யப்படாமல், அதேநாளில் வெறுமனே அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இறுதியாக, ஆலோசனை நிறுவனத்தின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள், ELCOT நிறுவனத்தின் நிர்வாகக் குழுவின் முன்னால் வைக்கப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட முறைகேடுகளை விசாரிப்பதற்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு—D.V.&A.C.–க்கு இதை அனுப்பலாமா என்ற கருத்து விவாதிக்கப்பட்ட நேரத்திலேதான், திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை, 20–7–2006–ல் கூடி, இந்த நில விற்பனை பற்றி, ஒதுக்கீடு செய்யப்பட்டது பற்றி, அரசாணைகளை ஆலோசித்து, விவாதித்து, ஆய்வு செய்து, இதிலே முறைகேடுகள் ஏராளம் இருப்பதை எண்ணிப் பார்த்து, 20–7–2006–ல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அந்த அரசாணையை, நிலங்களை நான் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஒதுக்குகின்ற அந்த ஆணையை இரத்து செய்வது என்று முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவு பற்றிதான் வாரப் பத்திரிகைகளிலும் நாளேடுகளிலும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இந்த முடிவை எடுக்காமல் இருந்திருந்தால், அந்தத் திட்டத்தை இரத்து செய்யாமல் இருந்திருந்தால், இங்கே நண்பர்கள் எல்லோரும் குறிப்பிட்டதைப்போல, பல கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கும். அந்த இழப்பைத் தவிர்ப்பதற்கு இந்த உத்தரவு பயன்பட்டது என்பதையும், இந்த உத்தரவையொட்டி மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்து, இந்த அளவோடு இந்தப் பிரச்சினையை முடிப்பது நல்லது என்று கேட்டுக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் புனிதமானது. மரபு, வரையறைகள் எல்லாம் பின்பற்றி வருகிற இந்த மாமன்றத்தில், உறுப்பினர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம்; யாரையும் மிரட்டலாம் என்ற நிலையிலே, சில நாட்களாகத் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு, நம்முடைய நாட்டின் சொத்து எப்படியெல்லாம் குறைத்து விற்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு செய்தியை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், திரு. விசுவநாதன், இரண்டுபேரும் அமைதியாக இருங்கள். நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். அமைதியாக உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரியாகப் பேசிக்கொண்டிருப்பார்களென்றால், பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, திரு. மணி, அந்தப் பிரச்சினை சம்பந்தமாக... *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, நான் சொல்வதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுங்கள், சரி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* உட்காருங்கள், *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* சரி, கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. தம்பிதுரை. *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிவிடுகிறேன், நான் பேசிவிடுகிறேன். நான் இன்னும் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தம்பிதுரை, சரி, அவர் பேசட்டும், திரு. தம்பிதுரை, திரு. மணி பேசட்டும். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்களை... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிவிடட்டும். அவர் பேசட்டும், அம்மா. *(குறுக்கீடு)* ஏனம்மா? நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** திரு. ஞானசேகரன் அவர்களைக் குறிப்பிட்டு, 'நீ உயிரோடு வேலூருக்குச் செல்லமுடியாது' என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். அதை எல்லோரும் கேட்டார்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல் - குழப்பம்)* இல்லை, இல்லை; சத்தம் போடக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதாவது தினமும் 10 பேர் எழுந்து நின்று பேசுவது, சத்தம் போடுவது என்று சொன்னால், இது கண்ணியக் குறைவான

[திரு. ஜி.கே. மணி] [2006 ஆகஸ்ட் 10

செயல். ஆகவே, இப்படிப் பேசினால், எல்லோருக்கும் பேசத் தெரியும். சிலருக்குத்தான் பேசமுடியும் என்று அப்படி எதுவும் இல்லை. இதைவிட அதிகமாகப் பேசக்கூடியவர்கள், இதைவிட வரம்புமீறிச் செயல்படக் கூடியவர்களும் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) கண்ணியத்திற்கு உட்பட்டு, கட்டுப்பாட்டுக்கு அடங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுமாதிரி மிரட்டல் வந்தால், பேரவைத் தலைவர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையென்றால், உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இருக்காது. உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகக்கூடாது. இன்னொன்றும் சொல்கிறேன். அ.தி.மு.க. உறுப்பினர்கள் எல்லோரையும் சொல்லவில்லை. சில நாட்களாகத் தொடர்ந்து, குறிப்பிட்ட நபர்கள் அச்சுறுத்துகிறார்கள்; மிரட்டுகிறார்கள்; நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; பத்திரிகை நண்பர்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது சபை நடவடிக்கைக்கு உகந்தது அல்ல. நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்ந்தால், இந்த மாமன்றம் வேறு திசை நோக்கிப் போய்விடும் என்பதை இந்த நேரத்திலே அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ஞானசேகரன் உட்காருங்கள். நான் சொல்கிறேன். நான் என் தீர்ப்பைச் சொல்கிறேன். நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார்கள், உட்காருங்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு எழுப்பப்பட்ட அந்தப் பிரச்சினையில், திரு. ஞானசேகரன் அவர்களை அச்சுறுத்துவதாகப் பேசப்பட்ட அந்தப் பேச்சை, திரு. ஞானசேகரன் அவர்களை அச்சுறுத்துவதாக அமைந்த அந்தப் பேச்சை அவைத் தலைவர் அவர்கள் முதலிலே கண்டித்துவிட்டார்கள். மிரட்டுவது, அச்சுறுத்துவது தவறு என்று கண்டித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த அவையிலே அது பதிவாகியிருக்கிறது. அப்படிப் பதிவு செய்துவிட்டதே, எதிர்காலத்திலே அவருக்கு ஒரு பாதுகாப்பு என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். ஆனால், இந்த அவையில் முறை தவறாகப் பேசுகிற யாராக இருந்தாலும், முறை தவறாகப் பிறரை அச்சுறுத்துகிற முறையில், இன்னொரு உறுப்பினருடைய உரிமையைப் பறிக்கிற முறையில், செயல்படவிடாத முறையில், வேண்டுமென்றே யாரேனும்



2006 ஆகஸ்ட் 10] [பேராசிரியர் க. அன்பழகன்]

பேசுவார்களேயானால், அதுவும் ஒரு முறைக்கு இரு முறை தொடருமானால், அவர்களை நீக்கிவைக்கிற அந்தக் கடமையை, அவைத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளலாம் என்னும் ஆலோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களை, அவர் மிரட்டுவதாகச் சொல்கிறார். அந்த வார்த்தை என் காதிலேயும் விழுந்தது. அந்த மாதிரியான மிரட்டுகிற வேலைகளையெல்லாம் வைத்துக் கொண்டால், அவைக்கு நல்லதல்ல. அவையின் மரபை மீறியதாக இருக்கும். நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

இதை எச்சரிக்கையாகவே நான் சொல்ல விரும்புகிறேன். அதனால் இனி, அவை மரபைக் காக்கின்ற வகையில், அவையினுடைய கண்ணியத்தைக் காக்கின்ற வகையில் இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்பிதுரை. (குறுக்கீடு) செல்வி இராமஜெயம், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் அம்மா. (குறுக்கீடு) உட்காருங்கள். நான் அனுமதி கொடுத்தால்தான் நீங்கள் பேச முடியும். உட்காருங்கள். முதலில் அதைத் தெரிந்துகொள்ளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை உங்களுக்கு, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் அம்மா. (குறுக்கீடு) அனுமதி இல்லை. உட்காருங்கள். செல்வி இராமஜெயம் உட்காருங்கள். நீங்கள் கேளுங்கள்.

*முற்பகல் 10–30*

## (ஆ) தொட்டபெல்லூர் கிராம விவசாயி ஒருவர் தற்கொலை செய்துகொண்டது.

***முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான செய்தியினை இந்த அவையின் முன்வைக்க விரும்புகிறேன். ஒரு விலை மதிக்க முடியாத உயிர் பறிபோனது குறித்து, இந்த அவையிலே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தொட்டபெல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. தொட்டய்யா என்ற ஏழை விவசாயி, புறம்போக்கு நிலத்தைப்

பண்படுத்தி, பல ஆண்டுகளாக விவசாயம் செய்து வந்தார். அந்தப் பகுதியைச் சார்ந்த பஞ்சாயத்துத் தலைவரும், அதிகாரிகளும், அந்த நிலத்தினைக் கையகப்படுத்த முயன்றனர். ஒரு ஏழை விவசாயி, பல ஆண்டுகளாகத் தன்னுடைய உழைப்பால் பண்படுத்தப்பட்ட அந்த நிலத்தை, அதிகாரிகள் பறிக்கின்றபோது மனம் தாங்க முடியாமல், அவர் தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. 2 ஏக்கர் நிலம், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தருகிறோம் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்பமிகு பேராசிரியர் .க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது என்ற அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் பேசுவாரேயானால், அது இந்த அவையில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரியதல்ல. (குறுக்கீடுகள்) மற்றொன்று இப்படிப்பட்ட செய்தியைச் சொல்கிறபோது, யாரையும் குற்றஞ்சாட்டுகின்ற முறையில் இந்த அவையில் குறிப்பிடக் கூடாது. நிகழ்ச்சியை சொல்லலாமேதவிர, அதிகாரிகள், பஞ்சாயத்துத் தலைவர்கள் நிலத்தை அபகரிக்க முயன்ற காரணத்தினால், இப்படி நடைபெற்றது என்று குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கக்கூடாது. ஒருவேளை அவர் இதைக் கவன ஈர்ப்பாகக் கொடுக்க விரும்புவாரேயானால், குற்றச்சாட்டு இல்லாமல் கவன ஈர்ப்புத் தரவேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. தம்பிதுரை அவர்கள், இதைப்பற்றி என்னிடத்தில், தங்கள் அறையிலேயே, சொல்லியிருக்கின்றார். அதை அவையில் சொல்லுங்கள்; அதைப்பற்றி விளக்கம் அளிக்கிறேன் என்று கூறியிருக்கிறேன். அவர் அதைச் சொன்னபிறகு, அதற்கான விளக்கத்தையும் பெற்றிருக்கிறேன். அவர் அதைச் சொன்ன பிறகு, இப்போது அறிவிப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு direct knowledge இருந்தால் சொல்லுங்கள். பேப்பரில் படித்ததையெல்லாம் சொல்லாதீர்கள். இது குறித்து direct knowledge இருக்கிறதா, உங்களுக்கு? Direct knowledge இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.





**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஏழை விவசாயிகள், இதுபோன்ற புறம்போக்கு நிலத்தை வைத்திருந்தால், அது எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்றும், தேவைப்பட்டால் அவர்களுக்கு அது பண்படுத்தித் தரப்படும் என்கின்ற உத்தரவாதத்தை இந்த அவையிலே தெரிவித்திருக்கின்றார்கள். அப்படியிருக்கும்போது, இத்தகைய ஒரு ஏழை விவசாயி, அவர் உழைத்து, அதை நம்பியே வாழுகின்ற அந்த நிலையில் இருக்கும்போது, அதிகாரிகள் இப்படி சென்று, ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் தருகிறோம் என்ற அடிப்படையில், இதுபோன்ற ஏழை விவசாயிகளின் நிலங்களைப் பறிப்பதன்மூலமாக, அவர்களுடைய இன்னுயிர் போகின்ற அவலநிலையைத் தமிழகத்தில் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். தமிழகத்திலே சுமார் மூன்றரை இலட்சம்தான் அரசு தரிசு நிலம் இருக்கின்ற சூழ்நிலையில், அரசானது தமிழகத்திலுள்ள ஏழை விவசாயிகள் அனைவருக்கும் 2 ஏக்கர் நிலத்தை இலவசமாகத் தர முடியுமா? அப்படித் தருவதற்காக, இதுபோன்று முன்பே நிலங்களை வைத்துள்ள ஏழை விவசாயிகளிடமிருந்து அரசு, நிலம் பறிப்பது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவதன்மூலமாக நாட்டிலே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு senior உறுப்பினர். நீங்கள், "அரசுக்குத் தெரியுமா" என்று அந்தமாதிரிதான் கேட்கமுடியுமே தவிர, இதிலே debate தேவையில்லை.

**முனைவர் மு. தம்பிதுரை:** இல்லை, இல்லை. இதிலே என்னுடைய கருத்தை மட்டும்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள், கருத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. தம்பிதுரை அவர்கள், என்னிடத்திலே சொன்னது ஒன்று; இங்கே பேசுவது ஒன்று. அவர் சொன்னதையே பேசியிருப்பாரேயானால், நான் பெற்றிருக்கின்ற விளக்கத்தை அவருக்கும் பயன்படும்படியாக, மற்றவர்களுக்கும் பயன்படும்படியாக இங்கே கூறியிருப்பேன். ஆனால், இங்கே, கொஞ்சம் தம்பிதுரை சற்று தடம் மாறி தேவையில்லாமல், அரசு வகுத்திருக்கின்ற ஒரு கொள்கையைப் பற்றி பேசத் தொடங்கியிருக்கிறார். அது தவறு என்று அவருக்கே நன்றாகத் தெரியும். இருந்தாலும் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லுகின்றார். அது அவருடைய கடமை. நான் அதிலே குறுக்கே நிற்கவில்லை. ஆனால், உண்மை நிலை என்ன என்பதை இங்கே சொல்ல விரும்புகின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 ஆகஸ்ட் 10
முற்பகல் 10—35

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை, தொட்டபெல்லூர் கிராமத்தைச் சேர்ந்த ஆனைக்கொல்லூர் குக்கிராமத்தில் Survey எண் 101/2, அரசு தரிசு புறம்போக்கு நிலத்தை, சித்தன்னா என்பவருடைய மகன் தொட்டய்யா, சுமார் 55 வயது கொண்டவர், கடந்த 4 அல்லது 5 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்து தன்வசம் வைத்து அனுபவித்து வந்திருக்கிறார். மேற்படி புறம்போக்கு நிலத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு ஆக்கிரமிப்புதாரரான தொட்டய்யாவிடம், தொட்டபெல்லூர் சிற்றூராட்சித் தலைவி திருமதி செல்வி என்பவர், அவரது கணவர் மற்றும் ஊர் மக்கள் மேற்படி இடத்தைப் பார்வையிட்டு அந்த இடத்தை விட்டுத் தருமாறு கோரி இருக்கிறார்கள். அதற்கு ஆக்கிரமிப்புதாரரான தொட்டய்யா அவர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் ஏறத்தாழ 10 நாட்களுக்கு முன்பு நடந்ததாகத் தெரிய வருகிறது. அரசு அலுவலர்கள் எவரும் இந்தச் சம்பவத்தில் தலையிட்டதாகத் தகவல் எதுவும் இல்லை. தனது அனுபவத்திலே இருந்த நிலம் பறிபோய்விடுமோ என்ற ஏக்கத்தில் மனம் உடைந்து, கடந்த 7—8—2006 அன்று தொட்டய்யா அவர்கள் விஷம் அருந்தி தற்கொலை செய்துகொண்டதாகச் செய்தி வந்துள்ளது. இதுசம்பந்தமாக கெலமங்கலம் காவல் நிலையம் குற்ற எண் 110/2006, 124 குற்றமுறை விசாரணை நடைமுறைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணை நடைபெற்று வருகின்றது. ஆகவே, 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமித்துக்கொள்ளப்பட்ட ஒரு இடத்தைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகத் தர வேண்டுமென்று ஊர்ப் பொதுமக்கள் கேட்டார்கள். எங்கே அது பறிபோய்விடுமோ என்ற கவலையில், அவர் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார் என்ற செய்தியைத் தவிர, அதற்கும் இப்பொழுது இந்த அரசு எடுத்துள்ள தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்குத் தருவது என்ற கொள்கைக்கும் துளியும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. கவன ஈர்ப்பு

### பாலுசெட்டிசத்திரம் பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பம் மற்றும் காயமுற்றோருக்கு நிதியுதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு அறிவிப்பு. திரு. கி. ஆறுமுகம்



2006 ஆகஸ்ட் 10] [பேரவைத் தலைவர்]

மற்றும் திருமதி பெ. கமலாம்பாள் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் ஒன்றியம், பாலுசெட்டிசத்திரம் பகுதியில் ஏற்பட்டுள்ள வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்ததும், பலர் காயமுற்றதும் குறித்து" அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

#### அறிக்கை

கடந்த 27—7—2006 அன்று மாலை 6—45 மணியளவில், காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், திருப்புக்குழி மதுரா பாலுசெட்டிசத்திரம் கிராமம், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பாலுசெட்டிசத்திரம் கிராமத்திற்குத் திரும்பும் கிழக்குப்புறச் சாலை சந்திப்பில் காஞ்சிபுரத்திலிருந்து நெமிலி கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும் (பாலாஜி பஸ்) (டி. என். 23 எச் 7495), கர்நாடக மாநிலத்திலிருந்து சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் ஆம்னி வேனும் (கே.பி.என். டிராவல்ஸ்) (கே.ஏ.14 டி 1) நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் சாலை விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தில் பேருந்தில் பயணம் செய்தவர்களில் 4 நபர்கள் இறந்துவிட்டனர்; மற்றும் 11 பயணிகள் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள், காஞ்சிபுரம் அரசுப் பொது மருத்துவமனையிலும், சென்னை அரசுப் பொது மருத்துவமனையிலும், அரசு ஸ்டான்லி மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றனர். இந்த விபத்து குறித்து, பாலுசெட்டிசத்திரம் காவல் நிலையத்தில் குற்ற எண் 354/06 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279, 337, 338 மற்றும் 304—ஏ—ன்படி புகார் பதிவு செய்யப்பட்டு, தீவிர விசாரணையில் உள்ளது. விபத்தில் இறந்துபோன 4 பயணிகளும் ஆண்கள். விபத்தில் இறந்த அனைவரும் அடையாளம் காணப்பட்டுவிட்டனர். குற்றப் புலனாய்வு நடவடிக்கைகள், காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாணை எண் 817, உள் துறை நாள் 8—6—1999—ன்படி, விபத்தில் உயிரிழந்தோர்

குடும்பங்களுக்கும், பலத்த காயமடைந்தோர் மற்றும் சிறு காயமடைந்தோர் ஆகியோர்களுக்கும் முதலமைச்சர் சாலை விபத்து நிவாரண நிதியிலிருந்து கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. இறப்பு | ... | ரூ.10,000/– |
| 2. நிரந்தரச் செயலிழப்பு | ... | ரூ.6,000/– |
| 3. ஒரு கண் அல்லது ஒரு கை, கால் செயலிழப்பு | ... | ரூ.4,000/– |
| 4. ஏனைய சிறு காயங்கள் | ... | ரூ.500/– |

ஆனால், இந்நேர்வில் விபத்தில் மரணமடைந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கும் முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து பண உதவியாக ரூ.50,000/–ம் பலத்த காயமடைந்த 12 நபர்களுக்கு பண உதவியாக ரூ.15,000/–ம், இலேசான காயமடைந்த 2 நபர்களுக்கு ரூ.6,000/–ம் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின்மீது அரசு தனியே நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இவ்விபத்திற்குக் காரணம், பேருந்துகள் கட்டுப்பாட்டினை இழந்ததாலும், பக்கவாட்டில் மோதியதாலும் (Angular Collision) மேற்குறிப்பிட்ட விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகக் கருதப்படுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் குறிப்பிட்டிருந்தபோது, அப்பொழுது விபத்திலே 2 பேர் மட்டும் இறந்திருந்தார்கள். அதன்பிறகு 2 பேர் இறந்துவிட்டார்கள். இப்பொழுது நம்முடைய அவைக் குறிப்பிலே–வைத்திருக்கிற அந்தக் குறிப்பேட்டிலே—அதைப் படித்துப் பார்த்தேன். அதிலே 4 பேர் இறந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. அதுதான் உண்மை. நான் வினா வைக்கிறபோது 2 பேர் மட்டும்தான் இறந்திருந்தார்கள் என்ற அந்தத் தகவலை முதலிலே சொல்லி, இதிலே நீண்டதொரு விளக்கத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் அவைக்குத் தந்திருக்கிறார்கள். அதிலே குறிப்பிட்டிருப்பது, இந்த விபத்துக்கான காரணம், பேருந்துகள் கட்டுப்பாட்டை இழந்ததாலும், பக்கவாட்டில் மோதியதாலும் மேற்குறிப்பிட்ட விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகக்





எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம்,
கருதப்படுகிறது எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம்,
இப்பொழுது புற்றீசல் போல ஏராளமான தனியார் சொகுசுப்
பேருந்துகள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளி
மாநிலங்களுக்கும் சென்று கொண்டிருக்கின்றன. அதிலே ஓர் ஓட்டுநர்
மட்டும் செல்வதாலே நீண்டதூரம் அவர்களால் ஓட்ட முடியாமல்,
களைப்பிலே இருப்பார்கள். இன்னொரு பக்கம், அந்த முதலாளிகள்
வேகமாக வந்துசேர வேண்டுமென்ற அச்சுறுத்தலும் இருக்கிறது.
இன்னொரு பக்கம் பார்த்தால், வாகன ஓட்டுநர்கள் குடித்துவிட்டுச்
செல்வதாலும், இதுபோன்ற விபத்துகள் நடக்கிற ஒரு வாய்ப்பு
ஏற்பட்டதாக அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் சொல்கிறார்கள்.
அதுமட்டுமல்லாமல், சாலைகளில் குறைந்தபட்சம்—அது ஒருபக்கத்தில்
இருந்தாலும்கூட இன்னொரு வினா அதிலே எழுகிறது; ஏனென்று
சொன்னால், சாலைகளில் குறைந்தபட்சம்—விபத்து அறியும்
பகுதிகளைக் கண்டறிந்து, அந்த தேசிய நெடுஞ்சாலைகளிலும் மற்றும்
இணைப்புச் சாலைகளிலேயும், "இது விபத்து ஏற்படும் பகுதி" என
அறிவிக்கிறவகையிலும், நம்முடைய அரசு, விபத்து நடக்கிற பகுதிகளில்
"விபத்துப் பகுதி" எனப் பெயர்ப் பலகை வைக்குமா? அதுபோன்று,
தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில சாலைகளிலே சாலையின்
மத்தியிலே, மையப் பகுதியிலே, median வைக்கவும் நம்முடைய அரசு
முயலுமா? ஏனென்று சொன்னால், இதுபோன்ற விபத்துக்களைத்
தடுப்பதற்கான ஒரு வாய்ப்பை, அதனால் தீர்க்க முடியும் எனச்
சொல்லிக்கொள்கிறேன். இரவு நேரங்களிலே அதிகமான விபத்துகள்
ஏற்படுகின்றன. அதற்காக ஒளிரும் விளக்குகளை ஆங்காங்கே
அமைப்பதற்கு நம்முடைய அரசு முயலுமா என்று கேட்டு,
அதேபோன்று, இந்த விபத்திலே இறந்தவர்களுக்கு 50,000 ரூபாயும்,
அதிலே 12 நபர்களுக்கு 15 ஆயிரம் ரூபாயும், இரண்டு நபர்களுக்கு
6 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகவும் எங்களுடைய மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்திருப்பதாகச்
சொல்லியிருக்கிறார்கள்; இந்த நிவாரணத் தொகை எப்போது
வழங்கப்படும் எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள், ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

***திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாக நான் பேச வேண்டியதை அவர் பாதி

பேசிவிட்டார். கடந்த 27–7–2006 அன்று மாலை 6–15 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்புக்குழி மதுரா பாலுசெட்டிசத்திரம் கிராமம், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பாலுசெட்டிசத்திரம் கிராமத்திற்குத் திரும்பும் கிழக்குப்புறச் சாலை சந்திப்பில் காஞ்சிபுரத்திலிருந்து நெமிலி கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும், கர்நாடக மாநிலத்திலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் ஆம்னி வேனும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில், சாலை விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 4 நபர்கள் இறந்துவிட்டனர்; மற்றும் 18 பயணிகள் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் காஞ்சிபுரம் அரசுப் பொது மருத்துவமனையிலும், சென்னை அரசுப் பொது மருத்துவமனையிலும், ஸ்டான்லி மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் சொல்லுங்களம்மா! அந்த விவரங்கள் எல்லாம் தெரியும். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்வார்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** அவர்கள் சொன்னது முழுவதும் விளங்கிவிட்டது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களும், திருமதி பெ. கமலாம்பாள் அவர்களும் கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்பட்ட விபத்து குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய அரசாங்கத்திற்கு முன்மொழிவு அனுப்பியிருக்கிறார்கள். விரைவிலே அவர்களுக்குண்டான அந்தத் தொகை வழங்கப்படும். காயமுற்ற 14 நபர்களில், 7 நபர்கள் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தெரிவித்த, அந்தத் தனியார் ஆம்னி பேருந்துகளிலிருந்து வெளிச்சம் அதிகமாக வருவதைக் கண்காணிக்கவும், அவர்கள் சரியான முறையிலே அதை நடத்துவதற்கும் இந்த அரசு விரைவில் ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 15 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

### (அ) கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 49, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1852, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்கள் உட்பட பல பகுதிகளில், பழையகால வீர விளையாட்டான மாடு பிடித்தல் போட்டிகளை ஏற்பாடு செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டிய தன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7530, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிக்க அனைத்து தாலுகா தலைநகரங்களிலும் விளையாட்டு மைதானங்கள், அனைத்து வசதிகளுடன் உருவாக்கித் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3244, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4704, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிற்காக விளையாட்டுத் துறையில் பெருமை சேர்த்தவர்களுக்கு, நுழைவுத் தேர்வு எழுதாமல் தொழில் கல்விக்கு இடம் அளிப்பதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9402, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மாவட்டந்தோறும் மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டுத் துறையின்மூலம், அவர்களை ஊக்குவிக்க சிறப்புத் திட்டங்களை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2373, திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3773, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளையாட்டு வீரர்களுக்கு இலவச bus pass வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4009, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்குச் சொந்தமான சர்வே எண் 557, 771 மற்றும் இவற்றில் உள்ள 41.92 ஏக்கர் நிலத்தை வேலூர் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ஆக்கிரமித்துள்ள நிலத்தை அரசு கையகப்படுத்தி விளையாட்டை ஊக்குவிக்கின்றவகையில், சர்வதேச தரத்துடன்கூடிய விளையாட்டு அரங்கம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4260, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை விளையாட்டு அரங்கத்தை விரைவில் கட்டிமுடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5946, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6666, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு பரிசுகள் பெற்றவர்களுக்கு அரசு வேலையில் முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7407, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் இளைஞர்களை ஊக்குவிக்கும்வகையிலும், தமிழ்நாட்டில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும்வகையிலும், தமிழ்நாட்டில் விளையாட்டுக் கல்லூரி துவக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7826, திரு. வீ.ஏ.டி. கலிவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதிக்குட்பட்ட முகையூர், கண்டாச்சிபுரம், மணலூர்பேட்டை ஆகிய இடங்களில் விளையாட்டு மைதானங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8556, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதி ஒரு விளையாட்டுக் கலந்துரையாடல் மையம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3427, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3502, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் விளையாட்டு அரங்கத்துடன்கூடிய மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2175, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதி, சத்துவாச்சாரியில் உலகப் போட்டிகளில் பங்கேற்கும் பளு தூக்கும் விளையாட்டு வீரர்கள் உள்ளதால், இன்னும் பல இளைஞர்களை ஊக்குவிக்க (Sport Institute) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5882, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவிடைமருதூர் தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மற்றும் அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு வீரர்கள் இருந்தும், அவர்களுக்குப் போதிய பயிற்சிக் கருவிகள் இல்லை. போதிய விளையாட்டுப் பயிற்சிக் கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3815, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துப் பஞ்சாயத்துகளிலும், ஓர் இடத்திலாவது நீச்சல் குளம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாயக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5988, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளையாட்டு மற்றும் கலை மேம்பாட்டினைக் கருத்தில்கொண்டும், அவற்றை ஊக்குவிக்கும்வகையிலும், பள்ளிக்கூடங்களில் இளையோர்

விழா (Youth Festival) நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3335, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் நகரத்தில் தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம் அமைத்திட, நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3365, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட பொது விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1663, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதியில், சேரன்மகாதேவி பேரூரில் அனைத்து விளையாட்டுகள் விளையாடும்வகையில், ஒரு விளையாட்டு மையம் உருவாக்கித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5561, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடத்தில் ஒரு உள் விளையாட்டு மைதானம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7562, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி தொகுதியில் விளையாட்டு மைதானம் அமைத்து இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2031, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலத்தில் பொது விளையாட்டு மைதானம் ஏற்படுத்துவதன அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8777, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கக்கூடியவகையில், பள்ளிகளில் விளையாட்டு ஆசிரியர் (P.T.) நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8751, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9439, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இளைஞர்களை ஊக்குவிக்கும்பொருட்டு, மாவட்ட, ஒன்றிய, நகரப் பேரூராட்சி அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட, மையங்களை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6925, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும், நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம் அமைப்பது மற்றும் பயிற்சியாளரை நியமிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7511, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் விளையாட்டு வீரர்கள் இருந்தும், அவர்களுக்குத் தேவையான பயிற்சிக் கருவிகள் இல்லை. விளையாட்டுப் பயிற்சிக் கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9350, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் விளையாட்டுத் துறையின்மூலம், உடற்பயிற்சி சாதனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9225, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரத்தில் அமைந்துள்ள காந்தி விளையாட்டு மைதானம், மழைக் காலங்களில் குட்டைபோல் மழை நீர் தேங்குவதால், எந்தவிதமான விளையாட்டுகளுக்கும் பயன்படுத்த முடியாமல் உள்ளது. அதனைப் போக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6113, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்தி ஒன்றியம், சுங்ககாரம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மூர்த்திபட்டியில் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6054, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட நகர்ப்புற கிராமங்களில் இளைஞர்களுக்குப் பிடித்த விளையாட்டுத் துறை சாதனங்களை அரசு வழங்கி, தமிழ்நாட்டு இளைஞர்கள் திறமையை வெளிப்படுத்துவதன்மூலம் உலக அளவில் புகழ்பெற வைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6003, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில், கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கம் கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. விரைந்து முடித்து இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்கப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6304, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பொன்னேரி அல்லது மீஞ்சூர் நகரை ஒட்டியுள்ள பகுதியில் இளைஞர்கள் பொதுவாக விளையாடுவதற்கு ஏற்றவாறு, இளைஞர் நலன் கருதி, விளையாட்டு மைதானம் ஒன்று அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7579, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட வானூர் ஒன்றியத்தில் திருச்சிற்றம்பலம் கூட்டுப் பாதை அருகே விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7311, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், முன்னம்வட்டம், வேப்பூரில் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8206, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் அரசு விளையாட்டு மைதானம் ஒன்று ஏற்படுத்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8305, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2794, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பூர் தொகுதி, கன்னிகாபுரம் மாநகராட்சி விளையாட்டுத் திடலில் குத்துச் சண்டைப் பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5338, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5336, திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டையில் புதிய விளையாட்டு அரங்கம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5447, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சியில் ஒரு விளையாட்டு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4392, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் விளையாட்டு அரங்கம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3057, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு நகரில் பல்நோக்கு விளையாட்டு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3184, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நம் நாட்டில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படித்துக் கொண்டு



சிறந்த விளையாட்டு வீரர்களாக வீராங்கனைகளாகத் திகழக்கூடிய வீரர்களைத் தேர்வு செய்து, தேசிய அளவிலும், உலக அளவிலும் பங்குபெற்று நம் நாட்டிற்குப் பெருமைசேர்க்க, அவர்களை ஊக்குவிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6507, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5099, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், திருத்தணி நகரில் இளைஞர்கள் பளு தூக்கும் போட்டியில் அதிக ஆர்வம் காட்டுவதால், அதற்கான பயிற்சிக் கூடம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5346, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்டு நலப் பணித் திட்ட மற்றும் கிராமப்புற மாணவர்கள் உடல் நலமும், உள்ள வளமும் சீராக் இருக்க கிராமப்புற ஊராட்சிமூலம் foot ball, volley ball, cricket மட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8432, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள கோட்டூர்புரம் பகுதியில் உள்ள இளைஞர்களின் நலன் கருதி, அப்பகுதியில் இளைஞர்கள் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8703, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூரில் பெரிய விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8464, திரு. செ. பொன்னுதுரை.



**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் பெருந்துறை கிழக்கு நடுநிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானமும், இளைஞர்களுக்கு உடற்பயிற்சிக் கூடமும் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9282, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் தரமான விளையாட்டரங்கம் ஏற்படுத்தி, அதற்குரிய உபகரணங்கள் வழங்கி, இளைஞர்களின் விளையாட்டு மேம்பாட்டுத் திறனை உறுதிப்படுத்தி, சிறந்த வீரர்களை உருவாக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2449, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி நகரில், மாவட்ட விளையாட்டரங்கத்தைப் பயனுக்குக் கொண்டு வருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4851, திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநகராட்சி விளையாட்டு மைதானங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி போதிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4878, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிக்கு இரண்டு இடங்களில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2800, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம், திக்குறிச்சி பகுதியில் அமையவிருந்த இந்திய விளையாட்டு ஆணையத்தின் (SAI - Sports Authority of India) விளையாட்டு மையம் அமைக்கும் பணியைத் துரிதமாக்க, மத்திய அரசை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2875, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8078, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற இளைஞர்களுக்கு விளையாட்டுத் துறையில் பயிற்சி கிடைக்கப் போதிய விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,86,65,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 15 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.142,74,48,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 5636, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட கோவைப்புதூர் அருகில் உள்ள மலை அடிவாரப் பகுதியில் அகழி வெட்டி, யானைகள் வராமல் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2312, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2540, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3663, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலையில் ஏற்படும் காட்டுத் தீயை அணைக்க கோடைக்காலத்தில் பகுதிநேர ஊழியர்களை நியமித்து, காட்டுத் தீக்குக் காரணமான காய்ந்த மரங்கள் மற்றும் காய்ந்த சுள்ளிகளை அப்புறப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3686, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகரிலிருந்து வெளியேறும் கழிவுநீரைச் சுத்திகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4215, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் தோல் தொழிற்சாலைகள், இரசாயன தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்திகரிப்பு செய்ய அரசு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5269, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட காவேரி பகுதியில் தேக்கு மரக் கன்றுகள் நடுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6628, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்போது சென்னையில் பெருகிவரும் மின்னணு கழிவுப் பொருட்களால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7847, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் உள்ள காடு வளர்ப்புத் திட்டம், முழுமையாகச் செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும், வனத் துறைப் பகுதியில் பொதுமக்கள் பல்லாண்டுகளாகப் பயன்படுத்தும் சாலைகளைப் பராமரித்துப் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8581, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள பல இடங்களில் நீண்டதூரத்திற்கு வனத் துறைப் பகுதி உள்ளது. ஆனால் அது சரியாகப் பராமரிக்கப்படவில்லை. அதனைச் சரியான முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9077, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியிலுள்ள காடுகள், சுற்றுப்புற ஆக்கிரமிப்புக்காரர்களால் அழிக்கப்பட்டு வருகின்றன. அதைத் தடுக்கும்வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2809, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3470, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், லகூனில் உள்ள அலையாத்திக் காடுகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2748, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள வனச் சரணாலயங்களில் சமீப காலமாக அதிகரித்துவரும் வன விலங்குகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3247, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6348, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நவீன தொழில் வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பால் ஓசோன் படலத்தில் ஓட்டை ஏற்படுவதால் சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7042, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம், சிறப்புச் சிற்றூராட்சியில் உள்ள உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரைச் சுத்திகரிக்க பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7237, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதி ஒன்றியம், செல்லூர் ஊராட்சி, மலையடிப்பட்டி கிராமத்திலிருந்து காஞ்சாத்து மலைப் பாதை வழியாக பொன்னமராவதிக்குச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9399, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1756, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறைக்கு மாற்று வழியாக வில்லோனி சுத்தி எஸ்டேட், குதிரை வழிப் பாதையில் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1634, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை, அமராவதி வனச் சரகத்தில் Social forestry மூலம் வைத்த மரங்களால் A.R.P. வாய்க்காலுக்குப் பாதிப்பு ஏற்படுவதால்,

மரம் tender விட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1944*, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் காடுகள் அழிந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தி மாவட்டந்தோறும் வனத் துறை சார்பில் காடுகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3443*, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், வத்தல்மலையில் மூலிகைப் பண்ணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3426*, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடல் சீற்றத்தைத் தடுக்க அலையாத்திக் காடுகள் வளர்க்க நிதி



ஒதுக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5078*, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காடு கிராமத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் சாம்பல் தூள், மக்களுக்குப் பெரிதும் இடையூறாக உள்ளது. சாம்பல் தூசுடன் வெளிவருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3372*, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறைப் பகுதிகளில் மக்கள் பல ஆண்டுகளாக வீடுகட்டி வாழ்ந்து வருகின்றனர். அந்த வீடுகளுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6487*, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதி, பிள்ளையார்கோவில்பட்டி, காவல்காரப்பட்டி, தாதமலப்பட்டி, பன்னப்பட்டி, என்.பூதூர் போன்ற பகுதிகளிலும் கஞ்சநாயக்கன்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வன விலங்குகள் (காட்டெருமை) விவசாயத்தை வீணழிக்கின்றன. அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6099, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியில் உள்ள இருக்கூர் கிராமத்தில் அமைந்துள்ள பச்சைகரட்டில் மரம் வளர்த்து அப்பகுதியைப் பசுமையாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6941, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறையில் மூலிகைச் செடிகள் பெருமளவில் நட்டுப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5755, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2099, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் ஜவ்வாதுமலையில் சத்திரம் என்ற இடத்தில் இருந்து மந்தாரக்குட்டைவரை உள்ள வனத் துறை சாலையைத் தார்ச்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6002, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் மரக் கன்றுகள் நட்டுப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3067, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறையில் தற்காலிகமாகப் பணிபுரியும் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8723, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதியில் காட்டு யானைகளால் மிதித்து இறந்து போனவர்களின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6867, திரு. ஏ.கே. போஸ்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பரங்குன்றம் தொகுதி, வெள்ளக்கல் பகுதியில், மதுரை மாநகராட்சி சேகரிக்கும் குப்பைக் கழிவுகளைக் கொட்டி, தீ வைத்து எரிப்பதால், அதிலிருந்து வரும் நச்சுப் புகையினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு துர்நாற்றத்தினால் இப்பகுதி மக்களுக்குத் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. மாற்று ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8704, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4461, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அய்யனார் கோயில் அருகில் உயிரியல் பூங்கா அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8098, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாலை ஓரக் காடுகள் வளர்ப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5134, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோயில் தொகுதியில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளக்கரை மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான குளக்கரைகளில் வனத் துறையின் மூலமாக மரக் கன்றுகள் நடவு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2473*, திரு. ஆர்.டி கணேசன்.

**திரு. ஆர்.டி கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதி, தேனி நகரில் வனத் துறைக்குச் சொந்தமான வால்காடு 9 ஏக்கர் நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4874*, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, சூரியமலையில் அரசு நிலத்தில் மரங்கள் நட்டு, வனத் துறை பாதுகாப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2837*, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8147, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல், சிறுமலை பகுதியில் கனி வகைகளைப் பயிர் செய்யும் நிலங்களைவிட்டு விவசாயிகள் வெளியேற வேண்டுமென்று சிறுமலையில் செயல்படுவதை வனத் துறை, கைவிடக் கோருதல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4857*, திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நம்முடைய தேசிய பறவையான மயில் இனத்தை அழிக்கும்வகையில் சாத்தூர், புதுக்கோட்டை போன்ற பகுதிகளில் வேட்டையாடுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4429*, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியின் ஓர் எல்லை முழுவதும் வனப் பகுதி நிறைந்துள்ளது. இங்குள்ள ஆதிவாசிகள் மற்றும் பொதுமக்களைக் காட்டு யானைகள் தொந்தரவு செய்கின்றன. எனவே, ஆதிவாசிகள் குடியிருப்புகளைச் சுற்றி மின் வேலி அல்லது அகழி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5465*, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி பகுதியில் அதிக அளவு தென்னை நார் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு கழிவுநார்களைச் சாலையின்

இருபுறங்களிலும் தீ வைத்து எரிக்கும்போது, சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. எனவே, அதைத் தடுத்து, இதற்கென்று தனியாக இடம் அரசின் சார்பில் தேர்வு செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5410, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியில் வன விரிவாக்க மையத்தின்மூலம் மரம் வளர்ப்பு திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8481, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதியில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் புதியதாக உருவாகிவரும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர், சரிவரச் சுத்திகரிக்கப்படாததால், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடிக் குடிநீர் பாதிக்கப்பட்டு, குடிநீரைக் குடிக்க முடியாமலும், நிலங்கள் மாசுபட்டு விவசாயம் செய்ய முடியாமலும், பொதுமக்களுக்குத் தொற்று நோய்கள் பரவி வருவதாலும், இதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8510, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில், தேக்கு மரம் வளர்ப்புத் திட்டத்தில், ஆற்றங்கரையில் தேக்கு மரம் நடவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8237, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை பகுதியில் அதிகமான அரசு நிலங்கள் உள்ளதால், அதில் வனத் துறையின் சார்பாக, மரங்கள் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9130, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதியில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1585, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், முதலைக்குளம் பஞ்சாயத்து, கீழப்பட்டி வழியாக நாராயணபுரம் செல்ல, வனத் துறைப் பகுதியில் சாலை அமைத்துத் தருவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9263, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி ஊராட்சியில் கடலாடியிலிருந்து பச்சையம்மன் கோயிலுக்கு சுமார் 20 வருடங்களாகச் சென்றுவரும் பாதையின் இடையே வனத் துறைக்குச் சொந்தமான இடம் உள்ளதாக வனத் துறை அதிகாரிகள் தெரிவித்து, ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் சாலை அமைப்பதை வனத் துறை அதிகாரிகள் தடுப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9232, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஏற்காடு மலையிலிருந்து மரங்கள் வெட்டிக் கடத்துவதைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9298, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறைப் பகுதிகளிலுள்ள தாழ்த்தப்பட்ட மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்விட கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை மேற்கொள்ள குறிப்பாக, தருமபுரி மாவட்டம், அரூர் மாவட்டம், சிட்டிலிங், கோட்டப்பட்டி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், சித்தேரி ஊராட்சிப் பகுதிகளில் சாலைகள், மின்சாரம், குடிநீர் வசதி செய்து தருவதில், நடைமுறை சிக்கலாக உள்ள வனத் துறை விதிகளின் கட்டுப்பாட்டினைத் தடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்" வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 142,74,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3196, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னக நதிகள் இணைப்பு குறித்து ஆய்வு செய்ய, சுற்றுச்சூழல் அறிஞர்கள் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5637, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5531, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர், பல்லடம் ஒன்றியப் பகுதிகளிலுள்ள பொதுப் பணித் துறை

ஊராட்சிக் குளம், குட்டைகளில் சமூக நலக் காடுகள்மூலமாக நாற்றுகள் நட்டு, மீண்டும் மரம் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3915, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு, சேத்தூர், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அரசு அனுமதியுடன் ஆடு மாடுகள் மேய்க்க அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2029, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்றுப் படுகைகளில் பயன் தரும் மரங்களை வளர்ப்பதை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,87,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,74,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை,@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை,@@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்றையதினம் இரண்டு அமைச்சர்கள் உரையாற்ற வேண்டியிருக்கிறது. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மிகாமல் உரையாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தொகுதியில் இரண்டு முறை என்னை

---

@ 459 முதல் 516 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 517 முதல் 572 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெறச் செய்து, இந்த மாமன்றத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தில் கலந்துகொள்ள அனுமதி அளித்த எனது தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், இரண்டு முறை எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த ஒரத்தநாடு தொகுதி மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, இங்கு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத் துறை, தமிழ்நாட்டில் 200 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. 1806 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இந்த வருடத்துடன் 200 ஆண்டுகள் முடிகின்றன. இந்த 200 ஆண்டுகளில் பிரிட்டிஷ்காரர்கள் ஆண்டிருக்கிறார்கள். மற்ற கட்சிகள் ஆண்டிருக்கின்றன. ஆனால், வனம் அழிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ்காரர்கள் மரத்தை வெட்டி, விலை உயர்ந்த மரங்களை வெட்டி, தம் நாடுகளுக்குக் கடத்திச் சென்றிருக்கிறார்கள். ராஜாக்கள் வன விலங்குகளை வேட்டையாடியிருக்கிறார்கள். ஜமீன்தார்கள் வேட்டையாடியிருக்கிறார்கள். வனங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னால் ஆண்ட ஆட்சியாளர்கள், வன நிலங்களுக்குப் பட்டா கொடுத்திருக்கிறார்கள். இதனால், ஒரு நாட்டில் 33.3 சதவீதம் இருக்க வேண்டிய வனம், தமிழ்நாட்டில் 17.6 சதவீதம்தான் இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலம்தான் வனத் துறைக்குப் பொற்காலம். அந்தப் பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குச் சிந்தனையுடன் காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு மகத்தான திட்டத்தைக் கொண்டுவந்து, அந்தத் திட்டத்தின்மூலமாக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்பது, 1997–லே அன்று தமிழகத்தின் முதல்வராக இருந்த மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.



**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குச் சிந்தனையுடன் இந்தத் திட்டத்தை ஜப்பான் கூட்டுறவு வங்கிக்கு அனுப்பி, அது அனுமதி கிடைப்பதற்கு முன்னால் நாங்கள் ஆட்சியிலிருந்து இறங்கிவிட்டோம். அனுமதி கிடைத்து, நீங்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினீர்கள். இதற்கு வித்திட்டவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று இவருக்கு இருக்கின்ற அரசு அதிகாரிகள்தான் கடந்த வருடமும்; அந்தக் கொள்கைக் குறிப்பிலே 1994–வது வருடம் என்று இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த அந்தக் காடு வளர்ப்புத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. 2002–2003–ஒடு அந்தத் திட்டம் நிறைவுபெற இருந்தது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாட்டில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றதை எண்ணி, மீண்டும் கடன் கொடுக்க முன்வந்தது. இதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு, அனுமதி கேட்டு அனுமதி கிடைப்பதற்குள், 2004–2005–க்குத் தேவையான 69 கோடி ரூபாயை மாநில அரசு நிதியாகக் கொடுத்து, தொய்வில்லாமல் இந்தத் திட்டத்தைத் தொடர வேண்டுமென்று அம்மா அவர்கள், 2004–2005–ல் கிட்டத்தட்ட 70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி அனுமதி அளித்து, கடந்த 2005–2006–லும் இந்தத் திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. 2012–2013 வரை இந்தத் திட்டம் வெற்றி பெறும். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குச் சிந்தனையால் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தினால், 17.6 சதவீதமாக இருந்த வனம் மற்றும் மரங்களின் பரப்பு, 21.4 சதவீதமாக உயர்ந்திருப்பதாக டெராடூனில் உள்ள வனத் துறை அலுவலகம் தெரிவிக்கின்றது. இப்படி வனத்தைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தவர்தான், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோல், இந்திய அரசின் சார்பில், வனத் துறைக்கு 15 விருதுகள்; அவற்றிலே 2004–ல் தமிழ்நாடு அரசு, 3 விருதுகளை, இந்திரா பிரியதர்ஷனி விருதுகளைப் பெற்றிருக்கின்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–00*

அதேபோல், 1981 ஆம் ஆண்டிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஸ்வீடன் நாட்டு உதவியுடன் ஏரிக் கரையிலும், குளக் கரையிலும் மரங்கள் வளர்க்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த அரசு, 1996 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை நிறுத்தியது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2004–2005–ல் இதற்கு நிதி உதவி ஒதுக்கி, குளக் கரையிலும், ஏரிக் கரையிலும் மரங்கள் வளர்க்கின்ற இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டுவந்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இந்த வருடமும், நீங்கள் கொண்டுவந்து நடைமுறைப்படுத்துவோம் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறி இருக்கிறீர்கள். அதற்கு, எங்கள் அம்மாவின் திட்டத்தை மீண்டும் தொடர்கிற உங்களுக்கு, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே அமைந்துள்ள அரசு, மற்ற, முந்தைய அரசைப்போல் காழ்ப்புணர்ச்சியோடு செயல்படாமல், நல்ல திட்டங்களை ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி என்றால் அந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தை இரத்து செய்து இருக்க வேண்டாமே? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியிலே, 2001–லே இருந்த விவசாயக் கூலித் தொழிலாளிகளுக்கான அந்தத் திட்டத்தையே, 4 ஆண்டுக் காலம் குப்பையிலே போட்டுவிட்டு வேண்டுமென்றே கடைசி நேரத்திலே ஒரு போர்வைக்காகக் கொண்டு வந்தது அந்தத் திட்டம். அதையெல்லாம் ஏற்கெனவே கொண்டு வந்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். அதையெல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு இப்போது மேலும் ஒரு திட்டத்தையும் கொண்டு வந்து இருக்கிறார்கள்.



**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மானியக் கோரிக்கையின்மேல் பேசுங்கள். வேறு எதுவும் வேண்டாம். தேவையில்லாமல் தலையீடுகளை ஏற்படுத்துகிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச ஆரம்பித்துவிட்டார். உட்காருங்கள், திரு. கலைராஜன், உட்காருங்கள். திரு. கலைராஜன், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள். திரு. கலைராஜன், நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) கை நீட்டிப் பேசக்கூடாது. கை நீட்டிப் பேசக்கூடாது. உட்காருங்கள் முதலிலே. நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) என் அனுமதி கேட்டுத்தான் பேச வேண்டும். (குறுக்கீடு)

*(அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் அமர்ந்துகொண்டே அந்தப் பக்கமும் பாருங்கள் என்று கூறினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்ப்போம். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.A.S., I.P.S., I.F.S. அதிகாரிகள் ஒன்றாகப் பயிற்சி முடித்து வெளியே வருகிறார்கள். 'I.A.S., I.P.S., அதிகாரிகளுக்குச் சீக்கிரமாகப் பதவி உயர்வு கிடைக்கின்றது; எங்களுக்குக் கிடைக்கவில்லை' என்று குறைபட்ட I.F.S. அதிகாரிகளுக்கு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் D.F.O.-ல் இருந்து Conservator, Conservator-ல் இருந்து Chief Conservator, Chief Conservator-ல் இருந்து Additional P.C.F. ஆகிய பதவி உயர்வுகள் கொடுத்து, வனத் துறையில் I.F.S. Officers-க்கு பதவி உயர்வு கொடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல், காவல் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் ரேஷனில் கொடுப்பதுபோல், வனத் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கும் அத்தியாவசிய உணவுப்

பொருள்கள் ரேஷனில் கொடுப்பது இந்தியாவிலேயே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசுதான் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல், சுதந்திரம் அடைந்து, வனத் துறையில், ஒட்டுமொத்தமாக வனச் சரகர்களுக்கு, 225 ஈப்புகளும், Cell phone-களும்—ஏனென்றால், கடந்த மானியக் கோரிக்கையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள்: 'வாகனம் இல்லை; அவர்களுக்குத் தொலைபேசி இல்லை; வனத் துறையை நீங்கள் காப்பாற்ற வேண்டும்; அவர்களுக்கு வாகனமும், தொலைபேசியும் கொடுங்கள்' என்று சொன்னார்கள். எதிர்க் கட்சியாக இருந்தாலும் சொல்லுகின்ற கருத்து நல்ல கருத்து என்பதை உணர்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உடனடியாக ஆணையிட்டு 225 ஈப்புகளும், Cell Phone-களும்--கொடுத்து இருக்கிறார்கள். இப்படி வனத் துறையைக் காவல் துறைக்கு இணையாக தமிழ்நாட்டில் உருவாக்கி, வனத்தையும், வன உயிரினங்களையும் காப்பாற்றிய ஒப்பற்ற தலைவியாக, புரட்சித் தலைவி அவர்கள், பொற்கால ஆட்சியை நடத்தினார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, வனத்தைக் கொள்ளையடித்தவன் வீரப்பன். 20 ஆண்டுக் காலம் சிம்ம சொப்பனமாக விளங்கியவன். அந்த வீரப்பனை அழித்து, அந்த அதிரடிப் படையினருக்குத் துணையாக இருந்த வனத் துறை அலுவலர்களுக்குப் பதவி உயர்வும், பரிசும் கொடுத்தவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வார காலத்திற்கு முன்னால் நீங்கள் பார்த்து இருப்பீர்கள். சந்தனக் காற்று, சத்தியமங்கலம் காட்டுப் பகுதியில் வீசுகிறது என்று பத்திரிகையிலே இருந்தது. வீரப்பன் ஒழிந்தான்; காற்று வீசுகிறது. ஆனால், நேற்று ஒரு மாலைப் பத்திரிகையிலே 'வந்தான் ஐயா, வந்தான் ஐயா! புதிய வீரப்பன் வந்தான் ஐயா!' என்று செய்தி வந்திருக்கிறது. கேரளா, கர்நாடகா காட்டுப் பகுதிகளில் புதிய வீரப்பன் ஒருவன் உருவாகியிருக்கிறான். 15 பேர்களைத் துப்பாக்கியால் குறி தவறாமல் சுடுபவனும், பல யானைகளைக் கொன்றவனும் என்று அவனைப்பற்றி கர்நாடகா I.G. சொல்கிறார். அவன் நீலகிரி காட்டுப் பகுதிக்கு வர இருக்கிறான். நீங்கள் எப்பொழுது ஆட்சிக்கு வருகிறீர்களோ, அப்பொழுதெல்லாம் வீரப்பன்கள் உருவாகிறார்கள். இது என்னவென்றே தெரியவில்லை! (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ நாங்கள் ஆட்சிக்கு வரும்போதுதான் வீரப்பன்கள் உருவாகிறார்கள் என்று சொல்கிறார். 1991-லிருந்து 1996 வரையிலே ஆட்சியில் இருந்தீர்களே, அப்போது அந்த வீரப்பன் இல்லையா? வீரப்பன்கள் எல்லா ஆட்சியிலும் உருவாவார்கள். ஆனால் அந்த வீரப்பன்களைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. இந்த ஆட்சியிலே, இப்போது ஏதாவது புதிய வீரப்பன்கள் உருவானால், நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** வீரப்பன் வீழ்த்தப்பட்டபொழுது, இன்றைய முதலமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசுகின்றபொழுது தலையிடாதீர்கள். நேரம் ஆகிறது.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** I am not yielding, I am not yielding. யாரும் இதில் தலையிடக் கூடாது. பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைத்திலிங்கம், அதை அனுமதிப்பதா, வேண்டாமா என்பதை நான் முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனைச் சுட்டு வீழ்த்தியபொழுது, இன்றைய முதல்வர் அவர்கள், சரண் அடைந்திருந்தால் அவனுக்கு இந்த... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், உட்காருங்கள். உட்காருங்கள். உறுப்பினர் உரையாற்றட்டும் முதலில். உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** ** நீங்கள் அவனைப் பிடிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அங்கேயிருந்த அதிரடிப் படையை வாபஸ் பெற்றுக் கொண்டீர்கள். ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்படியாவது...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்கின்ற வரியை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இதுபோன்ற பேச்சுக்களை, வார்த்தைகளைப் பேசக்கூடாது. கொள்ளை அடித்ததே நீங்கள்தான். 1991–1996–லிருந்து வளரவிட்டதே அவர்கள். இதெல்லாம் தேவையில்லாத குற்றச்சாட்டு. வீரப்பனுக்குத் துணை போனவர்களே அவர்கள்தான். வீரப்பனுக்குத் துணை போனவர்களே அவர்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது ** என்று கேட்டார். அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பினாமி அ.தி.மு.க.-விலே யார் யார் கொள்கை பாரப்புச் செயலாளராக இருந்தவர்கள் என்பது, பினாமி அ.தி.மு.க.–வைக் கேட்டால் தெரியும். (குறுக்கீடு) பினாமி அ.தி.மு.க.–வுக்குத் தெரியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சொன்ன அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பினாமி அ.தி.மு.க.–வினுடைய ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கலைராஜன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள், திரு. வேல்முருகன். என்ன? திரு. வேல்முருகன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள் ஐயா! அமைதியாக இருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. நண்பர்கள் அனைவரும் பேசுகின்றபோது, 'வீரப்பனை நாங்கள் சுட்டுக் கொன்றோம்; எங்கள் ஆட்சியினுடைய சாதனை' என்று ஒவ்வொரு முறையும் குறிப்பிட்டு, இவர்கள் பேசி வருகிறார்கள். நான் இந்த அவையில் கேட்க விரும்புவது, வீரப்பனை அவர்கள் சுட்டுக் கொன்றார்களா; அல்லது, உணவில் விஷம் வைத்துக் கொன்றார்களா என்பதை நம்முடைய தமிழக அரசு, ஒரு C.B.I.–யினுடைய விசாரணைக்கு உத்தரவிடுகின்றபோது, அதை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



எதிர்கொள்வதற்கு அ.தி.மு.க. நண்பர்கள் தயாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன். (குறுக்கீடு) உட்காருங்கள். ஒருவரையொருவர் பார்த்து யாரும் பேசக் கூடாது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விஷம் வைத்துக் கொன்றார்களா, சுட்டுக் கொன்றார்களா என்ற கேள்வியில் சென்றதோடு மட்டும் நின்றுவிடவில்லை. இந்தச் சவாலை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்கிறதா என்று கேட்டார்கள். ஏற்றுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனுக்கு வக்காலத்து வாங்கி, அவனை ஒரு வீரப் புருஷனாகச் சித்தரிக்க நினைப்பவர்கள், இந்தத் தமிழ்நாட்டின் ** என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடு) நீங்கள் தேவையில்லாமல் ஒருவருக்கொருவர் தலையிடக்கூடாது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் வீரப்பனுக்கு வக்காலத்து வாங்கவில்லை. உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் 1997 ஆம் ஆண்டு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியோ வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டானா; எப்படிக் கொல்லப்பட்டான் என்பது அல்ல. இறந்துவிட்டான். ஆனால், வீரப்பனைப் பொறுத்தவரையிலே, கர்நாடக மாநிலத்திலே ராஜ்குமார் என்ற மிகச் சிறந்த நடிகரைக் கடத்தியபோது, கர்நாடக மாநிலமும், தமிழக அரசும் எப்படியாவது அவரை மீட்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு முயற்சிகளை மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு எடுத்து, ஓர் ஒப்பந்தத்திற்குக்கூட வந்தோம். எனவே, முடிந்துபோன பிரச்சினையை மீண்டும் மீண்டும் பேசி ** இப்படியெல்லாம் பேசுவது நல்லதல்ல. எனவே, பிரச்சினை...

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தைகள் ** என்ற வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்மைப் பொறுத்தவரையிலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No,no,no. அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார்; அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, காடுகளிலே யாரும் இப்படிப்பட்ட அக்கிரமங்கள், அநியாயங்கள் செய்யக்கூடாது; யானைகளை வெட்டக்கூடாது; யாரையும் கடத்தக்கூடாது என்பதிலே இந்த அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. எனவே புதிய வீரப்பன்கள் உருவானால், நிச்சயமாக இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைத்திலிங்கம், 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையைச் சீச்கிரம் முடியுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஆர். வைத்திலிங்கம்:** 5 நிமிடங்கள் கொடுங்கள், பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். இரண்டு நிமிடங்களில் முடிக்க வேண்டும்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, 1997 ஆம் ஆண்டு, திருப்பத்தூரிலே சந்தன மரக் கிடங்கு எரிந்தது. 190 கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தன மரங்கள் எரிந்தன. அதனுடைய மதிப்பு இன்றைக்கு 490 கோடி ரூபாய். அன்றைக்கு Raman Commission—அன்றைய முதல்வரான இன்றைய முதல்வர், அன்று சொன்னார்: 'சிறு பிள்ளைகள் கூட்டாஞ்சோறு ஆக்கியதில் எரிந்து விட்டது' என்று. ஆனால் Raman Commission, 'இது சிறு பிள்ளைகள் விளையாட்டல்ல; நாச வேலைதான்' என்று கூறியது. நீங்கள் ஆட்சிக்கு வந்தால், இப்படிச் சந்தன மரங்கள் எல்லாம் எரியும். இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள்; தயவுசெய்து சந்தன மரக் கிடங்குகளைக் காப்பாற்றுங்கள்; பாதுகாருங்கள் என்று கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் ஆட்சியில்தான் வனத் துறை அலுவலர் உங்களை என்னென்ன சொன்னார்; அந்த ராஜேந்திரன் கதி — என்ன என்னென்ன செய்தீர்கள் என்று தெரியும். உங்கள் ஆட்சியில் என்னென்ன பத்திரிகையில் வந்தன; எவ்வளவு மரங்களைக் கடத்தினீர்கள் என்று பத்திரிகையில் சொல்லி, நேற்று முன்தினம் அவர் பொறுப்பேற்று, photo-கூட பத்திரிகையிலே வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் சீக்கிரம் பேசுங்கள். திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். உங்கள் உறுப்பினர் சீக்கிரம் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்கள், ராஜேந்திரன் என்று வனச் சரகரைப் பற்றிச் சொல்கிறார். அவரைப் பற்றி இவருக்கு முழு விவரமும் தெரியாது. யாரோ சொல்லிப் பேசுகிறார். அவரைப் பற்றிய முழு விவரத்தை உங்களிடம் நான் பேசுகிறேன். ராஜேந்திரன் ஒரு அரசு அலுவலராக... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** That cannot be permitted. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதுபற்றிப் பேசக்கூடாது. உட்காருங்கள். அடுத்த உறுப்பினர். மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) முடியுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன குற்றச்சாட்டுக்கு நான் பதில் சொல்ல வேண்டும். எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். அந்த ராஜேந்திரன், அரசு அலுவலர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ராஜேந்திரனைப் பற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அதைப்பற்றிப் பேசக்கூடாது. அவையில் இல்லாதவரைப்பற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) மற்ற subject–ஐப் பேசுங்கள். (குறுக்கீடு) Not permitted. (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, கடந்தகால ஆட்சியிலே சந்தனக் கட்டைகள் எல்லாம் எரிந்தன என்று சொன்னதற்காக பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் அந்த வரிகளை — அவரே இந்தமாதிரி உணர்ச்சிவசப்பட்டு—பேசிவிட்டு, அதற்கு நாங்கள் பதில் சொன்னால் எல்லோரும் எழுந்திருந்து கத்தக்கூடாது. ஒருவர் எழுந்து பதில் சொல்லுங்கள், நாங்களும் பதில் சொல்கிறோம். அவர் சொன்னார் அல்லவா, Raman Commission சொன்னது என்று. அதே ராஜேந்திரன் வழக்கைப்பற்றி, இவர் விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. உயர் நீதிமன்றமே விளக்கம் அளித்து, என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அவரைத் திரும்ப appointment போடச் சொல்லிகூட, போடாதது எல்லாம் தெரியும். உயர் நீதிமன்றமே உங்களுக்கு certificate கொடுத்திருக்கிறது என்ன நடந்தது என்று. ஆகவே, அவ்வாறு நடந்தது எல்லாம் வரலாறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைத்திலிங்கம். (குறுக்கீடு) திரு. சி.வி. சண்முகம், உட்காருங்கள். திரு. வைத்திலிங்கம், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள், இல்லையென்றால், நான் அடுத்த உறுப்பினரைப் பேசக் கூப்பிடப் போகிறேன்.



**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜேந்திரன், வன அலுவலராக இருப்பதற்குத் தகுதி இல்லை என்று அங்கே இருந்த D.F.O. சிபாரிசு செய்து (குறுக்கீடு) அவர் பேசியதற்குப் பதில் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடு) சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எந்தவிதமான நல்ல திட்டங்களுக்கும் மத்தியிலே இருக்கின்ற சுற்றுச்சூழல் வனத் துறை அமைச்சர் அவர்கள் தடை போடுகிறார்கள். மாநில சுயாட்சி என்று வாய் கிழிய பேசிய நீங்கள், தமிழ்நாட்டு அரசினுடைய N.O.C. இல்லாமல், நேரடியாக மத்திய அரசிடம் அனுமதி வாங்கலாம் என்று இப்போது சொல்கிறார்கள். அப்படியென்றால், தமிழ்நாட்டினுடைய மாநில சுயாட்சி என்று சொல்லுகிறீர்களே, மத்தியிலே நீங்கள் அமைச்சராக இருப்பதால், தமிழ்நாட்டினுடைய அதிகாரத்தை அவர்கள் பறித்துக்கொள்வதற்கு, இந்த அரசு இடம் கொடுக்குமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா... (குறுக்கீடு)

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சியிலே, இந்த அரசாங்கம் எப்போதும் அந்தக் கொள்கையிலே உறுதியாக இருக்கின்ற அரசாங்கம். இந்த அரசாங்கத்தினுடைய உரிமைகளை விட்டுக்கொடுக்க நிச்சயம் முன்வராது. ஆனால், மத்தியிலே Forest அமைச்சர், தி.மு.க.–வைச் சேர்ந்தவர் இருக்கிறார் என்பதற்காக, இங்கே இருக்கக்கூடிய வன இலாகாவினுடைய உரிமைகளை இந்த அரசாங்கம் விட்டுக் கொடுக்கவும் இல்லை; விட்டுக் கொடுக்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உங்களுக்கு 21 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு கொளவாய் ஏரி, அதேபோல் ஆரணியினுடைய பாலாறு நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம், படூர் ஏரி, பறவைகள் சரணாலயம் போன்றவற்றிற்கு அனுமதி கேட்டு, நிதி ஒதுக்கச் சொல்லி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. உங்கள் அமைச்சர்தான் அங்கிருக்கிறார். மலை

மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், இப்படி இந்தத் திட்டங்களுக்கெல்லாம் நீங்கள் அதிகமாக இப்போது நிதி வாங்கலாம். ஏனென்றால், அங்கு ஆட்சி செய்வது நீங்கள்தான். வனத்தைக் காப்பாற்றுவதில் அக்கறையும், சுற்றுச்சூழலைப் பேணிக் காப்பதிலும் அக்கறையும் உங்களுக்கு இருந்தால், பல கோடி ரூபாய் பணத்தை வாங்கி—இந்தச் சந்தர்ப்பம் சீக்கிரம் உங்களுக்கு இல்லாமல் போய்விடும்; நிதியை வாங்கி—தமிழ்நாட்டில் வனத்தையும், சுற்றுச்சூழலையும் நீங்கள் பாதுகாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.... (குறுக்கீடு) அமைச்சர் பேசுகிறார்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற அரசுக்கு, மத்திய அரசிடம் அனுமதி கேட்டுப் பெறுவதற்கு முடியவில்லை என்று சொன்னார்கள். தமிழகத்திலே மேலும் 2 இடங்களில் புலிகள் காப்பகம், ஆனைமலையிலும், முதுமலையிலும் உருவாக்க வேண்டும என்று அவர்கள் அனுப்பிய அந்த proposal-ஐ, தலைவர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில், இரண்டு நாட்களுக்கு முன்பு, நம்முடைய மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர், மாண்புமிகு திரு. ராஜா அவர்கள், அதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதை உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த அரசு தன்னுடைய உரிமைகளை உடனடியாக மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு) நீங்கள்தான் முடித்துவிட்டீர்கள் இல்லையா? (குறுக்கீடு) நீங்கள்தான் முடித்துவிட்டீர்கள் இல்லையா? நன்றி சொல்லி முடித்ததற்குப் பிறகு திருப்பி open செய்கிறீர்கள்! (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இன்றைய மானியக் கோரிக்கையின்மீது பேசிக்கொண்டிருக்கிறார். மத்தியிலே உங்களுக்கு வாய்ப்பு விரைவிலே போய்விடும் என்று சொல்கிறார். மத்தியிலே இருக்கின்ற ஆட்சி, நிலையான ஆட்சி. ஐந்தாண்டுக் காலம் ஆளக்கூடிய ஆட்சி. பிரதமர்



மன்மோகன் சிங் தலைமையிலே, மத்தியிலே, திராவிட முன்னேற்றக் கழகம் அமைச்சரவையிலே இடம்பெற்றிருக்கிறது. அந்த ஆட்சியும், அந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களும் ஐந்தாண்டுக் காலம் நீடிப்பார்கள் என்பதை உறுப்பினர்களுக்கு உங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி முடியுங்கள், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இருப்பதுதான் நிலையான ஆட்சி; இங்கேயிருப்பது நாளைக்குக் கவிழப்போகிற ஆட்சியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைத்திலிங்கம், நீங்கள் நல்ல கருத்துகளை, நான்கு கருத்துகளை மக்களுக்குப் பயன்படும்வகையிலே பேசுங்கள். அடுத்த உறுப்பினர், திரு. எல்.பி. தர்மலிங்கம். (குறுக்கீடு) முடியாது, முடியாது. திரு. தர்மலிங்கம், பேசுங்கள்.

***திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார், பெருந்தகை பேரறிஞர் அண்ணா ஆகியோர் உறங்குகின்ற திசைநோக்கி வணங்கி, எனது கன்னிப் பேச்சை இம்மாமன்றத்தில் தொடங்குகிறேன். என்னை ஈன்றெடுத்த தாய், தந்தைக்கும், எனக்கு அரசியல் முகவரி தந்து, எனது நெஞ்சமெல்லாம் நீங்கா இடம் பெற்ற முத்தமிழ் வித்தகர், மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களுக்கும், மாண்புமிகு இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், அரசியல் வித்தகர், அருளாளர் மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கும், எனது அரசியல் வழிகாட்டி மாண்புமிகு மக்கள் தளபதி அவர்களுக்கும், எங்கள் மாவட்டச் செயலாளர் மாண்புமிகு என்.கே.கே.பி. ராஜா அவர்களுக்கும், மத்திய இணையமைச்சர் மாண்புமிகு ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், எனது வெற்றிக்குப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், எனக்கு வாக்களித்து, இம்மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த, (குறுக்கீடு) வாய்ப்புக் கொடுத்த சத்தியமங்கலம் சட்டமன்ற வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், எனது நண்பர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

*முற்பகல் 11–20*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனம் மற்றும் சுற்றுச்சூழல் விவாதத்தில் பங்கேற்றுப் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் பெரும்பாலான மரங்கள் அழிக்கப்படுகின்றன. ஆகவே, இனிவரும் காலங்களில் வீட்டிற்கு ஒரு மரம் என்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். வீடு கட்ட வீட்டின் வரைபடம் அங்கீகரிக்கப்படும்போது, ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு மரம் வளர்ப்பதைச் சட்டமாக்க வேண்டும்.

அதேபோல, விவசாயத் தோட்ட நிலங்களிலும் குறிப்பிட்ட பகுதிகளிலே மரம் வளர்க்கப்பட வேண்டும். அதிக மரங்கள் வளர்ப்பதன்மூலம், அதிக மழை பெற வாய்ப்பு உள்ளது. அதனால் சுற்றுப்புறச் சூழலும் பாதுகாக்கப்படுகின்றது. இதே முறை, தொழிற்சாலைகளிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், மருத்துவமனைகளிலும் பின்பற்றப்பட வேண்டும். இதேபோன்று வனப் பகுதிகளில் மரங்கள் அதிகம் வளர்க்கப்பட வேண்டும். இன்று காடுகளில், விலை மதிப்புக் கூடிய சந்தன மரங்கள், ஈட்டி, தேக்கு ஆகிய மர வகைகள் பார்ப்பதற்கு அரிதாகிவிட்டன. எனவே, இம்மாதிரியான மரங்களை வனத்தில் வளர்க்க வனத் துறை ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்தமட்டில், பல்வேறு இடங்களில் உள்ள ஆறுகளிலே, அந்தந்த நகரத்திலே உள்ள சாக்கடைகள் கலந்து விடுகின்றன. அதைத் தடுப்பதற்குப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பேருந்துகளில், அவை விடுகின்ற புகை, மிகவும் மோசமான தீங்கினை விளைவிக்கக் கூடியதாக உள்ளது. புகை மண்டலங்களைக் கட்டுப்படுத்த மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள காகித ஆலைகளில் வருகின்ற கழிவுநீர், சரியான முறையில் சுத்திகரிக்கப்படாமல், ஆற்றிலும், குளங்களிலும் கலந்து விடுகின்றது. இதனால் குடிநீரும், விவசாய நிலமும் பாதிக்கப்படுகின்றது. எனவே, இதன்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள தொகுதிக்குட்பட்டது தாளவாடி ஒன்றியம். தாளவாடிக்குச் செல்வதற்கு, இரண்டுமுறை அண்டை மாநிலமான கர்நாடகாவிற்குள் சென்று, அதன்பின்புதான் தாளாவடிக்குச் செல்ல வேண்டும். அதனால் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை எடுத்து வரும்போது, கர்நாடகாவில் உள்ள சோதனைச் சாவடிகளில் பிரச்சினை ஏற்படுகின்றது. அதுமட்டுமின்றி, 1993 ஆம் வருடம் கர்நாடகாவில் வாழ்கின்ற தமிழர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டபோது, தாளவாடியில் வசிக்கின்ற தமிழ் மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளானார்கள். எனவே, இப்பிரச்சினைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றால், தாளவாடி செல்வதற்கு கர்நாடகாவிற்குள் செல்லாமல், ஏற்கெனவே நமது எல்லைக்குள் உள்ள வனச் சாலையை மேம்படுத்தி, அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முற்றிலும் மலைப் பகுதியைக் கொண்ட தாளவாடி ஒன்றியமானது, 10 ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதியாகும். சத்தியமங்கலத்திலிருந்து 27 கொண்டை ஊசி வளைவுகளுக்கு அப்பால், சுமார் 70 கி.மீ. தாண்டி கர்நாடகா மாநில எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. பரப்பளவில் மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமான தாளவாடி மலைப் பகுதியை, மலைவாழ் மக்களின் நலன் கருதி, தனி வட்டமாக அறிவிக்குமாறு மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களைப் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மற்றும் இதே தாளவாடி மலைப் பகுதியில், பல ஏக்கர் பரப்பளவில், பல இடங்களிலே அமைந்துள்ள கோழிப் பண்ணைகளினால் சுற்றுப்புறச் சூழலும், சுகாதாரமும் கெட்டு, பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளார்கள். எனவே, தாங்கள் இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதி மக்களின் நீண்டநாள் கனவான சாம்ராஜ் நகர் இரயில்வே திட்டமானது, ஆய்வுப் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதன் பின்பு, அப்பணி கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதன் உத்தேச தூரம் 58 கிலோ மீட்டர் ஆகும். இதில் 40 கிலோ மீட்டர் தூரமான கர்நாடகத்தைச் சேர்ந்த சாம்ராஜ் நகர் வனப் பகுதியிலே, ஆய்வுப் பணி நடைபெற்று, அந்தப் பணி முடிவுற்றுள்ளது. மீதமுள்ள 18 கிலோ மீட்டர் பகுதி, சத்தியமங்கலம்

வனப் பகுதிக்குச் சொந்தமானது. அதில் இன்னும் ஆய்வுப் பணி நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் நிறைவேறவும், வனத் துறை அனுமதி அளிக்கவும் ஆவன செய்ய மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-25*

மேலும், பரப்பளவில் அதிக சுற்றளவு கொண்ட, மிகவும் பின்தங்கிய பகுதியான தாளவாடி மற்றும் சத்தியமங்கலம் மலைப் பகுதிக்கு நடமாடும் சுகாதார மையம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதிக்குட்பட்ட மாக்காம்பாளையம், குன்றி மலைப் பகுதிகளுக்குச் செல்வதற்கு, கடம்பூர் மலைப் பகுதியிலிருந்து வனத் துறைக்குச் சொந்தமான சாலையில் சுமார் 37 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். இந்தச் சாலை எவ்வித அடிப்படை வசதியும் இல்லாமல் இருப்பதால், போக்குவரத்திற்கு மக்கள் மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டுள்ளார்கள். அதுமாத்திரமல்ல; புங்காரில் இருந்து தெங்குமரஹாடா பகுதிக்குச் செல்லவேண்டுமென்றால், சுதந்திரமடைந்த இந்தியாவில் இதுவரை இந்தப் பகுதிகளுக்குச் சரியான சாலை வசதிகளேயில்லை. எனவே, வனத் துறைக்குச் சொந்தமான இந்தச் சாலையைப் பராமரிப்புச் செய்ய, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைத்தால், சாலையைப் பராமரிக்க ஏதுவாக அமையுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றும் மலைப் பகுதியிலே குத்தியாலத்தூர், மாக்காம்பாளையம், குன்றி, திங்களூர், கேர்மாளம் ஆகிய ஊராட்சிகள் உள்ளன. இங்கு 50,000-க்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். இப்பகுதிக்குச் செல்லுவதற்கு இரண்டு வனச் சோதனைச் சாவடிகள் உள்ளன. மலைப் பகுதியிலிருந்து சத்தியமங்கலத்திற்கு விவசாய விளைபொருட்களைக் கொண்டு செல்லவும், கொண்டு வரவும், சொந்த வாகனங்களிலே செல்வதற்கும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஏற்கெனவே, 1997 ஆம் ஆண்டு சோதனைச் சாவடிகளில் கட்டணம் ஏதுமின்றி சென்றுவர அரசாணை பிறப்பிக்கப்பட்டு, இன்றுவரை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே, முன்னர் பிறப்பித்த அரசாணையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே வாழ்கின்ற மலையாளி இன மக்களுக்குச் சாதிச் சான்று வழங்குவது குறித்த அவர்களது கோரிக்கை, பல வருடங்களாக நிராகரிக்கப்பட்டு வருகிறது. மற்றபடி தருமபுரி, சேலம் மாவட்டங்களிலே உள்ள மலைப் பகுதிகளிலே வாழும் இதே இன மக்களுக்கு S.T. (Scheduled Tribes) என, சாதிச் சான்று வழங்கப்பட்டு வருகிறது. மற்றும் எங்கள் மலைப் பகுதியிலேயிருந்து தருமபுரி, சேலம் மாவட்ட மலைப் பகுதிகளுக்குப் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குச் சாதிச் சான்றிதழ் S.T. எனக் கொடுக்கப்படுகின்றது. ஆனால், அந்த மாவட்டங்களிலிருந்து இங்குள்ள மலைப் பகுதிகளுக்குப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு வந்தால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு நமது மாவட்டத்தில் சாதிச் சான்று S.T. என வழங்கப்படுவதில்லை. ஒரே மாநிலத்தில் இரு வேறு கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஒரே இன மக்களுக்கு முறையான சான்று வழங்கப்பட வேண்டுமென்பதை மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களை மலைப் பகுதியில் வாழும் மக்களின் சார்பாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** கன்னிப் பேச்சு. மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். கன்னிப் பேச்சு, கொஞ்சம் தடைபடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிலே ஒன்றும் தப்பே கிடையாது.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தண்ணீர் குடித்துவிட்டு, கன்னிப் பேச்சு பேசுங்கள்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** கன்னிப் பேச்சு, தனிப் பேச்சு. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானி ஆற்றின் வடகரைப் பகுதியில் சத்தியமங்கலம் தொகுதி அமைந்துள்ளது. இப்பகுதி மக்கள் முழுமையாக விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். இப்பகுதியில் மழையின்மை காரணமாகவும், 200 அடிக்குமேலே கிணறு தோண்டியும், நீர் இல்லாத காரணத்தினாலும் விவசாயம் பெருமளவு பாதிப்படைந்துள்ளது. பவானி ஆறு, அரக்கன் கோட்டை கால்வாய் அருகிலுள்ள பட்டா நிலங்களிலே, அரசுடைமையாக்கப்பட்ட

வங்கிகள்மூலம் கடனுதவி பெற்று, ஊற்றுக் கிணறு அமைத்து, அந்த நீரை pump-set உதவியுடன் பயன்படுத்தி, விவசாயிகள் கடந்த 40 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறார்கள். இந்தக் காலங்களிலே இம்மாதிரி விவசாயத்தை முறைகேடான விவசாயமென அரசு அறிவித்துள்ளது. ஆற்றின் ஊற்று நீரை எடுத்து விவசாயம் செய்யும் அனைத்துப் பயிர்களுக்கும் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டு, சாதாரணத் தீர்வையிலிருந்து பல மடங்கு தீர்வை வசூலிக்க, வருவாய்த் துறை ஏற்பாடு செய்துள்ளது. தண்டத் தீர்வை, ஒரு ஏக்கருக்கு 1,000 முதல் 2,000 வரை திணிக்கப்படுவதால், விவசாயிகள் கட்ட முடியாமல் பெரும் தொல்லைக்கு ஆளாகியுள்ளார்கள். இதனால், வருடந்தோறும் ஒவ்வொரு விவசாயிக்கும் கட்டமுடியாத தொகை, பெருந்தொகையாகி நிலுவையில் உள்ளது. நிலுவைத் தொகை பாக்கி இருப்பதால் வருவாய்த் துறையிடம், விவசாயிகள் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிப் படிப்புக்காக பெறவேண்டிய சான்றிதழ்களைக்கூட முறையாகப் பெற முடிவதில்லை. இதனால் சில சமயங்களில் விவசாயிகளுக்கும், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. குறிப்பாக, நம் மாநிலத்தில் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் காவிரி ஆற்றின் இருபுறமும் உள்ள விவசாயிகளுக்கு காவிரியிலிருந்து நீர் இறைத்துப் பாசனம் செய்ய முறையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அன்றைய அரசு, G.O. Ms. No. 2183, 1985–இல் ஓர் உத்தரவினால், சுமார் 5,000 ஏக்கருக்கும், 21–10–1988 ஆம் தேதியில் சுமார் 7,000 ஏக்கருக்கும் முறையான பாசன அந்தஸ்து வழங்கி, தண்டத் தீர்வையை அகற்றி, சாதாரண தீர்வை வசூலிக்கப்பட்டு வருகின்றது. இதேபோல், பவானி ஆற்றின் கரையோர விவசாயிகளுக்கு விதித்த முறையற்ற தண்டத் தீர்வையை இரத்து செய்து, முறையான பாசன அந்தஸ்தை வழங்க ஆணை வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களை அந்தப் பகுதி விவசாயிகளின் சார்பாகத் தங்கள்மூலம் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–30*

மேலும், கடந்த காலங்களிலே பவானி ஆற்றின் ஓரங்களில் பட்டா நிலங்களிலே ஊற்றுக் கிணறு தோண்டக்கூடாது என்றும், அப்படி ஊற்றுக் கிணறு வெட்ட 200 மீட்டர்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** உரையை முடித்துவிடுகிறேன். இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அப்படி ஊற்றுக் கிணறு வெட்ட 200 மீட்டர் தூரத்திற்கு அப்பால் ஒரு ஏக்கர் நிலம் வேண்டும் என்றும் சட்டம் பிறப்பித்திருந்தனர். 200 மீட்டர் என்பதை 100 மீட்டர் தூரமாக, தேர்தல் அறிக்கையில் தலைவர் அவர்கள் அறிவித்தமைக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அந்த 100 மீட்டர் என்பதை மாற்றி, பழைய நிலைப்படி, அருகிலுள்ள அவரவர் பட்டா நிலங்களிலே ஊற்றுக் கிணறு தோண்ட அனுமதி வழங்க வேண்டும் என்றும், மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட கணக்கம்பாளையம் மற்றும் பெருமுகை கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான வேதம்பாறை நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன். பள்ளிப்பட்டியிலிருந்து, நஞ்சகவுண்டம்பாளையம் வழியாக, கோபிசெட்டிபாளையம் சென்றடைய பவானி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் ஒன்று அமைக்க, கடந்த கழக ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டு, இதுவரை பணி தொடங்கப்படாமல் இருந்தது. இப்போதுதான் பணி தொடங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணியை விரைவில் முடிக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், தூக்கநாயக்கன்பாளையத்தில் துணை மின் நிலையம் 10 MVA Power Transformer–உடன் இயங்கி வருகின்றது. இப்பகுதி விவசாயப் பெருமக்களுக்கு, மின்சாரம் பற்றாக்குறையாக இருந்து வருகின்றது. 10 MVA Transformer–க்குப் பதிலாக 16 MVA Transformer நிறுவ அனுமதி கிடைத்தும், இன்றுவரை அது நிறுவப்படவில்லை. மின்சாரம் சீராகக் கிடைக்க 16 MVA Transformer நிறுவ ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் அருகேயுள்ள பெரியகுளம் விவசாயிகள் பயனடைகின்றவகையில், புளியங்கோம்பை அருகே பெரியகுளம் நீர்த்தேக்கத் திட்டத்தை இவ்வாண்டு நிறைவேற்றித் தர, மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் நகரத்தில் நீண்ட நாட்களாக இடிந்துக் கிடக்கும் சார் பதிவாளர் அலுவலகத்தை, இவ்வாண்டு கட்டிக் கொடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன். சத்தியமங்கலத்தில் நீதிமன்றத்திற்குச் சொந்தக்

கட்டடம் ஒன்று ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சத்தியமங்கலத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தர ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். சத்தியமங்கலத்தில் இரண்டு இடங்களில் இயங்கும் அரசு மருத்துவமனையை ஒரே இடத்தில் செயல்படுத்த ஆவன செய்யுமாறு, மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் நகராட்சியில் மொத்தமுள்ள 27 வார்டுகளில் 6 வார்டுகள் தோட்டப் பகுதிகளாக அமைந்துள்ளன. (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். ஒரே நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். இந்த வார்டுப் பகுதிகள், நகர்ப்புறத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ளன. சத்தியமங்கலம் நகராட்சிக்கு வருகின்ற வருமானம், நகர்ப் பகுதிக்கே பற்றாக்குறையாக உள்ளது. எனவே, தோட்டப் பகுதியாக அமைந்துள்ள 6 வார்டுகளின் சாலைகள், பராமரிப்பு இல்லாமல் பழுதடைந்து இருக்கின்றன. எனவே, இந்தச் சாலைகளைக் கிராமச் சாலைகளாக மாற்றித்தர மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் பகுதி, திப்பு சுல்தான் ஆட்சி புரிந்த புராதனப் பகுதி என்பதால், சத்தியமங்கலம் நகரத்தைப் பாரம்பரியமிக்க நகரமாக அறிவிக்குமாறு மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் நகரப் பகுதிக்குள், தேசிய நெடுஞ்சாலை செல்வதால் சத்தியமங்கலத்திற்குப் புறவழிச் சாலை அமைக்க ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் பொதுமக்களின் நீண்டநாள் கனவான மின்மயானத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



சத்தியமங்கலம் வழியாகச் செல்லும் N.H. 209 சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சத்தி–அத்தாணி–பவானி சாலையானது, பவானியிலுள்ள N.H. 47 சாலையில் சென்று சேர்கிறது. இந்த மாநிலச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிக் கொடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அண்ணன், ஒரு நிமிடம். உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுவரையில் 234 முறை சத்தியமங்கலம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மேலும், எனது தொகுதியிலுள்ள கெம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியானது, மிகவும் பின்தங்கிய அதிக நிலப் பரப்பு கொண்ட பேரூராட்சிப் பகுதியாகும். பேரூராட்சிப் பகுதியில் வருகின்ற வருமானம், மிகக் குறைவாக உள்ளது. இதன் பொருட்டு கிராமப்புறங்களுக்குச் செல்லும் சாலைகளைப் பராமரிக்க முடிவதில்லை. எனவே, மேற்படி கிராமங்களுக்குச் செல்கின்ற சாலைகளைக் கிராமப்புறச் சாலைகளாக மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எங்களது தொகுதியில், வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. இதன் சார்பாக, கடந்த 1989 ஆம் ஆண்டு, அன்றைய அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மறைந்த K.P.K. அவர்களால், அறிவியல் கலைக் கல்லூரி ஒன்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்குப் பின்பு வந்த ஆட்சியாளர்களால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆகவே, இக்கோயிலின் நிதி ஆதாரத்தைக் கருத்தில்கொண்டு, இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அறிவியல் கலைக் கல்லூரியும், கோயிலில் பக்தர்கள் உணவு அருந்தி, ஓய்வெடுக்க ஒரு மண்டபமும் அமைத்துக் கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

எனது தொகுதியிலுள்ள பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாகவும், மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்திக் கொடுத்தமைக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்ற பழமொழிக்கேற்ப, விவசாயிகளின் வாழ்வில் இருந்த துயரைப் போக்கும்வண்ணம் பல கோடிக் கணக்கில் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்தின் கைத்தறி நகரமாக விளங்கக்கூடிய, தலைவர் கலைஞர் அவர்களின் குருகுலமாக விளங்கிய ஈரோடு நகராட்சியை, தந்தை பெரியார் அவர்களின் நினைவாக மாநகராட்சியாக அறிவித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் வனம் மற்றும் சுற்றுச் சூழல் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய, இலையுதிர் காலத்தில் தலைகவிழ்ந்து நின்ற எங்களை வசந்தமெனும் வளர்பிறையாக்கி, வழிநடத்தும் அய்யா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 234 தடவை சொல்லியிருக்கிறீர்கள், சத்தியமங்கலம் என்று மட்டும். நான் எண்ணிக்கொண்டே இருந்தேன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி.

***திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சட்டப் பேரவையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தன்னிகரில்லா நேரு குடும்பத்தின் வாரிசு, தியாகத்தின் திருவுருவம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சத்தியமங்கலம். நீங்கள் மொடக்குறிச்சி. ஏழு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். நிறைய சொல்லிவிட்டார்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை, 15 நிமிடங்கள் வேண்டும். நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி அன்னை சோனியா காந்திக்கும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பேரனும், எனக்கு எல்லாமாக இருந்து வழி நடத்துகிற மாண்புமிகு மத்திய அமைச்சர், தன்மானத் தலைவர் அண்ணன் E.V.K.S. இளங்கோவன் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், மூத்த, முதுபெரும், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், எனக்காக



வந்து வாக்குச் சேகரித்த இளைஞர்களின் எழில் ஞாயிறு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், நன்றியோடு கூடிய வணக்கத்தைத் தெரிவித்து, அதேபோல மொடக்குறிச்சி தொகுதி ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினருக்கும், செயல் மறவர்களுக்கும், வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை தொடர்பான மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். சுற்றுச்சூழல் என்பது இன்றைய சமுதாயத்தில் மிகவும் முக்கியமான விஷயமாக மக்களால் கருதப்படுகிறது. அந்த விழிப்புணர்வு மக்களிடையே அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. இன்றைய நல வாழ்வு என்பது, மாசுபடாத காற்று, மாசுபடாத தண்ணீர், மாசுபடாத நிலம். இதற்கு நிச்சயமாக அரசு முன்னுரிமை அளித்தாக வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

இதன் அடிப்படையில், இன்றைக்கு ஈரோடு மாவட்டம், எனது தொகுதியான மொடக்குறிச்சிக்கு உட்பட்ட காளிங்கராயன் வாய்க்கால் என்பது, சுமார் 800 வருட சரித்திரப் பின்னணி உள்ளது. ஒரு காலத்தில் எங்கள் கிராமத்து மக்கள் குடிநீராகப் பயன்படுத்திய சரித்திரம் உண்டு. ஆனால் இன்று அந்தத் தண்ணீரைப் பார்த்தால், தொடுவதற்குப் பயமாக இருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் தோல் பட்டறைக் கழிவுகளும், சாயப் பட்டறைக் கழிவுகளும் நஞ்சு கலந்த தண்ணீராக வாய்க்காலில் வந்து, அதைப் பயன்படுத்துகிற நிலமும் கெட்டு, அதைக் குடித்த கால்நடைகளும் மலடாகி, அந்த வயல்களில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் தோல் நோயால் பாதிக்கப்பட்டும், இந்த நஞ்சுத் தண்ணீர் பாய்ந்த வயல் பகுதிகளில் உள்ள கிணறுகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தும் மக்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டும், பலர் இறந்தும் உள்ளனர். அந்தப் பகுதியிலே தற்சமயம் பெண் கொடுக்க பயப்படுகிறார்கள். அதற்குக் காரணம், அந்தத் தண்ணீரால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மலட்டுத் தன்மை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதுபோன்ற அச்சம் இந்த மக்களிடம் பெருவாரியாக உருவாகியுள்ளது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். காளிங்கராயன் வாய்க்காலில் கழிவுநீரைக் கலக்கிற தோல் பட்டறை, சாயப் பட்டறைத் தொழிற்சாலைகள் 60 எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், பதிவு பெறாமல் நூற்றுக்கணக்கான

சாயப் பட்டறைகளும், தோல் தொழிற்சாலைகளும் அங்கே இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதேபோல், பேரூராட்சி, மற்றும் நகராட்சியிலிருந்து கழிவுநீர் வருகிறபோது, அதிலும் மறைமுகமாக சாயப் பட்டறைக் கழிவுகள் சுத்திகரிக்கப்படாமல் சேர்க்கப்பட்டு, வாய்க்காலில் கலக்கப்படுகிறது. மொத்தத்தில், இந்த நிலை தொடருமாயின், அடுத்த ஓரத்துப்பாளையமாக காளிங்கராயன் வாய்க்கால் மாறிவிடக் கூடாது என்பதற்காக ஒரு நிரந்தர நடவடிக்கையை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இதற்கு ஒரு தீர்வைக் காண வேண்டுமென்று விண்ணப்பிக்கிறேன், இந்த நேரத்திலே. எதற்காக இந்தப் பிரச்சினையைச் சொல்லுகிறேன் என்றால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் தமிழகம் முழுவதும் இதனுடைய பாதிப்பைச் சந்திக்க நேரிடும் என்பது ஒரு வேதனையான விஷயம்.

அதேபோல, ஓரத்துப்பாளையம் அணையில் கலக்கும் திருப்பூர் சாயப் பட்டறைக் கழிவினால் இப்போது காங்கேயம், பெருந்துறை, மொடக்குறிச்சி, அரவகுறிச்சி, கரூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதே நிலை நீடித்தால், ஓரத்துப்பாளையம் கழிவுநீர் என்பது, அடுத்தது குளித்தலை, திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை, நாகப்பட்டினத்தையும், அதன் வழியாக சென்னையையும் பாதிக்கும் என்பது நிதர்சனமான உண்மையாகப் போகிறது.

முற்பகல் 11—10

தலைவர் அவர்களே, ஆகவே இந்த விஷயத்திலே, மாசுக் கட்டுப்பாடுச் சட்டத்தைக் கடுமையாக்கி, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், விவசாயப் பெருங்குடி மக்களையும், இதனை நம்பி குடிநீர் ஆதாரங்களைப் பெற்றிருக்கும் மக்களையும், போர்க்கால அடிப்படையிலே காப்பாற்ற வேண்டும். அதேபோல, நாட்டின் பொருளாதாரத்திற்கும், தொழிலாளர்களுக்கும், அடிப்படை ஆதாரமாக இருக்கிற இந்தச் சாயப் பட்டறைத் தொழிலையும், தோல் தொழிலையும் காப்பாற்றியாக வேண்டும். அதற்கு உடனடியாக அனைத்துக் கழிவுகளையும் சேகரித்து, அதை அரசுமூலமாக, திருப்பூர், ஈரோடு, பவானி, கொமாரபாளையம், பள்ளிபாளையம், கரூர் ஆகிய பகுதிகளிலிருந்து வெளிப்படுகிற கழிவுகள் அனைத்தையும், அரசாங்கத்தின் ஒருங்கிணைப்போடு வெளியேற்றி, சுற்றுச்சூழலுக்குப் பங்கம் இல்லாதவகையில், குடிநீர் ஆதாரம் மாசுபடாதவகையில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மேற்கொண்டு, வருங்கால



சந்ததியினர்களுக்கு மாசற்ற ஒரு தமிழகத்தை உருவாக்கித் தருவார் என்ற நம்பிக்கையோடு இந்த வாதத்தை இங்கே வைக்கிறேன்.

அதேபோல, எங்கள் மாவட்டத்திலே, காங்கேயம் பகுதியிலே, தேங்காய்த் தொட்டி தொழிற்சாலையிலே உள்ள புகை வெளிவருகிற காரணத்தினாலே, அந்தப் பகுதியில் மிகப் பெரிய மாசு காற்றிலே கலந்திருக்கிறது. அதற்கு நிரந்தரமாக ஒரு தீர்வைக் கண்டாக வேண்டும். தலைவர் அவர்களே, பெருந்துறை 'சிப்காட்' நிலத்திலே கழிவுநீர் கலக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற, சென்னிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த பாலத் தொழுவிலே, மிகப் பெரிய பிரச்சினை ஏற்பட்டு, நிலத்தடி நீர் மாசுபட்டிருக்கிறது. அதற்கும் நீங்கள் குறிப்பிட்டு நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரத்துப்பாளையம் அணையிலே இருக்கிற அந்த நீரினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், இலட்சக்கணக்கான தென்னை மரங்களை இழந்திருக்கிறார்கள். இப்போது அந்தப் பகுதியிலே விவசாயம் செயய முடியாத நிலை. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய வாழ்க்கை என்பது இன்றைக்கும் கேள்விக்குறியாக உள்ளது. அப்படி வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்கள், சாயப்பட்டறை அதிபர்கள்மூலமாக, ஒரு நிவாரணம், நஷ்ட ஈட்டைக் கேட்டிருக்கிறார்கள். நான் கேட்பதெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர், கலைஞர் அவர்களைக் கேட்பதெல்லாம், நீங்கள் அரசின்மூலமாக, அந்த மக்களுக்கு ஏதாவது ஒரு நஷ்ட ஈட்டைக் கொடுத்து, அந்த மக்களின் வாழ்க்கையிலே இலேசான ஒளி விளக்கை ஏற்ற வேண்டும் என்று இந்தநேரத்திலே கோரிக்கையாக வைக்கிறேன்.

அதேபோல, வனத் துறையின் சார்பிலே, பல்வேறு நலத் திட்டங்களை, டாக்டர் கலைஞர் அவர்களால் அறிவித்திருக்கிற திட்டங்களை வரவேற்கிற இதேநேரத்திலே, இயற்கையிலே வனம் என்பது ஒட்டுமொத்த பூமியில் வாழ்கின்ற அனைத்து உயிர்களுக்கும் தேவையான சுத்தமான காற்றையும், முறையாக மழை பெய்வதற்கும், காடுகளும், வனங்களும் நாட்டிற்கு இந்த வளங்களைத் தருகின்றன; இன்னும் சொல்லவேண்டும் என்றால், வனத் துறையில் மரங்களை வளர்க்க பெரிய அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும். மரங்களை வெட்டினால் மழை பொய்த்துவிடும். இந்த அடிப்படையிலே எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த தாளவாடி, பர்கூர், கடம்பூர் ஆகிய மலைப் பகுதிகளில், மேலும் பல்வேறு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம், அந்த வனத்தைப் பாதுகாப்பதோடு, இன்னும் அதிக

மரங்களை நடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தினுடைய வனப் பகுதியிலே, வால்பாறையைச் சேர்ந்த தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு யானைகள் வருவதைத் தடுத்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே கோரிக்கை வைத்து, வனத் துறையில் இருப்பவர்களுக்கு, யானை, புலி, சிறுத்தைப் புலிகளால் ஏற்படும் உயிரிழப்பிற்கு, மத்திய அரசு, ரூ.75,000—ம், மாநில அரசு ரூ.25,000—ம் சேர்த்து, ஆக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்; அதை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று உங்கள்மூலமாக இந்தச் சபையிலே சொல்லுகிறேன் தலைவர் அவர்களே. தனியார் நிலங்களில் உள்ள கற்பூர மரங்கள் மற்றும் சில்வர் ஓக் மரங்களை வெட்டத் தடை விதிக்கவேண்டும்.

அதேபோல, வனத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில், நெடுஞ்சாலைத் துறைமூலம் சாலைகள்போட, அந்தப் பகுதி மக்களின் நலனை முன்னிட்டு, வனத் துறையின் அனுமதி என்பது எளிமைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி பட்டா நிலங்களில் உள்ள கற்பூர மரங்கள், சொந்த உபயோகத்திற்கு வெட்ட அனுமதி வழங்கப்படுவதை, எளிமையாக்கப்பட வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்குக் கோரிக்கை; எங்கள் மாவட்ட மக்களின் 75 ஆண்டுக் கால கனவுத் திட்டம், சத்தியமங்கலம்—சாம்ராஜ் நகர் இரயில்வே திட்டம். மாண்புமிகு மத்திய அமைச்சர், திரு. E.V.K.S. இளங்கோவன் அவர்கள் முயற்சியால் கடந்த 22—1—2005 அன்று பண்ணாரியிலே நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு. வேலு அவர்களின் முன்னிலையிலே அன்றைக்கு ஆய்வுப் பணி துவக்க விழா நடைபெற்றது. இதன்மூலம், சாம்ராஜ் நகர் to தாளவாடி வரையும், சத்தியமங்கலம் to மேட்டுப்பாளையம் வரையும் ஆய்வுப் பணிகள் முடிந்துள்ளன. ஆனால், கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, வன விலங்குகளுக்கு, குறிப்பாக, யானைகளுக்கு இடையூறாக இருக்கும் என்று கூறி, இந்தச் சத்தியமங்கலம் முதல் தாளவாடி வரையிலான பகுதிக்கு, ஆய்வுப் பணி செய்ய அனுமதி மறுத்துவிட்டார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் மூன்று மாநில மக்கள் பயன்பெறுவர். கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு



இந்த மூன்று மாநில மக்களின் பொருளாதாரம் வளர்ச்சிபெற, இது முக்கியமான திட்டமாகும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மக்களைவிட யானைகளும் காக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கு எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. யானைகளைவிட மனிதர்கள் முக்கியம். அவர்களுடைய நலன் பாதுகாக்கப்பட்டாக வேண்டும். அவர்களின் தேவையும் நிறைவேற்றப்பட்டாக வேண்டும். ஆகவே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு நீங்கள் உதவி செய்தாக வேண்டும் என்று சொல்லி, இந்த ஆய்வுப் பணி, கடந்த ஆட்சியில், சொல்லப்போனால், அரசியல் காரணங்களால் வேண்டுமென்றே நிறுத்தப்பட்டது. தாங்கள் முதல்வராக இருக்கிற ஆட்சியிலே அனுமதி வழங்கி, எங்கள் மாவட்ட மக்களின் கனவுத் திட்டங்களைச் செயல்படுத்தித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—45

அடுத்து, ஈரோடு மாநகராட்சி; அடுத்ததாக எங்கள் மாவட்டத் தலைநகரமான ஈரோடு, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த மண்; தலைவராக இருந்த நகராட்சி, ஈரோடு நகாரட்சி, வீரப்பன் சத்திரம், காசிபாளையம், சூரம்பட்டி, பெரிய அக்ரஹாரம், பெரியசேமூர், 46 புதூர் ஆகிய எல்லாப் பகுதிகளையும் இணைத்து ஈரோட்டை மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மஞ்சள், கைத்தறித் துணிகள், ஏற்றுமதி ஆயத்த ஆடைகள், உணவு எண்ணெய், தோல் தொழில்கள், இப்படிப் பல்வேறு தொழில்களுக்கு இந்திய அளவில் புகழ்பெற்ற ஊர் ஈரோடு. நாங்கள் வேண்டுவதெல்லாம், மாண்புமிகு முத்தமிழறிஞர், முதல்வர் கலைஞர் அவர்களே, உங்கள் தலைமையில் உள்ள இந்த ஆட்சியிலே, உங்களது குருகுலமான ஈரோடு மாநகரை, மாநகராட்சியாக ஆக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய அன்பான வேண்டுகோள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஈரோடு மாவட்ட M.L.A.—க்கள் எல்லாம் ஒரு முடிவோடுதான் இருக்கிறீர்கள்! (சிரிப்பு)

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** ஆமாம், ஆமாம், தெளிவாக இருக்கிறோம். (சிரிப்பு) வனத் துறையிலே இருக்கிற ஊழியர்கள், சமூக வன ஊழியர்களாகவும், தோட்டக் காவலர்களாகவும் வனத் துறையிலே 20, 25 ஆண்டுகளாகத் தினக்கூலி அடிப்படையிலே, சுமார் 3,650 பேர்

பணிபுரிகிறார்கள். அவர்களையெல்லாம் முறைப்படுத்தி, பணி நிரந்தரம் செய்திட வேண்டுமென்றும், இந்த நேரத்திலே உங்கள்மூலம் கோரிக்கை வைக்க ஆசைப்படுகிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே இருக்கிற திட்டங்களுக்கு இந்த நேரத்திலே, இந்தச் சபையின் வாயிலாக நான் நன்றியைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி முடித்துவிடுங்கள், Sir.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை, இல்லை, நான்கு கோரிக்கைகள்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐந்து நிமிடங்களாக யானையைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்!

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன், இருங்கள். எனது தொகுதியில் உள்ள எழுமாத்தூரில் புதிய சர்க்கரை ஆலை அமைக்க அனுமதியளித்த மாண்புமிகு முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கும், அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. என்.கே.கே.பெ. ராஜா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே இருக்கிற பாசூரிலேயிருந்து, நாமக்கல் மாவட்டம், சோழசிராமணிக்கு இடையில் கதவணைமீது, வாகனப் போக்குவரத்திற்காகப் பாதை அமைக்கும் நீண்ட ஆண்டுகளாக இருந்த அந்தத் திட்டம்; அதை 7 மீட்டராக அகலப்படுத்தி, அங்கு அகலப் பாதை அமைத்து, நீண்டகால கனவுத் திட்டத்தை நனவாக்கிய மாண்புமிகு முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், அதேபோல, எனது அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே உங்கள்மூலமாக உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கைகள், நான்கே கோரிக்கைகள். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன். எனது தொகுதியான மொடக்குறிச்சிக்குட்பட்ட L.B.P. ஆயக்கட்டிற்குள் சேர்க்கப்படாத தாராபுரம் கட்டு எனப்படும் 23,000 ஏக்கரை, L.B.P. ஆயக்கட்டில்



மீண்டும் சேர்க்கவேண்டும் என்கிற கோரிக்கையை இந்த நேரத்திலே உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

குரங்கன்பள்ளம் பாசனப் பகுதி என்பது, திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் என்கின்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ. இருந்தபோது கொண்டு வரப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தில், 3,000 ஏக்கர் நிலத்தை, L.B.P.-லே மீண்டும் சேர்க்க வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையையும் உங்கள்மூலமாக இங்கே வைக்கிறேன். காளிங்கராயன் வாய்க்காலின் வலக்கரை முழுவதும் பொதுப் பணித் துறைக்குச் சாராத கரை. அதைப் பொதுப் பணித் துறை கையகப்படுத்தி, வலக்கரை முழுவதும் பொதுப் பணித் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். L.B.P. வாய்க்கால் தூர்வாரி மதகுகள் பழுதுபார்க்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

முழுவதும் விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் நிறைந்த எனது தொகுதிக்கு, ஒரு அரசுக் கல்லூரிகூட கிடையாது. மாண்புமிகு முதல்வர் அவர்களே, ஒரு அரசுப் பொறியியல் கல்லூரியை எங்கள் தொகுதியில் ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, எனது தொகுதிக்குட்பட்ட கொடுமுடி கோயில், மும்மூர்த்திகளைக் கொண்ட மிகப் பெரிய கோவில் உள்ள திருத்தலம். இந்தப் பகுதியினைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுகின்றேன். அதேபோல, கொடுமுடியிலேயிருந்து காவிரி ஆற்றிலே, காங்கேயம், வெள்ளக்கோவில், சிவகிரிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், மேலும் நாமக்கல் மாவட்டத்திற்குக் குடிநீர் ஆதாரமாக இருப்பதால், அங்கு ஒரு சிறிய தடுப்பணை கட்டினால், சுற்றுலாப் பயணிகளுக்குப் படகுப் போக்குவரத்து போன்ற...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** போன்ற வசதிகளும், குடிநீரும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும் என்பதால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரக் கேட்கிறேன்.

எனது தொகுதியிலே அதிகம் மஞ்சள் உற்பத்தி ஆவதால், மஞ்சள் வணிக வளாகத்தை மொடக்குறிச்சிக்குட்பட்ட பகுதியிலே அமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாமன்றத்தில் மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள் காங்கிரஸ்

கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும், மாமன்றத்தின் பேரவைத் தலைவருக்கும், பேரவைத் துணைத் தலைவராகிய தங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம், ஜெய் ஹிந்த்!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

***திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க பதின்மூன்றாவது தமிழகச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பளித்த தமிழக மக்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுக்கும், தமிழ்க் குடிதாங்கி, சமூக நீதிக் காவலர், தமிழினப் போராளி, எங்கள் குடும்பத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களுக்கு முதலில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

இளைஞர்களின் எழுச்சி நாயகர், இந்திய அளவிலே போற்றப்படும் நடமாடும் மருத்துவக் களஞ்சியம், இந்தியாவில் புகையிலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்ததற்காக Luther L. Terry விருது பெற்ற பசுமைத் தென்றல் எங்களுடைய மாண்புமிகு மத்திய சுகாதார நலத் துறை அமைச்சர் மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கு இந்த நேரத்திலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவரும் எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும், ஆலோசனையாளராகவும் இருந்துவரும் ஓய்வறியா உழைப்பாளி, தியாகச் செம்மல் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அகவை 84–இலும் தமிழ்நாட்டு மக்களுக்கு இரவுபகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர், உலகத் தமிழினத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு இந்த நேரத்திலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்தினுடைய தளபதி என்று தமிழக மக்களால் பாராட்டப்படும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்



அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடுவண் தொடர்வண்டித் துறைமூலமாகத் தமிழகத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பணியாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு நடுவண் தொடர்வண்டித் துறையினுடைய இணை அமைச்சர் அண்ணன் அரங்க வேலு அவர்களுக்கு இந்த நேரத்திலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தர், என் வெற்றிக்காக வருகைதந்து, சபதமேற்று, என்னை வெற்றிப்பெறச் செய்த மின்சாரத் துறையிலே சாதனை படைத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கு இந்த நேரத்திலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், பாசமிகு அண்ணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கு இந்த நேரத்திலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டப் பொறுப்பாளராக இருக்கின்ற அண்ணன் காந்தி அவர்களுக்கும், அதைப்போல என் வெற்றிக்கு அயராது பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய நிர்வாகிகளுக்கும், வாக்களித்து என்னைத் தேர்ந்தெடுத்த ஆற்காடு தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்'

என்றார் வான்புகழ் வள்ளுவர்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'

என்றார் வள்ளலார். இயற்கையோடு இணைந்து வாழ்வது என்பதுதான் தமிழினப் பண்பாடு. 'குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களும் அதற்கான பண்பாடும்' என உலகிலே முதன்முதலாக சுற்றுச்சூழல் கோட்பாடுகளை உருவாக்கியவர்கள் தமிழர்கள்தான். ஆனால், உலகின் இதர நாடுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது, கடந்த நூற்றாண்டில்தான் உருவானது. 1972 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவையால், மனித சுற்றுச்சூழல் மாநாடு, ஸ்டாக்ஹோம் நகரில் கூட்டப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஒரே வெளிநாட்டுப் பிரதமர், நமது முன்னாள் இந்தியத் தலைமை அமைச்சர்

திருமதி இந்திரா காந்தி அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

அதேபோன்று, 1987 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட உலகச் சுற்றுச்சூழல் ஆணையம்தான், உலகச் சுற்றுச்சூழலைக் காப்பதற்காக, நிலைத்திருக்கும் மேம்பாடு — Sustainable Development — எனும் கொள்கையை உருவாக்கியது. 1992 ஆம் ஆண்டில் ஐ.நா. சபையால் பிரேசில் நாட்டின், ரியோ–டி–ஜெனிரோ நகரில் கூட்டப்பட்ட புவி உச்சி மாநாட்டில், சுற்றுச்சூழலைக் காப்பதற்காக, 'அஜெண்டா 21' எனும் 21 ஆம் நூற்றாண்டுக்கான செயல்திட்டம் வகுக்கப்பட்டது. அம் மாநாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளின் பிரதமர்கள் உட்பட 172 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

2000 ஆவது ஆண்டில் நியூயார்க் நகரில் கூடிய புத்தாயிரமாண்டு உச்சி மாநாட்டில் வகுக்கப்பட்ட 'Millenium Development Goals' எனப்படும் 'புத்தாயிரமாண்டு இலட்சியங்களிலும் நிலைத்திருக்கும் வளர்ச்சி' வலியுறுத்தப்பட்டது. 2002 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்கில், நிலைத்திருக்கும் மேம்பாட்டிற்கான உலக உச்சி மாநாட்டில், 193 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர். அதில் இந்திய அளவிலே பசுமைத் தாயகம் சார்பாக ஐ.நா. சபையினுடைய அழைப்பின்பேரிலே அன்றைய பசுமைத் தாயகத்தின் தலைவரும், இன்றைய சுகாதாரத் துறையினுடைய அமைச்சருமான மாண்புமிகு டாக்டர் சின்ன அய்யா பங்கேற்றார். அதைப்போன்று இந்திய அரசின் சார்பில் அன்றைய காலக்கட்டத்திலே சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்களும் கலந்துகொண்டு, இந்தப் புவியினைக் காக்க உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றேன்.

வனம், நமக்கெல்லாம் இயற்கை அளித்த சொத்து. நாம் மழை பெறுவதற்கு வனம்தான் காரணம். காடுகளை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். 2003 ஆம் ஆண்டின் கணக்குப்படி, தமிழகக் காடுகளின் பரப்பளவு 21.25 சதவீதமாகும். வனத்தைப் பாதுகாக்கவும், காடுகள் பரப்பளவை அதிகப்படுத்தும் நோக்கத்தில் காடுகளை வளர்க்கவும், காடு வளர்ப்புத் திட்டத்தில் அரசு எடுத்து வரும் முயற்சியை வரவேற்கின்றோம். தமிழகத்தில் 8 வன உயிரினச் சரணாலயங்கள், 5 தேசியப் பூங்காக்கள், நீலகிரி உயிர்ச்சூழல் காப்பகம், மன்னார் வளைகுடா உயிர்ச்சூழல் காப்பகம், அகத்தியமலை உயிர்ச்சூழல் காப்பகம் ஆகிய மூன்று உயிர்ச்சூழல் காப்பகங்கள், 12 பறவைகள்



சரணாலயங்கள் ஆகியவை இருப்பது, வன உயிரின மேம்பாடில் இந்தியாவில் தமிழ்நாடுதான் முதலிடம் என்பதற்காகப் பாராட்டுகிறோம்.

முற்பகல் 11–55

சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பள்ளி அளவிலே மாணவர்களிடையே வலுப்படுத்த, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 150 பள்ளிக்கூடங்கள்வீதம், 30 மாவட்டங்களில் 4,500 பள்ளிகளில் தேசிய பசுமைப்படை தோற்றுவிக்கப்பட்டுள்ளதை, பசுமைத் தாயகம் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலும் வரவேற்கின்றோம்.

அடுத்ததாக, பனை மரம் ஓர் அதிசய மரம். தமிழர்களுடைய பண்பாட்டுச் சின்னமும் அதுதான். ஆனால், பனை வளர்ப்பதும், பயன்படுத்துவதும் குறைந்து வருகிறது. எனவே, தமிழக வனத் துறையானது, கோடிக்கணக்கான பனை மரங்களை நட்டு வளர்ப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றினை வகுத்துச் செயல்படுத்த வேண்டும் என்றும், பனை மரம் சார்ந்த தொழில்களை வளர்ப்பதிலும் உரிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், கிராமங்களின் பொதுச் சுகாதாரத்தைக் காப்பதில் கவனம் செலுத்தும்வகையிலே, கிராமங்களுடைய பொது இயற்கை வளங்களைக் காப்பதிலும், பராமரிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டுகோள் வைக்கின்றேன்.

அடுத்து, பள்ளிக்கரணை சதுப்புநிலம். சென்னைப் பெருநகரின் முதன்மையான இயற்கை வளமாக இருப்பது, பள்ளிக்கரணை சதுப்பு நிலமாகும். வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு வரும் பறவைகளைவிட, அதிகமான பறவைகள் பள்ளிக்கரணைக்கு வருவதாக, ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இங்கு 50 வகையான உயிரினங்களும், தாவரங்களும் உள்ளன. ஒருகாலத்தில் 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இருந்த பள்ளிக்கரணை சதுப்பு நிலம், இப்போது 500 ஏக்கராக மிகவும் குறைந்துவிட்டது. அதுவும்கூட அழியும் நிலையில் உள்ளது. இந்த அரிய இயற்கை வளம், சென்னையின் குப்பைத் தொட்டியாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலைமை தடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் சென்னையின் குப்பைகளைக் கொட்டுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. அப்படியே subject, subject–ஆக எடுத்து வைத்துள்ளார். பள்ளிக்கரணை, அது, இது என்று. (குறுக்கீடு) வேகமாகப் பேசச் சொல்கிறேன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக வனத் துறை சார்பாக ஒரேயொரு கோரிக்கையை வைக்க ஆசைப்படுகிறேன். வனத் துறையில் கடந்த 15 ஆண்டுகள், 20 ஆண்டுகளுக்கு மேலாக, குறைந்த சம்பளத்தில், தினக்கூலி அடிப்படையில், வனத் தோட்டக் காவலர்களாகவும், வனப் பணியாளர்களாகவும் பணியாற்றி வருபவர்கள், கிட்டத்தட்ட 3,650 பேருக்கு மேல் உள்ளனர். இவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல், குறைந்த சம்பளத்தில் குடும்பம் நடத்த இயலாமல், குடும்பத்தோடு சிரமப்பட்டு வருகின்றார்கள். எனவே, 15, 20 ஆண்டுகளாக நிரந்தரம் இல்லாமல் உள்ளவர்களை நிரந்தரப்படுத்தி, ஊதிய உயர்வு வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வனத் துறையினரின் பணி என்பது, மிகவும் கடினமானது. எனவே, இந்தத் துறையில் பணியாற்றக்கூடிய வனக் காவலர், அதாவது Guard, Watcher, Forester, வனச்சரக அலுவலர் – Ranger – மாவட்ட வன அலுவலர் போன்ற அனைத்து நிலைகளில் உள்ளவர்களுக்கும் உரிய காலத்தில் விரைவாகப் பதவி உயர்வு வழங்கிடுமாறு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

நீர்வளப் பாதுகாப்பு; 'நீரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவர் வாக்கு. இந்திய மக்கள் தொகையிலே ஆறரை விழுக்காட்டினர் தமிழகத்தில் வசிக்கின்றனர். ஆனால், நிலப்பரப்பில் நான்கு விழுக்காடுதான் தமிழகத்தில் உள்ளது. நீர் வளமோ இந்தியாவின் நீர் வளத்தில் 2 விழுக்காடுதான். இத்தகைய அரிய வளமான நீர், மாசுபடுவது தொடர்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.

**திரு. கே.எல். இளவழகன்:** தொழிற்சாலைகள், நகர்ப்புறக் கழிவுகள், பூச்சிக்கொல்லிகள் எனப் பல வழிகளிலும் நமது நீர்வளம் மாசுபடுத்தப்படுகிறது.



அடுத்ததாக வேலூர் மாவட்டம், சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, ஒரு மோசமான மாவட்டமாக உள்ளது என்பதை இந்த நேரத்திலே மிக வருத்தத்தோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், கடந்த காலங்களிலே அந்த மாவட்டத்தில் உருவான தோல் பொருட்கள் தொழிற்சாலைகளும், இரசாயனத் தொழிற்சாலைகளும் பல சுற்றுச்சூழல் கேடுகளை விளைவிக்கின்றன. அதை வலியுறுத்திதான், கடந்த காலங்களில் எங்கள் பசுமைத் தாயகத்தினுடைய நிறுவனரும், தலைவருமான மருத்துவர் அய்யா அவர்கள், பல காலக்கட்டங்களிலே போராட்டங்களை நடத்தி, வலியுறுத்தி, அன்றைய காலக்கட்டத்திலே அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகின்றேன். மேலும், பொது சுத்திகரிப்பு என்பது, ஒட்டுமொத்தமாக தோற்றுப்போன திட்டம் என்பதை இந்த நேரத்திலே வருத்தத்தோடு சுட்டிக்காட்டுகிறேன். அதற்கு மாற்றுத் திட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

அதுமட்டுமல்லாமல், அந்த மாவட்ட மக்களைத் தயவுகூர்ந்து காப்பாற்றிட முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரு மனிதன் வாழவேண்டுமென்று சொன்னால், சுகாதாரம் என்பது அவசியம். அதுமட்டுமல்ல; அவர்கள் குடிக்கக்கூடிய குடிநீர் என்பது மிக மிக அவசியமானது. ஆனால், அங்கிருக்கக்கூடிய தொழிற்சாலைகளுடைய கழிவுகள் ஒட்டுமொத்தமாக அந்த மாவட்டத்தினுடைய மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய பாலாற்றிலே கலக்கப்படுகின்றன. பாலாறு என்பது பாழாகிப் போன ஆறும், பாலாறு என்பது விஷமாக மாறிய ஆறுமாகக் காட்சியளிக்கின்றது என்பதை இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இதைத்தான், கடந்த காலத்திலே 1995 ஆம் ஆண்டு எங்களுடைய பசுமைத் தாயக நிறுவனர் டாக்டர் அவர்கள், பாழாகிப் போன பாலாற்றைக் காத்திட, வாணியம்பாடி முதல் வாலாஜாவரை, 120 கிலோ மீட்டர் வரை, தானே சைக்கிள் ஓட்டி வந்து (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட மூன்று நாட்கள் வந்து அந்த நாட்களிலே அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்த்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், 2000 ஆம் ஆண்டு இரசாயனத் தொழிற்சாலையால் பாலாற்றுக்குப் பெரும் கேடுகள் விளைவிப்பதைச்

சுட்டிக்காட்டி, உடனடியாக அதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு, எங்களுடைய இன்றைய மத்திய சுகாதார அமைச்சர், எங்களுடைய சின்ன அய்யா அவர்கள், 'சிப்காட்' முதல் வேலூர் வரை கிட்டத்தட்ட 10,000 தொண்டர்களோடு, மாபெரும் சைக்கிள் பேரணி நடத்தித் தடுத்தார் என்பதை, இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதேபோன்று, சுற்றுச்சூழலைக் காக்கவேண்டும் என்கின்ற நோக்கத்தோடு பவானி ஆற்றையும், கடலூர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள சில பகுதிகளையும் காக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, பல போராட்டங்கள், கருத்தரங்குகள், பல அறிஞர்களை அழைத்து மாநாடுகள் போன்றவற்றின்மூலம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். இறுதியாக என்னுடைய தொகுதிபற்றிப் பேச வாய்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடியுங்கள்.

**திரு. கே.எல். இளவழகன்:** நான்கே நான்கு points-தான். ஆற்காடு நகரிலே, ஆற்காடு தாலுகா அரசுத் தலைமை மருத்துவமனையிலே, போதிய மருத்துவர்கள் இல்லாமல், மருத்துவ உபகரணங்கள் இல்லாமல், போதிய கட்டட வசதி இல்லாமல் உள்ளது. இதனால் 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேலூர் அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்து நோயாளிகள் அனுப்பப்படுவதால், மக்கள் பலவிதமான துன்பத்திற்கு ஆளாகின்றனர். எனவே, தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, முக்கியமான ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டுகின்றேன். கடந்த 1999 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் தலைமையில் இருந்த நல்ல ஆட்சியில், அன்றைய குடும்ப நல அமைச்சர், எங்கள் மண்ணின் மைந்தர் ஆற்காட்டார் அவர்கள் தமது முயற்சியாலே, ஆற்காடு நகரிலே ஒரு கண் மருத்துவமனையைக் கொண்டு வந்தார். அன்றையதினம், அது அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியிலே, மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் கொண்டுவந்த ஒரே காரணத்திற்காக, கடந்த ஐந்தாண்டுக் காலமாக ஒரு பணியாளர்கூட இல்லை. மருத்துவரே நியமிக்கப்படாமல்,



கடந்தகால ஆட்சியாளர்களைப் பழி வாங்கவேண்டுமென்கின்ற நோக்கிலே, ஒட்டுமொத்தமாக அந்த மக்களைப் பழிவாங்கினார்கள் என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகிறேன். எனவே, அந்தக் குறையை உடனடியாகப் போக்கி, அந்த மருத்துவமனைக்கு doctor-களையும், மருத்துவ உதவியாளர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக ஆற்காடு நகருக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது தம்பி. திரு. இராமசாமி அவர்கள். அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி. (குறுக்கீடு) Sorry, அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு. (குறுக்கீடு) இல்லை, முடிக்க மாட்டார்; முடிக்கக் கூடாது என்றுதானே அவர் இருக்கிறார். அவராலே முடிக்க முடியாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், ஆற்காடு தொகுதிக்கு என்னென்ன வேண்டுமென்று கேட்கிறாரோ, அதை எல்லாம் இந்த அரசு செய்து கொடுக்கும். எனவே, அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.எல். இளவழகன்:** ஆற்காடு தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, இந்த அரிய வாய்ப்பினை நல்கிய, கருணை காட்டிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றிசொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் பேசுவதற்காக வாய்ப்பளித்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருகின்ற காலங்களில் பூமியின் வெப்பம் 3 degree உயரும் என்று உலக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். கடந்த நூற்றாண்டில் அரை degree வெப்பம் உயர்ந்ததற்காகவே, பல நாடுகளில் தட்பவெப்பச் சூழ்நிலைகளில் மாற்றங்களும், கடும் வெள்ளச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன. இது வருங்காலத்தில், மூன்று degree வெப்பம்

உயர்ந்தால், ஏராளமான சிற்றங்களும், பேரழிவுகளும், சுனாமி போன்றவையும் ஏற்படக்கூடுமென்று, பிரிட்டன் நாட்டினுடைய முதன்மை அறிவியல் ஆலோசகர், பேராசிரியர் David King அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மார்க்சியவாதிகளைப் பொறுத்தவரை, எப்பொழுதுமே சுற்றுச்சூழலில் அக்கறை செலுத்தி வருகின்றனர் என்பதற்கு 1876 ஆம் ஆண்டிலே எங்களது மார்க்சிய ஆசான் Fredrick Engals அவர்கள் குறிப்பிட்டுள்ளதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்பட்டால், இந்த பூமிப் பந்தைப் பாதுகாத்திட முடியாது என்று எச்சரித்ததோடு மட்டுமல்லாமல், இலாப வெறிபிடித்த முதலாளித்துவமுடையவர்களிடமிருந்து இந்த பூமியைப் பாதுகாக்க வேண்டுமென்று வழிகாட்டியுள்ளார்.

*பிற்பகல் 12–0.5*

இப்போது தனியார்மயம், தாராளமயம், உலகமயம் கொள்கையின் தாக்கத்தால் சுற்றுச்சூழல் என்பது மிகவும் பாதிப்பிற்குள்ளாகி வருகிறது. இறால் பண்ணைகள், கடல் வளங்களைக் கொள்ளையடிப்பது, சாயப்பட்டறைக் கழிவுநீர், ஆலைக் கழிவுநீர், தோல் கழிவுநீர் இவற்றினால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. உதாரணமாக, நாகை மாவட்டத்திலே அரசால் அனுமதிக்கப்பட்டவை 89 இறால் பண்ணைகள் மட்டும். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் 900–க்கு மேற்பட்ட இறால் பண்ணைகளை அமைத்ததன் காரணமாக, உச்ச நீதிமன்றமே அவற்றை அப்புறப்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டும், அப்புறப்படுத்தாததன் காரணமாக, அந்தப் பகுதியிலுள்ள இறால் பண்ணைகளினால் விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. விவசாய நிலம் அபகரிக்கப்படுகிறது. நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது. வேலைவாய்ப்பு பறிக்கப்படுகிறது. கடல் வளங்களைக் கொள்ளையடிப்பதனால், உலகமய திட்டத்தில் இப்போது தமிழகத்தில், சுமார் 15 இலட்சம் உழைப்பாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இலாப நோக்குடன் இறால் பண்ணைகளின் செயல்பாட்டின் காரணமாக கடலோர சுற்றுச்சூழல் — coastal eco system — கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கழிவுநீரால், நீர் வளம் பாதிக்கப்படுவதும், அதனால் மக்களுக்குக் குடிநீர், பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதுமான நிலைமையைத் தடுத்து நிறுத்திட அரசு முன்வரவேண்டும்.

திருப்பூரில் சாயப்பட்டறைக் கழிவுகளால், நொய்யல் ஆறு, பெரும் பாதிப்புக்குள்ளாகிறது. சாயப்பட்டறைத் தொழிலும் பாதுகாக்கப்பட



தண்ணீர் மாசுபடாமல், விவசாயத்தைப் வேண்டும்; அதே நேரத்தில், தண்ணீர் மாசுபடாமல், விவசாயத்தைப் பாதுகாக்க, நவீன விஞ்ஞானத்தை, தமிழக அரசு பயன்படுத்த வேண்டும். இதுபோன்று மக்களின் உயிர்களை, உடைமைகளைப் பாதுகாக்க, தமிழக அரசு இதுபோன்ற திட்டங்களைக் கொண்டுவர வேண்டுகிறோம்.

நெல்லை மாவட்டத்தில், தாமிரபரணி தண்ணீரைப் பயன்படுத்தி, கோக்கோ–கோலா கம்பெனி, கங்கைகொண்டானிலே செயல்பட, கடந்தகால அ.தி.மு.க. அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதை எதிர்த்துகூட, நேற்றையதினம்முதல், வலுவான போராட்டம், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. எனவே, சுற்றுச்சூழலைப் பாதிக்கக்கூடிய இத்தகைய செயலுக்கு, தமிழக அரசு, அனுமதியை இரத்து செய்ய வேண்டுகிறோம். ஏறக்குறைய நான்கு மாநிலங்களிலே, கோக்கோ–கோலா தடை செய்யப்பட்டிருப்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரை, வனத் துறையிலே பணிபுரியக்கூடிய சாதாரண Guard முதல் D.F.O. வரையுள்ள அத்தனை அதிகாரிகளுக்கும், பல்வேறுபட்ட மனித நேயத்தோடுகூடிய அறிவுரைகளை வழங்கக்கூடிய அளவிற்கு, புதிய வகையான திட்டங்களால், தமிழக அரசு பயிற்சிகளை அளித்திட வேண்டும்.

வன நிலங்களில் கடந்த 50 ஆண்டுக் காலமாக வாழ்ந்துவருகின்ற பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் இன்னும் இதர சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுடைய நிலங்களை உச்ச நீதிமன்றம் வழிகாட்டுதலின்படி, 1980 ஆண்டு வரையுள்ள அனுபவ நிலங்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டியதைக் கடந்தகாலத்தில், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமலாக்கப்படாததால், பல கிராமங்களில் கிராமமே வெளியேற்றப்பட்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர்ச் செடிகள் நாசப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல கிணறுகள்கூட இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், திரிபுரா போன்ற மாநிலங்களில், உச்ச நீதிமன்ற உத்தரவைக் கறாராக அமல்படுத்திய காரணத்தினால், அப்பகுதிவாழ் மலைவாழ் மக்கள், ஏழை மக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல, இவர்களுடைய தொழில்கள், உரிமைகள், காட்டுவளம், நீராதாரம், உற்பத்திப் பொருட்களுக்கான விலை ஆகியவற்றை இந்த அரசு கொண்டுவர வேண்டுகிறோம்.

வனத் துறையைப் பொறுத்தவரையில், இந்த அதிகாரிகளும், சமூக விரோதிகளும், அரசியலில் செல்வாக்குப் பெற்றவர்களுடைய கூட்டு என்பது, கடந்த 50 ஆண்டுக் காலமாகவோ, 25 ஆண்டுக் காலமாகவோ, தமிழகத்திலே, அப்படியே ஒன்றோடொன்று பிணைந்துவருகின்ற காரணத்தால், பழங்குடி மக்களுடைய பல்வேறுபட்ட திட்டங்கள், பல்வேறுபட்ட உரிமைகள் என்பது பறிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, 1992 ஆம் ஆண்டிலே நடந்த வாச்சாத்தி சம்பவத்தை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், பல்வேறுபட்ட திட்டங்கள் என்ற பெயரினாலே, அல்லது அரசு சாரா நிறுவனங்கள் என்கின்ற பெயரினாலே, N.G.O. போன்ற அமைப்புகளினாலே, பழங்குடி மக்களுடைய நிலங்களை அபகரித்து, அதை அடிமாட்டு விலைக்கு வாங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களை அந்தக் கிராமங்களிலிருந்தேகூட குடிபெயர்க்கிற நிலைமைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, யார், யாரெல்லாம் அந்த நிலங்களை விற்றார்களோ, அல்லது ஏமாந்து போனார்களோ, அந்தப் பழங்குடியின மக்களுக்கு மீண்டும் அந்த நிலத்தை தமிழக அரசு எடுத்துக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின், மாநில அரசினுடைய வனக் கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களை, குறிப்பிட்டிருக்கிற ஆக்கப்பூர்வமான பல விஷயங்களை வரவேற்கின்றோம். ஆனால் வட பகுதியில் சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, போக்குவரத்து வசதி போன்ற வனத் துறையினால் அனுமதிக்கின்ற பல திட்டங்களை மாநில அரசு தளர்த்த வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்பாகக்கூட, திண்டுக்கல் மாவட்ட கன்னிவாடி Range-இலே ஒரு கிராமத்தையே, eviction செய்வதற்காக, அங்கேயிருக்கக்கூடிய வனச் சரகர் உத்தரவு போட்டு அந்த கிராமமே நடுவீதியிலே வந்து நின்று கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-10

அதேபோல், தேனி மாவட்டம், வருசநாடு பகுதியில் இருக்கக்கூடிய 20 ஆயிரம் காளை மாடுகள், ஆண்டாண்டுக் காலமாக மேய்த்துக்கொண்டிருந்த காளை மாடுகள், திடீரென்று ஓர் உத்தரவு — யார் உத்தரவு போட்டார் என்றே தெரியாது — போடப்பட்டதன் விளைவாக அந்த மாடுகள் அத்தனையும் நடு road-இலே வந்து நிற்கக்கூடிய தர்மசங்கடமான நிலைமை. 15 ஆயிரம் குடும்பங்கள் நடு வீதியிலே நிற்கின்றன. இப்படிப்பட்ட ஒரு மோசமான வழிகாட்டுதல் அல்லது வனத் துறையினுடைய இப்படிப்பட்ட



திட்டங்களைத் தமிழக அரசு மாற்றிட வேண்டுமென்றும், அதனை வனக் கொள்கையிலே அரசு கொண்டுவர வேண்டுமென்றும் விரும்புகிறேன். உதாரணமாக நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் தாலுகா, அதேபோல் கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமம், வலியஏலா போன்ற பகுதிகளிலே, கோதையாறு பகுதியிலே, சட்டமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டுத் திட்ட நிதியைக்கூட, பாராளுமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதியைக்கூட ஊராட்சி ஒன்றியத்தின் நிதியைக்கூட பயன்படுத்தி, அங்கு எந்த ஆக்கப்பூர்வமான பணியும் செய்ய முடியாமல் இன்றுவரை இருந்துகொண்டு வருகிறது. இப்படிப்பட்ட விஷயங்களில் வனத் துறையினுடைய அணுகுமுறைகளில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். அடையாள அட்டை வழங்குவதன்மூலமாக, அவர்களுடைய அத்தனை உரிமைகளையும் பெற முடியும். (மணியடிக்கப்பெற்றது) உரிமைக்கான போராட்ட இயக்கங்களில், பல்வேறுபட்ட மலைவாழ் மக்கள்மீது, பழங்குடி மக்கள்மீது போடப்பட்ட பொய் வழக்குகளைத் தமிழக அரசு இரத்து செய்யவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறையில் 5 வருட காலமாக, 10 வருட காலமாக பணிபுரியக்கூடிய jeep ஓட்டுநர்கள் 47 பேர், கடந்த 10 ஆண்டு காலமாக நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த 47 பேர், பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். காவல் துறையில், jeep ஓட்டுநர்களுக்கு என்ன சலுகைகள் வழங்கப்படுகின்றனவோ, அதே சலுகைகளை அவர்களுக்கும் வழங்கவேண்டும். சமூக வன ஊழியர்கள், வனத் தோட்டக் காவலர்கள் என்ற 3,650 பேர்களைப் பணி நிரந்தரம் செய்திட இந்த அரசு முன்வர வேண்டுகிறேன்.

நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் தாலுகாவில் 1969 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ், மாண்புமிகு கலைஞர் ஆட்சியின்போது 18 ஆயிரம் ஏக்கருக்கு நிலப் பட்டா அளிக்கப்பட்டது. ஆனால், கடந்த காலத்தில் 1988 ஆம் ஆண்டு, உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலால், அது நிறுத்தி வைக்கப்பட்டது. 44 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கருடைய அனுபவ நிலங்களுக்கு மாண்புமிகு கலைஞர் அவர்கள் பட்டா வழங்கிட முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்கூட, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், அங்கு

இந்தப் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று அங்கு சென்றிருந்தபோது, அந்த மக்களுக்கு உறுதியளித்திருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்துகிறேன்.

அதேபோல் G.O. No. 45-ன்படி, ஏற்கெனவே கடந்தகால ஆட்சியில், பெற்றுவந்த உரிமைகள் அத்தனையையும் தட்டிக் கழித்ததன் விளைவாக, அந்தப் பகுதி மக்கள், சில்வர் ஓக் மரங்களை வெட்டுவதற்குத் தடை செய்யப்பட்டிருப்பதை அகற்றிட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, ஆதி திராவிடர் நலத் துறையிலே பேசுவதையெல்லாம், வனத் துறைக்குக் கொண்டுவருகிறீர்கள். You are mixing up the subjects.

**திரு. ப. டில்லி பாபு:** இவை அத்தனையும் வனத் துறை சம்பந்தப்பட்ட பாதிப்புகள்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** இளைஞர் நலத்தைப் பொறுத்தவரை, தமிழக அரசு அறிவித்திருக்கக்கூடிய வேலைவாய்ப்பு நிவாரணத்தையும், அதேபோல் பகத் சிங்கின் நூற்றாண்டு விழாவையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். அதேபோல், இந்தப் பேரவையிலே ஏறக்குறைய சரிபாதி பேர், இளைஞர்களாக இருப்பார்கள் என்று கருதுகிறேன். இன்று, கலாச்சார சீரழிவு போன்ற பல்வேறுபட்ட மோசமான சூழல்களின் விளைவாக, இளைஞர் சமுதாயம் சீரழிகின்ற திசை வழியே இழுத்துச் செல்லப்படுகிறது. இந்திய நாட்டின் விடுதலைக்காக தூக்கு மேடையை துச்சமென மதித்து தன் உயிரையே அர்ப்பணித்த மாவீரன் பகத் சிங் வாழ்ந்த சமுதாயம் அல்ல இப்போதுள்ள இந்தச் சமுதாயம். செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனார் வாழ்ந்த சமுதாயம் அல்ல, இப்போதுள்ள இந்தச் சமுதாயம். சுதந்திரப் போராட்டமோ, சுய மரியாதை வரலாறோ, பெரியாரின் இயக்கமோ தெரியாதவர்களாக இன்று பெரும்பகுதியான இளைஞர்கள் இருக்கின்ற காலத்தில், இளைஞர்களுடைய எதிர்கால வாழ்க்கையை, கொள்கையை வகுக்கின்ற அளவுக்குத் தமிழக அரசு, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், பல்வேறுபட்ட அமைப்புகள் போன்ற மக்களினுடைய பிரச்சினைகளுக்காகப் போராடி வருகின்ற அந்த அமைப்புகளை உள்ளடக்கி, இளைஞர் நலக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டுகிறோம்.



அதேபோல், விளையாட்டிலே அதிகமான அளவிற்கு கவனத்தைக் கொண்டுவருவதன்மூலமாக, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து மாவட்டத் தலைமையிடங்கள் மட்டுமல்லாமல், அனைத்து வட்டார அளவிலும், விளையாட்டு மைதானத்தை அமைத்திட வேண்டுகிறோம்.

புதிய ஆட்சியில், கலைஞர் ஆட்சியில், புதிய புதிய தொழில்கள் உருவாகிக்கொண்டே வருகின்றன. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம். இந்தப் புதியத் தொழில்களைத் தொடங்குவதற்குத் தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுகிறோம். தனியார் துறையில் என்றால், பொருத்தமான படிப்பு, தகுதியில் உள்ளவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு, நிர்வாக ஒதுக்கீடு மட்டுமல்ல; அதிகாரப் பங்கீடு வகிக்கக்கூடிய அந்த இடத்திலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுகிறோம். இளைஞர் மாணவர் விழா தமிழகத்தில் நடத்திட வேண்டும். தனித் தன்மைகளை வளர்க்கக்கூடிய விளையாட்டு, கலை, இலக்கியம், பல்வேறுபட்ட பண்புகள், கலாச்சார நடவடிக்கைகள் ஆகிய இவை அத்தனையையும் கொண்டுசெல்கின்ற அளவிற்கு Youth Welfare Board என்று இளைஞர் நல வாரியம் அமைத்து, (மணியடிக்கப்பெற்றது) மதுரையிலே இருக்கக்கூடிய Rose Club மைதானத்தைப்போல், சர்வதேச மைதானமாக உருவாக்க வேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றியைச் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மீனவ இளைஞர்களுக்கு நீச்சல் போட்டி அளிப்பது, மலைவாழ் மக்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** இப்படிப்பட்ட விஷயங்களைக் கொண்டு செல்கின்ற பணிகளை, இளைஞர் நல மேம்பாட்டுக் கழகத்தின்மூலமாக நிச்சயமாகக் கொண்டு செல்ல முடியும்.

அதேபோல், மாண்புமிகு கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார். ஐந்தாண்டுக் காலமாக வேலையில்லாத காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி. (குறுக்கீடு) இல்லை, (குறுக்கீடு) முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி.

**திரு. ப. டில்லி பாபு:** நான் நன்றி சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்ல மாட்டேன் என்கிறீர்களே!

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய அந்த வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான அந்த வாய்ப்பு, அதாவது வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு மூப்பைப்பெற, பதிவதற்காக ஐந்தாண்டு காலம் நீட்டித்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, நல்லதொரு வாய்ப்பளித்த மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி. திரு. இராமசாமி, உங்களிடம் பிடித்த அம்சம் என்னவென்றால், 5 நிமிடத்திலே முடித்துவிடுவீர்கள்! (சிரிப்பு)

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான மானியக் கோரிக்கை சம்பந்தமான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு நாடு நல்லமுறையில், சுகாதாரமான முறையில், தட்பவெட்ப நிலை சீராகப் பராமரிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், காடுகள் பாதுகாக்கப்பட வேண்டியது நிரம்ப அவசியம். இன்றைக்கு உலகம் முழுவதும் காடுகள் சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தால், சுற்றுப்புறச் சூழல் பிரச்சினை என்பது உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. ஒரு நாட்டில் மொத்த நிலப் பரப்பில் 33 சதவிகிதம் காடுகள் இருக்க வேண்டுமென்று விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் 17 சதவிகிதம் காடுகள் இருந்தது. ஆனால், இப்போது 17 சதவிகிதத்திலிருந்தும் குறைந்து 13 சதவிகிதமாக மாறிவிட்டது. எனவே, மலையிலே இருக்கிற மரங்கள் எல்லாம் வெட்டி அழிக்கப்பட்டு, இன்றைக்கு ஊருக்குள் வந்து மரங்களை நட்டு, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்கிற உணர்வு மக்களிடம் வந்திருக்கிறது. எங்கள் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்கூட, சென்ற ஆண்டு நாகை, திருவாரூர் மாவட்டத்தில் ஒரு இலட்சம் மரக் கன்றுகளை வாங்கி, நட்டு வளர்த்துக் கொண்டிருக்கிறது.



இப்போது, காடுகளை வளர்ப்பதற்கு அரசு பல திட்டங்களை வைத்திருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம், அதேபோல தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்; இப்படிப் பல்வேறு திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் எல்லாம், முறையாக, மக்களுடைய தேவையை உணர்ந்து, செயல்படுத்தப்படவில்லை. கடந்த ஆட்சியில் தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தில் 57 இலட்சம் மரக் கன்றுகள் — மக்களுக்கு எது தேவையோ அதைப்பற்றி யோசிக்காமல், — 57 இலட்சம் மரக் கன்றுகளை உருவாக்கி, கடைசியில் அவை விவசாயிகளுக்கு முறையாகப் போய்ச் சேராமல் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மரக் கன்றுகள் பாழாகி, அதன்மூலமாக 3 கோடி ரூபாய்—ஒதுக்கப்படுகிற நிதியே குறைவு, அதன்மூலமாக 3 கோடி ரூபாய்—மக்கள் வரிப்பணம், தமிழ்நாட்டினுடைய துட்டு பாழாகி இருக்கிறது.

அடுத்து, கிராமப்புறங்களில், மலை சார்ந்த மக்கள் மாற்றுத் தொழில் செய்ய வேண்டுமென்பதற்காக வனக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒரு கிராமத்திற்கு 6 இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்குகிறார்கள். அப்படி வழங்கப்படுகிற அந்த நிதியும் முறையாக, அந்த வனத்தைச் சார்ந்து பிழைக்கின்ற அந்த மக்கள், மாற்றுத் தொழில் செய்து பிழைக்கின்ற அளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை. அதன் காரணமாகவும், 3 கோடி ரூபாய்க்கு அதிகமாக அரசினுடைய பணம் பாழடிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, வனத்திலே பயிரிட்டு வளர்த்து, மரக்கூழ் தயாரிப்பதற்காக விற்கப்படுகின்ற மரம், தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்திற்குத்தான் விற்க வேண்டுமென்ற விதி இருந்திருக்கிறது. அது கடந்த தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட விதி. அந்த விதியெல்லாம் போன ஆட்சியில் தளர்த்தப்பட்டு, கொடுக்கிற permit–க்கும் அதிகமாக lorry–களில் ஏற்றி அவர்கள் இஷ்டத்திற்குப் புகுந்து விளையாடிய சம்பவங்களும் போன ஆட்சியிலே நடந்திருக்கிறது. கொடைக்கானல் மலையிலும், நீலகிரி மலையிலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன. Permit வாங்குவது ஒன்று; lorry–களில் ஏற்றிக்கொண்டு போவது ஒன்று. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் காரணமாக, அரசுக்கு வரவேண்டிய வருமானம், பல கோடி ரூபாய் பாழடிக்கப்பட்டிருப்பதாக இங்கே பல விவரங்கள் எங்களிடம் இருந்து கொண்டிருக்கின்றன. இது சென்ற ஆட்சியில் நடந்[illegible]

பிற்பகல் 12-20

அதேபோல, வனவிலங்குகள் சரணாலயம் என்பது; எங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் அணில் சரணாலயம் இருக்கிறது; ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில், சாம்பல் நிற அணில் சரணாலயம். அதேபோல இங்கே இந்திரா வன விலங்கு சரணாலயம், முதுமலைக் காடுகளில் அமைக்கப்பட்டிருக்கிறது. காலையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதுகூட, புலிகள் சரணாலயமாக மாற்றப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை இங்கே சொன்னார்கள். அப்படி அந்தப் பகுதிகளில், புலி, யானை, கரடி, காட்டெருமை, சிறுத்தை எல்லாம் இருக்கின்றன. கிட்டத்தட்ட 15 யானைகள், சிறுத்தைப் புலி 1, புலி 1, காட்டெருமைகள் 3, கரடிகள் 2 செத்திருக்கின்றன. இது அதிகாரிகள் கொடுத்திருக்கக்கூடிய கணக்கு; பத்திரிகையில் வந்தது. அப்படி இறந்த அந்த வன விலங்குகள், எப்படி இறந்தன? அதற்கு எங்களைப் பொறுத்தவரை, டேராடூனில் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சிறப்புப் பயிற்சி அங்கு நடக்கிறது; அப்படிச் சிறப்புப் பயிற்சி பெற்ற அந்த அதிகாரிகளை, அந்த wild life area—விலே அதிகாரிகளாக நியமிப்பதன்மூலம், அந்த வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கான முயற்சி எடுக்கமுடியும் எனத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்படி wild life area—விலேகூட ஆடு, மாடுகள் மேய்வதற்கு வனத் துறையில் அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், சாம்பல்நிற அணில் சரணாலயம் என்று சொல்லி, எங்கள் விருதுநகர் மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையில் ஆடு, மாடுகள் மேய்வதற்கு வழியில்லை. அந்த wild life area-வில், அந்த இந்திரா சரணாலயத்தில் அங்கே மாடுகள் உள்ளே செல்லும்பே[illegible]ப்பூசிகள் போடப்பட்டு அங்கே அனுமதிக்கப்பட்டிருக்கி[illegible]றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் பேசும்போதுகூட சொன்னார்கள். 40 ஆயிரம் மாடுகள், வருசநாட்டுப் பகுதிகளிலிருந்து திடீரென்று வெளியேற்றப்பட்டு, அந்த மாட்டையே நம்பிப் பிழைக்கின்ற மக்களெல்லாம், நிர்கதியாக நின்று கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னார். சாம்பல் நிற அணில் சரணாலயம் என்று சொல்லி, எங்கள் இராஜபாளையம் பகுதி, இங்கே வருசநாட்டுப் பகுதி, தாணிப்பாடி பகுதிகளிலேயெல்லாம் ஆடு, மாடுகள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. விதிவிலக்கைத் தளர்த்தி, அங்கே ஆடு, மாடுகள் மேய்வதற்கான ஒரு ஏற்பாட்டை வனத் துறை செய்யவேண்டும்.

அதேபோல, இன்றைக்கு வனப் பகுதியை ஒட்டிய விவசாயிகள் விவசாயம் செய்ய முடியவில்லை. வன விலங்குகளின் அழிமாண்டம்



அதிகமாக இருக்கிறது. எனவே, மின்வேலி அமைக்கப்பட்டு, அந்த விவசாயிகள் பாதுகாக்கப்படவேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நல வாரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே இலங்கையிலிருந்து வந்த அகதிகள் 7 ஆயிரம் பேர் இன்றைக்கு நிரந்தரப் பணியாளர்களாகவும், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தற்காலிகப் பணியாளர்களாகவும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோதே, 1999—இல் கூலி உயர்வு ஒப்பந்தம் போட்டு, அந்த ஒப்பந்தத்தின்படி கூலி உயர்வு பெற்று வந்தார்கள். ஆனால், அண்ணா தி.மு.க. ஆட்சி வந்த மறுநாளே, அந்தக் கூலி உயர்வு ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இப்போதுள்ள சட்டப்படி, கேரள அரசு வழங்கியிருந்தபடி ரூபாய் 86 கூலி கிடைக்கவேண்டும். ஆனால் அவர்கள் இப்பொழுது வெறும் 73 ரூபாய் மட்டும்தான் கூலி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Forest-ஐப்பற்றி மட்டும் பேசுங்கள். தொ.மு.ச.-வுக்குப் போகாதீர்கள்.

**திரு. தி. இராமசாமி:** எனவே, 86 ரூபாய் கூலியைப் பெறுவதற்கு, மீண்டும் இப்போது வந்திருக்கின்ற கலைஞர் அரசு, அவர்களுக்கு முயற்சி எடுத்து, அவர்களோடு ஒப்பந்தம் போட்டு, அந்தக் கூலி உயர்வை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

அதேபோல, கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில் இன்றைக்கு 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் Grow More Food; அதாவது அதிக உணவு உற்பத்தி செய்கின்ற திட்டத்தின் அடிப்படையில், அங்கே தாயகம் திரும்பிய மக்கள், 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், அந்தப் பகுதிகளில் வனத் துறையில் இருக்கின்ற தரிசு நிலத்தைப் பயன்படுத்தி அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கிருக்கிற D.F.O.—வின் தொந்தரவு, அந்த மக்களை வாழவிடாமல் செய்துகொண்டிருக்கிறது. அந்த மக்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கவில்லை. அந்த மக்கள் சாதாரணமாக இடம் விட்டு இடம் சென்று தங்களுடைய சொந்தப் பொருட்களை விற்கச் சென்றாலும் சரி, அல்லது வெளியிலே இருந்து கடைகளிலே இருந்து ஏதாவது பொருட்களை வாங்கி வந்தாலும் சரி, பரிசோதனை என்ற அடிப்படையில் மிகப் பெரிய கொடுமை நடந்துகொண்டிருக்கிறது. இப்போது மத்திய அரசினுடைய சட்டம்கூட, அதாவது Ministry of Environment & Forest—இன் அந்த உத்தரவின்

அடிப்படையில், அதில் கூறியுள்ள நெறிமுறைகளின்படி, (மணியடிக்கப்பெற்றது) அந்த வனத் துறைக்குச் சொந்தமானப் பகுதிகளில் வாழ்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** எனவே அந்தப் பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அங்கிருக்கின்ற D.F.O. டாங்கே போன்றவர்கள், அந்தச் சாதாரண மக்களுக்கு, உழைக்கின்ற மக்களுக்குச் செய்கின்ற அந்தக் கொடுமைகளைப் போக்கி, அவர்களைப் பாதுகாக்க வேண்டியது நமது அரசினுடைய பொறுப்பாக இருக்கிறது.

அதேபோல, இந்திய நாட்டில், சென்ற ஆண்டு "India Today" survey-இன்படி, 60%-க்கு மேற்பட்டவர்கள் இளைஞர்கள்--இன்று நமது அவையிலேகூட கிட்டத்தட்ட 80% பேர் இளைஞர்களாக வந்து அமர்ந்திருக்கின்ற ஒரு நிலையைப் பார்க்கும்போது, உண்மையிலேயே மனதிற்கு இனிமையாக இருக்கிறது--இந்திய நாட்டின் மக்கள் தொகையில் 60%-க்கு மேற்பட்டவர்கள் இளைஞர்களாக இருக்கிறார்கள். ஆனால், ஆசியப் போட்டியிலும் சரி, ஒலிம்பிக் போட்டியிலும் சரி, இந்தியாவின் நிலைமை என்ன? சமீபத்திலே நடந்த ஆசியப் போட்டியில் ஓரளவிற்கு இந்தியாவின் நிலைமை திருப்தியாக இருந்தது. ஆனால் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் நிலை என்ன? இலங்கையின் நிலை என்ன? சோவியத் நாட்டில் கம்யூனிஸ்ட் ஆட்சி நடந்தபோதே, உலகத்திலேயே முதலிடத்தைப் பெற்றிருந்தது. இன்றைக்குச் சீனாவும், ஜெனீவாவும் உலக நாடுகளோடு போட்டி போட்டுக்கொண்டு முந்தி வந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில், நமது நாட்டு இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்கப்படுத்தி, அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுத்து, அவர்களை மேமபடுத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கும் இருக்கிறது. நமது மாநில அரசும் அதன்மீது சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. N.C.C.-ஐ இப்போது பல பள்ளிக்கூடங்களிலே எடுத்துவிட்டார்கள். அதேபோல விளையாட்டுத் துறை period-கள் என்பது பல பள்ளிக்கூடங்களிலே இல்லை. விளையாட்டுத் துறை ஆசிரியர்களை இப்போது நியமிக்கப்பட வேண்டியிருக்கிறது.



பிற்பகல் 12–25

வளர்ந்து வருகின்ற விஞ்ஞான காலத்தில், புதிய தொழிற்சாலைகள் உருவாவதும், அதையொட்டி சுற்றுப்புறச் சூழல் சம்பந்தமாக சில பிரச்சினைகள் ஏற்படுவதும், தவிர்க்கமுடியாத ஒன்றாகிறது. இருந்தாலும், சுற்றுப்புறச் சூழல்களைப் பாதுகாத்து, மக்களுக்கும் பாதிப்பில்லாமல், இருக்கிற தொழில்களையும் பாதுகாத்து, கொண்டுசெல்ல வேண்டிய ஒரு பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

எங்கள் விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, T.V.S. ஆலை என்று காரியாபட்டி தாலுக்காவில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அந்த T.V.S. ஆலைக் கழிவின் காரணமாக, அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 100 ஏக்கருக்கு மேல் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக பாதித்து வருகிறது. ஆலை நிர்வாகமும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. சுற்றுப்புறச் சூழல் துறையும் அதன்மீது கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து, மேற்கொண்டு பாதிப்பு வராமல் தடுப்பதற்கும், ஏற்கெனவே பாதித்தவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கும் உரிய முறையில் ஒரு முயற்சியைத் தொடர வேண்டும் என்று இந்த நேரத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆமாம், அப்படியே முடித்துவிடுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த நேரத்திலே முடித்துவிடுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன வளம் மற்றும் சுற்றுச் சூழல், விளையாட்டு மேம்பாடு மற்றும் இளைஞர் நலம் குறித்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காட்டு வளத்தைப் பேணிப் பாதுகாப்பது, ஒவ்வொருவருடைய கடமையாகும். மண் வளத்தைக் காத்து, மழை வளத்தைக் காத்து,

சுற்றுப்புறச் சூழலைக் காத்து, அதைப்போல மண அரிப்பைத் தடுத்து, இப்படிப் பல்வேறுவகையிலே பயனுள்ள இந்தக் காட்டு வளத்தை அரசு மற்றும் வனத் துறை மாத்திரம்தான் காப்பாற்றுவது தனது கடமை என்று நாம் எண்ணாமல், எல்லோரும் சேர்ந்து அந்தக் காட்டு வளத்தைக் காப்பாற்றுகின்ற பணியிலே ஈடுபட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்; மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தாகும்.

அதையொட்டி ஜப்பான் நாட்டிலேகூட திருமண நாளன்று, பிறந்த நாளன்று, அன்றைக்குக் கன்றுகளை நடுவதும், பரிசாகப் பிறருக்குக் கன்றுகளை வழங்குவதும் இப்போது வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். அதைக் கருத்தில்கொண்டு, வனத் துறை தன் துறையின் மூலமாக உருவாக்கப்படுகின்ற அந்த மரக் கன்றுகளைப் பள்ளிகளில், கல்லூரிகளில், அலுவலகங்களில் அதன் மூலமாக மாணவ, மாணவிகள் மூலமாக நடுவோமேயானால் அந்த மரம் நடுகின்ற உணர்வுகளை அந்த மாணவ, மாணவிகள் பெறுவார்கள். அதோடு, நடுவதோடு மட்டுமல்லாமல், நட்டு, அதை வளர்க்கின்ற பொறுப்பினையும் அந்த மாணவ, மாணவிகளுக்குத் தந்து அவர்களை உற்சாகப்படுத்தினால், எதிர்காலத்தில் நம் நாடு பசுமையுள்ள நாடாக இருக்கும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது.

அதைப்போல, தமிழ்நாட்டில் 21.22 இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் இருக்கின்றன. இந்தப் பெரும்பான்மையான இடங்களிலே புல், பூண்டு, புதர் மண்டி இன்றைக்கு அது புதராகவே, தரிசு நிலமாகவே காட்சி அளிக்கின்றது. அந்தப் புல், பூண்டு, அந்தத் தரிசு நிலத்தை எல்லாம் அப்புறப்படுத்தி, அந்தப் பகுதியிலே புதியதாக மரக் கன்றுகளை நடுவதும், மூலிகைகளை வளர்ப்பதும் உகந்த காரியமாக இப்போது கருதப்படுகின்றது.

இப்போது மக்கள் பல நோய்களில் சிக்கி இருக்கின்றார்கள். எல்லா நோய்களுக்கும் அலோபதி மருந்து; அந்த மருத்துவரைச் சந்திக்கின்றபொழுது மாத்திரை, மருந்து தருகின்றார்கள். ஏற்கெனவே நோய்; மேற்கொண்டு அலோபதி மருந்து எடுப்பதன் மூலமாகப் பல்வேறு பின் விளைவுகளுக்கு ஆளாக்கப்பட்டு, இப்போது அவதிக்கு ஆளாகி இருக்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையில், மனிதர்கள் இப்போது இயற்கை வைத்தியத்தை நோக்கிச் செல்கின்ற இந்த வேளையில், வனத் துறை அதிகமாக மூலிகைகளைப் பயிரிட்டு, ஏற்றுமதியைக் குறைத்து அந்த மூலிகையின் மூலமாக, மக்களுக்குப் புதிய புதிய மருந்துகளைத்



தருவதென்பது, எதிர்கால இளைஞர் நலனுக்கு இது மிக உகந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, விலை மதிப்புக்கூடிய தேக்கு, தோதகத்தி இதுபோன்ற மரங்கள் இப்போது வெட்டப்பட்டு, கடத்தப்படுகின்றன. அதற்கு உடந்தையாகவும் இருக்கின்றார்கள். ஆகவே இந்த மரங்களை அழிக்கின்ற அந்தக் கூட்டத்தைத் தடுப்பதற்கும், உடந்தையாக இருக்கின்ற அந்தக் கூட்டத்தைத் தடுப்பதற்கு'ம் அரசு கடுமையான சட்டம் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம், நீலகிரியிலே இம்பானிக் ஜோஸ் என்பவர் நுழைந்திருக்கின்றார். யானையைக் கொன்று அதனுடைய தந்தங்களைத் திருடி விற்கின்ற கடுமையான அந்த நபரை அடையாளம் கண்டு அவனையும் சுட்டுக் கொல்வதில் தவறில்லை என்பதனையும் இந்த நேரத்திலே அவையிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அதைப்போல, இன்னொரு விஷயம். காட்டு வளத்தையும், வன விலங்குகளையும் காப்பாற்றுவது அரசினுடைய தலையாய கடமை என்பதைப்போல, வன விலங்குகளால் ஏற்படுகின்ற அபாயத்தையும் தடுக்கின்ற கடமையும் அரசுக்கும் வனத் துறைக்கும் உண்டு. இப்போது வனத்தையொட்டி இருக்கின்ற அந்த மலைப் பகுதிகளில் காட்டுப் பன்றிகள், யானைகள் நுழைந்து விவசாயப் பயிர்களைச் சேதப்படுத்தி, வாழை, கரும்பு, தென்னை மரங்களையெல்லாம் சேதப்படுத்தி, விவசாயத்திற்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய கம்பம் பகுதியிலே புதுப்பட்டி, கூடலூர், ராயப்பம்பட்டி, உத்தமபுரம் போன்ற பகுதிகளிலே யானையும், பன்றியும், கூட்டம் கூட்டமாகப் புகுந்து முழுமையாக விவசாயப் பயிர்களைச் சேதப்படுத்தியிருக்கின்றன. அதனால், விவசாயத் தொழிலாளர்கள் அந்தப் பணிக்குச் செல்வதற்கே அச்சம்கொண்டு, பீதிகொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில், கடந்த 7 மாதத்திற்குள்ளாக மக்னா என்ற ஒரு யானை, மூர்க்கத்தனமாக தாக்குகின்ற யானை, அது ஆணும் பெண்ணும் இல்லாத ஒரு யானை, மனிதனைக் கண்டால் பழி வாங்க வேண்டுமென்ற சிந்தனை கொண்ட அந்த யானை அங்கே திரிகின்றது. அந்த யானையின்மூலமாக, 7 பேர் அங்கே இறந்திருக்கின்றார்கள். இன்னும் ஒரு நடவடிக்கையும் கிடையாது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, அந்த வன

விலங்குகள் நுழையாத வகையிலே solar fencing அல்லது அகழி முறையை நீங்கள் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, கம்பம் பகுதி, கூடலூருக்கு அருகே உள்ள வட்டத்தொட்டி, மாவடி ஆகிய மலைப் பகுதிகளிலே நம்முடைய கம்பம் தொகுதியைச் சார்ந்தவர்கள் விவசாயம் செய்து வந்தார்கள் ஏலத் தோட்ட விவசாயம் செய்து வந்தார்கள். ஏனோ கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்களை வெளியேற்றிவிட்டார்கள். ஏலத் தோட்டத்திற்கு நிழல் தேவை; மரம் தேவை. அவர்கள் மரத்தையும் வளர்த்தார்கள். மரத்தினுடைய பாதுகாப்பையும் கொண்டு வந்தார்கள். இப்போது ஏல விவசாயிகள் எல்லாம் அவதியுறுகின்ற நிலையில், மீண்டும் அந்த வட்டத்தொட்டி, மாவடி பகுதியிலே அந்த விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

அதேபோல, 18 ஆம் கால்வாய்த் திட்டம். Zero point—லிருந்து அந்த 800 மீட்டர், அதிலே 53 மரங்கள்தான் பிரச்சினைக்குரிய மரங்கள்; natural growth என்ற மரங்கள். அவற்றை வெட்டுவதற்கு வன இலாகா மறுக்கின்றது; ஒத்துக்கொள்ள மறுக்கின்றது. அது இல்லாமல் அந்த 18 ஆம் கால்வாய் திட்டமே நடைபெறாது. அங்கேதான் அணை கட்ட வேண்டும். அங்கேதான் 18 ஆம் கால்வாய்த் திட்டம் தொடங்க வேண்டும். இவ்வளவு பணிகளும் அந்த Zero point—லிருந்து 800 மீட்டர் வரைக்கும்தான் இருக்கின்றது. ஆகவே, அந்த 53 மரங்களை அகற்றுவதற்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மாண்புமிகு அமைச்சர் பெறவேண்டும்.

அதைப்போல, கோம்பை நகரம். கோம்பை, Spices Board மூலமாக, சுற்றுலாத் தலமாக ஆக்கப்பட்டிருக்கின்றது. கோம்பையிலிருந்து கேரளாவை இணைக்கின்ற அந்த ராமக்கல்முட்டு என்பது மிக முக்கியமான ஒரு இணைப்பாகும். அது கேரளாவிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஒரு கலாச்சார இணைப்பாகும். ஒரு 12 கிலோ மீட்டர் கொண்டுள்ள அந்தச் சாலை, 6 கிலோ மீட்டருக்குச் சாலை போடப்பட்டு, மீதம் 5 கிலோ மீட்டர் சாலை, இன்றைக்கு வனத் துறை தடங்கலால் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, அந்தச் சாலையையும் போடுவதற்கு வனத் துறை அனுமதி பெற நீங்கள் முயற்சிக்க வேண்டும்.

அதைப்போல, சுனாமி அபாயம் உள்ள நாகப்பட்டினம், கடலூர் போன்ற பகுதிகளில் கரையோரங்களில் அலையாத்தி காடுகள் மற்றும் வெப்ப மண்டலக் காடுகளை வளர்க்க வேண்டும். அதனால்...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** சுற்றுப்புறச் சூழலில் இப்போது ஆயிரக்கணக்கானத் தொழிற்சாலைகளிலிருந்து கழிவுகள் வரப்பட்டு மாசு ஏற்படுகின்றது. குறிப்பாக, திருப்பூரிலே உள்ள சாயப் பட்டறைகள் மூலமாக நொய்யல் ஆறு மாசுபடுத்தப்பட்டிருக்கின்றது. அதேபோல, பவானி கூடுதுறையில் காவிரியுடன் இணைகின்ற அந்த பவானி ஆற்றில் கலப்பதால், பவானி நதி பாழ்பட்டிருக்கின்றது. 'கேட்டார் வினை தீர்க்கும் திருநணாவே' என்று திருஞானசம்பந்தர் பாடிய பவானி, இப்போது தொட்டாலே நோய் தொற்றிக்கொள்ளக்கூடிய அளவிற்கு அது தள்ளப்பட்டிருக்கின்றது.

அதேபோல, மேட்டூரிலே கெம்பிளாஸ்ட், மால்கோ நிறுவனங்களின்மூலமாக வெளியேற்றப்படுகின்ற அந்தக் கழிவுகளினால், பாதரசம், ஃபியூரான் போன்ற இரசாயனக் கழிவுகள், நிலத்தையும், நீரையும் மாசுபடுத்தியிருக்கின்றன. அங்கே காற்றிலே இருக்கின்ற சிலிகா என்ற அந்தப் புகையை சுவாசிக்கின்றபோது, அங்கேயுள்ள மனிதர்கள சிறுநீரகம், இதயம் பாதிக்கப்பட்டு சிறுகச் சிறுக செத்து வருகின்றார்கள். இதையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

இளைஞர் நலன் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. பள்ளிக்கூடங்களிலே 250 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்க வேண்டும். அந்தவகையிலே P.T. Master இருக்க வேண்டும். ஒன்றாம் வகுப்பிலிருந்து, ஐந்தாம் வகுப்பு வரைக்கும் விளையாட்டை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே ஒரு விளையாட்டு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும். தனியார் பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு விளையாட்டு மைதானம் வேண்டுமென்ற சட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும். தனியார் பள்ளிகளிலே 10—லிருந்து 12 ஆம் வகுப்பு வரைக்கும் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கின்ற எண்ணத்திலேதான் அந்தப் பள்ளி நிருவாகம் இருக்கின்றது. விளையாட்டிலும் ஆர்வம் காட்டுகின்றவகையில் இருக்க வேண்டும். மாவட்டந்தோறும் விளையாட்டு மைதானம் அமைத்து விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், டென்னிஸ் விளையாட்டில் காட்டும்... (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். இன்னும் மூன்று பேர் பேச வேண்டும்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஒரே நிமிடம். டென்னிஸ் விளையாட்டில் காட்டும் அக்கறையைவிட கைப் பந்தாட்டத்திலும், கபடியிலும் காட்ட வேண்டுமென்று கேட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'முரசொலி'–யிலே அழகான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள்; 'யோகாவும், தியானமும் அவசியம் வேண்டும்' என்று சொல்லி இருக்கின்றார்கள். 'யோகா உடல்நிலையை வலுப்படுத்துவதற்கும், தியானம் மன அமைதிக்கும் தேவையான ஒன்று' என்று சொல்லி இருக்கின்றார்கள். ஆகவே, அந்த இரண்டையும் துவக்கப் பள்ளியில் இருந்தே கொண்டுவருவதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி. திரு. மணி, 5 நிமிடங்கள், நேராக subject–க்குப் போய்விடுங்கள்.

**திரு. எஸ். மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 35 ஆண்டுகளுக்குப் பிறகு பொங்கலூர் சட்டமன்றத் தொகுதியில் உதய சூரியனை உதிக்க வைத்த பெருமை, தானைத் தலைவர், தமிழினக் காவலர், டாக்டர் கலைஞர் அவர்கள் தயாரித்த தேர்தல் அறிக்கையே! தேர்தல் அறிக்கையில் விவசாயக் கூட்டுறவுக் கடன் அறவே இரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பும், ஆட்சிக்கு வந்தவுடன் அதை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையும், கழகத்தின் தொண்டனாகிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற மிகப் பெரிய பொறுப்பினைத் தந்தது. அதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர்களின் எழுச்சி நாயகன், பொங்கலூர் தொகுதிக்கு வருகைதந்து, வாக்காளப் பெருமக்களுக்கு எல்லாம் என்னை அறிமுகம் செய்துவைத்து, வெற்றிபெறச் செய்துவைத்த எங்கள் அன்புத் தளபதி, உள்ளாட்சியில் நல்லாட்சி அமைத்துவரும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிதிநிலை அறிக்கையிலே பல சலுகைகளை வாரி வழங்கிய, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெற்றிக்குத் துணை நின்ற கோவை மாவட்டச் செயலாளரும், கோவை கிழக்கு



சட்டமன்ற உறுப்பினருமாகிய பாசமிகு எங்களது பொங்கலூர் நா. பழனிசாமி அண்ணன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்கு உழைத்த அனைத்துக் கட்சியினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த, பொங்கலூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையின் சார்பில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 500 கிராமங்களில் விளையாட்டுத் திடல்கள் உருவாக்கப்பட்டு, கருவிகள் வாங்கப்பட்டு, விளையாட்டு ஊக்குவிக்கப்பட்டது. ஆனால், இடையில் வந்த ஆட்சியாளர்களால், ஏனோ நிறுத்தப்பட்டுவிட்டது. மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஊர்களிலும் திடல்கள் அமைத்து, விளையாட்டுக் கருவிகள் வழங்க, கிராமத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கினால், இளைஞர்கள் பயன்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞர்கள் நலனுக்காகத் தனித் துறையை உருவாக்கி, தனி அமைச்சரை நியமித்த நமது முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொங்கலூர் தொகுதி, முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற தொகுதி ஆகும். விவசாயிகளின் வாழ்வை மலரச் செய்கின்ற வகையில், கூட்டுறவுக் கடன்கள் முழுவதையும் இரத்து செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொங்கலூர் தொகுதி விவசாயிகளின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கடன் தள்ளுபடி செய்தது மட்டுமல்லாமல், விவசாயிகள் சுய நிதி மின் இணைப்புத் திட்டத்தில், மின் இணைப்புப் பெறும்வகையில், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளித்தது, மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

அதேபோல், பொங்கலூர் தொகுதி, விவசாயத்திற்கு அடுத்தபடியாக, நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகும். போன ஆட்சியில் கஞ்சித் தொட்டிகள் திறந்தார்கள். அப்படிப்பட்ட நெசவாளர்களின் நலன் கருதி, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை, 100 யூனிட்டுகள் இலவச மின்சாரத்தை வழங்கி, வறுமையில் வாடிக் கொண்டிருந்த கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையில் வசந்தத்தை நிலவச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பொங்கலூர் தொகுதி, முழுமையாக கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். இந்தத் தொகுதியில் இருந்து உயர் கல்வி கற்பதற்கு, தொலைவில் உள்ள கோயம்புத்தூர், ஈரோடு போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டும். ஆனால் ஏழை மாணவ, மாணவிகள் மேற்படிப்புக்கு செல்லாமல் தங்கள் படிப்பை நிறுத்திக்கொள்கின்றார்கள். எனவே, கிராமப்புற ஏழை மாணவ, மாணவிகளின்மீது அக்கறையுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொங்கலூர் தொகுதியில் ஒரு அரசுக் கலைக் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல, நல்லாறு—ஆனைமலையாறு திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் மேல்நீராறு, கீழ்நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் பெருவாரிப்பள்ளம், துணக்கடவு, சர்க்கார்பதி, சமமட்டக் கால்வாய் வழியாக, திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் கொண்டுவரும்பொழுது ஏற்படும் நீர் இழப்பினைச் சரிசெய்யலாம். இத்திட்டத்தின்மூலம், சுமார் 4 இலட்சம் ஏக்கர் பூமிக்குச் சீரான தண்ணீர் கிடைக்க ஏதுவாக இருக்கும். பொங்கலூர் தொகுதியில் ஈரோடு மாவட்டம், குண்டடம் ஒன்றியத்தில் குப்பாறு அணை உள்ளது. மேற்படி அணைக்கு, கடந்த பல ஆண்டுகளாக, வறட்சியின் காரணமாகத் தண்ணீர் வராமல், இந்தப் பகுதி விவசாயிகள் மிகுந்த வறட்சியில் கஷ்டப்படுகிறார்கள். அருகிலுள்ள அமராவதி அணையில் நல்ல மழை பெய்கின்றபொழுது, அணை நிறைந்து வெளியேறும் உபரி நீரை, அமராவதி ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டி, உப்பாறு அணைக்குத் தண்ணீர் கொண்டுவந்தால், சுமார் 1,500 ஏக்கர் பாசன வசதி பெறும் என்பதால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மணி, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். மணி:** இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, மழைக் காலங்களில் பெய்கின்ற மழை நீரைச் சேமித்து, நிலத்தடி நீரை உயர்த்துகின்றவகையில், அதிக கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க நிதியொதுக்கீடு செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



கோவை மாவட்டத்தில், விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும்வகையில், வெங்காயத்திற்குக் குளிர்சாதனக் கிடங்கு அமைக்க ஆணையிட்டதற்கு, விவசாயிகளின்சார்பாக, வேளாண் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் நன்றி தெரிவித்து விட்டீர்களே!

**திரு. எஸ். மணி:** இப்பொழுது விவசாயிகளும், ஏழையெளியவர்களும் வேலைக்குச் சென்று வருகின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாவற்றையும், முழுவதையும் எழுதிக் கொடுத்துவிடுங்கள் அமைச்சரிடத்திலே.

**திரு. எஸ். மணி:** கொடுத்துவிடுகிறேன். பொங்கலூர் தொகுதியிலிருந்து கோவை, திருப்பூர் நகரங்களுக்கு வேலைக்குச் சென்று வருகின்றனர். திருப்பூர் தாலுகாவுக்கு உட்பட்ட பொங்கலூர் தொகுதியில் கோவை, திருச்சி செல்லும் நெடுஞ்சாலையும், திருப்பூர், தூத்துக்குடி செல்லும் நெடுஞ்சாலையும் பொங்கலூர் தொகுதி வழியாகத்தான் செல்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம்பிரபு. *(குறுக்கீடு)*

**திரு. எஸ். மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை; நீங்கள் திருப்பூருக்குப் போய்க் கொண்டிருக்கிறீர்களே!

**திரு. எஸ். மணி:** எனவே, ஏழை மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இங்கு ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தருமாறு மிகுந்த தாழ்மையோடு கேட்டுக்கொண்டு, இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே, என்னைப்

பரமக்குடி சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராக அறிமுகம்செய்து, எனது வெற்றிக்காகப் பாடுபட்ட எனது பாசத்திற்குரிய தலைவர் மக்கள் தளபதி. மாண்புமிகு மத்திய அமைச்சர் அய்யா திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது வெற்றிக்காக என்னுடைய பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் பிரசாரத்தை மேற்கொண்ட நம்முடைய மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியினுடைய தலைவர் பெருமக்களுக்கும், என்னை இரண்டாவது முறையாகப் பரமக்குடி சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினராக ஆக்கியதற்காக, பரமக்குடி சட்டமன்றத்தினுடைய வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை இந்த மாமன்றத்திலே இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே எனது கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்களது காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அய்யா, திரு. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

'வளமான தமிழகம், வலிமையான பாரதம்' என்ற தாரக மந்திரத்திற்குச் சொந்தக்காரரான மறைந்த மக்கள் தலைவர் அய்யா திரு. ஜி.கே. மூப்பனார் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்கி, என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.

நம்முடைய 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இராமநாதபுரம் மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக காவிரியிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கு, ரூபாய் 671 கோடியை ஒதுக்கிக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு கலைஞர் அய்யா அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இவற்றை மன்றாடிப் பெற்றுத்தந்த, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்



அவர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாகவும், எனது பரமக்குடி சட்டமன்றத் தொகுதியினுடைய மக்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, பரமக்குடி நகரில் புதிதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் வைத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் நடைபெற்ற மானியக் கோரிக்கையிலே, பரமக்குடியிலே, மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் தொடங்கப்படும் என்று அறிவித்ததற்காக என்னுடைய மனமார்ந்த நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குப் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்ட நம்முடைய மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இளைஞர் நலன். நம்முடைய நாட்டின் ஜனாதிபதி, மரியாதைக்குரிய ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள், பலதரப்பட்ட மக்களிடமும், இளைஞர்களிடமும் உரையாடிய சிலவற்றை நான் இந்த மாமன்றத்திலே தெரியப்படுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கலாம் அவர்கள் சொல்கிறார்கள்; "கடந்த 4 வருடங்களில் கிட்டத்தட்ட இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றிருக்கிறேன். மாணவர்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள், தொழில்நுட்பத் திறன் கொண்டவர்கள், மருத்துவர்கள், மருத்துவத் துறை ஊழியர்கள், கல்வியாளர்கள், தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள், இராணுவத்தினர், ஆன்மீகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நிருவாகிகள், பொருளாதார நிபுணர்கள், கலைஞர்கள், விளையாட்டுத் துறையினர், உடல் மற்றும் மன ரீதியான சவால்களை எதிர்கொண்டிருப்பவர்கள் என அனைத்துத் தரப்பு மக்களிடமும் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டு பேசியிருக்கிறேன். இந்திய மக்களின் பல்வேறுபட்ட பிரிவினரிடையே இப்படி நான் கலந்துரையாடியதிலே நான் கற்றுக்கொண்டது என்னவென்றால், பள்ளிக் குழந்தைகளும், இளைஞர்களும் வலைதளம் மூலமாக என்னுடன் பேசுகிறார்கள். வளர்ச்சி அடைந்த தேசமாக இந்தியாவை உயர்த்துவதற்கான ஆலோசனைகளையும், இந்த இலட்சியத் திட்டங்களைச் சாதிப்பதில் தங்களுடைய பங்களிப்பு பற்றிய விஷயங்களையும் என்னிடம் இவர்கள் பகிர்ந்துகொள்கிறார்கள். இவர்கள் தெரிவித்த பல ஆலோசனைகளில் ஒன்றிரண்டை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்:

'குழந்தைகளை நமது தேசத்தின் சிறந்த குடிமக்களாகப் பயன்படுத்தப்படும் பணி முக்கியம் என்பதால் பாடம் போதிப்பதில் எனக்குக் கொள்ளை ஆசை; எனவே, நான் ஒரு ஆசிரியராகவோ அல்லது என் தேசம் காக்கும் வீரனாகவோ பணியாற்ற விரும்புகிறேன்.' இப்படி மேகாலயாவிலிருந்து ஒரு மாணவன் எழுதியிருந்தான். 'ஒரு நூலில் தொடுக்கப்படும் பல மலர்கள்தான் மாலையாகிறது; ஆகையால், என் தேச மக்களையும், இந்த தேசத்தையும் நேசிக்க வைப்பேன்; உள்ளங்களை ஒன்றிணைத்து வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற மாலையை உருவாக்குவதற்காகப் பாடுபடுவேன்' என்பது, பாண்டிச்சேரியைச் சேர்ந்த இன்னொரு இளைஞருடைய கூற்று. 'தனது சுற்றுப் பாதையில் ஓய்வில்லாமல் வலம்வந்து கொண்டிருக்கும் ஒரு electron—ஐப்போல, நானும் மாறி, எனது தேசத்திற்காக ஓய்வொழிச்சல் இல்லாமல் பாடுபடப் போகிறேன்' என்பது கோவாவைச் சேர்ந்த இளைஞருடைய விருப்பம். 'சுயசார்புள்ள தேசமாக இந்தியா மாறி, தேவைப்பட்டால் எந்த ஒரு தேசத்திற்கும் எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்கக்கூடிய வலிமை பெறும் இந்தியாவின் கொண்டாட்ட கீதத்தை நான் இசைப்பேன்; அந்த நிலையை எட்டுவதற்காக நான் பாடுபடுவேன்' என்பது, அட்லாண்டாவில் வசிக்கும் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த ஒரு இளைஞருடைய கருத்து.

தேசிய பாதுகாப்பும், அரசியல் உறுதியும் சங்கமித்து (மணியடிக்கப்பெற்றது) பொருளாதார செழுமை நிறைந்த தேசமாக இந்தியா உயர வேண்டும் என்பது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. இரா. இராம்பிரபு:** அர்த்தம் பொதிந்த கருத்து" என்பதை நம் அப்துல் கலாம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இளைஞர்கள், தேசத்தின்மேல் பக்தி கொண்டு எந்த அளவுக்குத் தங்களது உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இளைஞர் சமுதாயம் நாளைய இந்தியாவைப் பாதுகாக்கக்கூடிய வலிமை படைத்தது. இளைஞர்களுடைய திறமைகளைத் திறனாய்வு செய்து, அவர்கள் தவறான வழியிலே செல்லாமல் இருப்பதற்கு அவர்களுக்கு அரசுத் துறையிலே வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். குடும்பச் சூழ்நிலை காரணமாக, குறிப்பாக வறுமையின் காரணமாக, நம் நாட்டில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் படிப்பதற்கு



வசதியில்லாமல் பல்வேறு நிறுவனங்களில் தினக் கூலியாக வேலைபார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவி வருகிறது. அவர்களில் திறமைவாய்ந்த இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு நமது அரசு, பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, இளைஞர்கள் தவறான பாதையில் செல்லாமல் இருப்பதற்கு, வட்டார அளவில் இளைஞர்கள் சங்கம் என்ற ஒரு சங்கத்தை நிறுவி, இளைஞர்களுக்கு நூலகம் அமைத்துக் கொடுப்பது, பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்ளும்வண்ணம், ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

பிற்பகல் 12-50

தமிழகத்தில் அனைத்துச் சுற்றுலாத் தலங்களிலும் இளைஞர் விடுதிகளை அமைத்து, அவை நல்ல முறையில் செயல்படக்கூடியவகையிலே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதேபோல, புண்ணிய ஸ்தலமான இராமேஸ்வரத்தில், ஒரு Youth Hostel—ஐயும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உடல் ஊனமுற்ற இளைஞர்களை ஊக்குவிக்கும்வண்ணம், அவர்களுடைய தகுதியின் அடிப்படையில், அரசுத் துறையில் பல வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

அடுத்து, விளையாட்டுத் துறை. வருகிற செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி முதல் 18 ஆம் தேதிவரை, ஜப்பான் நாட்டினுடைய தலைநகரம் டோக்கியோவில் உலக அளவில் கராத்தே போட்டிகள் நடைபெற இருக்கின்றன. இந்தப் போட்டிகளில் பங்குபெறுவதற்காக, நமது நாட்டிலிருந்து 'அகில இந்திய சிட்டோரியா கராத்தே கழகம்' என்ற அந்தக் கழகம், 31 வீரர்களைத் தேர்வு செய்திருக்கிறது. இவர்களில் 6 கராத்தே வீரர்கள், நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் குறிப்பாக, தத்து, முத்துக்குமார், விக்னேஸ்வரன், மருதுபாண்டியன் ஆகிய நான்கு வீரர்களும் எனது பரமக்குடி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். இவர்கள் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக, போக்குவரத்துச் செலவுகள் ஒவ்வொரு நபருக்கும் தலா ரூ. 1 இலட்சம் வரை செலவாகிறது. இவர்களை ஊக்குவிக்கின்றவகையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவர்களுக்கு எல்லாம் நிதியுதவி வழங்கி உதவிடுமாறு மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்பு தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை முன்னிட்டு மாநில அளவில் விடையாட்டுப் போட்டிகள் மற்றும் தடகளப் போட்டிகளை அரசு நடத்தி வந்தது. ஆனால், அந்தப் போட்டிகள் தற்போது நடத்தப்படுவதில்லை. தற்போது இந்தப் போட்டிகளை நாம் நடத்துவதால், தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துப் போட்டிகளிலும்... (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடங்கள், இரண்டு paper-கள்தான். இரண்டே நிமிடங்கள். அனைத்துப் போட்டிகளிலும், வீரர்கள், வீராங்கனைகள் பங்குபெற்று அவர்களது திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகும். அவற்றின்மூலமாக, திறமை வாய்ந்த வீரர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கவேண்டும். மேலும், மாவட்டந்தோறும் Sports Hostel என்று சொல்லக்கூடிய இளைஞர் விடுதிகள் ஏற்படுத்தி, ஒரு உள் விளையாட்டு அரங்கம்—Indoor Stadium—அமைத்துக் கொடுக்கவேண்டும். இதனால், அதிக அளவிலே விளையாட்டு வீரர்கள் உருவாகி, இந்த விளையாட்டுத் துறை, வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, தி. நகரில் இருக்கக்கூடிய கூடைப்பந்து விளையாட்டு மைதானத்தில் வருடந்தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடந்தவண்ணம் உள்ளது. இன்றுகூட, அகில இந்திய அளவிலே கூடைப் பந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்த தி. நகர் பகுதியினுடைய மக்களின் நீண்டநாள் கோரிக்கையான உள் விளையாட்டு அரங்கத்தை அமைத்துக்கொடுக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பாரதியார் மற்றும் குடியரசு தின விழா விளையாட்டுப் போட்டிகளில், மாவட்ட அளவில் பங்குபெறும் அணிக்கு ஊக்கத் தொகையாக ரூ.10,000—ஐ மீண்டும் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளில் 2 உடற்கல்வி ஆசிரியர்கள் என்ற நிலையை மாற்றி, 250 மாணவர்களுக்கு ஒரு உடற்கல்வி ஆசிரியர் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அரசால் நடத்தப்பட்டுவந்த அந்த Rural Games என்று சொல்லக்கூடிய... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை; விளையாட்டை முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. இராம்பிரபு:** நடத்தக்கூடிய அந்தப் போட்டிகள், தற்போது நடைபெறுவதில்லை. மீண்டும் அவற்றை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



நமது சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில், ஒரு கூடைப் பந்தாட்ட மைதானம் அமைத்துக்கொடுத்தால், அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் மாணவர்கள், தங்களுடைய விளையாட்டுத் திறமையை வளர்த்துக்கொள்ள முடியும். ஆகவே, அமைச்சர் அவர்கள், இதை நிறைவேற்றிக் கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தொகுதியினுடைய இரண்டே இரண்டு கோரிக்கைகளை இந்த மாமன்றத்திலே வைக்கிறேன். (குறுக்கீடு) ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை.

**திரு. இரா. இராம்பிரபு:** முதலாவதாக, நாளையதினம் நடைபெற இருக்கக்கூடிய நம்முடைய உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே, எங்களுடைய பரமக்குடி நகருக்கு, அகல் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றிக் கொடுக்குமாறு நம்முடைய மாண்புமிகு தளபதியார் அவர்களிடத்திலே நான் மனு கொடுத்திருக்கிறேன். அவற்றை அவர்கள் பரிசீலனை செய்து, நாளைய தினமே எங்கள் பரமக்குடிக்கு அகல பாதாளச் சாக்கடைத் திட்டத்தை (குறுக்கீடு) இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும்கூட, அடுத்த நிதியாண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடத்திலும் ஒரு மனுவினைக் கொடுத்திருக்கிறேன். வைகை ஆற்றுப்பாலம்; மிக முக்கியமான அந்தப் பாலத்தை, அமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதிக்கு நேராக வந்து பார்வையிட்டார்கள். அந்தப் பாலத்தையும் நீங்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடிக்கு ஒரு புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன். 5 Minutes; பேசுங்கள்.

பிற்பகல் 12—55

***திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் எனக்கு, கிணத்துக்கடவு தொகுதியிலே சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மற்றும் எனது தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக உழைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தோழமைக் கட்சியைச் சேர்ந்த அனைத்து நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத்தைப் பொறுத்தவரையில், வனத்தினுடைய பரப்பளவை அதிகப்படுத்துவதற்காகவும் வனத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காகவும், காடு வளர்ப்பு என்ற ஒரு மகத்தான திட்டத்தை அம்மா அவர்கள் கொண்டுவந்து செயல்படுத்தியதன்மூலமாகத்தான், இன்றைக்கு வனத்தினுடைய பரப்பளவு அதிகமாக இருக்கிறது.

சமூகக் காடுகள் திட்டத்தின்மூலமாக, 1981 ஆம் ஆண்டு முதல், சுவீடன் நாட்டு உதவியுடன் ஏரிகள் மற்றும் குளங்களில் கருவேல மரங்கள் நடவு செய்யப்பட்டன. ஆனால், இந்தத் திட்டத்திற்கு 1996 ஆம் ஆண்டில் தடை விதிக்கப்பட்டது. இதைக் கண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் ஆய்வு செய்து, இந்தத் திட்டம், ஊராட்சியின் வருமானத்தைப் பெருக்கவும், சுய வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும், எரிபொருள் சுய தேவைக்கும் உதவும் என்ற நோக்கத்திலே, இந்தத் திட்டத்திற்காக கடந்த 2004—2005—ல் ரூ.565.02 இலட்சமும், மற்றும் 2005—2006—ல் ரூ.563.049 இலட்சமும் ஒதுக்கீடு செய்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து, இந்த அரசும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால், அந்தந்த ஊராட்சிப் பகுதியிலுள்ள மரங்களை வெட்டி எடுக்கும்போது கிடைக்கும் வருமானத்தில், 60 சதவிகிதம் ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும்; அதை அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், அரசு இரப்பர் கழகம், அரசு தேயிலைத் தோட்டக் கழகம் அனைத்தும் இலாபத்தில் இயங்கி வந்தன. நீங்களும் தொடர்ந்து இலாபத்தில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



காவிரிப் படுகையில் தேக்கு மரம் நடுவதற்கு, அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 2003 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுக் காலத்திற்கு சுமார் 16,000 ஹெக்டேர் நிலத்தில் தேக்கு மரத் தோட்டம் ஏற்படுத்துவதற்காக 20 கோடி ரூபாய் திட்டத்தை மேற்கொண்டார்கள். அந்தத் திட்டம் இந்த ஆட்சியிலும் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு இரப்பர் கழகத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் 1998 முதல் 2001 வரை அளிக்க வேண்டிய தொழிலாளர்களுக்கான சம்பள நிலுவைத் தொகை அளிக்கப்படாமல் இருந்தது. அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், தொழிலாளர்களுக்கான நிலுவைத் தொகை வழங்கப்பட்டதுடன், தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கு இணையாக சம்பளம் வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு இரப்பர் கழகம், நட்டத்தில் இயங்குகிறது என்ற காரணத்தினால், அரசுக்கு வரவேண்டிய 12 கோடியே 90 இலட்சம் ரூபாயில் 6.4 இலட்சம் கோடியை மென் கடனாகவும், 6.4 இலட்சம் கோடியைப் பங்குத் தொகையாகவும், இரப்பர் கழகத்திற்கு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் வழங்கினார்கள். ஒரு ஹெக்டேருக்கு 6,000 ரூபாய் குத்தகை என்பதை 3,000 ரூபாயாகக் குறைத்து இரப்பர் கழகம் புனரமைப்பு செய்யப்பட்டு, இலாபத்தில் இயங்கி வந்தது. தொடர்ந்து இலாபத்தில் இயங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுபுறச் சூழலைப் பொறுத்தவரையில், சுற்றுப்புறச் சூழலுடைய தாக்கம், 1972 ஆம் ஆண்டு அளவில்தான் ஏற்பட்டது. அப்போது, உலக அளவில் சுவீடன் நாட்டிலே ஒரு சுற்றுபுறச் சூழல் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலே நான்கு பிரதம அமைச்சர்கள்தான் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் நம் இந்திய நாட்டின் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் ஆவார்கள்.

சுற்றுபுறச் சூழலைக் காக்கும்பொருட்டு, மாசுக் கட்டுப்பாடு வாரியம் என்ற அமைப்பை 1982 ஆம் ஆண்டில்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் துவக்கினார்கள். அதேபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1995 ஆம் ஆண்டு சுற்றுப்புறச் சூழல் துறையை உருவாக்கினார்கள். இந்தச் சுற்றுபுறச் சூழலைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே தமிழகத்தில் சிறப்பாக இருக்கிறது என்றால், அதற்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அம்மா அவர்களும்தான்

காரணம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–00

சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்தவரையில், சாயம் மற்றும் சலவைத் தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவுநீரினால் நிலம், நீர், காற்று மாசுபடுகிறது. அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்தில், மாசுக் கட்டுப்பாடு வாரியம்மூலமாக எதிர்மறைச் சவ்வூடுபரவல் என்ற தொழில்நுட்பத்தைப் தொழிற்சாலைகள் அனைத்திலும் பயன்படுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழகத்திலே 19 தனியார் சாயம் மற்றும் சலவைத் தொழிற்சாலைகளிலும், 6 தோல் தொழிற்சாலைகளிலும் இந்தப் புதிய தொழில்நுட்பத்தைக் கையாண்டிருக்கிறார்கள். அதில் நல்ல பலனும் கண்டிருக்கிறார்கள். இப்போது தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற எல்லா சாயம் மற்றும் தோல் தொழிற்சாலைகளிலும் இந்தத் திட்டத்தைப் புகுத்தினால், தமிழகத்திலுள்ள நீர், நிலம், காற்று மாசுபடுவது தவிர்க்கப்படும். எனவே, எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் இந்தத் திட்டத்தைப் புகுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், விளையாட்டைத் தமிழகத்திலே மேம்படுத்த, விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்பட்டது. மிகப் பிரம்மாண்டமான முறையிலே, சர்வதேசத் தரத்திற்கேற்ப நேரு விளையாட்டு அரங்கை உருவாக்கினார்கள். விளையாட்டிற்கென்று தனிப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. விளையாட்டுக்கென்று ஒரு தனி அமைச்சரையே அம்மா அவர்கள் நியமித்திருந்தார்கள். கிராம அளவிலே விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, அதில் பொது மக்களும், மாணவ, மாணவியரும் பங்குபெறச் செய்து அவர்களுக்குப் பரிசளித்து விளையாட்டு ஆர்வத்தை ஏற்படுத்தினார்கள். அதுபோல், இந்த அரசும் கிராம அளவிலே விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற இளைஞர்களின் விளையாட்டை ஊக்குவிக்கும்பொருட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும்,



அனைத்து விளையாட்டுக்களும் விளையாட ஏதுவாக, ஒரு விளையாட்டு மைதானம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சிக்கும், ஊராட்சி அளவிலே உள்ள இளைஞர்கள் என்ன விளையாட்டுக்களை விரும்பி விளையாடுகிறார்களோ, அந்த விளையாட்டிற்கான உபகரணங்களை ஊராட்சியின்மூலமாக, இலவசமாக வழங்க அரசு நிதி ஒதுக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில், விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த விவசாயிகள் எல்லாம், இன்றைக்கு மேற்குத் தொடர்ச்சி மலையிலேயிருந்து வருகின்ற நீரை, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட த்தின்மூலமாக, அந்த நீரைக் கொண்டு வந்து பாய்ச்சிக்கொண்டிருக்கின்றோம். அதுவும், எனது தொகுதியிலே ஒரு பகுதி, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்திலே சேர்க்கப்பட்டு பாய்ந்து கொண்டிருக்கிறது. மற்ற பகுதியில் பாய்வதில்லை. இப்போது பாய்கின்ற பகுதிக்குத் தண்ணீர் மிகவும் குறைவாக வந்துகொண்டிருக்கிறது. இதைப் போக்க வேண்டுமென்று நீண்டகாலமாக என்னுடைய பகுதியினுடைய விவசாயிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசு கேரளா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, விரைவில் ஆனைமலை ஆறு–நல்லாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டம் நிறைவேறியவுடன், எனது தொகுதியிலே பாசனத்திலே சேர்க்கப்படாத அனைத்துப் பகுதிகளும் சேர்க்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் தாமதமானால்--தற்போது பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்திலே பாசனம் பெறுகின்ற பகுதிகளிலே, பல பகுதிகளிலே காற்றாலை மின்சாரத்தை அமைத்திருக்கிறார்கள். மற்றும் ஒரு சில பகுதிகளிலே தொழிற்சாலைகளை அமைத்திருக்கிறார்கள். ஒரு சில பகுதிகள், இன்றைக்கு வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளெல்லாம் பாசனப் பகுதியிலே சேர்க்கப்பட்டிருந்தாலும்கூட, தண்ணீர் பாய்வதில்லை. அதையெல்லாம் கணக்கிலெடுத்து, எந்தெந்தப் பகுதி தொழிற்சாலைகளாகவும், காற்றாலை மின்சாரத்திற்காகவும் வீட்டு மனைகளுக்காகவும் பிரிக்கப்பட்டிருக்கிறதோ, அதையெல்லாம் பாசன நிலங்களிலிருந்து பிரித்து, அதை நீக்கி எவ்வளவு நிலங்கள் நீக்கப்படுகிறதோ, அவ்வளவு நிலங்களையும் என்னுடைய பகுதியிலே தற்போது பாசனம் பெறாத பகுதிகளான (மணியடிக்கப்பெற்றது) பணப்பட்டி, கொண்டம்பட்டி, அரசம்பாளையம், வடசித்தூர்,

சிங்கையன்புதூர், வீரப்ப கவுண்டனூர், முத்துக்கவுண்டனூர், சென்னியூர், சூளக்கல், வடக்கிபாளையம், கோவிந்தனூர், ஜமீன்காளியாபுரம், நாகூர் போன்ற பகுதிகளுக்கு வாய்க்காலை விஸ்தரிப்பு செய்துகொடுத்து பாசனம் பெறச்செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனது கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட சென்னியூரிலிந்து முத்துக்கவுண்டனூர் வரையிலும், பெரியகளந்தையிலிருந்து காவிலிபாளையம் வரையிலும், தாசநாயக்கன் பாளையத்திலிருந்து மெட்டுபாவி வரையிலும், தாளக்கரையிலிருந்து பொள்ளாச்சி–பாலக்காடு சாலை வரையிலும், நல்லூத்துக்குளியிலிருந்து ஆத்து பொள்ளாச்சி சாலை வரையிலும், பாலக்காடு சாலையிலிருந்து செடிமுத்தூர் சாலை வரையிலும் உள்ள சாலைகள், சென்ற ஆட்சிக் காலத்தில் tender விடபபட்டு, தேர்தல் அறிவிக்கப்படடதால், அப்பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால், இந்த ஆட்சியிலிருப்பவர்கள், மீண்டும் அந்த வேலைகளை உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

எனது தொகுதிக்குட்பட்ட கிணத்துக்கடவு, சேரிபாளையம், வடசித்தூர், பெரிய நெகமம் ஆகிய மேல்நிலைப் பள்ளிகளுக்கும், பெரிய நெகமம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, புரவிபாளையம், கொல்லபட்டி ஆகிய உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மாணவ, மாணவியர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், அங்கு போதுமான கட்டட வசதி கிடையாது. மேற்படி பள்ளிகளுக்குக் கடந்த ஐந்தாண்டுகளில், என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், S.S.A. திட்டத்திலிருந்தும் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், இப்போது மாணவ, மாணவியர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதினால், கட்டட வசதி போதாமல் இருக்கிறது. அதனால் அரசு நிதி மூலமாகவோ, நபார்டு திட்டத்தின் மூலமாகவோ, மேற்சொன்ன பள்ளிகள் அனைத்திற்கும் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட காளியண்ணன் புதூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் கல்லூரி கிடையாது. அதனால் கிணத்துக்கடவிலே ஒரு கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கிணத்துக்கடவிலே ஒரு தீயணைப்பு நிலையமும், கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட



வடசித்தூர் கிராமத்திலே ஒரு புறக்காவல் நிலையமும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நோத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதிக்குட்பட்ட சாத்துப்பாறைசித்தூர், கோடங்கிபட்டி, செல்லப்பம்பாளையம், கொங்கநாட்டான்புதூர், காவிலிபாளையம், சங்கராயபுரம், களத்தூர் ஆகிய கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி கிடையாது. அதனால் அதற்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணத்துக்கடவு தொகுதியைப் பொறுத்தவரையில், 75 ஊராட்சிகளை உள்ளடக்கிய 250 கிராமங்களைக் கொண்ட தொகுதி. அவை 2 ஊராட்சி ஒன்றியங்களாகவும் இருக்கின்றன. 6 உள் வருவாய் வட்டமாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதனால் இது பெரிய தொகுதியாகும். இதைக கருத்தில்கொண்டு, கிணத்துக்கடவைப் புதிதாகத் தனி வட்டமாக உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மிக மிக சாதாரணக் குடும்பத்திலே பிறந்து, பொதுப் பணித் துறையில் பொறியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த எனக்கு 1980–இலே நாடாளுமன்ற உறுப்பினராக ஆகின்ற வாய்ப்பைத் தந்து, அதன் பின்னால் பிரிக்கப்படாத திருச்சி மாவட்டத்தினுடைய மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பையும் தந்து, நான் வழி தவறிச் சென்று திரும்பி வந்த நேரத்திலே என்னை மன்னித்து, இன்று முசிறி தொகுதியினுடைய சட்டமன்ற வேட்பாளராக எனக்கு வாய்ப்பு தந்து, அந்தத் தொகுதிக்கு வந்து, பல்லாயிரக்கணக்கான மக்களிடம் வாக்கு கேட்டு, என்னை வெற்றிபெறச் செய்த, ஆறு கண்டங்களில் வாழ்கின்ற 7 கோடித் தமிழர்களுடைய இதய வேந்தர், இந்தியாவில் ஐந்தாவது முறையாக, இணையற்ற முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற தமிழினத்தின் தானைத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய இதய தெய்வம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றியை நான் காணிக்கையாக்குகிறேன்.

என்னுடைய தொகுதிக்கு வந்து, மண்ணச்சநல்லூர் பொதுக் கூட்டத்திலே உரையாற்றி, வாக்கு சேகரித்த, கழகத்தினுடைய

பொதுச் செயலாளர் மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற வேண்டுமென்று பம்பரம்போல் சுழன்று பணியாற்றி, என் தொகுதிக்கும் வந்து, என்னுடைய வெற்றிக்கு வித்திட்ட, இளைஞர்களின் எழுச்சி நாயகன் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் எதிர்காலம், நாளைய தமிழ்ச் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், தமிழகத்தின் தளபதி அவர்களுக்கும், அதைப்போல கழகத்தினுடைய பொருளாளர் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், எனக்காக வந்து வாக்கு சேகரித்த மத்திய தகவல் தொலைத் தொடர்பு அமைச்சர் மாண்புமிகு தயாநிதி மாறன் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்டக் கழகத்தினுடைய செயலாளரும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர்களுக்கும், வாக்கு சேகரித்த தொண்டர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் 162 தொகுதிகளில் தமிழாய்ந்த தலைமகன் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டுமென்று எப்படி வாக்களித்தார்களோ, அதைப்போல முசிறி தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களும் உறுதியோடு நின்று உதய சூரியன் சின்னத்திலே வாக்களித்து, என்னை வெற்றிபெறச் செய்து, இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

இந்தியத் திருநாட்டில் இணையற்ற அரசியல்வாதியாகவும், மாநிலங்களவை மற்றும் மக்களவையில் இடம்பெற்று, மத்திய அமைச்சரவையிலே மூன்று முறை இடம்பெற்று, இந்திய நாட்டிலே 70 பங்காக வாழ்ந்துகொண்டிருக்கிற விவசாயிகள், நாளை உலகச் சந்தையாலே அவர்கள் நலிவுற்றுவிடக் கூடாது என்பதற்காக, விவசாயிகளுடைய குரலை 'தோகா' மாநாட்டிலே ஓங்கி ஒலித்து, பிரேசில் உள்ளிட்ட அந்தப் பெரிய நாடுகளுக்குக்கூட பாதுகாப்புத் தந்து, நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்குப் பாதுகாப்புத் தந்து, அமெரிக்க ஏகாதிபத்தியம், அல்லது வளர்ந்த ஐரோப்பிய நாடுகளிடமிருந்து அதைப் பாதுகாத்துத் தந்த, மறைந்தும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற,



அண்ணாவால் பாராட்டப்பெற்ற அறிவுப பெட்டகம், திராவிட இயக்கத்தினுடைய வரலாறு, வாழ்கின்ற நாள்வரை எங்கள் தலைவரின் மனசாட்சியாக வாழ்ந்து மறைந்த, என்னுடைய மரியாதைக்குரிய அண்ணன் முரசொலி மாறன் அவர்களை நினைவுகூர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) நான் என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இந்த உலகத்தில் அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக விளங்குவது சூரியன். சூரியனின் ஒளிக் கதிரின் திறனைச் சூரியனின் ஒளிக் கதிரிலிருந்து நாமும் மற்ற விலங்கினங்களும் பெறுவதற்குப் பயன்படத்தக்கவகையில், மாற்றித் தருவன, தாவர இனங்களே ஆகும். எனவே எல்லா உயிரினங்களுக்கும் முற்பட்ட இனம், தாவர இனமாகும். இதையேதான் மாணிக்கவாசகரும்,

'புல்லாகிப் பூடாகி ... ...

செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் ... ...'

என்று புகழ்ந்துரைத்திருக்கின்றார். எனவே வனங்களைக் காப்பது, காடுகளைக் காப்பது என்பது ஒரு தலையாய கடமை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதையே பாரதியாரும், 'காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்' என்று சொல்லியிருக்கிறார்கள். தலைவர் கலைஞருடைய அரசு, அந்த பாரதியின் கனவை நனவாக்கும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தைப் பொறுத்தவரையில், காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று 200 ஆண்டுகளாக, 1806–இலிருந்து அன்றிருந்த ஆட்சியாளர்கள் முதல் அதற்கு அக்கறை செலுத்தியிருக்கிறார்கள். 1882–இலும், 1949–இலும், 1972–இலும் வனச் சட்டம் தமிழ்நாட்டிலே இயற்றப்பட்டிருக்கிறது. 1980–இலே இந்திய அரசால் வனப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1988–இலே இந்திய தேசிய வனக் கொள்கை அன்று அறிவிக்கப்பட்டு, 33 விழுக்காடுகள் வனங்களாகவோ, அல்லது வனங்களுக்கு வெளியே மரங்களாகவோ இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன்படிப் பார்த்தால், தமிழகத்தினுடைய பரப்பு 1 இலட்சத்து 30 ஆயிரத்து 58 சதுர கிலோ மீட்டர். நாம் 43 ஆயிரத்து 350 சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் நம்மிடம் இருப்பது 22 ஆயிரத்து 877 சதுர கிலோ

மீட்டர்தான். 17.59 விழுக்காடுதான் நாம் வனங்களைப் பெற்றிருக்கிறோம். எனவே, எடுத்துக்கொண்ட முயற்சியாலே, இன்று நாம் 27,634 சதுர கிலோ மீட்டரைப் பெற்றிருக்கிறோம். அது 21.25 விழுக்காடு என்பதை நான் குறிப்பிட விருமபுகிறேன். 2007—க்குள் நாம் 25 விழுக்காட்டை எட்ட வேண்டுமேயானால், இன்னும் 3,500 சதுர கிலோ மீட்டர் நிலங்களை நாம் உருவாக்க வேண்டும், மரங்களை நாம் நட வேண்டும். அல்லது அவர்கள் நிர்ணயித்துள்ளதுபோல் 2012—க்குள் நாம் 33.3 விழுக்காடுகளை எட்ட வேண்டுமேயானால், 13,900 சதுர கிலோ மீட்டரை நாம் இன்னும் உருவாக்க வேண்டும். எனவேதான், இவற்றை அடைவதற்கு, இலக்கை அடைவதற்கு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டமும், தேசிய வன வளர்ச்சித் திட்டமும், அதைப்போல வேளாண் காடுகள் திட்டமும், சமூகக் காடுகள் வளர்ச்சித் திட்டமும், கடற்கரையோர வனம அமைக்கும் திட்டங்கள் எல்லாம் முறைப்படுத்தப்பட்டு, அவையெல்லாம் செயலாக்கப்பட இருக்கின்றன.

இங்கே தலைவர் கலைஞர் அவர்கள், 1997—இலே தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில், ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் உதவியோடு அந்த நிதியைப் பெற்றார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; எங்களுடைய ஆட்சியிலே, 1994—இலே துவங்கப்பட்டது என்று. 1994—இலே அந்தத் திட்டம் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டு, அதிலே குறையிருந்து திருப்பியனுப்பப்பட்டு. அதன் பின்னாலே தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, அங்கே அனுப்பி, 1997—இலேதான் அதற்கு உத்தரவு கிடைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) 483 கோடி ரூபாயை அந்த வங்கி வழங்கியது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதன் பின்னாலே, இந்த அரசின் சார்பாக 205 கோடி ரூபாய் அதற்குக் கொடுத்து 688 கோடி ரூபாய் செலவிலே, 1997—இலேயிருந்து 2005 வரை அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1,367 கிராமங்களிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1—15

நான்கு இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து ஐநூற்று எண்பத்து எட்டு பேர் வனக் குழு உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நான்கு இலட்சத்து எண்பதாயிரத்து நூற்று எழுபத்தொன்பது ஹெக்டேர்கள், அதிலே தாம் மேல்நிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு இலட்சத்து



எழுபத்தைந்தாயிரம் நபர்கள், அங்கே கிராமத்திலே வாழ்கின்ற ஏழைகள் அல்லது விவசாயிகள், மாற்று வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மூவாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்று மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றிலே அறுபதாயிரத்து தொண்ணூற்று ஏழு பேர் அங்கே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றும் அந்தக் கீழ்நிலையிலே வாழ்ந்த, அந்தக் கிராம மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டும் என்பதற்காக, அங்கே சிறு கடனாக ரூ.51.31 கோடி கடனாகக் கொடுத்து, அந்த ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு, இந்த அரசு நடவடிக்கை எடுத்தது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 27 மாவட்டங்களிலே தொளாயிரத்து நாற்பத்தாறு கிராமங்களிலே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், அதைப்போல ஆழ்குழாய்க் கிணறுகள், கைப் பம்புகள் அமைப்பது, அதைப்போல குழந்தைகள் காப்பகங்கள், இன்னும் கதிரடிக் களங்கள் போன்ற சமுதாய நலத் திட்டங்கள் எல்லாம் சேர்த்து நாலாயிரத்து எழுநூற்று இருபத்து இரண்டு பணிகள் அங்கே நிறைவேற்றப்பட்டன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, மழைக் காலங்களிலே, மழை நீரை அறுவடைச் செய்ய, 817 மில்லியன் கொள்ளளவு கொண்ட கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள், இருபத்து மூன்றாயிரத்து நானூற்று ஐம்பத்து நான்கு தடுப்பணைக் குட்டைகளும், இரண்டாயிரத்து இருநூற்று ஒன்று கசிவுநீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டு, அதன்மூலம் ஐந்து முதல் பத்து விழுக்காடு அந்த நீர் மட்டம் இரண்டு அடி முதல் மூன்று அடி வரை உயர்த்தப்பட்டு, விவசாயிகள் அந்தப் பலனைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதன்மூலமாக, ஆறு கோடியே ஒன்பது இலட்சம் மனித வேலை நாட்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் பெருமையோடு இந்த அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது திட்டமாக, இன்று அதே ஜப்பான் பன்னாட்டு வங்கிகள், நாம் செய்திருந்த அந்தப் பணிகளைப் பார்த்து, மீண்டும் அந்தக் கடனை நீட்டிக்க முன்வந்து, இன்று நானூற்று ஒன்பது கோடி ரூபாய் இரண்டாவது தவணையாகக் கொடுத்திருக்கிறார்கள். ரூ.158.42 கோடி தமிழக அரசின் சார்பாகச் சேர்த்து ரூ.567.42 கோடி செலவிலே, இன்னும் எட்டு ஆண்டுக் காலம் 2013 வரை, அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது, 150 மலைவாழ் கிராமங்களைச் சேர்த்து

800 கிராமங்களில் அந்தத் திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும், இந்தத் திட்டத்தின்மூலம் ஒரு இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து ஐநூறு ஹெக்டேர் நிலம் தரம் உயர்த்தப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த ஆண்டு, அந்தத் திட்டத்திற்கு 125 கிராமங்கள், 40 மலைவாழ் கிராமங்களை உள்ளிட்டு அவை செயல்படுத்தப்பட இருக்கின்றன; ரூ.101.42 கோடியிலே அவையெல்லாம் செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதன் பின்னாலே, தேசிய வன வளர்ச்சித் திட்டங்கள்; தமிழ்நாட்டிலே மத்திய அரசு உதவியோடு 32 தேசிய வன உயிரியல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு, அந்தத் திட்டமும் இந்த ஆண்டு பதினெட்டு கோடியே பதினைந்து இலட்சத்து எட்டாயிரம் ரூபாயில் செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தரம் குன்றிய மலைகள், காடுகள், ஏரிகள், குளங்களிலே எல்லாம் கருவேல மரங்கள் நடுகின்ற அந்தத் திட்டம், இந்த ஆண்டு 2,880 ஹெக்டேரிலே, மூன்றரை கோடி ரூபாய் செலவிலே, செயலாக்கப்படுவதற்கு, தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருகிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, படுகைத் தோட்டங்கள்; ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், நாகை, பெரம்பலூர், கடலூர் போன்ற மாவட்டங்களிலே, படுகைத் தோட்டங்கள் ஏற்படுத்த, இந்த ஆண்டு 3,280 ஹெக்டேரிலே ஏற்படுத்த, நான்கு கோடியே எழுபது இலட்சம் ரூபாய் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, நீலகிரி மலை; உலகிலேயே மிகவும் அழகுவாய்ந்த மலை. அந்த மலையினுடைய இயற்கைச் சூழல் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவும், காடுகள் அழிக்கப்படுவதைக் குறைப்பதற்காகவும் அங்கே காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் மலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக, இரண்டு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 1–20

அதைப்போல, மேற்குத் தொடர்ச்சி மலை; அனைத்து உயிர்களுக்கும் பாதுகாப்பான ஒரு இடமாகும். அங்கே எல்லா வன விலங்குகளுக்கும், மற்றவர்களுக்கும் பாதுகாப்புக் கொடுப்பதற்கு, அந்த மலையைப் பாதுகாப்பது அவசியம் என்கிற காரணத்தால், அந்த மலை மேம்பாட்டிற்கு, 4 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்து, அந்தத் திட்டமும் நடைமுறைக்கு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை நான் இந்த அவைக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, வேளாண் காடுகள்; தனியார் நிலங்கள் பல இடங்களிலே தரிசுகளாகக் கிடக்கின்றன; அல்லது அவர்கள் பயிர் செய்வதற்குப் பயனற்ற நிலங்களாக இருக்கின்றன. எனவே, அந்த நிலங்களைப்பற்றியெல்லாம் அவர்களிடம் எடுத்துச்சொல்லி, 'நீங்கள் மரங்களை நடுங்கள்' என்று எடுத்துச்சொல்லி, 'மரப் பயிரும், பணப் பயிரே' என்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தி, அதை அவர்கள பயனுக்குக் கொண்டுவருவதற்கு இந்த ஆட்சி, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி, நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காகத் தனியார் நிலங்களிலே, விலையுயர்ந்த சந்தனம், தேக்கு, ஈட்டி போன்ற மரங்களைப் பயிரிடுவதற்குப் பல தடைகள் இருக்கின்றன. அந்தத் தடைகளையெல்லாம் போக்குவதற்கு ஆய்வு செய்து, அந்தத் தடைகள் நீக்கப்பட்டு, அவர்கள் அதைத் தாராளமாகப் பயிரிடுகின்ற ஒரு சூழ்நிலையைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு உருவாக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, கடற்கரைத் தோட்டங்கள்; தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, 1997–இலேயிருந்து 2001 வரையிலே, கடற்கரை ஓரமாகத் தொடர் தோட்டங்கள் அமைக்கப்பட்ட காரணத்தால், அலையாத்திக் காடுகள் அமைக்கப்பட்ட காரணத்தினாலே, அவற்றினாலே பல இடங்களிலே, அண்மையிலே ஏற்பட்ட சுனாமியிலிருந்து, உயிர்களும், உடைமைகளும் பாதுகாப்பாக இருந்தன என்கிற குறிப்பை உணர்கின்றோம். எனவே, அந்தக் கடற்கரையோரமுள்ள மாவட்டங்களிலே, கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் ஆகிய 13 மாவட்டங்களிலே, 1076 கி.மீ. நீளமுள்ள அந்தக்

கடற்கரையோரங்களிலே, தொடர் தோட்டங்களும், அலையாத்திக் காடுகளும் அமைக்கின்ற திட்டம் இருக்கிறது என்பதையும், அவை அமைக்கப்படும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லாணும் நாட்டிற்கு உறுப்பு"

என்று அய்யன் வள்ளுவன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீர்நிலை ஆதாரங்கள் காடுகள்தான். தமிழ்நாட்டிலே உள்ள 11 ஆறுகளும், மேற்குத் தொடர்ச்சி மலை அல்லது கிழக்குத் தொடர்ச்சி மலைகளிலேதான் அவை உற்பத்தியாகின்றன. அதன் பின்னாலே, நீர்த் தேக்கங்கள்; தமிழ்நாட்டிலே சற்றேறக்குறைய பெரிய நீர்த் தேக்கங்கள் 32 உள்ளன. அவையெல்லாம், காடுகளிலும் அல்லது காடுகளுக்கு அருகிலும் அமைந்திருக்கின்றன. அந்தக் காடுகளிலே உள்ள அணைகளிலேதான் நீர்மின் தேக்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நீர்த் தேக்கங்களால் அல்லது நீர்மின் நிலையங்களாலே, விவசாயத்திற்கு மின்சாரம் பயன்படுகிறது; தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் பயன்படுகிறது. எனவே, இவையெல்லாம், தொழிற்சாலைகளுக்கு, பொருளாதார மேம்பாட்டிற்குப் பயன்படுகின்ற காரணத்தாலே, வனத்தைப் பாதுகாப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, வனத்தைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, வனங்கள்தான் அனைத்து உயிர்களுக்கும், வன விலங்குகளுக்கும் பாதுகாப்பான ஓர் இடம். எனவே, தமிழகத்தின் வனப் பகுதிகளிலே, 8 சரணாலயங்களும்; 5 தேசியப் பூங்காக்களும், 12 பறவைகள் சரணாலயங்களும் உள்ளன. ஆனால், சரணாலயங்கள், வனப் பகுதியிலே 25 விழுக்காடாக இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, 5,722 சதுர கிலோ மீட்டர் வன நிலங்கள் சரணாலயத்திற்காக வேண்டும். நம்மிடம் இப்போது இருப்பது 3,669 சதுர கிலோ மீட்டர்தான். எனவே, இதை அதிகரிக்க, சத்தியமங்கலம் பகுதியில் உள்ள தலை மலை, பிம்ப மலை, கடம்பூர் மலை அல்லது தேனி மாவட்டத்திலே உள்ள மேக மலை, கொடைக்கானல் மலை அல்லது நெல்லையிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளிலே 2,467 சதுர கிலோ மீட்டர் பரப்பை உருவாக்கிட, இந்த அரசிடம் கருத்துரு இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



புலிகள் காப்பகம், நெல்லை மாவட்டத்திலே, களக்காடு, முண்டந்துறையில் மட்டும்தான் இருக்கிறது. இப்போது ஆனைமலைக்கும், முதுமலைக்கும் நம்முடைய தலைவர், மாண்புமிகு முதல்வர் கேட்டுக்கொண்டதன்பேரில், மத்திய வனத் துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு சகோதரர் திரு. இராஜா அவர்கள் அதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிக் காப்பகமாக மாற்றப்படுகின்ற நேரத்திலே, பல்வேறு நன்மைகளை நாம் பெறமுடியும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில்நுட்பத் துறையிலே தமிழகம், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே பல்வேறு முன்னேற்றங்களைப் பெற்றிருக்கிறது. தொழில்நுட்பத்தை இந்தத் துறையிலேயும் கொண்டு வந்து, கணினிமயமாக்கி, எல்லாத் தகவல்களையும் உடனுக்குடன் நாம் தெரிந்துகொள்வதற்குப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே உங்களிடம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–25*

அதைப்போலவே, மலைவாழ் மக்களுடைய மேம்பாடு; மலைவாழ் மக்களுடைய மேம்பாடு குறித்து, இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். அங்கே 6.5 இலட்சம் மக்கள் மலைவாழ் மக்களாக, பழங்குடியினராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிறுகுறு விவசாயிகளாகவும் அல்லது தினக் கூலிகளாகவும் வாழ்ந்து அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான், அவர்களுக்கு வன நிலத்திலே விளைகின்ற அந்தச் சிறு வனப் பொருட்களையெல்லாம் அவர்களுக்கே இலவசமாகக் கொடுக்கின்ற திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. அதைப்போல, சரணாலயங்களிலே தேவைப்படுகின்ற இடங்களிலே, அவர்களைக் காவல் துறை வனக் காவலர்களாக அமர்த்துவதற்கும், அதைப்போல அவர்களுக்குத் தேவைப்படுகின்ற கல்வி வசதி, அடிப்படை வசதி, தண்ணீர் வசதி, சுகாதார வசதிகளையெல்லாம் ஏற்படுத்துவதற்கும் இந்த அரசு, தலைவர் கலைஞருடைய அரசு, செயல்படுத்தும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே, அவர்களுக்காக இந்த அரசால் 19 பள்ளிகள் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றிலே அடிப்படை வசதிகள் இல்லை. மாணவர்களுக்குச் சரியான வகுப்பறை இல்லை.

நல்ல விழுக்காடுகளை, தேர்ச்சி விகிதத்தைப் பெற்று இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வகுப்பறைகள் இல்லை; மேலும், அங்கே கழிப்பறை வசதிகளோ, தங்குகின்ற விடுதிகளோ இல்லாத அந்தக் குறைகளைப் போக்குவதற்குத் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு, நடவடிக்கை எடுக்கும். 4 கோடியே 85 இலட்சம் ரூபாயிலே அதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, எரிபொருள் சக்திகள். நாம் மாற்று எரிபொருட்களை உபயோகிக்க வேண்டுமென்று உலகம் முழுவதும் பேசுகிறார்கள். அதனாலே, bio diesel வேண்டுமென்பதற்காக காட்டாமணக்குச் செடிகளைப் பயிரிடுவதற்கு, தரம் வாய்ந்த காட்டாமணக்குச் செடிகளை ஆப்பிரிக்க நாடான ஜிம்பாப்வேயிலிருந்து இறக்குமதி செய்து, அங்கிருந்து பெற்று, அந்தச் செடிகளை நடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அதைப்போல இலுப்பை, புங்கன், வேம்பு போன்ற தாவர எண்ணெய் கிடைக்க, நாம் அந்த மரங்களை நட ஊக்குவிப்பதன்மூலம் தாவர எண்ணெய் கிடைப்பதுமட்டுமல்லாமல் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மகளிர் மேம்பாட்டிற்காகவும் தலைவர் கலைஞர் அவர்கள், 1997–இலே குழு அமைக்கின்ற நேரத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். அந்த வனக் குழுக்களிலே, ஒரு வீட்டிற்கு ஒரு பெண் கண்டிப்பாகச் சேர்க்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, செயற்குழுவிலே அவர்கள் எல்லாம் மூன்றில் ஒரு பங்கு இருக்க வேண்டுமென்று அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவர்களும் அந்தச் சுய உதவிக் குழுக்கள்மூலம் நிறைய கடன்களைப் பெற்று, தங்கள் வாழ்க்கைத் தரத்திலே முன்னேறியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வனத் துறையிலே, மூன்று வனத் தோட்டக் கழகங்கள் இருக்கின்றன. வனத் தோட்டக் கழகம் என்ற பெயரால், மூன்று கழகங்கள் இருக்கின்றன. ஒரு வனத் தோட்டக் கழகம், திருச்சியை மையமாகக் கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் இரண்டாவது முறை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில், 13–6–1974–இலே அந்தக் கழகம் உருவாக்கப்பட்டது. 75,000 ஹெக்டேர் பரப்புள்ள நிலம், அந்தக் கழகத்திற்கு, வனத் துறையிலிருந்து



ஒப்படைக்கப்பட்டு, அதற்கு என்ன தேவை வேண்டுமோ, விலைவிகிதமோ, அதை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கழகம் செவ்வனே செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதிலே தைல மரங்களும், முந்திரித் தோப்புகளும் அல்லது சில இடங்களிலே தேக்கு மரங்கள், நெல்லி மரங்கள், சவுக்கு மரங்கள் எல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையாக தைல மரங்களைத்தான் அங்கே பயிரிடுகிறார்கள். இங்கே ஒரு மானியக் கோரிக்கையிலே பேசிய நம்முடைய ஆண்டிமடம் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சிவசங்கரன்கூட கேட்டார்கள்; நாங்கள் சில இடங்களிலே, தைல மரங்களைப் பயிரிடுவதால், எங்கள் விவசாயிகளுக்கு அங்குப் பயன் இல்லை; எனவே, முந்திரி மரங்களைப் பயிரிட வேண்டுமென்று கேட்டார்கள். அதனால், அவருடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே சில இடங்களிலே, எங்கெங்கு முடியுமோ, அங்கெல்லாம் அந்த முந்திரி மரங்களைப் பயிரிடுவதற்கு, அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், எல்லா இடங்களிலும் அதைப் பயிரிட முடியாது. சில இடங்களிலேதான், அந்த முந்திரி மரங்களையும், அந்தத் தைல மரங்களுக்கு மாற்றாகப் பயிரிட முடியும். அந்த இடங்களிலே மட்டும, அவை நிச்சயமாகப் பயிர் செய்யப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தைல மரங்கள் தேவை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், கரூரிலே ஓர் ஆலை; நம்முடைய தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் காகித ஆலை, அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு மூலப் பொருட்களைக் கொடுக்க வேண்டியது, இந்தக் கழகத்தினுடைய கடமையாக இருக்கிறது. இதை நம்பி அவர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால், இந்தக் கரும்புச் சக்கையிலிருந்து கிடைக்கின்ற 60 விழுக்காடு போக, 40 விழுக்காடு கூழ், இவர்கள்தான் அதற்குக் கொடுக்க வேண்டும். இந்த ஆண்டுகூட, 95,000 டன் தருவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்திலே அதற்குத் தேவையான அளவிற்கு நாமும் அதற்குத் தகுந்தவாறு நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். இன்று, 7 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு ஹெக்டேரிலே 25 டன் மகசூல்தான் தைல மரங்கள் கிடைக்கின்றன. ஆனால், குளோனிங் என்ற அந்த முறையிலே நல்ல கன்றுகள் எடுத்து, அந்த நாற்றங்காலைப் பயிரிட்டால், எதிர்காலத்திலே 50 டன் வரை கிடைக்கும். அதை இப்போதே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆஸ்திரேலியா நாட்டிலே 100 டன் கிடைக்கிறது. ஒருவேளை

மண் வளம் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இருந்தாலும் அதையெல்லாம் கண்டறிந்து, நம்முடைய உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** அந்தக் கழகம், ஐந்தாண்டுக் காலத்தில், 1996–லிருந்து 2001 வரை கிட்டத்தட்ட 24 கோடி ரூபாயை இலாபமாகப் பெற்றிருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே இலாபம் பெற்றிருந்தது; அன்று, 121 கோடி ரூபாய் விற்பனையிலே, 24 கோடி ரூபாய்; அதாவது 24.9 கோடி ரூபாயை இலாபம் காட்டினார்கள். ஆனால், அதன் பின்னே வந்தவர்கள், இங்கே நாங்கள் வனத்தையெல்லாம் பாதுகாத்தோம் என்றவர்கள் 156 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து, 22.2 கோடி ரூபாயைத்தான் இலாபமாகக் காண்பித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இயங்குகின்ற அரசு, எந்த நேரத்திலும் பொறுப்புணர்வோடு செயல்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப்போலதான், தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த நேரத்தில், 1975–இலே தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூரை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. 9 இடங்களிலே அங்கே கோட்டங்கள் இருக்கின்றன; 6 தொழிற்சாலைகளும் உள்ளன. அதைப்போல, வால்பாறைப் பகுதியிலும் 2 கோட்டங்களும், 2 தொழிற்சாலைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, அங்கே 6,250 தொழிலாளர்கள், நிரந்தரத் தொழிலாளர்களாகவும், 3,000 தொழிலாளர்கள் அன்றாடத் தற்காலிகத் தொழிலாளர்களாகவும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே 5,000 பேர் இலங்கையிலேயிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இங்கே பேசியவர்கள் சரியாகச் சுட்டிக்காட்டினார்கள். 1998–இலே அங்கே தொழிலாளர்களுக்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசாலே ரூ.74.25 காசு அன்று வழங்கப்பட்டது. ஆனால், அதன் பின்னாலே அந்த ஒப்பந்தம், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்பட்டிருக்க வேண்டும்.



தனியார்களெல்லாம் மாற்றியிருக்கிறார்கள்; மாற்றப்பட்டிருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ, அவர்கள் அதை மாற்றவில்லை. அதை 2002–இலே மாற்றியிருக்க வேண்டும். மாற்றாத காரணத்தால், அவர்கள் இன்னும் அதே நிலையிலே தொடர்கிறார்கள். இந்த அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதற்கு நல்ல தீர்வைச் சொல்வார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கவில்லை. ஆனால், அதை இலாபத்திலாவது இயக்கியிருக்கிறார்களா என்றால், இல்லை. அந்த ஐந்தாண்டுக் காலத்திலே, 1996–இலேயிருந்து 2001 வரை அந்தக் கழகம் பெற்ற இலாபம், ரூபாய் 30 கோடியே 99 இலட்சம். ஆனால், அவர்கள் ஆட்சியிலே என்ன செய்தார்கள் தெரியுமா? 18 கோடியே 75 இலட்சம் ரூபாய் நஷ்டத்திலே அதை இயக்கியிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கும் அங்கே கூலி உயர்வு தரப்படவில்லை; அங்கே இலாபமும் ஈட்டப்படவில்லை. ஆனால், இன்று அந்தத் தேயிலைக் கழகம் இன்னும் இலாபத்திலே செல்வதற்கு, இப்பொழுது விற்பனை வரியிலே தலைவர் கலைஞர் அவர்கள் சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். 2 சதவிகிதம் என்று இருந்ததை 1 சதவிகிதம் என்றும், 8 சதவிகிதம் என்று இருந்ததை 4 சதவிகிதம் என்றும் மாற்றிக் கொடுத்திருக்கின்ற காரணத்தாலே, இன்னும் அதிக இலாபத்தை வருங்காலத்திலே அந்தக் கழகம் ஈட்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கெல்லாம்கூட, அதை அறிவிப்பிலே சொல்லலாம் என்று இருந்தாலுங்கூட, நான் இப்பொழுதே சொல்ல விரும்புகிறேன். அங்கே 3 மருத்துவமனைகளும், 8 மருந்தகங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தற்காலிக ஊழியர்களெல்லாம், நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப்போல், தங்களுக்கும் மருத்துவச் சலுகைகள் வேண்டுமென்று கேட்டார்கள். அந்த மருத்துவச் சலுகைகளெல்லாம் அவர்களுக்கும் வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே பெருமையோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலதான், நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு — இந்தத் தேயிலைத் தோட்டக் கழகம் 4,400 ஹெக்டேரிலே செயல்படுகிறது என்று சொன்னால் — 1–10–1984–இலே அரசு ரப்பர் கழகம் அங்கே உருவாக்கப்பட்டது. அதிலேயும்கூட, 1,588 பேர் அங்கே வேலை செய்கிறார்கள். அதிலே 386 பேர் இலங்கைத் தமிழர்கள். நான்

இலங்கைத் தமிழர்கள் என்று குறிப்பிட வேண்டும் என்பதற்காக, அந்த எண்ணிக்கையைச் சொல்கிறேன். இலங்கைத் தமிழர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள் என்பதற்காக நான் குறிப்பிடுகிறேன். அந்தக் கழகமும் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தியதா என்றால், இல்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, 14,623 டன்னை உற்பத்தி செய்திருந்த நேரத்தில், அவர்கள் 12,803 டன்னைத்தான், கடந்த ஐந்தாண்டுக் காலமாக உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதற்கெல்லாம் பல்வேறு காரணங்கள் இருந்தாலுங்கூட, அதைக் கண்டறிந்து, அந்த மரங்களெல்லாம், பால் தரும் மரங்களெல்லாம், 30 ஆண்டுகளுக்கு முன்பாக நட்ட காரணத்தினால், அவை தன்னுடைய வலிமையை இழந்துவிட்டதால், புதிதாக மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த ஆண்டு 55 ஹெக்டேரிலே அந்த மரங்கள் நடப்பட இருக்கின்றன என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 1—35*

அதைப்போல, நான் வன வளத்தைப்பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறேன். ஆனால், வனங்களைப் பாதுகாக்கவேண்டியது, வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். பலர் குந்தகம் விளைவிக்கிறார்கள். இங்கே நீங்கள் எல்லோருமே பேசினீர்கள்; பல சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்; மரம் வெட்டப்படுவதை, விலங்குகள் வேட்டையாடப்படுவதையெல்லாம் சொன்னார்கள். அவையெல்லாம் பாதுகாக்கப்படவேண்டும். ஏனென்றால், திருட்டுத்தனமாக மரம் வெடடுதல், அதைப்போல விலங்குளை வேட்டையாடுதல், காட்டுத் தீயைப் பரவ வைத்தல், கஞ்சா கடத்துதல், ஆடு மாடுகளை மேய்த்தல், அதைப்போல கள்ளத்தனமாகச் சுரங்கம் தோண்டுதல், கள்ளச் சாராயம் காய்ச்சுதல் போன்ற இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்காக, மனிதர்கள் அதைக் கெடுத்துவிடுகிறார்கள்; அழித்துவிடுகிறார்கள் என்ற காரணத்தாலே, அதைப் பாதுகாப்பதற்காக, களப் பணியாளர்களுக்கு உரிய ஆயுதங்களும், அவர்களுக்கு வேண்டிய வாகனங்களும் அரசாலே வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, எதிர்காலத்தில் அதுபோன்ற நிகழ்வுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போல, தலைச்சுமையாகவும், அல்லது அந்தப் பகுதிகளிலே ஆடு மாடு மேய்ப்பவர்களுக்கு வேறு தொழிலை—இங்கே பேசிய



நண்பர்கள் குறிப்பிட்டார்கள்; மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்; வேலையில்லாமல் இருக்கிறார்கள்; அவர்கள் ஆடு மாடு மேய்ப்பவர்கள்; எங்கே செல்வார்கள் என்று—வேறு மாற்றுத் தொழிலாக அவர்களுக்குக் கடன் வழங்கி, ஏனென்று கேட்டால், அங்கே அவர்கள் ஆடு மாடு மேய்க்கச் செல்கின்ற நேரத்திலே, அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. வன விலங்குகளாலே தாக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களை அங்கே அனுமதிப்பது என்றால், அவர்களுடைய சொந்த ஜாமீனிலேதான், அவர்களிடம் கையெழுத்துப் பெற்றுக்கொண்டு அனுப்பவேண்டும். அதுவும் குறிப்பாக, வெள்ளாடுகள், மாடுகளை அனுப்பக்கூடாது; செம்மறி ஆடுகள் போன்றவற்றைத்தான் அனுப்பவேண்டும் என்று விதி இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட அந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். யானைகளை வேட்டையாடுவதற்காக, அவற்றின் தந்தங்களையும், மற்றவற்றையும் எடுப்பதற்காகச் செல்லுகின்றவர்களை, வேட்டைத் தடுப்புத் மையங்களை அமைத்து, அவர்கள் தடுக்கப்படுவார்கள்.

அதைப்போலவே, வன ஆக்கிரமிப்புகள்; வன ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்காக, எல்லைகளை அளந்து, வனக் காப்புத் தூண்களை அமைத்து, அந்த எல்லைகள் பாதுகாக்கப்படும். இப்படிப்பட்ட தீமைகளைத் தடுப்பதற்காகப் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் குறிப்பிடுகின்ற இந்த நேரத்தில், மனிதர்களாலே வன விலங்குகளுக்கு ஏற்படுகின்ற அந்தக் கெடுதல்களையும் கொடுமையையும் நான் சொல்லித்தான் ஆகவேண்டும். அவை சில நேரங்களிலே தறிகெட்டு வந்து, மனிதர்களைத் தாக்குகின்றன. அல்லது அவையெல்லாம் அந்த வன விளிம்புகளிலே, விவசாயம் செய்து வைத்திருக்கின்ற அந்தப் பொருள்களையெல்லாம், நாளை அறுவடை செய்யலாம் என்று அந்த விவசாயி காத்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, அவன் துயரப்படுகின்ற அளவிற்கு அவற்றையெல்லாம் அழித்துவிட்டுச் செல்கின்ற நேரத்திலே, அந்த விவசாயிகள் மனமுடைந்து போகிறார்கள். எனவே, அந்தச் சூழ்நிலையைத் தடுப்பதற்குச் சூரிய ஒளி கொண்டு, அங்கே மின் வேலிகள் அமைக்கவும், அகழிகள் வெட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, வனங்களைப் பாதுகாப்பதிலே தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, மிக கவனம் செலுத்தும்; எல்லோரும் பாராட்டுகிறவண்ணம், நீங்களெல்லாம் பாராட்டுகின்றவண்ணம் இந்த அரசு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, சில அறிவிப்புகளை—

[திரு. என். செல்வராஜ்] [2006 ஆகஸ்ட் 10

ஏற்கெனவே நான் என்னுடைய பேச்சிலே குறிப்பிட்டிருந்தாலும்கூட— அந்த அறிவிப்புகளை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

2006—க்கான புதிய திட்டங்கள்தான்; Bio-diesel-க்கு உதவும் காட்டாமணக்குச் 3.50 இலட்சங்கள் எண்ணிக்கையிலான செடிகளை இலவசமாகத் தருவதற்கு, 10½ கோடி ரூபாய் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, எல்லோரும் பேசினார்களே, வேலி அமைக்கவேண்டுமென்று, அந்தச் சூரிய மின் வேலி அமைப்பதற்காக 137½ கிலோ மீட்டருக்கு, 220 இலட்ச ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, தேசிய புயல் இடர்ப்பாடுத் திட்டம். கடற்கரையிலே தொடர் தோட்டங்களும், அலையாத்திக் காடுகளும் அமைக்கவேண்டுமென்று சொன்னார்களே, அதற்காக 700 சதுர கிலோ மீட்டர் நிலப் பரப்புக்கு, சதுப்பு நிலக் காடுகளிலே, அந்த அலையாத்திக் காடுகளையும், 2000 ஹெக்டேரிலே தொடர் தோட்டங்களும் அமைப்பதற்கு, 10.74 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, ஜப்பான் நாட்டுக் குழுவினர், இந்த ஆண்டு 101.42 கோடி ரூபாய் செலவு செய்கின்ற நேரத்தில், இன்னும் அவர்களிடமிருந்து நிதி வராத காரணத்தால், ஏற்கெனவே உள்ள அந்தத் திட்டம் தொடருவதற்கு, நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக 29.98 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள், அந்தத் திட்டம் தொடருவதற்காக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—40

2006—2007—இல், பகுதி 2 திட்டத்தின்கீழ், வன மேம்பாட்டிற்காக, சாலை மேம்பாட்டிற்காக, அல்லது கட்டடங்கள் பராமரிப்பதற்காக, 8 கோடியே 86 இலட்சத்து, 20 ஆயிரம் ரூபாயைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஆகஸ்ட் 10] [திரு. என். செல்வராஜ்]

அதைப்போல, 12 ஆவது நிதிக் குழுவின் சார்பாக வன மேம்பாட்டிற்காக, 2010 வரை ரூபாய் 30 கோடியைத் தந்திருக்கிறார்கள். அதில், இந்த ஆண்டிலே செலவு செய்வதற்கு ரூபாய் 13.32 கோடியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே, சமூக வன ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று பேசினார்கள். நான் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். 3,680 தற்காலிக ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு யார் அந்த 817 ரூபாயைக் கொடுத்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தலைவர் கலைஞர் அவர்கள், 1997—இலே முதலமைச்சராக இருந்த நேரத்தில், அவர்களுக்கு 817 ரூபாயைக் கொடுத்தார்கள். அதற்கு முன்பு, அதைவிடக் குறைவாக வாங்கிக் கொண்டு இருந்தவர்களுக்கு, இவ்வளவு குறைவா என்று கருணையோடு பரிசீலித்து, அவர்களுக்கு 817 ரூபாயைக் கொடுத்தார்கள். ஆனால், அதன் பின்னாலே வந்தவர்கள், அதை யோசித்துப் பார்த்து, இவ்வளவு குறைவாக சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்றார்களே, இவர்களுக்கு நாம் நியாயம் வழங்க வேண்டுமென்று எண்ணிப் பார்த்தார்களா என்றால், இல்லை; அவர்கள் செய்யவில்லை. எனவேதான், இன்று அந்த ஊழியர்கள் எல்லாம், வன ஊழியர்கள் எல்லாம் தலைவர் கலைஞர் அவர்களைப் பார்த்து, தங்களுடைய கோரிக்கைகளை வைத்தார்கள். அந்த நேரத்திலே அவர்கள் அதனைக் கருணையோடு பரிசீலித்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நோத்திலே நான் என்னுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை... (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்தவுடன் நீங்கள் சொல்லுங்கள்; நான் கேட்கத் தயாராக இருக்கிறேன்; பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்; நான் பேசியவுடன் சொல்லுங்கள். நான் இந்த நேரத்திலே என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தைச் சொல்லி, தலைவர் கலைஞர் அவர்கள் எப்படியெல்லாம் இந்த அரசு ஊழியர்கள் நலன்மீது, அலுவலர்கள்மீது அக்கறை காட்டுகிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் 1969—இலே, 3—6—1969—இலே, (குறுக்கீடுகள்) தலைவருடைய பெருமைகளைச் சொல்ல விரும்புகிறேன். நான் 1969—இலே, நான் பொதுப் பணித் துறையிலே பணியாற்றியபோது, அதாவது அவர்களுடைய பிறந்த நாளன்று 3—6—1969—இலே நான் அந்தப் பணியிலே சேர்ந்தேன். அப்போது எனக்கு வழங்கப்பட்ட அடிப்படை ஊதியம் 226 ரூபாய், அகவிலைப் படி 146 ரூபாய். மொத்தமாக 371 ரூபாய் வழங்கினார்கள். ஆனால், அப்பொழுது தலைவர் கலைஞர்

அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, இரண்டாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று, வரலாறு காணாத அளவிற்குச் சம்பள உயர்வைத் தந்தார்கள். அந்த அரசு ஊழியர்கள் எல்லாம் அகம் மகிழ்ந்து போனார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும்.

அதேபோல, இரண்டாவது முறையாக தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுதான், மூன்றாவது ஊதியக் குழுவும் அந்த அரசால், தலைவர் கலைஞர் அவர்களாலே அறிவிக்கப்பட்டு, அரசு ஊழியர்கள் பயன்பெற்றார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போல, மூன்றாவது முறையாக தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேதான், 1989—இலே நான்காவது ஊதியக் குழு பரிந்துரையையேற்று அவர்கள் ஊதியம் வழங்கினார்கள் என்பதையும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No signal.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** அதைப்போல, 1996—இலே தலைவர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்த நேரத்தில், ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டதுமட்டுமல்லாமல், மத்திய அரசுக்கு இணையாக ஊதியம் வழங்கி அரசு ஊழியர்கள் வாழ்விலே ஒளியேற்றி வைத்தார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பெருமைபடச் சொல்ல விரும்புகிறேன்.

எனவேதான், கருணையுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், இன்று எவ்வளவு அவர்களுக்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்று தெரியுமா? 817 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த அந்த வன ஊழியர்களுக்கு 2,126 ரூபாய்; யாராவது எண்ணிப் பார்க்க முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) 130 விழுக்காடுகள் உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** அதைப்போல, இதுவரை, (குறுக்கீடுகள்) யானைகளோ மற்ற விலங்கினங்களோ வந்து தாக்கினால், அவர்களுக்கு ஈட்டுத் தொகையாக, இழப்பீட்டுத் தொகையாக 25 ஆயிரம் ரூபாய் தமிழக அரசாலே வழங்கப்பட்டு, மீதம் உள்ள தொகை, மத்திய அரசாலே 75 ஆயிரம் ரூபாய், அது வழங்கப்பட்ட பிறகுதான்



வழங்கப்பட்டது. ஆனால், இப்போது தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கு அவசியமில்லாமல், தமிழ்நாடு அரசாங்கமே உடனடியாக அந்த இழப்பீட்டுத் தொகையை ஒரு இலட்சம் ரூபாய் வழங்கும் என்கின்ற நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1—45

அதைப்போல, நான் என்னுடைய உரையிலே குறிப்பிட்டேன்; அந்த விவசாயிகளுடைய பயிர்களை நாசம் செய்கின்றபொழுது அவர்களுக்கு இதுவரை இழப்பீட்டுத் தொகை தருவது இல்லை. இதுவரை இழப்பீட்டுத் தொகை தராத காரணத்தாலே, இப்பொழுது விவசாயிகள் எல்லோரும் கேட்டார்கள்; 'நாங்கள் எல்லாம் துன்பத்திற்கு ஆளாக்கப்படுகிறோம்; எனவே, இதைக் கருணையோடு பரிசீலித்து, இழப்பீட்டுத் தொகை எங்களுக்குத் தர வேண்டும்' என்று தலைவர் கலைஞரிடம் கேட்ட நேரத்திலே, உடனடியாக மனமுவந்து, ஒப்புக்கொண்டு, அந்தப் பயிர்கள் நாசம் செய்யப்படுமேயானால், அந்தப் பயிர் இழப்பிற்கு உரிய தொகை—compensation—வழங்கப்படும் என்ற நல்ல அறிவிப்பைத் தலைவர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, அங்கே இருக்கின்ற களப் பணியாளர்களுக்கு உணவுப் பொருள்களைச் சிறிது மானிய விலையில் வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தச் சலுகை, ஈப்பு ஓட்டுநர்களுக்கு விடுபட்டுப்போய் இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் பெருந்தன்மையோடு அவர்களுக்கும் அந்த உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்குவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, இன்னொன்று முக்கியம். நீங்களெல்லாம் 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் பத்திரிகைகளிலே எல்லாம் பார்த்திருப்பீர்கள்; 100 யானைகளை, அவற்றையெல்லாம்—வேறு எந்த மாநிலத்திலும் செய்கிறார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால் தமிழ்நாட்டிலே சில யானைகளைக் கொண்டுவந்து,—நான் வனத் துறைப் பொறுப்பிலேயிருக்கிற காரணத்தாலே சொல்கிறேன்—அந்தக் கோவில் யானைகளையெல்லாம் கொண்டுவந்து, அங்கே 100 யானைகள், 109 யானைகள், 112 யானைகள் என்று அந்த 3 ஆண்டுகளாக 321 யானைகளுக்கு 30 நாளும், 45 நாளும் முகாம் நடத்தி—அவை துன்பப்படுத்தப்பட்டனவா அல்லது மகிழ்ந்தனவா என்பது தெரியாது.

அவற்றுக்கு வாய் இருந்தால் சொல்லியிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) வாய் இல்லாத காரணத்தாலே சொல்ல முடியவில்லை. (குறுக்கீடுகள்) ஆனால் அதற்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா? (குறுக்கீடுகள்) ஆனால் அதற்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா? 1,40,71,000 ரூபாயை அதற்காகச் செலவு செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைத்திலிங்கம், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** ஆனால், காலங் காலமாக மேற்குத் தொடர்ச்சி மலையையும், கிழக்குத் தொடர்ச்சி மலையையும் தங்கள் உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற யானைகள், 2 ஆயிரம், 3 ஆயிரத்திற்கு மேல் இருக்கின்றன. அவை எவ்வளவு அல்லல்படுகின்றன? அந்த யானைகள் எல்லாம், தங்களுடைய உறைவிடத்திற்குச் செல்லும்போதும், அல்லது குடிநீர்த் தேவைக்காக அந்த இடங்களுக்குச் செல்கின்ற நேரத்தில்—இது மிக முக்கியமானது; எங்கும் செய்யாத ஒன்று; இதை நான் சொல்ல வேண்டும்—அந்த யானைகளினுடைய பாதைகள் எல்லாம், அந்த ஒரு பாதையிலேதான். கிழக்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மேற்கு தொடர்ச்சி மலைக்கும், மோயாறு வழியாகச் சென்றாலும், அல்லது வேறு, உணவிற்குச் சென்றாலும், ஒரு பாதை வழியாகத்தான் செல்லும். அது—Elephant Corridor—யானைப் பாதைகள். அந்தப் பாதைகளையெல்லாம் இப்பொழுது தனியார்கள் ஆக்கிரமித்து, அந்த நிலங்களில் எல்லாம் பயிரிட்ட காரணத்தால், அவை அங்கே செல்ல வழியில்லாமல், சிதறிப் போய்தான், இந்த நிலைமைகள் உருவாகின்றன. எனவே, தலைவர் கலைஞர் அவர்கள், அதை எண்ணிப்பார்த்து, அந்த இடங்களில் எல்லாம், அரசினுடைய நிலமாக இருந்தால், பயிர் செய்யாமல் இருந்தால், யானைகள் எந்தவித துன்பமும் இல்லாமல் அவை சென்றுகொண்டிருக்கும் என்பதை உணர்ந்து, யாருக்கும் உதிக்காத அந்தத் திட்டத்தை, தலைவர் கலைஞர் அவர்கள், அந்த 2,000, 3,000 யானைகள் பயன்பெற வேண்டுமென்பதற்காக யானைத் தடத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே இருப்பவர்கள் அதிகமாக, எல்லோருமே சொன்னார்கள், மரம் வெட்டப்படுவதைத் தடுக்க வேண்டும் என்று. யார் வெட்டுகிறார்கள்? கடந்த ஆட்சியிலே, மரம் கடத்தப்பட்டதை பத்திரிகைகளிலே, செய்திகளிலே எல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.



(குறுக்கீடு) அவர்கள் எல்லாம்—நீதிமன்ற ஆணை இருக்கிறது. (குறுக்கீடு) நீதிமன்ற ஆணை இருக்கிறது. நீதிமன்றத்திலே ஆணை இருக்கிறது. அவர் நீக்கப்பட்டிருக்கிறார்; (குறுக்கீடுகள்) அதனாலேதான் இன்று மறு உத்தரவு வழங்கி, அவர் அங்கே சேர்க்கப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** உண்மைகளை ஒளித்துப் பேசுவதனாலே, ஓங்காரமாகப் பேசுவதனாலே உண்மைகள் மறைந்துவிடாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருப்பசாமி உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வைத்திலிங்கம், உட்காருங்கள். அமைச்சர் உரையை முடித்துவிட்டார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** உண்மைகள் என்றும் உறங்காது. எனவே, நீங்கள் ஓங்காரக் கூச்சலிட்டுப் பயனில்லை என்பதை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். எனவே, அந்த ராஜேந்திரன் இங்கே மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார் என்பதைச் சொல்லி, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பதைப்போல, நாமெல்லாம். இங்கே பேசியவர்கள், பசுமை நிறமெல்லாம் மாறி, இப்பொழுது அங்கே சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நம்முடைய திரு. டில்லி பாபு அவர்கள் கணக்கோடு சொன்னார்கள்; அந்த 3 degree ஏறிக்கொண்டிருந்தால், நாளை என்ன ஆகும்? ½ degree ஏறியதற்கே ஆழிப் பேரலையை நாம் பார்த்தோம்; மற்ற கேடுகளையெல்லாம் நாம் பார்த்தோம்; 3 degree ஏறினால் என்னவாகும் என்று சொன்னார்கள். அதை ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பு. ஏனென்றால், இந்தப் பச்சை மண் சிவந்த மண்ணாக மாறிவிடக் கூடாது என்பதிலே அனைவரும் அக்கறையோடு இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் வெளியிடுகின்ற அந்த மூச்சுக் காற்றும், (குறுக்கீடுகள்) அதைப்போல, தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற அந்த அனல் காற்றும் இந்த நாட்டைச் சூடாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, வனம் வளர்ப்போம், மரம் நடுவோம்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். அமைச்சர் உரையை முடித்துவிட்டார்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** வனத்தைக் காப்போம்...(குறுக்கீடுகள்) உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூச்சு விடுவதைப்பற்றித்தானே பேசுகிறார்? இதில் என்ன இருக்கிறது? விடுங்கள்.

பிற்பகல் 1—50

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மரம் நடுவோம்; இந்த பூமியைக் குளிர வைப்போம் என்று சொல்லி, வெட்டுத் தீர்மானங்களை... (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குத் தேவையான விளக்கங்களையெல்லாம் கொடுத்திருக்கிறேன். இன்னும் விளக்கம் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டாம் என்று சொன்ன காரணத்தால் நான் விளக்கத்தை நிறுத்திக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் நீங்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அவருடைய துறையைப் பற்றி விளக்கம் தந்து கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) அவர்களுக்குப் பசி எடுத்துவிட்டால் அவர்கள் போகலாம். அதற்காக அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறபோது, அங்கு உட்கார்ந்துகொண்டு நையாண்டி செய்வது அழகல்ல. இந்த அவையில் இப்படித் தொடர்ந்து நடப்பது (குறுக்கீடுகள்) ஏதோ தங்களுக்குத்தான் தெரியும் சத்தம் போடுவது என்பதைப்போல, ஒரு தோற்றத்தை உருவாக்க வேண்டாம். (குறுக்கீடு) நான் 30, 40 ஆண்டுக் காலம் இந்த அவையிலே இருந்திருப்பவன்; பார்த்துக் கொண்டிருக்கின்றேன். முன்னாள் அமைச்சராக இருந்தவர் விசுவநாதன், அதேபோல ஜெயராமன், (குறுக்கீடு) பொள்ளாச்சி ஜெயராமன், இவர்கள் எல்லாம் இப்படி எழுந்து பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், திரு. விசுவநாதன், திரு. வைத்திலிங்கம், நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இதோ பாருங்கள், ஒரத்தநாடு சட்டப் பேரவை உறுப்பினர் வைத்திலிங்கத்திற்கும் சொல்கிறேன், இந்தமாதிரி ஒரு அராஜகமான முறையிலே உங்களுக்குத்தான் தெரியும் என்று பேசிக்கொண்டிருந்தீர்கள் என்றால், அது நல்லதல்ல.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். நீங்கள், கடைசியிலே இரண்டு bench-களில் இருக்கிறீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** நான் பதிலுரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** என்ன பேசுகிறீர்கள்? ஒரு அவையை நடத்துகிறமாதிரியா பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) ஒரு senior member, ஒரு அமைச்சராக இருந்தவர். நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். திரு. அரி, உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையை முடிக்கப் போகிறார்கள். அதற்குப் பிறகு ஓர் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். தயவுசெய்து அவையில் அமைதி காத்து, அமைச்சர்கள் பதிலுரை அளிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** எனவே, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், நம்முடைய தளபதி அவர்களுக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ச் சமுதாயத்தின் காவல் அரணாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு சாதாரண தொண்டனாக இருந்த என்னை, பாளையங்கோட்டை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, தற்போது மீண்டும் இரண்டாம் முறையாக இந்த அவையிலே இடம்பெறச் செய்து அமைச்சராக்கி அழகுபார்க்கும்,

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர், நாங்கள் வாழும் காலத்தில் எங்களின் வாழ்க்கைப் பேறாகக் கிடைக்கப்பெற்ற வாழும் அய்யன் திருவள்ளுவர், ஆருயிர்த் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என் பணிவான நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு எங்களுடைய அவை முன்னவர், எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், தமிழ்கூறும் நல்லுலகிற்கு, வாழும் வள்ளுவர் வகுத்தளித்த குறளோவியமாய் எங்களை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், எங்கள் பாசமிகு தளபதி அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மின்துறை அமைச்சரும், கழகத்தின் பொருளாளருமான மாண்புமிகு ஆற்காட்டார் உள்ளிட்ட கழகத்தின் முன்னோடிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தேர்தல் வெற்றிக்காகப் பாடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என்னுடைய நன்றியினை உரித்தாக்குகிறேன்.

அன்னை தமிழ் காக்க தலைவர் கலைஞர் அவர்கள் தனிமைச் சிறையில் இருந்ததை, நான் சென்றுவரும் தவச்சாலை என்று, பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பெற்ற பெருமை கொண்ட பாளையங்கோட்டைக்குத் தலைவர் அவர்களால் கிடைக்கப்பெற்ற பெரும் புகழைக் காத்திடும்வகையில், என்னை இரண்டாவது முறையாகவும் இந்தச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த என் தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

இங்கே கிட்டத்தட்ட 10 உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் பல உறுப்பினர்கள் மாசுக் கட்டுப்பாடு பற்றியும், விளையாட்டுத் துறையைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் பேசியதற்கு, எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாக விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார். அவர் இங்கே திருப்பூர் சாயப் பட்டறைபற்றிச் சொல்லியிருக்கிறார். அதை ஏற்கெனவே நீதிமன்றம் கையில் எடுத்து, அது வழக்கில் இருக்கிறது அங்கே கண்டிப்பாக R.O. Plant உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்ற திட்டம்



வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நீதிமன்றமும் உத்தரவிட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

பிற்பகல் *1—55*

மேலும் அவர் பேசும்போது, இளைஞர் நல மேம்பாடு வகுக்கப்பட வேண்டுமென்று சொன்னார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலேயே, வருடந்தோறும் ஒன்றிய, மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் குறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது; கிட்டத்தட்ட 80 இலட்சம் ரூபாய் இந்த இளைஞர் நலனுக்குத்தான் உபயோகப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, வட்ட அளவில் விளையாட்டு மைதானம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஏற்கெனவே, மாவட்ட அளவு நீங்கலாக, வட்ட அளவில் 15 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நிதிநிலைக்கேற்ப அது ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ஸ்ரீவில்லிபுத்தூர் திரு. இராமசாமி அவர்கள், அந்தப் பகுதியிலுள்ள தொழிற்சாலையைப்பற்றி, இங்கே பேசும்போது சொன்னார். என்னிடம் இருக்கின்ற குறிப்பின்படி, அந்தக் குறைபாடுகள் மாற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இங்கே நம்முடைய கம்பம் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள், தன்னுடைய உரையைத் தொடங்கும்போது மிக அருமையாகச் சொன்னார். இதுபோன்ற சுகாதாரக் கேட்டைத் தடுக்க, அரசோ, அதிகாரிகளோ செயல்படுத்துவார்கள் என்பதைவிட, நாமெல்லாம் சேர்ந்து செயல்பட்டால்தான் செயல்படுத்த முடியும் என்ற ஒரு நல்ல கருத்தைச் சொன்னார். அந்த அடிப்படையில் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும், பேசிய சட்டமன்ற உறுப்பினர்களையும், பேசாத சட்டமன்ற உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்வது, இதுபோன்ற மாசுக் கட்டுப்பாடு பிரச்சினைகளில் பல்வேறு கருத்துகள் உள்ளன. நாம் ஒன்றைச் சொன்னால், அவர்கள் ஒன்றைச் சொல்கிறார்கள். நீதிமன்றத்திற்குச் செல்கின்றார்கள் என்கின்ற கருத்துகள் நிறைய இருக்கின்றன. எல்லோருமே கலந்து பேசி, அந்தப் பிரச்சினையே இல்லாமல், ஒருவருக்கு ஒருவர், நாமெல்லாம், அமைச்சர் என்ற பொறுப்பிலே நானும் வருகிறேன்; சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்களும் வாருங்கள். நம்முடைய திரு. கோவிந்தசாமி அவர்கள்கூட ஏற்கெனவே திருப்பூருக்கு அழைத்திருக்கிறார்; வருவதாகச்

சொல்லியிருக்கிறேன். ஒரு பிரச்சினையை நாமெல்லாம் இங்கே பார்க்கவேண்டும். பல்வேறு தொழிற்சாலைகளில் மாசுக் கட்டுப்பாடு பிரச்சினை என்று வந்துவிட்டாலே, அங்கே அந்தத் தொழிற்சாலையும் பாதுகாக்கப்படவேண்டும். தொழிற்சாலையிலிருந்து வரும் மாசு சீர்கெடும்போதுதான், மக்கள் அதிலே பாதிக்கப்படுகிறார்கள். பல இலட்சக்கணக்கான கூலித் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆலை மூடப்பட்டால், பல இலட்சம் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். பல இலட்சம் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். எல்லோர் நலனையும் பார்க்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால், மாசு இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதேநேரத்தில், வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்குத் தொழிற்சாலைகளும் தேவையிருக்கின்றன என்பதையெல்லாம் மனதிலே கொண்டு, நம்முடைய தலைவர் கலைஞர் அரசு, கண்டிப்பாக அதில் நடவடிக்கை எடுக்க ஆய்வு செய்யும் என்று சொல்லி, நேரத்தினுடைய அருமை கருதி, இங்கே எல்லா உறுப்பினர்களும் பேசியிருக்கின்றார்கள். நம்முடைய கம்பம் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள், இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். யோகா பாடத்தைப் பள்ளிக்கூடத்திலே கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று சொன்னது மட்டுமல்ல; அவர் கட்டாயமாக 'முரசொலி'-யில் படித்ததையும் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய திரு. இராமகிருஷ்ணன் அவர்களுடைய கருத்துகள் எப்பொழுதுமே ஒரு முன்னோட்டமாகத்தான் இருக்கும். ஏற்கெனவே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், யோகா பற்றி 'முரசொலி'-யிலே எழுதியிருக்கிறார். அவர் நல்ல ஆர்வம் உள்ளவர். ஆகவே அவருடைய கருத்தைப்பற்றி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். தலைவரிடமும் கலந்து பேசி, அடுத்த ஆண்டு, அவர்கள் நினைக்கிற அளவுக்கு எல்லா நடவடிக்கைகளும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் இங்கே பேசியவர்களெல்லாம், நம்முடைய ஆற்காடு இளவழகன், ஸ்ரீவில்லிபுத்தூர் இராமசாமி, பொங்கலூர் எஸ். மணி, பரமக்குடி இராம்பிரபு, சத்தியமங்கலம் தருமலிங்கம், ஒரத்தநாடு வைத்திலிங்கம் ஆகியோரும் இங்கே பேசியிருக்கிறார்கள். நான் மீண்டும் அரசியலுக்குள்ளே சென்றால் நேரமாகிவிடும். சில உறுப்பினர்கள் நல்ல கருத்தைச் சொல்வதைவிட, அவர்கள் நினைத்த கருத்தையே பேசிக் கொண்டிருந்தார்களே தவிர, மக்களுக்கான கருத்தைச் சில உறுப்பினர்கள் பேசவே இல்லை என்பதை ஒரே வரியிலே சொல்லி



முடித்துக்கொண்டு, இங்கே மொடக்குறிச்சி பழனிச்சாமி ஒரு கருத்தைச் சொன்னார். அவர் மிக அருமையாகப் பேசினார். காளிங்கராயன் கால்வாய் மாசுபடுவதாகவும், இதைக் கவனிக்காவிட்டால், நொய்யல் ஆறுபோல ஆகிவிடும் என்றும் சொன்னார். அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். வாருங்கள்; நானும் வருகிறேன், நீங்களும் வாருங்கள்; அதிகாரியைக் கூப்பிட்டுப் பேசுவோம்; என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வோம்; உள்ள நிலைமையை நாமெல்லாம் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னேன். ஆனால் அதேநேரத்தில், எந்தக் காரணத்தைக் கொண்டும் மக்கள் பாதிக்கப்படுவதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது. அதைக் கண்டிப்பாக கவனத்திலே கொள்ளும் என்று சொல்லி, காளிங்கராயன் கால்வாயில், தோல் மற்றும் சாயக் கழிவுநீரால் ஏற்பட்ட மாசு காரணமாக, இதனை உபயோகிப்போருக்கு மலட்டுத் தன்மை ஏற்படுமா என்கின்ற ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார். அது குறித்து கண்டிப்பாக, சுகாதாரத் துறையின் மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 2—00

இன்னும், அத்தனை கருத்துகளையும் சொல்லிக் கொண்டிருந்தால் மணி இரண்டாகிவிட்டது; நான் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழகத்திலுள்ள இளைஞர்களிடையே விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழக இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை வளர்த்திடவும், இந்திய அளவிலும், உலக அளவிலும் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக வீரர்கள் பங்குபெற்று வெற்றிகள் குவித்துவர உதவும்வகையிலும் இயன்றவரை ஊக்கம் அளித்து வருகின்றார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டுகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றார்கள். தமிழக இளைஞர்களிடம் சிறந்த பண்புகளை ஊட்டி வளர்த்திடவும் பல்வேறு விளையாட்டுத் திறன்களில் அவர்கள் ஆற்றல் பெற்றிடவும், ஊக்கம் அளிக்கும்வகையில், தனி முக்கியத்துவம் வாய்ந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையினை, 2000 ஆம் ஆண்டிலே தலைவர் கலைஞர்தான் முதன்முதலாக உருவாக்கினார் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே இங்கு ஓர் உறுப்பினர் பேசும்போது, வேறு யார்

ஆட்சியிலோ உருவாக்கியதாகச் சொன்னார். அதற்காகச் சொல்லிக்கொள்கின்றேன்; மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான், இந்த இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறைக்காகத் தனி அமைச்சகத்தையும் உருவாக்கியவர் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி விளையாட்டுத் துறைக்குத் தனி முக்கியத்துவம் கொடுத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களுடன் புதிய பல திட்டங்களையும் இந்த ஆண்டிலேயே அனுமதித்திருக்கிறார்கள். அந்தப் புதிய திட்டங்களைப்பற்றி நான் இங்கு உறுப்பினர்களுக்குத் தற்போது தெரிவிக்க விரும்புகின்றேன்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் ஊரக விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 80 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுவோர்க்கும், தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறுவோர்க்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30 இலட்ச ரூபாய் செலவில் விளையாட்டு உபகரணங்களும், விளையாட்டுப் பொருள்களும் வழங்க உத்தரவிட்டுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

காஞ்சிபுரத்திலும், சென்னையில் அரசினர் தோட்டத்திலும், தெற்காசிய விளையாட்டுக் குடியிருப்பு வளாகத்திலும் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கங்கள் அமைத்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 55 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி, சென்னை நேரு விளையாட்டு அரங்கில் 2 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் செயற்கை இழை ஓடுகளம் புதுப்பிக்கப்படும். மதுரையிலும், கோவையிலும் அமைக்கப்பட்டு வரும் செயற்கை இழை ஓடுகளத்தில் பயன்படுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய ஆலோசனைகளின்படி, உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் 30 இலட்ச ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமையகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள கணினி வசதிகள் 2 இலட்ச ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும்.

திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் 14 இலட்ச ரூபாய் செலவில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் அமைக்கப்படும்.

தமிழகத்தில் உள்ள நீச்சல் குளங்கள் அனைத்திலும் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

60 இலட்சம் ரூபாய் செலவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீச்சல் குளம் ஒன்று புதிதாக அமைக்கப்படும்.

மதுரை மற்றும் திருச்சியில் உள்ள விளையாட்டு விடுதிகள் 66 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, இளைஞர்களிடம் பன்முகத் திறன்களை வளர்க்கும்வகையில், இளைஞர் நலக் கொள்கை ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி விரைவில் வெளியிடப்படும்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், நாட்டு நலப் பணித் திட்ட மாநில இளைஞர் வள மையமும், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட இளைஞர் வள மையங்களும் இந்த ஆண்டில் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்களின் நாட்டு நலப் பணித் திட்ட சாதனைகளை வீடியோ எடுத்து, குறுந்தட்டுகளாக (C.D.) அரசு வெளியிடும்.

ஆண்டுதோறும் 25 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த நாட்டு நலப் பணித் திட்ட விருதுகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி இனி 35 மாணவர்களுக்கு வழங்கப்படும்.

தேசிய மாணவர் படைத் துறையில், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பல்வேறு நிலைகளில் பயிற்சி அலுவலர்களாகப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர மதிப்பூதியம், ஏற்கெனவே இருந்த ஒரு மடங்கை, இரண்டு மடங்காக உயர்த்தி, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மலையேறும் பயிற்சிகளில் ஈடுபடும் தேசிய மாணவர் படையைச் சார்ந்த மாணவர்களுக்கு, டார்ஜிலிங், உத்தரகாசி, மணாலி ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி மையங்களால் உயர்த்தப்பட்டுள்ள பல்வேறு பயிற்சிக் கட்டணங்களைக் கழக அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. இதனால், மலையேறும் பயிற்சிபெறும் மாணவர்கள் சிறந்த முறையில் தங்கள் பயிற்சியை மேற்கொள்ள முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2-05*

தேசிய மாணவர் படை மாணவர்கள் பங்குபெறும் N.C.C. பயிற்சி முகாம்களுக்கு வழங்கப்படும் சில்லறைப் படி, ஐந்து ரூபாயில் இருந்து எட்டு ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை எண் 49-இன்கீழ் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் 168 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாகப் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த உறுப்பினர்களுடைய ஆலோசனைகளுக்கும், கருத்துகளுக்கும், ஏற்புடையவகையில் விளக்கங்கள் அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன். 168 வெட்டுத் தீர்மானங்களை நான் படித்துப் பார்த்தேன். உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலனை செய்து, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு உரிய வகையில் நடவடிக்கை எடுக்க ஆலோசிக்கும் என்று சொல்லி, இந்த வெட்டுத் தீர்மானங்களை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரும்பப் பெற்று, இம் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு தீயணைப்புத் துறை, காவல் துறை, வனத் துறை போன்ற பல்வேறு துறைகளில் வீர தீரச் செயல் புரிந்தவர்களுக்கு, பதக்கம், ரொக்கம் வழங்குவது வழக்கம். ஆனால், கடந்தகால அ.தி.மு.க.-வினுடைய அரசு, வீரப்பனைக் கொலை செய்தார்கள் என்பதற்காகப் பல்வேறு காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு,





விதிகளுக்குப் புறம்பாக, பதவி உயர்வுகளையும், தமிழக அரசினுடைய, மக்களுடைய வரிப் பணங்கள் பல கோடி ரூபாய்களையும், தமிழக அரசுக்குச் சொந்தமான பல்வேறு வீட்டு மனைகளையும் வாரி வழங்கியுள்ளது. உதாரணமாக, காட்டுக்கே செல்லாதவர்களுக்குக்கூட, அவர்கள் வேண்டப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலே வழங்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் விசாரித்து, அப்படி உண்மையிலேயே, அந்த வீர தீரச் செயல்கள் புரிந்தவர்களுக்கு அந்த அரசு வழங்கியிருந்தால், அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. இதிலே மிகப் பெரிய முறைகேடு நடந்திருப்பதாக நாங்கள் அறிகிறோம். அதனால், இதற்கு அரசு ஒரு சரியான நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசு எடுத்து அறிவித்த அந்த அறிவிப்புகளைப்பற்றி மீண்டும் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பது என்பது அவ்வளவு நல்ல முன்னுதாரணமாக இருக்காது. ஆனால், ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். கடந்தகால ஆட்சியிலே, வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கையிலே ஈடுபட்ட எல்லோருக்கும் பரிசு அளித்ததாக, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ, அந்தக் காவல் துறையிலே சிறப்பு அதிரடிப் படைத் தலைவராக 4½ ஆண்டுக் காலம் பணியாற்றிய திரு. பெ. காளிமுத்து, I.P.S. அவர்களுக்கு வீட்டு மனையும் ஒதுக்கப்படவில்லை; பணமும் கொடுக்கப்படவில்லை என்று நேற்று முதலமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். அந்த விண்ணப்பத்தை இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராயபுரம் தொகுதியில் வட்டங்கள் 17, 18, 22 இந்த மூன்று வட்டங்களும் Pink Division; அதாவது Pink City–யாக இன்றைக்கு மாறிக்கொண்டிருக்கின்றன. காரணம், அதாவது சென்னை துறைமுகத்தில் Iron ore, இரும்புப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட காரணத்தினால், அன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அது மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின்மூலமாக, அதை எண்ணூருக்கு 2008 ஆம் ஆண்டு

மாற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலையிருக்கின்றது. ஆனால், இடையிலே இன்றைக்கு அந்த மாசுக் கட்டுப்பாடு வாரியம், அதைக் கண்காணித்து, அந்த இரும்புத் தூள் பரப்பப்படுகின்றதா என்பதைக் கவனிக்கின்றதா என்று தெரியவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

இரண்டாவதாக, என்னுடைய இராயபுரம் தொகுதியில் இந்தியாவிலேயே, தென்னிந்தியாவிலே ஆரம்பிக்கப்பட்ட முதல் இரயில் நிலையம் உள்ளது. 26 tracks உள்ளன. 26 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளது. அங்கே உள்ள பொதுமக்களுடைய கோரிக்கை, வடசென்னை பகுதி மக்கள் பயன்படுகின்றவகையில், அங்கே ஒரு இரயில் நிலையம், பயணிகள் இரயில் நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று. ஆனால், இந்தக் காலத்திலே, கனிமப் பொருட்களை அங்கே ஏற்றுமதி செய்கின்ற காரணத்தினால், மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தக் கனிமப் பொருட்களைத் தடை செய்வதற்குப் பொதுமக்கள் நலன் கருதி முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு உண்மையிலேயே பரிசீலிக்கும்.

## (அ) கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை. திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.



**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

பிற்பகல் 2-10

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை. திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.



**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி இளமதி சுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. இராம்பிரபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை. திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. சேகர், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,86,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 15 - சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராம. சுப்புராம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ராமச்சந்திரன்.

**திரு. டி. ராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.கே. போஸ்.

**திரு. ஏ.கே. போஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. போஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர்டி. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. சேகர், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்**. இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.



**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்**: இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை. திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. து. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 157,87,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 142,74,48,000/– ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## 5. அறிவிப்பு

### சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் உணவு விடுதிக்கு அனுமதி வழங்கிய கோப்பு பார்வையிடுதல்–முன்னாள் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து பத்திரிகைக்கு அளித்துள்ள செய்தியும், அது தொடர்பான உண்மை நிலையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் உள்ள சைவம் மற்றும் அசைவம் உணவு விடுதிகளை நடத்துவதற்கு முன்னாள் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள், முறைகேடாக அனுமதித்தது குறித்த கோப்புகளை, இன்று 10–08–2006 அன்று, எனது அறையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைத் தவிர, சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாரும் பார்வையிட்டனர். முன்னாள் பேரவைத்



தலைவர் செய்த முறைகேடுகள் உண்மை என்று கோப்புகளைப் பார்த்து அவர்கள் தெரிந்துகொண்டனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 9–8–2006 அன்று அவையிலே தெரிவித்ததற்கிணங்க, இக்கோப்புகள்மீது, இத்துறையினால் மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இக்கோப்புகளின் நகல்கள், பத்திரிகைகளுக்கு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 11–08–2006 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, நாளை 11–08–2006 வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, 11–08–2006 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11–8–2006) வெள்ளிக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

44. மானியக் கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

45. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2006. (தமிழ், ஆங்கிலம்)

46. மானியக் கோரிக்கை எண் 15 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

47. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை – வனத் துறை பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

48. வனத்துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2006. (தமிழ், ஆங்கிலம்)

49. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை – சுற்றுச்சூழல் துறை பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

50. சுற்றுச்சூழல் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2006. (தமிழ், ஆங்கிலம்)

51. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் "மக்கள் சாசனம்" 2006. (தமிழ், ஆங்கிலம்)

★★★★★



## இணைப்பு I

*(339 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

## அத்தியாயம்–1

**முன்னுரை**

**1.1** மனிதவள ஆதாரங்களின் மேம்பாட்டின் முக்கிய அங்கமாகத் திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்து, அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான தாக்கத்தை உண்டாக்கும். அனைத்துத் தரப்பு இளைஞர்களிடையே நல்ல குடிமகனாக விளங்குவதற்கான தகுதிகள், சமுதாயப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் குறிக்கோளாகும். தனிநபர் பண்புகளை வளர்த்தல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் குறிக்கோளுக்காகப் பொறுப்பேற்கும் எண்ணத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக இளைஞர்களிடையே தொண்டு செய்யும் மனப்பான்மையை நிலைநிறுத்துவதை மற்றும் வலுவூட்டுவதை இத்துறை வலியுறுத்துகிறது. விளையாட்டு மற்றும் போட்டிகள், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப் பணித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் இளைஞர்களிடையே அடிப்படை பண்புகளை வளர்த்து, அவர்களைப் பொறுப்புமிக்க குடிமகன்களாக மலரச் செய்கின்றன. விளையாட்டுகள்

மற்றும் சமூக சேவைகளில் உயர்ந்து விளங்குதல், சாதனை படைக்கும் உணர்வினையும், தேசப் பெருமையையும், தேச பக்தியினையும் அதிகப்படுத்துகிறது. மேலும், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் அமைப்புகள், இளைஞர்களிடையே சமூக நல்லிணக்கம் மற்றும் ஒழுக்கத்தினை வளர்க்கின்றன. நமது மாநிலம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் பெற்றிருக்கும் பெரும் உறுதியான உள்ளாற்றல் மற்றும் போட்டி மனப்பான்மைகளைக் கண்டறிந்து, தீவிரமாக வளர்க்கப்பட வேண்டும். கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளிலுள்ள இளைஞர்களின் திறமைகளைக் கண்டறிய முயற்சித்து, அதன்மூலம் அவர்களின் திறமையை மேம்படுத்த சந்தர்ப்பம் அளிப்பதற்கும், போட்டியில் சிறந்து விளங்கும் நாட்டத்தினை மேம்படுத்துவதற்கும் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

## 2006–2007 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு

2006-2007 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை எண் 49-ன்கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.39.87 கோடி ஆகும். இதில் ரூ.9.19 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும்.



# அத்தியாயம் – 2

## 2.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு அரசாணை நிலை எண் 641, கல்வித் (ஒய்-1) துறை, நாள் 18-7-1992-ல் அதற்கு முன்பு இயங்கிவந்த இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டுக் குழும அமைப்பிற்கு ஒப்பானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார். தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.

## 2.2 குறிக்கோள்களும், இலக்குகளும்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:-

1. மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.

2. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து, அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.

3. தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன், அவர்கள் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிந்திடும்வகையில் விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.

4. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்.

[2006 ஆகஸ்ட் 10

5. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.

6. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

7. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும், உத்வேகத்தையும் மலரச் செய்தல்.

**2.3** தமிழ்நாடு கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் மற்றும் குழுப் போட்டிகளிலும், முன்னிலை வகித்து வருகிறது. இது, தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.


**2.4 விளையாட்டில் தமிழ்நாடு மாநிலம் உன்னத நிலையை அடைவதற்கான உத்திகள்**

உலகத்தில் உள்ள வளரும் மற்றும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் விளையாட்டுத் துறையில் தொலைநோக்கு உத்தியினை மிகச் சரியாகக் கடைப்பிடிப்பதன்மூலம் வெற்றியினை வெளிக்கொணர்கிறார்கள். பிரமிடு முறையிலான அடித்தளத்தைக் கொண்டு, கீழ்நிலையிலிருந்து உயர்ந்த நிலையை அடையும்வண்ணம், உத்தியைப் பலரும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் பல நாடுகள் சிறியதாக இருப்பினும் வெற்றிகளைப் பெற்று அவர்களின் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை தேடித் தருவதற்கு தொலைநோக்கு உத்தியினைக் கடைப்பிடிப்பது உகந்ததாகும். இவ்வாறான தொலைநோக்கு உத்தியினைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதன்மூலம் ஏனைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழலாம். தமிழ்நாட்டில் 5 பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான தர வரிசையினை, விளையாட்டுத் துறையில் செயல்படுத்திட இக்கொள்கைக் குறிப்பில் விளக்கப்படுகிறது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை–1 கீழ்மட்ட திறன் கொண்ட



2006 ஆகஸ்ட் 10]

அளவிலும், நிலை–5 அதிகபட்ச திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது. இதனை விளக்கும்பொருட்டு பிரமிடு முறையிலான வரைபடம் கீழே வரையப்பட்டுள்ளது:




விளையாட்டுகளில் வெற்றியினை அடைய கீழ்வரும் காரணக்கூறுகள் முக்கியமானவையாக உள்ளன:–

(அ) விளையாட்டுப் போட்டிகளின் தர வரிசை

(ஆ) விளையாட்டில் திறன் கண்டறிதல் மற்றும் வளர்ச்சிகளின் தர வரிசை

(இ) ஒவ்வொரு நிலையிலும் தேவையான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள்

(ஈ) பயிற்சி முறைகள் மற்றும் தேவைகளின் தர வரிசை

(உ) ஒவ்வொரு நிலையிலும் நேர்த்தி பெற்ற வல்லுநர்கள்

(ஊ) விளையாட்டுப் போட்டிகள் மற்றும் திறமையாளர்களைப் பல்வேறு நிலைகளில் ஊக்குவிப்பதற்கான விளையாட்டு ஆர்வலர்கள்

மேற்கண்ட வரைபடத்தின்மூலம், ஒவ்வொரு நிலையிலும் மேற்காணும் காரணக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பில் உள்ளன.

இவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் உத்திகளின் வாயிலாக உன்னத நிலையை அடைவதற்கு ஒவ்வொரு நிலையினைப் பற்றியும் அறிந்துகொள்ள கீழ்க்காணும் வகையில் விரிவாக விளக்கப்படுகிறது:–

**நிலை–1**

### 2.5. அதிக அளவிலான பங்கேற்பு:

உடற் தகுதியினைப் பரவலாக்குவதன்மூலம் இந்த நிலையினை வெளிக்கொணர இயலும். சிறப்பான நிலையினை அடையக்கூடிய திறமைகளைக் கண்டறிதல் மற்றும் உடற்தகுதித் திறன்களை மேம்படுத்தக் கூடியவை இதனுள் அடங்கும். குறைந்தபட்ச திறன் வளர்ச்சியுடன் விளையாட்டினை மிகச் சரியான முறையில் அறிந்துகொள்வதன்மூலம் ஒரு விளையாட்டு/விளையாட்டுப் பிரிவில் சரியான இடத்தினை அடைய இயலும். விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் தேவைக்கேற்ப இருப்பின், அடிப்படைத் திறன் கொண்டவர்களை மேம்படுத்துதல் இந்நிலையில் அடங்கும். போட்டிகளில் அதிக அளவிலான பங்கேற்பு, சமுதாயப் பங்கேற்பு மற்றும் உள்ளூர் அளவில் விளையாட்டில் ஆர்வத்தினை வளர்த்தல் இந்நிலையில் அடங்கும். அடிப்படையில் தேவையான பயிற்சிகளை உடற்கல்வி ஆசிரியர் அல்லது நிலை-1 பயிற்றுநர்களைக்கொண்டு வழங்க இயலும். இந்த நிலையில் விளையாட்டு ஆர்வலர்களைக் கண்டறிந்து, அவர்களை விளையாட்டுத் திட்டங்களில் ஈடுபடச் செய்வதன்மூலம் ஊக்குவிக்க இயலும். மருத்துவர்கள் மற்றும் முடநீக்குயியல் நிபுணர்களிடையே விளையாட்டு மருத்துவத்தினை பிரபலப்படுத்துவதன்மூலம் அடிப்படை விளையாட்டுக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்க ஏதுவாக அமையும். நிலை-1, பிரமிடு முறையில் அடித்தளமாக அமைகிறது.

**நிலை–2**

### 2.6 மாவட்ட அளவிலான திட்டங்கள்:

மாவட்டங்களில் உள்ள தலைசிறந்த விளையாட்டுத் திறன்களை ஒருங்கிணைப்பதே இதன் குறிக்கோளாகும். தேசிய விளையாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களைக் கொண்டு மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும், மாவட்டங்களின் இதர பகுதிகளிலும் கண்டறியப்படும் விளையாட்டுத் திறன்மிக்கவர்களுக்குப் பயிற்சி அளிக்க இது வழிவகுக்கும். நிலை–1–ல் அளிக்கப்பட்ட நுணுக்கங்களைவிட





இந்நிலையில் அதிநவீன நுணுக்கங்களைப் பயிற்றுவிப்பது குறிக்கோளாகும். 2–ம் நிலையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த உதவும் விளையாட்டுக் கட்டமைப்புகள் உள்ளடங்கும். மாவட்ட அளவில் விளையாட்டை ஊக்குவிக்க விரும்பும் விளையாட்டு ஆர்வலர்கள் இந்நிலையில் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்படுவர். அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களும் மாவட்டத்தில் பிரபலமான விளையாட்டுகளைக் கண்டறிந்து, அதனை முன்னேற்ற தகுந்த விளையாட்டு வரைபடம் தயாரிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுவர். மேலும், மாவட்டத்தில் பிரபலமான விளையாட்டுகளுக்கான ஒரு வரையறுக்கப்பட்ட திட்டத்தினை மேம்படுத்தும் பணியிலும் ஈடுபடுத்தப்படுவர்.

**நிலை–3**

### 2.7 மாநில அளவில் விளையாட்டில் சிறந்து விளங்குதல்:

இப்பிரமிடின் அடுத்த நிலையானது, மாநில அளவில் விளையாட்டில் சிறந்து விளங்குதல் ஆகும். மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குத் தகுதிவாய்ந்த விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளைக் கண்டறிந்து, அவற்றினை ஒருங்கிணைத்து, அதற்குத் தகுந்த விளம்பரம் அளிக்கப்படும். மாநில அளவில் சேம்பியன்களாகத் திகழ்வதற்குத் தகுதி படைத்த மாணவ, மாணவிகளின் திறனை மேம்படுத்த தனிக்கவனம் செலுத்தப்படும். சிறப்பு வாய்ந்த அகாடமிகள், விளையாட்டுப் பள்ளிகள், விளையாட்டு விடுதிகள் மற்றும் பிற விளையாட்டுத் திறன் வளர்க்கும் திட்டங்கள் மாநிலம் முழுவதும் ஊக்குவிக்கப்படும். இங்குப் பயிற்சி அளிப்பதில் முன்னுரிமை வழங்கப்பட்டு, திறமைவாய்ந்த பயிற்றுநர்கள், எங்குச் செயல்பட்டு வந்தாலும் அவர்களது சேவையைப் பயன்படுத்தி, மாநில அளவில் தனிச் சிறப்பு வாய்ந்த வீரர்களை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்படும். விளையாட்டு மருத்துவ வல்லுநர்கள், ஊட்ட உணவு வல்லுநர்கள், மனோதத்துவ நிபுணர்கள், உடல் தகுதி திறன் நிபுணர்கள், முடநீக்குயியல் நிபுணர்கள் கண்டறியப்படுவர். மாநில அளவிலான விளையாட்டுக்களுக்கு உதவிபுரியும் விளையாட்டு ஆர்வலர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுவார்கள். மேலும், மாநில அளவில் திறமையுள்ள வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவித்து, அவர்களைப் பணியில் அமர்த்துபவர்களைக் கண்டறியப்படுவதன்மூலம், சேம்பியன் விளையாட்டு வீரர்களுக்குப் பணி வாய்ப்பு கிடைக்கச் செய்ய இயலும்.

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 22. | நீலகிரி | 2 செயற்கை டென்னிஸ் ஆடு களங்கள் | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் (புல்தரையுடன்) 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்து பந்து மைதானம் 1 பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் | கோத்தகிரி யில் ஒரு சிறிய விளையாட்டு அரங்கம் | மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம் | -- |
| 23. | இராமநாத புரம் | -- | 400 மீ. தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து மைதானம், 1 கையுந்து பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம், பரமக்குடி யில் ஒரு சிறிய விளையாட்டு அரங்கம் | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம், மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம் | -- |
| 24. | கரூர் | -- | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுபாதை, 1 கால்பந்து ஆடுகளம், 2 கூடைப் பந்து மைதானங்கள், 2 கையுந்து பந்து மைதானங்கள் பணி நடைபெற்று வருகிறது. | -- | குத்துச் சண்டை மைதானம் | -- |



**நிலை—4**

**2.8 தேசிய அளவிலான செயல்பாடுகள்:**

இந்நிலையில் தேசிய அளவில் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். தேசிய அளவிலான வீரர்களைப் பயிற்றுவிக்கவும், மேம்படுத்துவதற்குமான ஒருங்கிணைந்த முயற்சிகள் ஊக்குவிக்கப்படும். தேசியத் திட்டத்தில் பயிற்சி அளிக்கும்வண்ணம், பயிற்றுநர்களது பயிற்சி நுணுக்கங்கள் அவ்வப்போது நவீனப்படுத்தப்படும். தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் கண்டறியப்பட்டு, மேம்படுத்தப்படும். விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுப் பிரியர்களிடையே உந்துதலையும், போட்டி மனப்பான்மையையும் ஏற்படுத்த தேசிய அளவிலான போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட இம்மாநிலம் ஊக்குவிக்கும். இந்நிலையில், விளையாட்டு வீரர்களிடையே உள்ள திறமைகளை மேம்படுத்த விளையாட்டில் ஏற்படும் காயங்கள், விளையாட்டு மருத்துவம், மனோதத்துவ சேவை ஆகிய வல்லுநர்களின் சேவைகள் மிகவும் தேவையாக உள்ளன. முடிந்த அளவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அயல்நாட்டு வல்லுநர்களின் சேவையைப் பயன்படுத்தி, இங்குள்ள பயிற்றுநர்களின் தரத்தினை உயர்த்துவது, நீண்ட நாட்களுக்குப் பலன் அளித்திடும். நிலை 4—ன்கீழ் தெளிவாகக் கண்டறியப்பட்ட அமலாக்கத்தில் உள்ள திட்டங்கள் தேசிய அளவில் சாதனை புரிப்வர்களைத் தேர்வு செய்வதில் கவனம் செலுத்திடும். பலன் அளிக்கக் கூடிய செலவினமாக இருப்பதே இதன் நோக்கமாகும். மேலும், இத்திட்டத்தின் இடையில் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, எங்கெங்கு தேவையோ அங்கங்கு திருத்தங்கள் கொண்டு வரப்படும். தேசிய அளவிலான போட்டிகளில் ஆர்வமுள்ள விளையாட்டு ஆர்வலர்கள் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்படுவர். நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்தும் நிறுவனங்கள், விளம்பர வல்லுநர்கள், இதர விளையாட்டை ஊக்குவிக்கும் நிறுவனங்களுக்கு தேசிய அளவிலான போட்டிகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் அறிவிக்கப்படும்.

**நிலை—5**

**2.9 சர்வதேச அளவிலான சாதனைகள்:**

பிரமிடின் மிக முக்கிய இந்நிலை, கீழ் உள்ள நிலைகளின் சரியான ஒருங்கிணைப்பால் பலப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் சர்வதேச அளவில் வெற்றிகள் பெறுவது மற்ற நான்கு நிலைகளிலிருந்தும்

சிறந்த முன்னேற்றம் காணலாம். இப்பிரமிடு மாதிரி, நல்ல அடிப்படை உள்ள திட்டம் வகுத்தால் அது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கொள்கைகளையும், திட்டங்களையும் முன்னேற்றும். இவ்வாறு செயல்பட்டால் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வெல்லலாம். விளையாட்டுக் கட்டமைப்புகள், போட்டிகள், விளையாட்டுத் திறன் கண்டறிதல், விளையாட்டுத் திறன் முன்னேற்றம், பயிற்சி, சிறப்பு வல்லுநர்கள் உதவி எதுவாயினும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மேலே குறிப்பிட்ட நிலைகளின்படி தனது செயல்பாட்டினை ஒருங்கிணைத்துச் செயல்பட்டால் நாட்டில் நமது மாநிலம் விளையாட்டில் சிறந்த மாநிலமாகத் திகழும்.

2.12 தனது செயல்பாட்டின் திறன்பட்ட உத்திகளை வெளியிட்டு அதற்கேற்ப செயல்திட்டங்களை நடத்தும் எந்த ஒரு நிறுவனமும் தனது குறிக்கோளினை அடைய முடியும். நமது செயல்பாடுகளும் அவ்வாறே பலன்தரும்வகையில் அறுதியிடப்பட்டு, அச்செயல்பாடுகள் மேலே குறிப்பிட்ட வெற்றிக் கனியைச் சர்வதேச அளவில் அடைய தமிழ்நாடு, விளையாட்டில் முதன்மையான மாநிலமாகத் திகழும்வண்ணம் தமிழ்நாட்டு விளையாட்டுத் திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.



# அத்தியாயம் – 3

## விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்:

ஒரு நாட்டில் விளையாட்டுகளில் பங்கேற்கும் மனப்பான்மையினை ஊக்குவிப்பதில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாநிலத்திலுள்ள அனைத்துத் திறமையாளர்களுக்கும் போதுமான கட்டமைப்பு வசதிகளை அமைத்துத் தருவதற்கு தமிழ்நாடு முன்னுரிமை அளித்துள்ளது.

முன் அத்தியாயத்தில் தெரிவித்துள்ள நிலைகளுடன் இணைக்கும் வகையில் தொலைநோக்குடன் ஏற்படுத்தப்பட்ட உத்திகளைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாட்டில் அமைந்துள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் வருமாறு:

**நிலை–5**

**3.1 பன்னாட்டுத் தரத்திலான வசதிகள்:**

**1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை**

இவ்விளையாட்டரங்கம் சுமார் 40,000 இருக்கை வசதிகளைக் கொண்டு கட்டப்பட்டது. மேலும், பன்னாட்டுத் தரத்திலான கால்பந்து ஆடுகளம் (புல்வெளியுடன்) மற்றும் தடகள ஓடுகள (400 மீ. 8 ஓடுகளப் பாதையுடன் செயற்கை இழை ஓடுகளம்) வசதிகளைக் கொண்டது. இவ்விளையாட்டரங்கம் மின்னொளி அமைப்பு மற்றும் மின்னணு கணக்கியல் கருவி ஆகிய வசதிகளையும் கொண்டது. மேலும், இவ்விளையாட்டரங்கில் ஒரு சதுரங்கக் கூடம், ஒரு பளுதூக்கும் கூடம் மற்றும் மேசைப் பந்து விளையாட்டிற்கான ஒரு கூடமும் அமைந்துள்ளன.

**2. பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், பெரியமேடு, சென்னை**

8,000 இருக்கை வசதிகளைக் கொண்ட இவ்விளையாட்டரங்கம் கையுந்து பந்து, கூடைப் பந்து, மேசைப் பந்து, சிறகுப் பந்து, குத்துச் சண்டை, மல்யுத்தம், பளு தூக்குதல் போன்ற விளையாட்டுக்கான வசதிகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடியது. தற்போது இந்த வளாகத்தில் ஸ்கேட்டிங் ரிங்க் மற்றும் ரோலர் ஹாக்கி ஸ்கேட்டிங் ரிங்க் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இயற்கையாக வெளிப்பட்டுவரும் இறுதி முடிவாகும். இருப்பினும், இந்நிலையில் தேவைகள் மிக அதிக அளவில் இருப்பதால், மற்ற நிலைகளிலுள்ள முயற்சிகளைவிட சிறப்பு முயற்சிகள் தேவைப்படும். விளையாட்டுக் கட்டமைப்புகள் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட பன்னாட்டு அளவிலான இணையங்கள் வகுத்துள்ள பல்வேறு நிபந்தனைகளின்படி அமைய வேண்டும். இந்நிலையில் சர்வதேசத் தரப்போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த ஊக்குவிக்கப்படும். மேலும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுள்ள விளையாட்டு ஆர்வலர்கள் ஒருங்கிணைக்கப்படுவர். இந்நிலை, திறமையை மேம்படுத்துவதற்கு அதிநவீனப் பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் விளையாட்டில் பங்கேற்பது முக்கியமானதாக இருக்கும். உலக அளவில் பயிற்சிக்கான ஆராய்ச்சி வசதிகளைக் கொண்டுள்ள சிறப்பு வாய்ந்த நிறுவனங்கள் தொடர்புகொள்ளப்படும்.

2.10. தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேசப் போட்டிகளான ஒலிம்பிக் போட்டிகள், காமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுவதற்கு உலகத் தரம் வாய்ந்த வீரர்களாகத் திகழ, தகுதிபடைத்த விளையாட்டு வீரர்களுக்கும், பயிற்றுநர்களுக்கும் வெளிநாடுகளில் பயிற்சியும், பங்கேற்பும் அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இதனைக் கருத்தில்கொண்டு சில குறிப்பிட்ட ஒலிம்பிக் விளையாட்டுகளில் அயல்நாடுகளில் விளையாடவும், பயிற்சியாளர்கள் அயல்நாட்டில் உள்ள பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கும். இந்நிலையில், தொழில் ரீதியான அணுகுமுறை முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தொழில் ரீதியான அணுகுமுறையை அடைவதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

2.11 குறிப்பாக, விளையாட்டில் உன்னத நிலையை அடைய அனைத்து சமூக விளையாட்டு முயற்சிகளையும் ஒருங்கிணைத்து, செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தகுந்த அடிப்படைப் பயிற்சியின்றி இப்பிரமிடின் உச்சநிலையை அடைய இயலாது என்பது சொல்லித் தெரிவதில்லை. எனவே, அடிப்படை மிகவும் முக்கியமானதாகும். கீழ்நிலையின் பலமே மேல்நிலையைப் பலப்படுத்தும். கீழ்நிலையில் சிறந்த ஒருங்கிணைந்த முயற்சி இருப்பின் மேல்நிலைகளில்





**3. வளைகோல் பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை**

இவ்விளையாட்டரங்கம் 4,000 இருக்கை வசதிகளைக் கொண்டது. வளைகோல் பந்து ஆடுகளம் புதிய "மெகா டர்ப் செயற்கை புல்வெளி" வளைகோல் பந்து ஆடுகளம் புதிய "மெகா டர்ப் செயற்கை புல்வெளி" 30 x 15 மீ. அளவில் பயிற்சி வளைகோல் பந்து ஆடுகள வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேயர் இராதா கிருஷ்ணன் வளைகோல் பந்து ஆடுகளத்தில் வண்ணத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் வகையில் செயற்கை மின்னொளி வசதி அமைக்கப்பட்டுள்ளது.

**4. நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை**

இவ்விளையாட்டரங்கம் 4,000 இருக்கை வசதிகளுடன் ஒரு போட்டிக்குளம் – (50 x 25 மீ.), ஒரு பாய்ச்சல் குளம் – (18 x 25 மீ.) மற்றும் ஒரு பயிற்சிக் குளம் – (20 x 25 மீ.) ஆகிய வசதிகள் உடையது.

**5. டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை**

இவ்விளையாட்டரங்கத்தில் மத்திய ஆடுகளத்தில் 5,000 இருக்கை வசதிகளும் மற்றும் 6 பயிற்சி ஆடுகளங்களில் 2,000 இருக்கை வசதிகளும் உள்ளன. இந்தச் செயற்கை இழை ஆடுகளங்கள் சர்வதேச அளவிலுள்ள ஆடுகளங்களுக்கு இணையாகவும், மின்னொளி அமைப்புடன் கூடியதாகவும் உள்ளன.

**6. ஸ்குவாஷ் (சுவர் பந்து) ஆடுகளம், மாநில விளையாட்டு வளாகம், நேரு பூங்கா**

தனியார் கூட்டாண்மையுடன் எட்டு சர்வதேசத் தரத்திலான ஸ்குவாஷ் ஆடுகளங்கள் மாநில விளையாட்டு வளாகம், நேரு பூங்காவில் தமிழ்நாடு மாநில ஸ்குவாஷ் ராக்கெட் கழகத்துடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ளன.

**7. மதுரை மற்றும் கோவையில் செயற்கை இழை ஓடுகளப் பாதை**

மதுரை ரேஸ் கோர்ஸ் விளையாட்டரங்கில் செயற்கை இழை ஓடுகளப் பாதை மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு செயற்கை இழை ஓடுகளப் பாதை கோவை நேரு விளையாட்டரங்கில் மேம்படுத்தப்படவுள்ளது.

8. அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டையிலும், சென்னை ஒய்.எம்.சி.ஏ. உடற் பயிற்சிக் கல்லூரியுடன் இணைந்து, அக்கல்லூரி மைதானத்தில் கூட்டுக் கட்டமைப்பு மேம்பாட்டு வசதியுடன் செயற்கை இழை ஹாக்கி ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 3. | காஞ்சிபுரம் | இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்து பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் மைதானம் | 1 கபாடி மைதானம் குத்துச் சண்டை மைதானம் | 1 பூப்பந்து மைதானம் | — |
| 4. | வேலூர் | — | — | ஒரு கால்பந்து ஆடுகளம் மினி விளை யாட்டு அரங்கம், ஜோலார் பேட்டை | நேதாஜி அரங்கத் தில் 400 மீ தடகள ஓடுகளம் | குத்துச் சண்டை மைதானம் மற்றும் இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் மாவட்ட விளையாட்டு அரங்கில் கட்ட திட்ட மிடப்பட்டு உள்ளது |





| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 5. | கடலூர் | இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்து பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம், விருத்தாச் சலத்தில் ஒரு சிறிய விளையாட்டு அரங்கம் | மல்டி ஜிம் ஹால், சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம், குத்துச் சண்டை மைதானம் | — |
| 6. | விழுப்புரம் | — | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 கையுந்து பந்து மைதானம் | — | மல்டி ஜிம் ஹால் | — |
| 7. | நாகப் பட்டினம் | — | 400 மீ தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் தரங்கம்-பாடியில் ஒரு சிறிய விளையாட்டு அரங்கம் | மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம், திறந்தவெளி விளையாட்டு அரங்கம், இராஜன் தோட்டம் | |

**3.2 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள்**

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | அண்ணா நீச்சல் குளம் 50 x 21 மீ. மற்றும் 25 x 13 மீ நீச்சல் குளம் | -- | ஷெனாய் நகர் நீச்சல் குளம் 36 x 13 மீ. | அரசு மேல்நிலை பள்ளி, புதூரில் (ஒருமித்த உடன் படிக்கை யின்கீழ்) ஒரு கால்பந்து ஆடுகளம், நான்கு கிரிக்கெட் பயிற்சி பெறும் திடல்கள் | 5-ம் நிலை ஆக பன்னாட்டுத் தரம் வாய்ந்த விளை யாட்டு வசதிகள் சென்னை யில் மட்டும் கொடுக்கப் பட்டு உள்ளன |
| | மாநில விளையாட்டு வளாகம், சென்னை | 2 செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து ஆடுகளம் 2 கைப்பந்து ஆடுகளம் | ஒரு கபாடி ஆடுகளம் | -- | ஒரு ஹாக்கி பயிற்சி ஆடுகளம் |
| 2. | திருவள்ளூர் | முகப்பேரில் இரண்டு டென்னிஸ் ஆடுகளங்கள் | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து ஆடுகளம் 2 கையுந்து பந்து ஆடுகளம் (பணி நடைபெற்று வருகிறது) | முகப்பேரில் ஒருமித்த உடன் படிக்கையுடன் 25 x 13 மீ. நீச்சல் குளம் உள்ளது. ஒரு சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம் கட்ட, திட்டமிடப் பட்டு உள்ளது | -- | -- |





| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 8. | தஞ்சாவூர் | — | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்து பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம் | — |
| 9. | திருச்சி | உள் விளையாட்டு அரங்க பணி நடை பெற்று வருகிறது | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப்பந்து மைதானம் 1 கையுந்து பந்து மைதானம் டென்னிஸ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால், செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம், 25 x 30 மீ. குத்துச் சண்டை மைதானம் | விளையாட்டு விடுதி மாணவர் களுக்கான புதிய விளையாட்டு விடுதி |
| 10. | புதுக் கோட்டை | — | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம்,1 கூடைப்பந்து மைதானம், 1 கையுந்து பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால் | — |

[2006 ஆகஸ்ட் 10

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 14. | விருதுநகர் | — | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்து பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | சிவகாசி யில் ஒரு சிறிய விளையாட்டு அரங்கம் | மல்டி ஜிம் ஹால், செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ. குத்துச் சண்டை மைதானம் | — |
| 15, | தூத்துக்குடி | — | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்து பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால், செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ. குத்துச் சண்டை மைதானம் | |



2006 ஆகஸ்ட் 10]

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 16. | திருநெல் வேலி | — | 2 கூடைப் பந்து மைதானங் கள் 2 கையுந்து பந்து மைதானங்கள் 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் (புல்தரையுடன்) | ஆலங்குளம் & கள்ளிடைக் குறிச்சியில் சிறிய விளை யாட்டு அரங்கம் | சிறகுப் பந்து உள் விளை யாட்டு அரங்கம், மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம் | விளையாட்டு விடுதி செயல் பட்டு வருகிறது |
| 17. | கன்னியா குமரி | -- | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம், 2 கூடைப்பந்து மைதானம், 2 கையுந்து பந்து மைதானங் கள் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம் | — |
| 18. | தர்மபுரி | -- | 400 மீ. தடகள ஓடுகளம், 1 கால்பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து மைதானம், 1 கையுந்து பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம், உள் விளையாட்டு அரங்கம் கட்ட திட்டமிடப் பட்டு உள்ளது | மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம் | -- |

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 11. | பெரம் பலூர் (இ) அரியலூர் | -- | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம், 1 கூடைப்பந்து மைதானம், 1 கையுந்து பந்து மைதானம் | பெரம்ப லூரில் ஒரு சிறிய விளை யாட்டு அரங்கம் | மல்டி ஜிம் ஹால், செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ. | -- |
| 12. | திண்டுக் கல் | ஒரு கால்பந்து ஆடுகளம் (புல் தரையுடன்) | 400 மீ. தடகள ஓடுகளம்,1 கூடைப்பந்து மைதானம் 1 கையுந்து பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம் (பணி நடைபெற்று வருகிறது) | மல்டி ஜிம் ஹால் | — |
| 13. | மதுரை | இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் | ஒரு கால்பந்து ஆடுகளம் 2 வளை கோல் பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்து பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம் | சிறகுப்பந்து உள் விளை யாட்டு அரங்கம் மல்டி ஜிம் ஹால், மதுரை மற்றும் வாடிப் பட்டியில் செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ. | விளையாட்டு விடுதி, மாணவர் களுக்கான புதிய விளையாட்டு விடுதி |





| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 19. | சேலம் | உள் விளையாட்டு அரங்கம் | ஒரு கால்பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து திடல் 1 கையுந்து பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம் | -- |
| 20. | ஈரோடு | -- | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து மைதானங் கள், 2 கையுந்து பந்து மைதானங் கள் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம், மல்டி ஜிம் ஹால், குத்துச் சண்டை மைதானம் | -- |
| 21. | கோயம் புத்தூர் | -- | 2 கூடைப் பந்து மைதானங்கள் 2 கையுந்து பந்து மைதானங்கள் 1 கால்பந்து ஆடுகளம் (புல்தரையுடன்) | -- | செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30மீ. மல்டி ஜிம் ஹால் | -- |

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 25. | தேனி | -- | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுபாதை, 1 கால்பந்து ஆடுகளம், 2 கூடைப் பந்து மைதானங்கள், 2 கையுந்து பந்து மைதானங்கள் பணி நடைபெற்று வருகிறது. | 25 மீ. நீச்சல் குளம் பணி நடை பெற்று வருகிறது | குத்துச் சண்டை மைதானம் | -- |
| 26. | திரு வண்ணா மலை | -- | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுபாதை, 1 கால்பந்து ஆடுகளம், 2 கூடைப் பந்து மைதானங்கள், 2 கையுந்து பந்து மைதானங்கள் பணி நடைபெற்று வருகிறது. | -- | குத்துச் சண்டை மைதானம் | -- |
| 27. | திருவாரூர் | -- | மாவட்ட விளையாட்டு வளாகம்; 400 மீ. தடகள ஓடுபாதை, 1 கால்பந்து ஆடுகளம், 2 கூடைப் பந்து மைதானங்கள், 2 கையுந்து பந்து மைதானங்கள் | -- | -- | -- |



| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 28. | சிவகங்கை | -- | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுபாதை, 1 கால்பந்து ஆடுகளம், 2 கூடைப் பந்து மைதானங்கள், 2 கையுந்து பந்து மைதானங்கள் பணி நடைபெற்று வருகிறது. | -- | குத்துச் சண்டை மைதானம் | -- |
| 29. | கிருஷ்ண கிரி | 2 செயற்கை டென்னிஸ் ஆடுகளம் பணி நடைபெற்று வருகிறது. | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுபாதை, 1 கால்பந்து ஆடுகளம், 2 கூடைப் பந்து மைதானங்கள், 2 கையுந்து பந்து மைதானங்கள் பணி நடைபெற்று வருகிறது. | தேன்கனிக் கோட்டை மற்றும் ஊத்தங்கரை யில் தலா ஒரு சிறிய விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. | குத்துச் சண்டை மைதானம் | -- |

[2006 ஆகஸ்ட் 10

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 30. | நாமக்கல் | -- | 400 மீ. தடகள ஓடுபாதை ஒரு கால்பந்து ஆடுகளம் மற்றும் 1 கையுந்து பந்து மைதானத் துடன் மாவட்ட விளையாட்டு வளாகப் பணி திட்டமிடப் பட்டுள்ளது | -- | -- | -- |

**3.3 விளையாட்டில் தனியார் பிரிவுகள் பங்கேற்பு/கூட்டாண்மை:**

கீழ்க்கண்ட விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள், தனியார் கூட்டாண்மையுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன:

1. மாவட்ட விளையாட்டு வளாகம், நீலகிரி (HADP)
2. மாதா அமிர்தானந்தமயி அறக்கட்டளையின் கூட்டாண்மையுடன் கோவையில் நீச்சல்குள வசதி
3. முகப்பேரில் 25 மீ. நீச்சல் குள வசதி. (Dolphin Club)



2006 ஆகஸ்ட் 10]

## அத்தியாயம்–4

### நிலை 1– திறமை கண்டறிதல் மற்றும் திறமை மேம்படுத்துதல் மாவட்டங்களில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்

**4.1 பள்ளிகளில் உடற்திறன் தேர்வுகளைப் பரவலாக நடத்தி, அவர்களுக்கு விளையாட்டு அறிக்கை அட்டை வழங்குதல்:**

தமிழ்நாட்டில் சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் உடற்திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்/சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய, அரசு இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசு அறிவுறுத்தலின்பேரில், உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளி சிறுவர்/சிறுமியர்களுக்கு விளையாட்டு முன்னேற்ற அறிக்கை அட்டை வழங்கப்படுகின்றது. இந்த அறிக்கை அட்டையின் அடிப்படையில் சிறுவர்/சிறுமியர்கள் அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டில் கலந்துகொள்ளவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்திக்கொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு திறன் மிக்கவர்கள் விவரம் மாநில அளவிலான விவரக் குறிப்பேட்டில் (டேட்டா பேங்க்) பதிவு செய்யப்பட்டு, அதன்மூலம் வருங்கால திறன் மிக்கவர்களைக் கண்டறிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், பள்ளிக் கல்வி இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர், தொடக்கப் பள்ளி இயக்குநர் மற்றும் ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளின் ஆய்வாளர்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4.2 கல்வி மாவட்ட அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்:**

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கும் சிறுவர்/சிறுமியர்களின் உடற்திறனைக் கண்டறிய, வேகமாக ஓடுதல், (Speed) அதிகமாகத் தாக்குப்பிடிக்கும் திறனைக் கண்டறிதல் (Endurance), உடல்வலிமை கண்டறிதல் (Strength), உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனைக் கண்டறிதல் (Explosive power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில்

[2006 ஆகஸ்ட் 10

10–க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10–க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல், குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100 மீ., 200 மீ., 400 மீ. ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகளப் பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கண்டறிய போட்டிகளை நடத்தி வருகிறது. அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, விளையாட்டுத் திறனைக் கண்டறிய மண்டல அளவில் ஏற்கெனவே மேலே குறிப்பிட்ட 6 தடகளப் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அப்போட்டிகளில் பங்கேற்க, கல்வி மாவட்ட அளவில் முதல் 2 இடங்களில் வெற்றி பெற்ற சிறுவர்/சிறுமியர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. உள்ளூர் அளவில் அதிக திறமைவாய்ந்த சிறார்களைக் கண்டறியும்பொருட்டு இம்முயற்சி ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.3 இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்:**

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி, அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடி பெருமை சேர்த்திடும்வகையில் அரசு, வெவ்வெறு மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பல்வேறு விளையாட்டுகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புக்களைப் பயன்படுத்த, ஏழு ஆண்கள் கல்லூரிகளிலும் மற்றும் ஐந்து பெண்கள் கல்லூரிகளிலும் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியது.

மேலும், அரசு குறைந்தபட்சத் தகுதியை நிர்ணயித்தும், கல்லூரி நிர்வாகமே இத்திட்டத்தின்கீழ் இருநூற்று முப்பது மாணவ, மாணவிகளைச் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கியது.

மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த சிறந்த விளையாட்டுத் திறன்படைத்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து கீழ்க்காணும் நிதியுதவி வழங்கப்படுகிறது:



2006 ஆகஸ்ட் 10]

| வ. எண் | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுப்படி | ரூ.600 |
| 2. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு | ரூ.500 |

**பயிற்சி:** அந்தந்தக் கல்லூரி நிர்வாகமே, தனது சொந்தப் பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்குப் பொறுப்பேற்கிறது.

**4.4 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம்:**

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவியுள்ளது. இம்மையங்களில் ஒவ்வொரு விளையாட்டில் திறன்படைத்த வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில் 21 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்கள் நிறுவப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

**நிலை 2–மாவட்டங்களில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்**

**4.5 வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்:**

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள், நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும் பெற்றுத் தந்துள்ளனர். இக்காரணத்தினால் அங்கு பளுதூக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டது. தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள்மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்குப் (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 365 நாட்களுக்குப் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/– வீதம் சிற்றுண்டித் தொகையாகவும், விளையாட்டு உபகரணப் படியாக ஒவ்வொருவருக்கும் ரூ.2,400/–ம் (ஆண்டொன்றுக்கு) வழங்கப்பட்டு வருகிறது. சத்துவாச்சாரி சிறப்பு மேம்பாட்டு மையத்தில் 12 மாணவியர் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

[2006 ஆகஸ்ட் 10

**4.6 கோவையில் கூடைப் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்:**

கோயம்புத்தூரில் கூடைப் பந்து விளையாட்டு, பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20 வயதுக்குட்பட்ட மாணவர்கள், திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க விளையாட்டு சிறப்பு மேம்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கோவை நேரு விளையாட்டரங்கத்திற்குத் தினந்தோறும் பயிற்சிபெற வருகின்றார்கள். அவர்களுக்கு விளையாட்டு உபகரணப் படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.3,200/-ம், வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்துசெல்ல போக்குவரத்துச் செலவினமாக தினம் ஒன்றுக்கு ரூ.10/-ம், மற்றும் ஒரு மாணவனுக்குச் சிற்றுண்டிச் செலவினமாக நாள் ஒன்றுக்கு ரூ.10/-ம், ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

**4.7 திருநெல்வேலியில் வளைகோல் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்:**

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல் பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த NIS பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.3,600/- விளையாட்டு உபகரணப் படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 300 நாட்களுக்கு வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்ல போக்குவரத்துச் செலவினமாக நாளொன்றுக்கு ரூ.10/-ம், மற்றும் சிற்றுண்டிச் செலவினமாக நாளொன்றுக்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ.10/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு வீரர்கள் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை புல் மைதானத்தில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

**4.8 நீச்சல் பயிற்றுவித்தல்:**

ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறையில் நீச்சல் தெரியாதவர்களுக்கு அதனைக் கற்றுத் தருவதற்காக வேளச்சேரியில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்திலும், செனாய் நகர் நீச்சல் குளத்திலும் பல பிரிவுகளாக நீச்சல் பயிற்றுவித்தல் நடத்தப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 10]

**நிலை 3 மாநில அளவிலான சிறப்பு அகாடமியில் – விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்**

**4.9 சிறப்பு அகாடமிகள்:**

சிறப்பு விளையாட்டு அகாடமிகள் உலகம் முழுவதும் தற்பொழுது பிரபலமாக உள்ளன. இந்தச் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் பயிற்சி பெறுபவர்களின் திறமையை மேம்படுத்தவும், அவர்கள் வெற்றி வாகை சூடவும் வழிவகுக்கின்றன. ஒருவரின் திறமையைக் குறிப்பிட்ட விளையாட்டில் மேம்படுத்த உளவியல் தேர்வு, மன வலிமை, உடல் வலிமை, சத்துணவு, முறையான பயிற்சி, விளையாட்டு உபகரணங்கள், மருத்துவ வசதி மற்றும் விஞ்ஞான அடிப்படையிலான பயிற்சி மிக அவசியம். இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பயிற்றுநர்களையும் மற்றும் உயர்ந்த திறன் பெற்றவர்களையும் கொண்டு பயிற்சிகளை அளித்து வருகிறது. இருப்பினும், அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரும் வகையில் ஊக்குவித்தல் அவசியமாகிறது.

கீழ்க்காணும் விளையாட்டுகளில் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன:

- மதுரையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி.
- சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கால்பந்து அகாடமி.
- சென்னை, புதூர் அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கிரிக்கெட் அகாடமி.
- புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடைப் பந்து அகாடமி.

[2006 ஆகஸ்ட் 10

- சென்னை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய எறிதல் அகாடமி.
- சென்னை, நுங்கம்பாக்கம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கையுந்து பந்து அகாடமி.
- சென்னை, வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டைவிங் அகாடமி.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீண்ட தூர ஓட்டத்திற்கான அகாடமி.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய குறுந்தூர ஓட்டத்திற்கான அகாடமி.
- திண்டுக்கல்லில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய சிறுமியர் கால் பந்து அகாடமி.
- சென்னையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வளைகோல் பந்தாட்ட அகாடமி.

இந்த அகாடமிகளின் வாயிலாக நலிவுற்ற பிரிவைச் சார்ந்த சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்குக் கூடுதலாகச் சத்துணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான அகாடமியைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அயல்நாட்டு விளையாட்டுக் காலணிகள் ஆகியவை வழங்கப்பட்டு அகாடமிகள் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 10]

**4.10 விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்**

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளும், நான்கு விளையாட்டு விடுதிகளும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | விளையாட்டுப் பள்ளியின் பெயர் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை | தடகளம், குத்துச்சண்டை, கால் பந்து, வளைகோல் பந்து, நீச்சல் |
| 2. | சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் | தடகளம், கூடைப் பந்து, கையுந்துப் பந்து மற்றும் கால் பந்து |
| 3. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி | தடகளம், கூடைப் பந்து மற்றும் கால் பந்து |

| வ. எண் | விளையாட்டு விடுதி அமைந்துள்ள இடம் | பிரிவுகள் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | தடகளம், கால் பந்து, கையுந்துப் பந்து மற்றும் வளைகோல் பந்து |
| 2. | மதுரை | தடகளம், கால் பந்து, கூடைப் பந்து மற்றும் கையுந்துப் பந்து |
| 3. | திருநெல்வேலி | தடகளம், வளைகோல் பந்து, கையுந்துப் பந்து |
| 4. | ஈரோடு (மாணவியருக்கு மட்டும்) பாரதி வித்யா பவன், திண்டல், ஈரோடு | தடகளம், கையுந்துப் பந்து கூடைப் பந்து |
| 5. | திருச்செங்கோடு ஆர்.ஆர். மெட்ரிகுலேஷன் பள்ளி | கையுந்துப் பந்து |
| 6. | அரசு மேல்நிலைப் பள்ளி, புதூர், சென்னை | கிரிக்கெட் |

[2006 ஆகஸ்ட் 10

விளையாட்டு விடுதிகள், விளையாட்டுக் காப்பாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் சமையற்காரர்கள் ஆகியோர்களைக் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நேரடிப் பார்வையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

**தேர்வு முறை:** தேர்வுகள் இரண்டு அடுக்கு முறையில், அதாவது மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

| மாவட்ட அளவிலான தேர்வு | உடற்கூறு திறன் தேர்வுகள் நடத்தப்படும் |
|---|---|
| மாநில அளவிலான தேர்வு | குழு விளையாட்டுக்களில் விளையாட்டுத் திறன் மற்றும் நுட்பம் குறித்தும், தனி நபர் விளையாட்டுக்களில் திறமை குறித்தும் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8–ம் வகுப்பு, 9–ம் வகுப்பு மற்றும் 11–வது வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்குத் தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. |

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 710 மாணவர், மாணவியர் சேர்வதற்கும், தங்கிப் பயிற்சி பெறவும், ஊட்ட உணவிற்காகவும் மற்றும் இதர செலவிற்காகவும் கீழ்க்கண்டவாறு அரசு மானியம் அளிக்கிறது:–

| வ. எண் | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை | ரூ.1,200/– |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | ரூ.1,600/– |
| 3. | ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க | ரூ.250/– |
| 4. | ஒரு மாணவனுக்கு ஓர் ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித் தொகை | |
| | (அ) விளையாட்டுப் பள்ளி | ரூ.400/– |
| | (ஆ) விளையாட்டு விடுதி | ரூ.300/– |
| | (இ) விளையாட்டுப் பள்ளிகளுக்கு மட்டும் மதிப்பூதியம் | ரூ.1,200/– |



2006 ஆகஸ்ட் 10]

## நிலை 4 தேசிய அளவில்–விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்

### 4.11 சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்:

சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம், சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்லக்கூடிய தனித் தன்மையுடைய திறமையுள்ள விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் ஓர் ஒப்பற்ற திட்டமாகும். சர்வதேச அளவில் பங்கேற்று பதக்கங்களைப் பெற்று தாயகத்திற்குப் பெருமை சேர்க்கக் கூடிய சேம்பியன்களை உருவாக்க ஒரு தனிப்பட்ட திட்டமும் செயலாக்கமும் தேவைப்படுகின்றது. அதனடிப்படையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல்வேறு விளையாட்டுகளில் தமிழகத்திலிருந்து பதக்கங்களைப் பெற வாய்ப்புள்ள சேம்பியன்களை இனம் கண்டது. அவ்வாறு இனம் கண்டறியப்பட்டவர்களுக்கு அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்க்க, அவர்களது தேவைக்கேற்ப சரியான உதவிகள் வழங்கப்படுகின்றன. தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்றவர்கள், மேலும் சில குறிப்பிட்ட விளையாட்டுகளில் தங்கம் அல்லது வெள்ளிப்பதக்கம் பெற்றவர்கள்தான் இத்திட்டத்தின்கீழ் பயனடைய முடியும் என்ற தகுதிக் குறிப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின்மூலம் இனம் கண்டறியப்பட்ட விளையாட்டு சேம்பியன்களுக்குத் தேவையான உதவிகளும் வழங்கப்படுகின்றன. நிதி உதவிகளைத் தவிர, அவர்களுடைய உளவியல் திறன் மற்றும் உடல்ரீதியான வலிமையினை மேம்படுத்தவும், அந்தந்த விளையாட்டிற்குத் தேவையான சத்தான உணவு உட்கொள்ளும் முறையைப் பின்பற்றுதல் மற்றும் போட்டிகளில் வெற்றி வாகை பெற இயக்கும் ஆற்றல் போன்றவற்றில் (Physiological ability, Psychological Strength, Motivational aspects, Nutrition intakes) மேம்படுத்த பயிற்சியையும், அதனால் அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் வெற்றி வாகை சூட வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் இயலுகிறது.

[2006 ஆகஸ்ட் 10

**4.12 மாநில விளையாட்டுக் கழகங்கள் வாயிலாக, தமிழ்நாட்டில் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்:**

அங்கீகரிக்கப்பட்ட தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சம்பந்தப்பட்ட மாநில விளையாட்டுக் கழகங்களின் வாயிலாக தேசிய விளையாட்டு இணையங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ச்சியாக நடத்திவரும் மாநிலங்கள், இந்திய ஒலிம்பிக் கழகம், தேசிய விளையாட்டு இணையங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் அங்கீகாரத்தைப் பெறுகின்றன. இது அணிகளைத் தேர்வு செய்தல், தேசிய அளவிலான பயிற்சி முகாம்கள், பன்னாட்டுத் தரம் வாய்ந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான அணியினைத் தேர்வு செய்தல் போன்ற தருணங்களில் மிகவும் உதவியாக அமைகிறது. ஆகவே, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ச்சியான முறையில் நடத்தி, அதன்மூலம் தேசிய அளவில் தமிழ்நாட்டினைப் பிற மாநிலங்களைக் காட்டிலும் முதன்மையான மாநிலமாகத் திகழச் செய்வது இன்றியமையாததாகிறது. பிரபலம் வாய்ந்த விளையாட்டுகள் மற்றும் பிரசித்தி பெற்ற ஒலிம்பிக் போட்டிகளைச் சார்ந்த விளையாட்டுக்களை மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்துவதை ஊக்குவிக்கும்பொருட்டு அவ்விளையாட்டுக் கழகங்களுக்கு அரசால் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**4.13 தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு மானியம் வழங்குதல்:**

மாநில அளவிலான சேம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் மற்றும் தேசிய சேம்பியன்ஷிப் போட்டிகளில் தமிழக அணிகள் பங்கேற்கவும் மாநில விளையாட்டுச் சங்கங்கள், மானிய உதவிக்காகத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை அணுகி வருகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில், தமிழக அணி தேசிய சேம்பியன்ஷிப் போட்டிகளில் சிறந்த விளையாட்டுச் சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இல்லாமல் பங்கேற்பதை நாம் காணலாம். மாநில விளையைாட்டுக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுவரும் மானியத்தை உரிய வழிகாட்டி நெறிமுறைகளைக் கொண்டு உயர்த்தி வழங்கப்பட்டதன் வாயிலாக, மேற்கண்ட குறைகள் சரிசெய்யப்பட்டு



2006 ஆகஸ்ட் 10]

தமிழ்நாடு அணி தேசிய விளையாட்டுப் போட்டிகளில் முன்னணி மாநிலமாகத் திகழ்வது அதிகப்படுத்தப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு அணிகள் தேசிய சேம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொண்டு தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும்பொருட்டு மாநிலச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள், இவ்வாண்டு ஒலிம்பிக் சார்ந்த விளையாட்டுப் போட்டிகளுக்கு வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, உயர்த்தப்பட்டுள்ளன.

**4.14 சிறப்பு விளையாட்டு விடுதி:**

கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி, சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் விளையாட்டு விடுதி, சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயல்படுத்திடவும், 50 விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறவும் அரசு அனுமதித்துள்ளது. இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (1) தடகளம் (2) கூடைப் பந்து (3) குத்துச்சண்டை (4) நீச்சல் மற்றும் (5) கையுந்து பந்து. மேற்கண்ட விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பினைத் தொடர்வதோடு அவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படச் செய்வதுமே இவ்விடுதியின் குறிக்கோளாகும். இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது. இவர்களுக்கு வழங்கப்படும் வசதிகளின் விவரம்:—

| வ. எண் | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை | ரூ.1,800/– |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு | ரூ.3,000/– |
| 3. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் | ரூ.1,500/– |
| 4. | ஆண்டொன்றுக்கு மருத்துவ செலவினம் | ரூ.10,000/– |
| 5. | விடுதி பராமரிப்புச் செலவினம் | ரூ.10,000/– |
| 6. | போட்டிகளில் பங்கேற்க ஆண்டொன்றுக்கு | ரூ.25,000/– |

[2006 ஆகஸ்ட் 10

**நிலை 5 சர்வதேச அளவில் – விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்**

**4.15 விளையாட்டில் திறமையுள்ள தலைசிறந்த வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் பயிற்சியளித்தலும் மற்றும் போட்டிகளில் கலந்து கொள்வதும்:**

விளையாட்டில் திறமையுள்ள தலைசிறந்த வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தர பயிற்சி அளிக்கும் நிறுவனங்களில் பயிற்சியளிப்பதன்மூலமும், சர்வதேசப் போட்டிகளில் பங்குபெற வாய்ப்பளித்தல்மூலமும் அவர்கள் சர்வதேச அளவில் பதக்கம் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும், தற்போது சாம்பியன் மேம்பாட்டுத் திட்டம்மூலம் இளையோர் மற்றும் மிகவும் இளையோர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. திறமை மிக்க விளையாட்டு வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தர பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் சர்வதேச அளவில் அயல்நாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 63 விளையாட்டு வீரர்கள் பயனடைந்துள்ளனர்.



2006 ஆகஸ்ட் 10]

## அத்தியாயம்–5

**நிலை 1–பயிற்சி அளித்தல்**

**5.1 பயிற்சித் திட்டத்திற்குப் புத்துயிர் ஊட்டுதல்:**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பணிபுரியும் சுமார் 110 விளையாட்டுப் பயிற்சியாளர்கள் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். நிதிப் பற்றாக்குறை காரணமாக, சிறப்புப் பயிற்சி முகாம், கோடைகாலப் பயிற்சி முகாம், வார இறுதி நாள் பயிற்சி முகாம் ஆகியவற்றின்மூலம் மட்டுமே பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பயிற்றுநர்களைப் பல்வேறு மாவட்டங்களில் நியமிக்க இயலாத நிலை உள்ளது. உலகத் திறனாய்வுத் திட்டத்தின் வாயிலாக அதிக திறனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களின் திறனை மேம்படுத்துவது அவசியமானது மட்டுமல்லாமல், இன்றியமையாததுமாகும். சிறப்புப் பயிற்சி, உயர்ந்த அளவிலான பயிற்சிகளுக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும். என்.ஐ.எஸ். சர்டிபிகேட் கோர்ஸ் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் மற்றும் என்.ஐ.எஸ் பயிற்சியுடன் அலாதியான முன் அனுபவம் உள்ள பயிற்சியாளர்கள், நிரந்தர பணி கிடைக்காமையால், ஒப்பந்த அடிப்படையில் பயிற்சியாளராகப் பணியாற்றிட முன்வந்துள்ளனர். பயிற்சியாளர் இல்லாத சில மாவட்டங்களில் அதிகம் திறனாளிகள் உள்ளனர். திறமை கண்டறிதல், திறமை மேம்படுத்துதல் போன்றவற்றில் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒப்பந்த வழிமுறைகள் வகுக்கப்பட்டு, அதன்மூலம் பயிற்றுநர்கள் மாவட்ட அளவில் ஒரு மிகப் பெரிய திறன் கொள்ளிடமாக உருவாக்குவதற்கு உதவிபுரிவது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இதன்படி பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் 69 பயிற்றுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, அப்பதவிக்குண்டான திறன்சார்ந்த ஊக்கத்தொகை வழங்கப்படுவதற்கான அளவுகோல் போன்ற முக்கியமான நிபந்தனைகள் கொண்ட ஒப்பந்த உடன்படிக்கை தயார் செய்யப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**5.2. ஒவ்வொரு விளையாட்டிலும், உடற்கல்வி ஆசிரியர்களுக்கு, அவர்களின் திறமைகளை வளர்க்கவும், தகுதிகளை மேம்படுத்தவும் மறுபயிற்சி முகாம் நடத்துதல்:**

திறமை வாய்ந்தவர்களைக் கண்டறியவும், அவர்களின் அடிப்படை திறமைகளை வளர்க்கவும் உடற்கல்வி ஆசிரியர்கள், தமிழக

விளையாட்டின் முதுகெலும்பாக விளங்கி வருகிறார்கள். நுட்பங்கள் மற்றும் திறன்கள் ஆகியவற்றை சரியான முறையில் அடிப்படையிலேயே கற்றுக் கொடுப்பதன்மூலம் சர்வதேச அளவில் திறமைகளை வளர்த்துக்கொள்ள இயலும். சமீபத்திய விதிகள், விளையாட்டு முறைகள் மற்றும் நுட்பங்கள் குறித்த புலமையை உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்கள் அறியும்வண்ணம், தொழில்நுட்ப மறுபயிற்சித் திட்ட பயிற்சி வகுப்புகள் நடத்துவது, மிகவும் அவசியமாகிறது. இவ்வாறான திட்டத்திற்கு செலவழிக்கப்படுவதன்மூலம் அவர்களை முழுமையாக அனைத்து வழிகளிலும் விளையாட்டில் பயிற்சி அளிப்பதில் சிறந்தவர்களாக விளங்கச் செய்ய இயலும். ஆண்டுதோறும், மாவட்ட அளவில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கும், விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் விளையாட்டு தொழில்நுட்ப நிபுணர்கள் முதலியோரின் உதவியோடு விளையாட்டு யுக்திகள் பற்றிய பயிற்சிகள் நடத்தப்படும். மறுபயிற்சித் திட்டம், பயிற்சி வகுப்புகள் முதலியன இந்திய விளையாட்டுக் குழுமம் மற்றும் விளையாட்டுச் சங்கங்கள் முதலியவற்றின்மூலம் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும், உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்களுக்கும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. எங்கெங்கு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகளுக்கு அனுப்பிட முடியுமோ, அவற்றிற்கு ஸ்பான்சர்மூலம் அனுப்புதல் போன்றவற்றைச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி பல்வேறு விளையாட்டுகளில் சிறப்புக் கருத்தரங்குகள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குனர்களுக்குத் தொழில்நுட்ப நிபுணர்கள்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

**நிலை 2 மாவட்ட அளவில்–பயிற்சி முகாம் திட்டம்**

**5.3 கோடை காலப் பயிற்சி முகாம்:**

ஒவ்வொரு வருடமும் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாதவர்களுக்காக ஆண், பெண் இரு பாலருக்கும் தடகளம், கூடைப் பந்து, கால் பந்து, வளைகோல் பந்து, கையுந்துப் பந்து மற்றும் அந்தந்த மாவட்டங்களில் சிறந்து விளங்குகின்ற இதர விளையாட்டுகளில் மாவட்டத் தலைநகரங்களில் கோடை காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



**5.4 சென்னையிலுள்ள சர்வதேச அளவிலான விளையாட்டு அரங்கங்கள்/மாவட்ட தலைநகரங்களில் உள்ள விளையாட்டு அரங்கம்/சென்னை நேரு பூங்கா விளையாட்டு அரங்கம் ஆகியவற்றிற்கு நிலையான மற்றும் நிலையற்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்:**

சுமார் 110 பயிற்சியாளர்கள், 3 சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு மையங்கள், 50 விளையாட்டுப் பயிற்சி மையங்களைக் கொண்ட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டு பயிற்சிக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் முழுமையாக வழங்கிட இயலாத நிலையில் உள்ளன. அனைத்து விளையாட்டுகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் அடிப்படைத் தேவை மட்டுமல்லாமல், சிறப்பான பயிற்சி அளிப்பதும் இன்றியமையாதது ஆகும். எனவே, முக்கியம் வாய்ந்த அனைத்து விளையாட்டுகளுக்கும் தேவையான உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள், எந்தெந்தப் பிரிவில் பயிற்றுநர்கள் உள்ளனரோ, அவர்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் வாங்கி வழங்கிட உள்ளன.

**5.5 மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம் திட்டம்:**

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவிகளுக்கென மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்கள் மாநிலத்தில் 30 மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் தத்தம் திறமைக்கேற்ப பங்குகொள்ளச் செய்வதற்கென இந்த மாணவ மாணவிகளுக்கு விளையாட்டின் அடிப்படைத் திறமைகள் கற்றுக்கொடுக்கப்பட்டன.

**நிலை 3 மாநில அளவில் – பயிற்சி முகாம் திட்டம்**

**5.6 மாநில அளவிலான பயிற்சித் திட்டம்:**

பல்வேறு விளையாட்டுகளில் திறன்மிக்கவர்களைக் கண்டறிய மாவட்டம், மாநிலம் மற்றும் மண்டல அளவிலான இருப்பிட கோடை காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

**5.7 அகில இந்திய வாரக விளையாட்டுப் போட்டிகள் பயிற்சி முகாம்:**

பல்வேறு மாநிலங்களில் தேசிய அளவில் நடத்தப்படும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில், தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட பதினாறு வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு, பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் ஏழு நாட்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 10

**5.8 தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள் – தேசிய அளவில் பங்கேற்கும் முன் பயிற்சி முகாம்:**

பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படும் தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிருக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் ஏழு நாட்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

**நிலை 4 தேசிய அளவில்–பயிற்சி முகாம் திட்டம்**

**5.9** அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டு கழகங்கள் பன்னாட்டு அளவில் பங்குபெறும் முன்னர், தேசிய அளவில் பயிற்சி முகாம் தமிழ்நாட்டில் நடத்தப்படுமானால், அதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**நிலை 5 சர்வதேச அளவில்–பயிற்சி முகாம் திட்டம்**

**5.10 பயிற்றுநர்கள், திறமையுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு நிர்வாகிகள் ஆகியோர்களுக்கு அவர்களின் திறமையினை மேம்படுத்த வேண்டி பன்னாட்டு அளவிலான பயிற்சியாளர்களைக் கொண்டு கருத்தரங்கம் மற்றும் பயிற்சியளித்தல்:**

தமிழகம், விளையாட்டுப் போட்டிகளில் பின் தங்கியுள்ளதற்கான காரணங்களாவன:

(அ) சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் இல்லாமை

(ஆ) சர்வதேச அளவில் தகுதிவாய்ந்த அலுவலர்கள் இல்லாமை.

(இ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலுள்ள பயிற்றுநர்களுக்கும் மற்றும் தமிழகத்திலுள்ள திறமையுள்ள பிற பயிற்றுநர்களுக்கும் சர்வதேச அளவில் போதிய பயிற்சி மற்றும் அனுபவம் இல்லாமை, திறமை மிக்க பயிற்றுநர்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் அயல்நாட்டில் நடத்தப்படுகின்ற சிறிய கால அளவிலான பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குகொள்வதற்கு வாய்ப்பளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால், அவர்களுக்கு சர்வதேச அளவில் நடைபெறும் பயிற்சி முறையினைப்பற்றி தெரிந்துகொள்ள வாய்ப்பு அளிப்பதன்மூலம், சர்வதேச அளவில் அந்தந்த விளையாட்டுக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப்பற்றி புரிந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது. தடகளப் பயிற்றுநர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் மற்றும் நீச்சல் பயிற்றுநர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் ஆகியவை ஆஸ்திரேலிய நாட்டுப் பயிற்றுநர்களின் உதவியுடன் நடத்தப்பட்டன.



2006 ஆகஸ்ட் 10]

## அத்தியாயம்–6

### விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மனப்பாங்கினை மேம்படுத்துதல்

**நிலை 1 மாவட்டத்திற்குள் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்றல்**

**6.1** உள்ளூர் அளவில் இதுவரை கண்டறியப்படாத திறமைகளை வளர்த்திடவும், உடற்தகுதி மற்றும் விளையாட்டில் ஆர்வத்தினை அடிமட்ட அளவில் ஊக்குவிக்கவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

அனைத்துப் போட்டிகளும் மாவட்ட அளவில் அனைத்து நிலைகளிலும் நடத்தப்படும். அவையாவன:

√ ஒரு குறிப்பிட்ட பகுதி (அ) இடத்தில் அமைந்துள்ள பள்ளிகளுக்கிடையே.

√ ஒரு குறிப்பிட்ட பகுதி (அ) இடத்தில் அமைந்துள்ள குழுக்களுக்கிடையே.

√ கல்லூரிகளுக்கிடையே.

√ வட்டாரங்களுக்கிடையே (இரண்டாக இருப்பினும்)

√ இரண்டு (அ) மூன்று பிரிவுகளுக்கிடையே.

√ மாவட்டத்திற்குள் ஏதாவது ஒரு விளையாட்டில் சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்கும்வகையில் அனைத்துப் போட்டிகளையும் நடத்துதல்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் 200 போட்டியாளர்கள் பங்கேற்கும் வகையிலும் ஓர் உறுதியான அடித்தளம் அமைத்திடும் வகையிலும் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டிகள் விளையாட்டில் ஆர்வமுள்ள நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளால் முதன்மையாக ஏற்று நடத்தப்படும். மாவட்ட விளையாட்டு அலுவலர், மாவட்ட அளவிலான நிலை–1 போட்டிகளை நடத்துவதில் முக்கிய பங்கு வகிப்பார்.

[2006 ஆகஸ்ட் 10

**நிலை 2 மாவட்ட அளவிலான போட்டிகள்**

**6.2 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்:**

கண்டறியப்பட்ட திறமை மற்றும் வளர்ந்துவரும் திறமைகளில் தொடர்ச்சியாக போட்டிகள் நடத்துவதன்மூலம், "போட்டிகளில் கலந்துகொள்ளும் மனப்பாங்கினை" வளர்க்க இயலும். சென்னையில் தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுகளில், போட்டிகள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருவதால், சிறப்பான பங்கேற்கும் ஆர்வம் அதிகமானதையும், போட்டியாளர்களின் முன்னேற்றத்தையும் அறிய முடிகிறது. அனைத்துவகை வயதினருக்கும் வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் அனைத்து மாவட்டங்களிலும் மாதம் ஒரு முறை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான போட்டிகள் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களின் திறனை அதிகரிக்கச் செய்யவும் மாபெரும் வாய்ப்பாக அமைகிறது. தற்போது அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் பிரபலமாக விளங்கும் விளையாட்டுகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும்வண்ணம் மாதந்தோறும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முப்பது மாவட்டங்களில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறுவர் சிறுமிகளுக்காக நடத்தப்பட்டன:

தடகளம், கூடைப் பந்து, கையுந்துப் பந்து, கால் பந்து, வளைகோல் பந்து, வாள்சண்டை, மேசைப் பந்து, டென்னிஸ், குத்துச் சண்டை, நீச்சல், டேக்வொன்டோ மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ்.

**6.3 அண்ணா சைக்கிள் போட்டி:**

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்குத் தனித் தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான அண்ணா சைக்கிள் போட்டி ஒவ்வொரு ஆண்டும் சுழற்சி முறையில் ஒரு மாவட்டத்திலிருந்து வெற்றிபெறுபவர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றது.



2006 ஆகஸ்ட் 10]

**6.4 அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள்:**

ஒன்று அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் நீச்சல் வீரர்களின் திறமைகளை அதிகப்படுத்தும் வகையில், அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தடகள விளையாட்டு வீரர்களுக்குப் பல்வேறு வயது பிரிவுகளில், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேசத் தரத்திலான செயற்கை ஓடுகள தளத்தில் பல்வேறு வயதுப் பிரிவினருக்குப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று, சென்னை வேளச்சேரியில் அமைந்துள்ள சர்வதேசத் தரம்வாய்ந்த நீச்சல் குள வளாகத்தில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அனைவரும் பங்கேற்கும் வகையிலான நீச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**6.5 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டுகள்:**

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள விளையாட்டுப் போட்டிகளுடன், புதியதாக ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள் சண்டை, குத்துச் சண்டை, நீச்சல், டேக்வொன்டோ, கைப் பந்து, டென்னிஸ், ஜூடோ, ரோடு சைக்ளிங், கடற்கரை கையுந்துப் பந்து மற்றும் செஸ் ஆகிய 12 விளையாட்டுகள், பள்ளிகளுக்கிடையேயான குடியரசுதின விளையாட்டுப் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இப்புதிய விளையாட்டுகள் நடத்துவதற்கான விதிமுறைகளைக் கற்றுக்கொள்ளும் வகையில் மாநிலம் முழுவதும் இவ்விளையாட்டு நுணுக்கங்கள் தெரிந்த வல்லுநர்களால், உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் உடற்கல்வி இயக்குநர்களுக்கும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரகமும் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இணைந்து இப்புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன.

**6.6 உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள்:**

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், 6,7 மற்றும் 8 ஆம் வகுப்பு சிறுவர்/சிறுமி ர்களின் உடற்திறனைக் கண்டறிய, வேகமாக ஓடுதல் (Speed), அதிகமாகத் தாக்குப்பிடிக்கும் திறனைக் கண்டறிதல் (Endurance), உடல்வலிமை கண்டறிதல் (Strength), உந்துதிறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனைக் கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நட[illegible]

227423

தேர்வுகளில் ஒரு தேர்வில் 10-க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10-க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல், குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100 மீ., 200 மீ., 400 மீ. ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகளப் பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கண்டறிய, போட்டிகளை நடத்தின. அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, முதல் இரண்டு இடத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு, அவர்களின் திறமைகளைக் கண்டறிய, மண்டல அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. சர்வதேச அளவில் திறமை வாய்ந்த சிறார்களைக் கண்டறியும்பொருட்டு ஒரு விரிவான தேர்ந்தெடுக்கும் முயற்சி நடைமுறையில் மேற்கொள்ளபட்டு வருகிறது.

**நிலை-3 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்**

**6.7 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விளையாட்டுகளில் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகள்:**

பள்ளி மாணவ/மாணவிகளுக்கு ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள் சண்டை, குத்துச்சண்டை, நீச்சல், டென்னிஸ், கைப் பந்து, டேக்வொன்டா, ஜூடோ, ரோடு சைக்ளிங், கடற்கரை கையுந்துப் பந்து மற்றும் செஸ் ஆகிய விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாநில அளவிலான 21 போட்டிகள், மேலே குறிப்பிடப்பட்ட விளையாட்டுகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

**6.8 மாநிலக் கழகங்கள்மூலம் நடத்தப்படும், மாவட்டங்களுக்கிடையேயான மற்றும் மாநில அளவிலான போட்டிகள்:**

மாவட்டக் கழகங்கள் பங்குபெறும் வகையில், மாவட்டங்களுக்கிடையேயான போட்டிகள் மற்றும் மாநில சேம்பியன்ஷிப் போட்டிகள், மாநில விளையாட்டுக் கழகங்களால் நடத்தப்படுகின்றன.

**6.9 விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதிகள் இதர போட்டிகளில் பங்கேற்றல்:**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ், மூன்று விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் நான்கு





விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. அவ்விளையாட்டுப் பள்ளி/விடுதி மாணவ/மாணவியரின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் வகையில், போட்டிகளில் கலந்துகொள்வதை ஊக்குவிக்கவும், மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளிலும் மற்றும் இதர போட்டிகளிலும் விளையாட்டுப் பள்ளிகள்/விளையாட்டு விடுதிகள் பங்கு பெறுகின்றன.

**நிலை 4 தமிழ்நாட்டில் மாநில விளையாட்டுக் கழகங்கள்மூலம் நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகள்**

**6.10 தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்:**

சென்னையில் சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்கள் இருப்பதால், மாநில விளையாட்டுக் கழகங்கள், தேசிய விளையாட்டுப் போட்டிகளையும் மற்றும் இதர முக்கிய விளையாட்டுப் போட்டிகளையும் சென்னையில் நடத்த தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. இவ்வாறான சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்களில், விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன்மூலம், தமிழ்நாட்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இயலுவதோடு மட்டுமின்றி, ஏனைய விளையாட்டு வீரர்கள், போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்யும் மனப் பக்குவத்தினையும் வளர்க்க உதவுகிறது.

**6.11. அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகள்:**

அரசுத் துறைகளில் பணிபுரியும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தேர்வுப் போட்டிகளை நடத்தி, தமிழக அணியினைத் தேர்வு செய்கிறது. அகில இந்திய அளவில் சுழற்சி முறையில் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படுகின்ற, அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் சில விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கேற்கிறது.

**6.12. அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பு:**

இந்திய விளையாட்டுக் குழுமம், ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுகளில், 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி, அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. தேசியப் போட்டிகளில் பங்கேற்புக்கு முன், மாநில

அளவிலான தேர்வுப் போட்டிகளும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி முகாமும் நடத்தப்படுகின்றது.

### 6.13 தேசிய மகளிர் விளையாட்டு விழா பங்கேற்பு:

இந்திய விளையாட்டுக் குழுமம், மகளிர் பிரிவினரை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கும்வகையில் வயது வரம்பின்றி 13 விளையாட்டுப் பிரிவுகளில் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. தமிழக அணி இப்போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. இப்போட்டிகளில் பங்கு பெறுவதற்கான மாநில அணியினைத் தேர்ந்தெடுப்பதற்காக, ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தேர்வுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய விளையாட்டுக் குழுமம் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளைப் பல்வேறு மாநிலங்களில் நடத்தி வருகிறது. அவ்வாறு நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்கும் முன், மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

### 6.14 இந்திய பள்ளிகளில் விளையாட்டு இணையம் நடத்தும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்:

இந்திய பள்ளிகள் விளையாட்டு இணையம், ஒவ்வோர் ஆண்டும் (பல்வேறு வயது பிரிவுகளில்) சிறுவர் மற்றும் சிறுமிகளுக்காக பல்வேறு விளையாட்டுகளில், தேசிய பள்ளிகள் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது.

தமிழ்நாடு மாநில அணிகள் இப்போட்டிகளில் தொடர்ந்து கலந்துகொண்டு வருகின்றன. தேசியப் போட்டிகளில் பங்கேற்புக்கு முன், மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும், தேர்ந்தெடுக்கப்பட்டவருக்குப் பயிற்சி முகாமும் நடத்தப்பட்டு வருகின்றன.

### 6.15 சிறப்பு அகாடமியின் விளையாட்டு வீரர்கள் தேசிய அளவு போட்டிகளில் பங்குபெறுதல்:

சிறப்பு அகாடமியில் கண்டறியப்பட்ட சிறந்த விளையாட்டு வீரர்களை அவர்களின் தரத்தினை வெளிக்கொணர, தேசிய இணையங்கள் மற்றும் கழகங்கள்மூலமாக நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு சார்பாக, பங்குபெற வழிவகை செய்யப்படுகிறது.





## நிலை–5 சர்வதேச அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்

### 6.16 சென்னை ஓபன்:

டென்னிஸ் விளையாட்டில் இதுகாறும் சென்னையில் "டாடா ஓபன்" என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் ஐ.எம்.சி. (International Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து இந்தப் போட்டியை "சென்னை ஓபன்" (CHENNAI OPEN) என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகளை ஒவ்வோர் ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு (2006) ஜனவரி 2 முதல் 8 வரை சென்னை ஓபன் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் சர்வதேசத் தரத்தை ஒட்டிய மற்றும் சர்வதேச அளவில் மதிப்பு மிக்க விளையாட்டுப் போட்டியாகும். இந்தப் போட்டிகளில், டென்னிஸ் விளையாட்டில் புகழ்பெற்ற சேம்பியன் டென்னிஸ் விளையாட்டு வீரர்களும், மற்றும் அப்போட்டிகளில் வளர்ந்து வருகின்ற விளையாட்டு வீரர்களும், சர்வதேச அளவில் தங்களுக்கென ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்ள இயலும். நம் நாட்டின் தலைசிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள். இவ்வாறு விளையாட்டு வீரர்கள் பங்கேற்பது, சென்னை டென்னிஸ் விளையாட்டு வீரர்களின் ரசிகர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பாகும். சென்னையில் நடத்தப்படுகின்ற டென்னிஸ் போட்டிகள், உலகம் முழுவதும் தொலைகாட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பப்படுவதால், அதனைப் பார்க்க பார்வையாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இதனால் உலகத்தின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்கள், இப்போட்டியில் பங்கேற்க ஆர்வமாய் உள்ளனர். இப்போட்டிகள் சர்வதேச அளவிலான விளையாட்டு சானல் (Channel) மூலம் உலகளாவ ஒளிபரப்பப்பட்டன. அதனால், சென்னை ஓபன் என்ற பெயரிலான டென்னிஸ் போட்டிகளின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 10

## அத்தியாயம் – 7

### உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு, தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

**நிலை–1 & 2**

**7.1. விளையாட்டு உதவித் தொகை திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், 17 விளையாட்டுப் போட்டிகளில், தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் தேசிய அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒருமுறை மட்டும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால், ரூ.5,000/–ம், கல்லூரி/பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6,500/–ம் வழங்கப்பட்டு வருகிறது.

**நிலை–2**

**7.2. நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்:**

நலிந்த நிலையிலுள்ள, கடந்தகாலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.2,000/–க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/– வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

**நிலை–3**

**7.3. விளையாட்டு வீரர்கள் நல நிதி:**

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால், அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும்பொருட்டு, விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 10]

**7.4. திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்:**

தற்போது காவல் துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீடுமுறை, ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

**நிலை–4**

**7.5. முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது:**

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு தலா ரூ.1 இலட்சம் பண முடிப்பும் மற்றும் பாராட்டுப் பத்திரமும், சம்பந்தப்பட்ட விளையாட்டினைப் பிரதிபலிக்கும் பட்டயமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. இதுவரை சர்வதேசப் போட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த 12 தலைச்சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

**7.6. பயிற்றுநர்களுக்கும், உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது:**

ஒவ்வோர் ஆண்டும் சிறந்த முறையில் பணியாற்றி, தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் இரு பயிற்றுநர்களுக்கும் மற்றும் இரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது வழங்கப்படும். ஒவ்வொரு நபருக்கும் ரூ.1 இலட்சம் பரிசுத் தொகையும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

**நிலை–5**

**7.7. உயரிய ஊக்கத் தொகை:**

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள், 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும்பட்சத்தில், வீட்டுமனை மற்றும் அடுக்குமாடி வீடு வழங்குவதற்குப் பதிலாக, உயரிய ஊக்கத் தொகை வழங்கவும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள்

[2006 ஆகஸ்ட் 10

பெறும்பட்சத்தில் அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும், அரசு, அரசாணை (நிலை) எண் 5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள்: 24-1-2002-ல் கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கியுள்ளது:-

**போட்டிகள் மற்றும் வழங்கப்படும் ஊக்கத் தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| இனம் | விளையாட்டுகள்/ வரிசை கிரமம் | உயரிய ஊக்கத் தொகையின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | ஒலிம்பிக்<br>ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100.00 | 50.00 | 25.00 |
| 2. | ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |
| 3. | காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |

(ரூபாயில்)

| இனம் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி | | | குழுப் போட்டி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண் கலம் | தங்கம் | வெள்ளி | வெண் கலம் |
| 4. | தெற்காசிய / தேசிய விளையாட்டுப் போட்டிகள் | 1,00,000 | 50,000 | 25,000 | 20,000 | 15,000 | 10,000 |
| | | | | | ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | | |



2006 ஆகஸ்ட் 10]

# அத்தியாயம்-8

## இளைஞர் நலத் திட்டங்கள்

### 8.1. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் மற்றும் இளைஞர் மன்றங்களுக்குப் புத்துயிர்ப்பு அளித்தல்:

2000-2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, செயல்படுத்தப்பட்ட விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் மற்றும் இளைஞர் மன்றங்களுக்குப் புத்துயிர்ப்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, கிராமப் பஞ்சாயத்துக்களில் 3,850 விளையாட்டு மையங்களும், நகரப் பஞ்சாயத்துக்களில் 611 விளையாட்டு மையங்களும், 102 நகராட்சிகளில் 510 மையங்களும், 6 மாநகராட்சிகளில் 30 மையங்களும் ஆக மொத்தம் 5,001 விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் தோற்றுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திலும் உள்ள ஊரக இளைஞர்கள் விளையாட்டுகளில் பங்கேற்கும் வண்ணம், ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.25,000/-க்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும். இந்த மையங்கள் இளைஞர் மன்றங்களால் பொறுப்பேற்று நடத்தப்படும். இதற்காக இம்மையங்களில் இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்படும். இந்த இளைஞர் மன்றங்கள் ஊரக இளைஞர்களின் ஓய்வு நேரத்தை செவ்வனே செலவிட உதவுவதோடு அவர்களிடையே, தலைமைப் பண்புகளை வளர்க்கவும் மற்றும் சமூக நலத் திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்திடவும் உதவும். இந்த விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் மற்றும் இளைஞர் மன்றங்களைத் தோற்றுவிக்க, மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும்.

### 8.2. இளைஞர் விடுதிகள்:

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப்பற்றித் தெரிந்துகொள்ளவும், இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது, அவர்களுக்குக் குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு, இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

[2006 ஆகஸ்ட் 10

இது மைய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்காக முழு அளவில் மேம்படுத்தப்பட்ட நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம், தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 4 நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**8.3. இளைஞர் விழா:**

மைய அரசு ஒவ்வோர் ஆண்டும் இளைஞர் விழாவினை நடத்தி வருகிறது. தமிழ்நாடு அணி பல போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத பல கலை நிகழ்ச்சிகளிலும் ஒவ்வோர் ஆண்டும் பங்கேற்கிறது.

**8.4. இளைஞர் முன்னேற்றத் திட்டங்கள் மற்றும் பயிற்சிக்கு நிதி உதவி அளித்தல்:**

இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை வளர்த்திடவும், வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றிட, சிறுதொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிடவும்,

1. தொழிற்கல்வித் திட்டம்,
2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்,
3. கண்காட்சித் திட்டம்.

ஆகிய திட்டங்களில் பலவித பயிற்சிகளை மேற்கொள்ள, மைய அரசு நிதி உதவி அளித்து வருகிறது. பல்வேறு வணிகங்கள் மற்றும் தொழிற்கல்வி பற்றிய குறுகியகால அளவிலான பயிற்சிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படுகிறது. 15-35 வயது வரம்பிலுள்ள



2006 ஆகஸ்ட் 10]

அனைவரும் இத்திட்டத்தில் பங்குபெறத் தகுதியுடையவராவர். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பப் பயிலகங்கள், பல்கலைக்கழகங்கள், நேரு யுவ கேந்திர சங்கேதன், சங்கங்கள் பதிவு சட்டம் மற்றும் பொது பொறுப்பாட்சி நிறுவனங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. அவ்வாறான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள், மேற்படி நிதி உதவி பெற்றிட, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவி புரிகிறது.

இளைஞர்களின் பயிற்சி மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள், மைய அரசின் நிதி உதவி பெறுவதற்கான மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படும் கருத்துருக்கள், மைய அரசுக்குத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு, நேரு யுவ கேந்திரா மூலமாகவும் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

[2006 ஆகஸ்ட் 10

## அத்தியாயம் – 9

## நாட்டு நலப் பணித் திட்டம்

நாட்டு நலப் பணித் திட்டம், பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், தொழில்நுட்பப் பயிலகங்களிலும், தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மைய அரசும், மாநில அரசும் நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு 7 : 5 என்ற விகிதாசாரத்தில் மானியம் வழங்குகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் 2,78,000 தொண்டர்கள் உள்ளனர். 2006–2007 ஆம் ஆண்டில் இத்தொண்டர்களின் எண்ணிக்கை, 3,05,800 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இவர்களில், 1,52,900 தொண்டர்கள் 2006–2007 ஆம் ஆண்டில் சிறப்பு முகாம்களில் பங்கேற்பார்கள். தற்போது, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் 3,058 நாட்டு நலப் பணித் திட்ட அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.660.77 இலட்சம் நாட்டு நலப்பணித் திட்ட மானியமாக வழங்கப்பட்டது. இத்தொகையில், ரூ.385.45 இலட்சம் மைய அரசின் பங்கும், ரூ.275.32 இலட்சம் மாநில அரசின் பங்கும் ஆகும்.

### செயல்பாடுகள்

**கிராமப்புறங்களில் கழிப்பறைகள் கட்டுதல்:**

கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் உள்ள தொண்டர்கள், கிராமப்புறங்களில் கழிப்பறைகள் கட்டுவதற்கு மாவட்ட நிர்வாகங்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர். இந்தச் சமூக நோக்கத்தை ஏற்றுக்கொள்ள, செயல் நோக்கப் பேரணிகள் மற்றும் மனித சங்கிலி போன்றவை ஏற்பாடு செய்யப்படுகின்றன.

**சமுதாயக் கலவரங்களைத் தடுத்தல்:**

கல்லூரிகளில் உள்ள நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் சமுதாயக் கலவரங்களைத் தடுப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். சமுதாயக் கலவரங்கள் ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து, நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள், அங்கு சமுதாய நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றனர். சென்னை, பாரதிதாசன், பாரதியார், மதுரை காமராசர், மனோன்மணீயம் சுந்தரனார், பெரியார் மற்றும் அண்ணா பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பப் பயிலக இயக்ககத்தில் உள்ள நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் சிறப்பு ஊரக முகாம்களில் குறிப்பிடும்படியான சமூக நல்லிணக்கப் பணியை ஆற்றி வருகின்றனர். கலவரப் பகுதிகளில் சமூக நல்லிணக்கத்தையும் மற்றும் தோழமை உணர்ச்சியையும் ஏற்படுத்துவதில் சிறப்பு முகாம்களில் குறிப்பிடும்படி செயல்படுகின்றனர்.



2006 ஆகஸ்ட் 10]

**குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு:**

பணிகளில், சிறார் பங்கு பெறும் பகுதிகள் அறியப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் சிறார்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் மாவட்ட நிர்வாகத்தின் வாயிலாக நடத்தப்பட்டு, குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளன. சாலையோர சிறுவர்கள் தத்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டு, கல்வியறிவு புகட்டப்பட்டு வருகிறது.

**அனைவருக்கும் கல்வி:**

நாட்டு நலப் பணித் திட்டம், தமிழ்நாட்டில் ஏற்கெனவே முழுமையான கல்வி இயக்கத்தைத் தோற்றுவித்துள்ளது. நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் மற்றும் அலுவலர்கள் தற்போது மாநிலத்தில் நடைபெறும் **"அனைவருக்கும் கல்வி"** என்ற திட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பெறுகின்றனர். கல்வி அறிவு அற்றவர்களைக் கண்டறிவது மட்டுமல்லாமல், கல்வி புகட்டுவதிலும் நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள், மிகுந்த பங்காற்றி வருகின்றனர். நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்களின் இந்த முனைப்பான செயல்களின்மூலம், உத்தேசமாக 84,521 கல்வியறிவு இல்லாதவர்களுக்குக் கல்வி புகட்டப்பட்டது.

**மகளிர் மேம்பாடு:**

மாநிலத்தில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும், கருத்தரங்குகள், பணிப்பட்டறைகள், பேரணிகள் இவற்றின் வாயிலாக தத்தெடுக்கப்பட்ட கிராமங்களிலுள்ள மக்களிடையே, மகளிர் மேம்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கணினிப் பயிற்சி, தொழில் பயிற்சி, தொழில் முனைவு திறன் மேம்பாடு குறித்த நிகழ்வுகள் நம் மாநிலத்தில் உள்ள மக்களிடையே திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

[2006 ஆகஸ்ட் 1

## அத்தியாயம் - 10

### தேசிய மாணவர் படை

**1. தொடக்கம்:**

தேசிய மாணவர் படை இயக்ககம், நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய மாணவர் படை (எண் 31/1948) சட்டத்தின்கீழ், 16-07-1948 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

**2. நோக்கங்கள்:**

தேசிய மாணவர்படையின் நோக்கங்கள் வருமாறு:

(a) இளைஞர்களிடையே நற்பண்பு, துணிவு, தோழமை உணர்வு, ஒழுக்கம், தலைமைப் பண்பு, சமயசார்பின்மை, வீரதீரச் செயல் மற்றும் சுயநலமில்லாத தொண்டுகளின் உயர் நோக்கங்களை வளர்த்து, அவர்களை ஒரு நல்ல குடிமகன் ஆக்குதல்.

(b) ஒழுங்குமுறையில் பயிற்சி பெற்று சிறந்த செயல் நோக்குடைய இளைஞர்களின் மனித வளத்தைக் கொண்டு, அவர்கள் வாழ்வின் அனைத்து நடைமுறைகளிலும் தலைமைப் பொறுப்பு வகிக்க வகை செய்து, அவர்களை நாட்டுப் பணிக்காக எப்பொழுதும் கிடைக்கச் செய்தல்.

(c) இளைஞர்கள், ஆயுதப்படையில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்துதல்.

**3. நிர்வாகம்:**

தேசிய மாணவர்படை அமைப்பு மைய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின்மூலமாக நிர்வகிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படை நிர்வாகத்தை இலகுவாகவும், திறமையாகவும் நிர்வகிப்பதற்காக, இம்மாநில அரசு, துறைத் தலைவருக்கான அதிகாரத்தை, தேசிய மாணவர் படையின் துணைத் தலைவருக்கு வழங்கியுள்ளது.

**4. வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம்:**

தமிழக அரசு 2006-2007 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தேசிய மாணவர் படை இயக்ககத்திற்கு ரூ.16.06 கோடி நிதியொதுக்கியுள்ளது.



2006 ஆகஸ்ட் 10]

**5. விருதுகள்:**

புதுடெல்லியில், 2006 ஆம் ஆண்டு ஜனவரியில், குடியரசு தின முகாமின்போது நடைபெற்ற "இந்திய அளவிலான - இயக்ககங்களுக்கு இடையிலான வீரதீர/போட்டிகளில்" 16 மாநிலங்களைச் சேர்ந்த இயக்ககங்களில், தமிழ்நாட்டின் தேசிய மாணவர் படை இயக்ககம் மூன்றாவது இடத்தைப் பெற்றது.

**6. ஊக்க உதவித் தொகைகள்:**

இம்மாநிலத்தின் தேசிய மாணவர்படை வீரர்களுக்கு தமிழக அரசு, பின்வரும் உதவித் தொகைகளை அளித்து வருகிறது. அவையாவன:

படிப்பு உதவித் தொகையாக, தேசிய மாணவர் படை பயிற்சிப் பிரிவு மாணவர்கள் 80 பேருக்கு ஒவ்வொருவருக்கும், ஆண்டுக்கு ரூ.1.200/-ம் மற்றும் தேசிய மாணவர் படை இளநிலை பயிற்சிப் பிரிவு மாணவர்கள் 90 பேர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.600/- அளிக்கப்படுகிறது.

குடியரசு தின விழா முகாம் மற்றும் குடியரசு தினத்தைச் சார்ந்த முகாம்களில் பங்கெடுத்துக்கொள்ளும் தேசிய மாணவர் படை பயிற்சி மாணவர்களுக்கு, ரொக்க ஊக்க உதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ.3.17 இலட்சம் வரையில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் இளநிலை ஆசிரியர்கள்/பட்ட மேற்படிப்பு ஆசிரியர்கள் ஆகியோர் தேர்வின்/நியமனத்திற்கான வாய்மொழித் தேர்விற்குரிய 12 மதிப்பெண்களில், தேசிய மாணவர் படை நடவடிக்கைகளில் கலந்துகொண்டவர்களுக்கு ½ மதிப்பெண் ஒதுக்கப்படுகிறது.

**7. முதலமைச்சருக்கான அணிவகுப்பு நடத்துதல்:**

முதலமைச்சருக்கான அணி வகுப்பு, சென்னையில், 3-2-2006 அன்று நடத்தப்பட்டது. அவ்விழாவின் போது 2005-2006 ஆம் ஆண்டிற்கான பல பிரிவுகளுக்கிடையிலான போட்டிகளில் "முதலமைச்சரின் பதாகை"-க்கான பரிசு திருச்சிராப்பள்ளி, தலைமையிட தேசிய மாணவர் படைப் பிரிவிற்கு அளிக்கப்பட்டது.

[2006 ஆகஸ்ட் 10

**8. படைப் பயிற்சி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை:**

படைப் பயிற்சி மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பின் வருமாறு:—

| | | |
|---|---|---|
| இளநிலையினர் (பள்ளி அளவிலான மாணவர்கள்) | .. | 67,211 |
| இளநிலைப் பிரிவு (பள்ளி அளவிலான மாணவிகள்) | .. | 8,097 |
| முதுநிலையினர் (கல்லூரி அளவிலான மாணவர்கள்) | .. | 21,459 |
| முதுநிலைப் பிரிவு (கல்லூரி அளவிலான மாணவியர்கள்) | .. | 6,741 |
| மொத்தம் | .. | 1,03,508 |

**நிறைவுரை:**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நற்பணிகள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. நாட்டின், விளையாட்டு மற்றும் இளைஞர் நலனில் தமிழ்நாடு உன்னத நிலையினை அடையும்வகையில், இளைஞர்களுக்கான பல திட்டங்களை நிறைவேற்றுவதில் கடுமையாக உழைக்க இத்துறை முயற்சித்து வருகிறது.



2006 ஆகஸ்ட் 10]

# இணைப்பு II

(339 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

## 1. வனத் துறை

**முன்னுரை**

வனங்கள், நாட்டிற்குச் சூழலியல் பாதுகாப்பினை முழுமையாக வழங்குவதுடன், பல்வேறு வகையான நிலப் பயன்பாட்டினைப் பூர்த்தி செய்யும் இயல்பான மற்றும் நிலையான நிலப் பயன்பாட்டு அமைப்பாக இருந்து வருகிறது. வனங்கள், நீர் மற்றும் மண் வளங்களைப் பாதுகாப்பதுடன், சுற்றுச்சூழலையும் நிலைப்படுத்துகின்றன. வனச்சூழல் அமைப்பின் நிலைத்தன்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கிய பகுதியாக விளங்குகிறது. தரங்குன்றிய வனங்கள், நீர் ஆதாரம், விவசாயம், பல்லுயிரினப் பரவல், சூழலியல், தட்பவெப்ப நிலை மற்றும் மக்கள் நல்வாழ்விற்கு ஊறுவிளைவிப்பது மட்டுமின்றி, வனங்களையொட்டி வாழும் மலைவாழ் மக்கள் மற்றும் பிற சமுதாயத்தினரையும் பாதிக்கின்றன. வனங்களை முறையாகப் பாதுகாக்கத் தவறினால், வனங்களைச் சார்ந்து வாழும் பெரும்பான்மையான மக்களின் உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு நிலைகுலைந்துவிடும். விவசாயத்தின் வெற்றியும், கிராமப்புறச் செழுமையும் போதுமான வனப்பரப்பிற்கு இணக்கமான ஈரக நில அமைப்பினைச் சார்ந்துள்ளன. வனங்களுக்கு உள்ளே மற்றும் வெளியே அமைந்துள்ள வன மற்றும் மர ஆதாரங்கள், மக்களுக்கும், நாட்டிற்கும் ஏராளமான பொருட்களையும், சேவைகளையும் வழங்கி வருகின்றன. எனவே, இத்துறையானது மாநிலத்திலுள்ள அனைத்து சமுதாயப் பிரிவினரின் ஆர்வத்தைத் தூண்டி வருகிறது.

### 1.1. வனக் கொள்கை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், மாநிலக் கொள்கையின் நெறிமுறைக்கோட்பாட்டின்கீழ், பிரிவுகள் 48A மற்றும் 51A(g)-ல் சுற்றுப்புறச் சூழ்நிலை, வனம், வன உயிரினம் ஆகியவற்றைப் பாதுகாத்தலும், வனங்கள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவது தவிர, உயிரினங்களிடம் பரிவு காட்டுவதும், மாநிலத்தின் மற்றும் அனைத்து குடிமக்களின் கடமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூழலியல் நிலைப்படுத்துதல், மனித, விலங்கு மற்றும் உயிர்ச்செடி போன்ற அனைத்து உயிரினங்களின் வாழ்விற்கு முக்கியமான வளிமண்டல சமன்பாடுடன் சூழலியலை நிலைநிறுத்திப் பராமரிப்பது, வனக் கொள்கையின் முதன்மையான குறிக்கோளாகும். நேரடிப் பொருளாதாரப் பயன்களைப் பெறுவது இக்குறிக்கோளுக்கு இணங்கக்கூடிய ஒன்றாகும். தேசிய வனவியல் செயல்திட்டம், ஒருங்கிணைந்த வனவளர்ச்சிக்குக் கீழ்வரும் அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கிறது:—

1. வன ஆதாரங்களைப் பாதுகாத்தல்
2. வன உற்பத்தியைப் பெருக்குதல்
3. வனப் பொருட்களின் தேவையைக் குறைத்தல்
4. வனக் கொள்கை மற்றும் கட்டமைப்பை வலுப்படுத்தல்
5. வனப் பரப்பை விரிவுபடுத்துதல்

இந்தியாவிலுள்ள வனவியல் துறை, திட்டமிடுதலில் மேற்குறிப்பிட்ட அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மாநில வன மேலாண்மையின் அடிப்படைக் குறிக்கோள்கள், தேவைகள் மற்றும் செய்முறைகளை நிர்ணயிக்கும் தேசிய வனக் கொள்கை, 1988-ஐப் பின்பற்றி, மாநிலத்திலுள்ள வனங்கள் மேலாண்மை செய்யப்படுகின்றன. தேசிய வனக் கொள்கையின் அடிப்படையில் மாநில வனக் கொள்கையை உருவாக்குவதற்கான கருத்துரு இறுதிக்கட்ட பரிசீலனையில் உள்ளது. சுற்றுச்சூழல் நிலைத் தன்மை, பராமரிப்பு, வனப் பாதுகாப்பின்மூலம் சூழலியல் சமன்பாட்டு மீட்பு, வனப் பரப்பு மேம்பாடு மற்றும் பெருக்கம் போன்றவற்றினை உணர்த்தும் வகையில் தேசிய வனக் கொள்கையின் குறிக்கோள்கள், செயல்பாடுகள்



மற்றும் மேலாண்மை அணுகுமுறைகள் அமைந்துள்ளன. பெரும்பான்மையாக நிறுவனங்கள், சமூகப் பிரிவுகள் மற்றும் அமைப்புகளை ஈடுபடுத்தி, பன்முக ஒழுங்குமுறை மற்றும் பன்முகப் பரிமாண வழிகளைத் தழுவும்வகையில் இன்றைய வனவியல் அமைந்துள்ளது.

### 1.2. தமிழகத்தின் வனப் பரப்பு:

தமிழ்நாட்டில், 22,877 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வனங்கள் அமைந்துள்ளன. இது, தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பளவில், 17.59 விழுக்காடாகும். 1988 ஆம் ஆண்டைய தேசிய வனக் கொள்கையில் உகந்த அளவு 33.33 விழுக்காடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தட்பவெப்ப நிலை, இடஅமைப்பியல், மண் வளம், நீர் ஆதாரங்கள் மற்றும் உயிரினத் தாக்கம் ஆகியவற்றின் மாறுபாட்டினால் வெவ்வேறு வனச் சமுதாயங்கள் எனப்படும் பல்வேறு வன வகைகள் ஏற்பட்டிருக்கின்றன.

மாநிலத்தில், ஈரப் பசுமை மாறாக் காடுகள் முதல் நனைப்பீர இலையுதிர்க் காடுகள் வரையிலும், உலர் இலையுதிர்க் காடுகள்; சோலைக் காடுகள், புல்நிலங்கள் மற்றும் புதர்க் காடுகள் போன்ற பல்வேறு வன வகைகள் அமைந்துள்ளன. சந்தனம், தேக்கு, செம்மரம் போன்ற விலைமதிப்புள்ள மரங்கள் மற்றும் புலி, யானை, சிங்கவால் குரங்கு, சாம்பல் நிற அணில் போன்ற அரிய வன விலங்குகள் மற்றும் பல்வேறு மூலிகைச் செடிகள் தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் காணப்படுகின்றன.

எனவே, வனாந்திரப் பாதுகாப்பு, சூழலியல் வேற்றுமை மற்றும் செழிப்பான தாவர வகைகள் போன்றவற்றைப் பாதுகாக்குமாறு மக்களை ஊக்குவிப்பதைத் தமிழ்நாடு கட்டாய நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மாநில வனச் சட்டம், 1882, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 மற்றும் அவற்றின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகள், தமிழ்நாடு வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வன மற்றும் வன உயிரின மேலாண்மைக்கான சிறந்த அறிவியல் ரீதியான கொள்கைகள், தொன்றுதொட்டு இருந்து வரும் புலமை, புதிய சமூகப் பொருளாதார மற்றும் சூழலியல் வகைகள் போன்ற மேலாண்மை செயல்முறைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

**1.3. மாநில வனக் கொள்கை:**

வன மேலாண்மைக்குப் புதிய கொள்கைகளும், அணுகுமுறைகளும் அவசியமாகும். இக்கொள்கைகள் சூழலியலை நிலைநிறுத்துவதாகவும், சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், பொருளாதார ரீதியில் சாத்தியமானதாகவும் இருக்க வேண்டும். விவசாயிகளின் வருமானப் பெருக்கம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு போன்றவற்றில் இத்துறையின் பங்கு பெருகி வருவதால், வனவியல் துறை புதிய சவால்களை எதிர்நோக்கியுள்ளது. வனங்களின் மீதான அழுத்தத்தினைத் தடுத்து நிறுத்துதல், தரங்குன்றி வருவதைத் தடுத்தல், கவனமான கொள்கை அணுகுமுறைகள்மூலம் நிலையான வளர்ச்சி போன்ற செயல்பாடுகளினால் வனங்களை ஒட்டி வாழ்வோர் மற்றும் பழங்குடியினர்மூலம் வலுவான கிராமப்புற வளர்ச்சியினைக் கொண்டுவர முடியும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சூழலியல் சமன்பாடு மற்றும் மக்களின் தேவைகளைத் தொடர்ந்து பூர்த்தி செய்வதே இந்த 2006–07 ஆம் ஆண்டிற்கான மாநில வனக் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். வனத் துறைக்கும், கிராமச் சமுதாயத்திற்கும் உள்ள உறவை முறைப்படுத்துவதே, கூட்டு வன நிர்வாகத்தின் முக்கியக் கொள்கையாகும். கிராம வனக் குழுக்கள் வனங்களைப் பாதுகாத்து, நிர்வகித்து, அதற்கான வனப் பயன்களைப் பெறுகின்றன. கிராம சமுதாயத்திற்குத் திட்டமிட, ஆளுகை செய்ய அதிகாரம் அளித்தமை, இம்மாநிலத்தின் வன ஆதார ஆளுகைக்கு ஒரு புதிய திருப்பத்தைக் கொடுத்துள்ளது.

**1.4. குறிக்கோள்கள்:**

தமிழகத்தின் வனங்கள் பின்வரும் முக்கியக் குறிக்கோள்களுடன் நிர்வகிக்கப்படுகின்றன:–

- ➢ சூழலியல் சமநிலைத் தன்மையினை மீட்டு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையினை உறுதிப்படுத்துதல்;
- ➢ மாநிலத்தின் வனம்/மரங்கள் பகுதியை அதிகப்படுத்துதல்; அதன் தரத்தை மேம்படுத்துதல்;
- ➢ அறிவியல் ரீதியான மேலாண்மை மூலம் விரிவான பல்லுயிரினப் பரவலைப் பாதுகாத்து, செம்மையான வன வளத்திற்கு இருப்பிட நிலைகளை மேம்படுத்துதல்;





- ➢ ஆறு, ஏரி மற்றும் நீர்த்தேக்கங்களில் மண் அரிமானத்தைத் தடுத்து, நீர்ப்பிடிப்புப் பகுதிகளைப் பாதுகாத்து மேம்படுத்துதல்;
- ➢ நீர்ப்பிடிப்பு மேம்பாடு மற்றும் கூட்டு வன நிர்வாக முறையில் மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான விறகு, கால்நடைத் தீவனம், மரங்களல்லாத வனப் பொருட்கள் மற்றும் அவசியத் தேவைகளைக் கூடிய அளவு பூர்த்தி செய்தல்;
- ➢ ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கப் பணிகள்மூலம் வனத்திற்கு வெளியே வனப் பரப்பினை அதிகப்படுத்துதல்; வன வகைகளின் நிலைகளை உயர்த்துதல் மற்றும் திட்டமிடுதல், விளக்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் உதவி செய்தல் போன்ற நடவடிக்கைகள்மூலம் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் வன வளங்களை வெற்றிகரமாகப் பாதுகாப்பதை உணர்த்துதல்;
- ➢ செம்மையான வாழ்க்கைத் தொழில்களுக்கு ஆதாவளித்து, சந்தை அமைப்புகளை மேம்படுத்தி, வனஞ்சார்ந்த தொழில்களைப் பெருக்குதல்;
- ➢ வனங்களுக்குள் வாழும் பழங்குடியின மக்கள் தொன்றுதொட்டு பயன்படுத்தும் வனப் பொருட்களை அவர்களுக்குக் கிடைக்குமாறு செய்தல் மற்றும் அவர்களை வன மேலாண்மையில் துணைவர்களாக்குதல்;
- ➢ வெகுதொலைவிலுள்ள கிராமங்களின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மரபுசாரா மாற்று எரிசக்தி ஆதாரங்களை உருவாக்குதல்;
- ➢ பன்முகக் குறிக்கோள்களை அடையும் பொருட்டும், வனங்களை அறிவியல் ரீதியில் மேலாண்மை செய்யும் பொருட்டும், வளர்ச்சி, விளைச்சல் மற்றும் உற்பத்தி அமைப்புகளை வலுப்படுத்துதல்;
- ➢ புயல், சுனாமி போன்ற இயற்கைச் சீரழிவுகளிலிருந்து பாதுகாக்கக் கடலோரச்சூழல் அமைப்புகளை நிலைநிறுத்துதல்.

[2006 ஆகஸ்ட் 10

**1.5. செயல்முறை:**

மாநிலத்தில், வனத்தை அடிப்படையாகக் கொண்ட மேம்பாட்டினை உருவாக்குவதற்காக, கீழே விவரிக்கப்பட்டுள்ள செயல்முறைகளை மேற்கொள்வதன்மூலம் புதிய வழிகளை உருவாக்கவும், புதிய உறவுகளை ஏற்படுத்தவும், வேகமாக மாறிவரும் சமூகச்சூழல் மற்றும் வனத்தேவைகளுக்கேற்ப செயல்படவும் வனக் கொள்கையின்கீழ் திட்டமிடப்பட்டுள்ளது:-

**1.5.1. பசுமைப் பரப்பினை அதிகப்படுத்துதல்:**

மத்திய திட்டக்குழுவானது, 2007-க்குள், நாட்டின் வனம்/மரங்கள் பரப்பினைப் புவியியல் பரப்பில் 25 விழுக்காடாகவும், 2012-க்குள் அதன் அளவை 33.33 விழுக்காடாகவும் (தேசிய வனக் கொள்கை, 1988-ன் படி) அதிகப்படுத்தப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. மாநில வனப் பரப்பினை அதிகப்படுத்த, சீரிய முயற்சியாக, காப்புக் காடுகளிலும், அவற்றின் வெளிப் பகுதிகளிலும் மரங்களை நட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. டேராடூனிலுள்ள இந்திய வன அளவை நிறுவனத்தின் 2003 ஆம் ஆண்டின் மாநில வன அறிக்கையின்படி, தமிழகத்தின் மொத்த புவியியல் பரப்பில் வனம்/ மரங்களின் மொத்தப் பரப்பளவு 21.25 விழுக்காடு; அதாவது 27,634 சதுர கிலோ மீட்டர் ஆகும். வன வகைகளின் தரத்தினை மேம்படுத்திச் சூழலியலை நிலைநிறுத்தவும், வனங்கள் வளமையாக இருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1.5.2. ஒருங்கிணைந்த இயற்கை வன மேலாண்மை, கூட்டு வன நிர்வாகத்தின்மூலம் வனங்களை மீட்டல் மற்றும் உற்பத்தி முன்னேற்றம்:**

தமிழ்நாட்டில் கூட்டு வன நிர்வாகம், தனது முத்திரையைப் பதித்துள்ளது. மொத்தத்தில், வனப் பரப்பின் தரம் மற்றும் அளவுகளில் இயல்பான முன்னேற்றமும், பொதுவாகவே வனவியல் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் காணப்படுகிறது.

இந்த அனுபவத்தைக்கொண்டு, கூட்டு வன நிர்வாகத்தைச் சார்ந்த கிராம வனக் குழுக்களின்மூலம், இதே அணுகுமுறையில் வன மேலாண்மை தொடரப்படும். மக்கள் பங்கேற்பு அணுகுமுறை மற்றும் வனம் சார்ந்த உள்ளூர் சமுதாயத்தின்மூலம் வன வளர்ச்சிக்கு வித்திடுவது, கூட்டு வன நிர்வாகத்தின் அணுகுமுறையாக உள்ளது. வன ஆதாரங்களின் பெருக்கம், மாற்று வேலைவாய்ப்பு



2006 ஆகஸ்ட் 10]

வழிவகைகளின்மூலம் வனங்களின் மீதான தாக்கத்தினைக் குறைத்தல், சமுதாய வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் மற்றும் கூட்டு வன நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள வனம் சார்ந்த சமுதாயத்தினரிடையே உரிமை குறித்த தாக்கத்தினை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளின்மூலம் வெளிப்புற மற்றும் சுற்றுச்சூழல் தேவைகள் சமநிலைப்படுத்தப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை, நீலகிரி உயிர்ச்சூழல், மன்னார் வளைகுடா உயிர்ச்சூழல், கடலோரச் சதுப்பு நிலக் காடுகள் மற்றும் கடல் சார்ந்த பகுதிகள் போன்ற தலைசிறந்த மற்றும் தனித் தன்மை வாய்ந்த சூழலமைப்புகளைத் தமிழ்நாடு கொண்டுள்ளது. இப்பகுதிகளின் ஒருங்கிணைந்த சூழலியல் நிலைத் தன்மைக்காகச் சிறப்பு மேலாண்மை வழிமுறைகளும், செயல்முறைகளும் அவசியமாகின்றன.

**1.5.3. பல்லுயிரினப் பரவல் பாதுகாப்பு, நிலப் பரப்பு மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மேலாண்மை:**

பாதுகாக்கப்பட்ட பகுதி மேலாண்மை மற்றும் வன உயிரின மேம்பாட்டில், தமிழ்நாடு முதன்மையான மாநிலமாகத் திகழ்கிறது. இம்மாநிலத்தின் மொத்த வனப் பரப்பில் 3,669.18 சதுர கிலோ மீட்டர் அல்லது 16.03 விழுக்காடு வன உயிரினங்களின் பாதுகாப்புப் பகுதியாகும். 8 வன உயிரினச் சரணாலயங்கள், 5 தேசியப் பூங்காக்கள், நீலகிரி உயிர்ச்சூழல் காப்பகம், மன்னார் வளைகுடா உயிர்ச்சூழல் காப்பகம் மற்றும் அகத்தியமலை உயிர்ச்சூழல் காப்பகம் என்ற மூன்று உயிர்ச்சூழல் காப்பகங்கள் வன உயிரினப் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன், காப்புக் காடுகளுக்கு வெளியே பறவைகளின் புகலிடங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, 12 பறவைகள் சரணாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் பல்வேறு முக்கிய அரிய வகை உயிரினங்கள் மற்றும் தாவர வகைகள், நில அமைப்புகள், இணைப்புப் பாலங்கள் போன்ற அதிக அளவிலான சூழலமைப்புகள் மற்றும் இருப்பிடங்கள் காணப்படுகின்றன. பல்லுயிரினப் பரவல் பாதுகாப்பு, கல்வி, பொழுதுபோக்கு, வரலாற்று முக்கியத்துவம், தனித்துவம் வாய்ந்த நில மற்றும் நீர் அமைப்புகள் போன்றவற்றிற்காக, இந்தப் பாதுகாப்புப் பகுதிகள் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றன. கிழக்குத் தொடர்ச்சி மற்றும் பல்லுயிரினப் பரவலின் முக்கியத் தலமாக அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் கூடும் தமிழ்நாடு, தனித்துவம் வாய்ந்ததாகும்.

[2006 ஆகஸ்ட் 10

சத்தியமங்கலம் வன உயிரினச் சரணாலயம், மேகமலை வன உயிரினச் சரணாலயம், கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயம் மற்றும் நெல்லை வன உயிரினச் சரணாலயங்களைப் பாதுகாக்கப்பட்ட வன உயிரினச் சரணாலயங்களாக அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதன்மூலமும், ஏற்கெனவே உள்ள பாதுகாக்கப்பட்ட சரணாலயங்களை விரிவுபடுத்துவதன்மூலமும், மாநிலத்தின் மொத்த வனப் பாப்பளவில், வன உயிரின நிர்வாகத்தின் கீழுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியினை 25 விழுக்காடளவிற்கு அதிகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் பலவகையான மருத்துவச் செடிகள் மற்றும் மரபியல் முக்கியத்துவம் வாய்ந்த செடிகள் பாதுகாக்கப்படும்.

இருப்பிட மேம்பாட்டின்மூலம் மனித-வன உயிரின மோதலைத் தடுக்கவும், சிக்கலான இடங்களில் உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கவும், மன்னார் வளைகுடா உயிர்ச்சூழல் திட்டத்தின்மூலம் கடல்சார்ந்த சூழல் அமைப்பை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தொலையுணர்வு, புவியியல் தகவல் அமைப்பு மற்றும் பூகோள இருப்பிட அமைப்பு போன்றவற்றின்மூலம் அனைத்து வன உயிரினப் பகுதிகளுக்கும், இருப்பிடங்களுக்கும் வரைபடங்கள் தயாரிக்கப்படவுள்ளன. மிருகக்காட்சி சாலைகளின்மூலம் பாதுகாப்பு முயற்சிகள் வலுப்படுத்தப்படும்.

**1.5.4. நீர்ப்பிடிப்புப் பகுதி நிர்வாகம்:**

தமிழகத்தில் 32 ஆறுகள், 71 நீர்த்தேக்கங்கள், 2,391 கால்வாய்கள், 40,319 ஏரி, குளங்கள் உள்ளன. இவைகளின் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வன நிலங்களில் அமைந்துள்ளன. வனங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன், பாதிக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாட்டு அணுகுமுறைகள்மூலம் வனவளர்ப்பு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மண்வள மற்றும் ஈரப்பதப் பாதுகாப்புப் பணிகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நுண்ணிய மற்றும் பெரிய அளவில் செயல்படுத்தப்படும் அனைத்து நடைமுறைத் திட்டங்களிலும் இதுபோன்ற பணிகள் இடம்பெறும். இப்பணிகள், நீர்ப்பிடிப்புப் பகுதியில் நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க உதவுவதோடு, மண் அரிமானத்தைத் தடுக்கவும் உதவும். இதனால் வனப் பகுதிகளில் உள்ள தாவரவகை மற்றும் விலங்கினங்கள் பயனடைவது மட்டுமின்றி வெள்ளப்பெருக்கு,



2006 ஆகஸ்ட் 10]

சமவெளிப் பகுதிகளில் வறட்சி போன்றவை ஏற்படாமல் தடுக்கப்படுவதையும், இந்நடவடிக்கைகள் உறுதி செய்கின்றன. வனங்கள் உள்ளிட்ட அனைத்து இயற்கை வளங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியானது, முதலீட்டினைக் குறைத்து, உற்பத்தியை அதிகரிக்கின்றன.

**1.5.5. சூழல் அமைப்பு மேலாண்மை:**

வளமான சூழலமைப்பு மேலாண்மையின் வெற்றிகரமான அளவீடாக வனப் பாதுகாப்பு அமைகிறது. காட்டுத் தீ, மேய்ச்சல், ஆக்கிரமிப்பு, திருட்டு மர வெட்டுக்கள், கஞ்சா பயிரிடுதல் மற்றும் வன உயிரினங்களை வேட்டையாடுதல் போன்ற காரணங்களினால் இயற்கைச் சூழலமைப்பு ஆதாரங்கள் அழியும் அபாயத்திலுள்ளன. இதுபோன்ற அபாயங்களை எதிர்கொள்வதற்காகப் பாதுகாப்பு, இயந்திரச் சாதனங்களை அவ்வப்போது மாற்ற வேண்டியுள்ளன. மாநிலத்தில் உள்ள சந்தன மரம், தேக்கு, சிவப்பு சந்தன மரம், அபரிமிதமான மருத்துவச் செடிகள் மற்றும் பல்வேறு வகையான வன உயிரினங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கத் தலைசிறந்த பாதுகாப்புக் கருவிகள், இயந்திரப் பொறிகள், படைக்கலன்கள், கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள், தீத் தடுப்புத் தளவாடங்கள் மற்றும் அதற்குத் தொடர்புடைய சாதனங்கள் வழங்கப்படவுள்ளன. வனங்களின் எல்லைகளைப் பாதுகாத்தல், வனங்களில் ஆக்கிரமிப்பைத் தடுத்தல் வன ஒருங்கிணைப்புப் பணிகள் போன்ற பாதுகாப்பிற்கான ஆதாரப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வன நில ஆக்கிரமிப்பு, வன நிர்வாகத்திற்கு மிகுந்த இடர்பாடாக உள்ளது. வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன், இவ்வகை ஆக்கிரமிப்புகளை அகற்றவும், புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் தடுக்கவும் இத்துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**1.5.6. மரம் மற்றும் மரம்சாரா வனப் பொருட்கள் பெருக்கம்:**

மாநிலத்தில் தடிமரம், விறகுமரம், மருத்துவச் செடிகள் மற்றும் பிற பல்வேறு பயன்பாடுகள் மிக அதிகமாக உள்ளதால், இவை வனங்களுக்கு அழுத்தத்தை அளிக்கின்றன. விரிவாக்க வனவியல், சமூக வனவியல், சமுதாய வனவியல், வேளாண் வனவியல், நகர்ப்புற வனவியல் போன்ற அனைத்தும், வீட்டுத் தேவைகளான மரம் மற்றும் மரம் சாரா பொருட்களின் பெருக்கத்தில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. ஊரகத் தொழில்மயமாக்கல்மூலம், கைவினைத் தொழில்

மற்றும் இயந்திரத் தொழில் போன்ற துறைகளில், வாழ்க்கைத் தொழில் பாதுகாப்பினை முன்னிறுத்தி சேவைகளை வழங்கியும் வருகின்றன. வன நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், தனியார் நிலங்கள், சமுதாய நிலங்கள், நிறுவன நிலங்கள், குடும்ப நிலங்கள் போன்ற பல்வேறு கூட்டமைப்புகளை உள்ளடக்கிய ஆதாரப் பெருக்கத் திட்டங்கள்மூலம் மரம் மற்றும் மரம் சாராத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். எனவே கூட்டாண்மை, தொழில்நுட்ப ஆதரவு, விரிவாக்க நடவடிக்கைகள், பயிற்சி மற்றும் விற்பனைக்கான இணைப்புக்கான ஆதரவு போன்றவற்றினை முன்னிறுத்தி, மரத்தை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை மேம்படுத்த துறை திட்டமிட்டுள்ளது.

தனியார் நிலங்களில் தடிமர வகைகளை வளர்க்கும் பொருட்டு, பொதுமக்களை ஊக்குவித்தல், துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. பெருகிவரும் தடிமரப் பயன்பாடு மற்றும் போக்குவரத்து போன்றவற்றிற்கான விதிகளைத் தளர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1.5.7. சூழல் அமைப்பு மக்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல்:**

பழங்குடியினர் மாநிலத்திலுள்ள வனங்களில் இணக்கமாக வாழ்ந்து வருகின்றனர். கடந்த பல ஆண்டுகளாக, பழங்குடியினர் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின்மூலம் அவர்தம் வளர்ச்சிக்கு உறுதுணையாக இத்துறை இருந்து வருகிறது. மேம்படுத்தப்பட்ட கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, சாலைகள் மற்றும் வாழ்க்கைத் தொழில்கள்மூலம் வேலைவாய்ப்பு வழங்குதல் போன்ற பழங்குடியினரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளை, துறை மேற்கொண்டு வருகிறது. இந்நடவடிக்கைகள் அனைத்தும் சமூக மற்றும் பொருளாதாரச் செழுமையுடன், வனப் பாதுகாப்பினையும் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இங்ஙனம் பழங்குடியினருக்கு மரம் சாரா வனப் பொருட்களைச் சேகரிக்கவும், போதிய விற்பனை வழிமுறைகளுடன்கூடிய விற்பனை உரிமைகளையும் வழங்குவதால் அவர்களது வழக்கமான உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. பிற துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற ஒருங்கிணைந்த திட்டங்கள், பழங்குடியினருடைய சமூக மேம்பாட்டிற்கு உதவும்வகையில் அமையும்.



**1.5.8. சமுதாய வனவியல்:**

உள்ளூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வனப் பகுதிகளுக்கு வெளியே வனப் பரப்பினை அதிகப்படுத்தவும் சமுதாய வனவியல் பணிகள், குளக்கரைப் பகுதிகள், சமுதாய நிலங்கள், புறம்போக்கு மற்றும் தரிசு நிலங்கள் போன்ற இடங்களில் உள்ளூர் சமுதாயத்தினர் மற்றும் உள்ளூர் நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்படும். மேலும், இத்திட்டம் மரம் வளர்க்கும் ஆர்வமுள்ள தனிநபர்/ நிறுவன நில உரிமையாளர்களுக்கும் விரிவாக்கப்படும். வளர்க்கப்பட்ட ஊராட்சித் தோட்டங்கள், சமுதாயத்திற்குச் சிறந்த சொத்துக்களை உருவாக்குவது மட்டுமின்றி, இத்தோட்டங்களை விற்பனை செய்வதன்மூலம் ஈட்டப்படும் வருவாய், 60:40 என்ற விகிதாச்சார அடிப்படையில் ஊராட்சிகள் மற்றும் வனத் துறைக்கிடையே பங்கீடு செய்துகொள்ளப்படுகிறது.

**1.5.9. வன விரிவாக்கம்:**

வன வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு, மக்களின் மனமுவந்த ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் மட்டுமே வெற்றியடையும். எனவே பயனடைவோர், குறிப்பாக விவசாய சமுதாயத்தினரிடையே வெற்றிகரமான இணைப்பினைக் கொணர வேண்டும். இதற்காக, வனத் துறை வனங்களுக்கு வெளியே உள்ள மரவகைகளை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை ஒருங்கிணைக்கவும், கலந்துரையாடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதன்மூலமாக அவர்களுடைய வருமானம் அதிகரிப்பதுடன், துறையின் வனப் பாதுகாப்பு முயற்சிகளும் பலப்படுத்தப்படும்.

இதற்காக, மாவட்டங்களில் அமைந்துள்ள வன விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகள் மற்றும் பிற பயனடையும் பிரிவினருக்கு வாய்ப்புகள் வழங்கப்படும். மாவட்டத்திற்கு ஒரு மையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மரம் சார்ந்த வேளாண் விற்பனைப் பணிகளை முன்னிறுத்தும் களமாக இம்மையங்கள் அமையும். வேளாண் வனவியல் தாவர வகைகளுக்கு இன்றியமையாத தொழில்நுட்ப உள்ளீடுகளை விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப வழங்க வன விரிவாக்க மையங்களில் மாதிரி விளக்கத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

[2006 ஆகஸ்ட் 10

சூழல் கல்வி அளிப்பதிலும், இளைஞர்கள், சிறுவர்கள் ஆகியோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், வன விரிவாக்க மையங்கள்மூலம் வன விரிவாக்கப் பணிகள் பெருமளவில் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படும். தனியார் நிலங்களில் மரப் பரப்பினை அதிகப்படுத்துவதன்மூலம், 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக் கொள்கையின்படி 2012 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் வனப் பரப்பினை மாநிலத்தின் பரப்பில் மூன்றில் ஒரு பங்காக உயர்த்துவதே வன விரிவாக்கப் பணிகளின் முக்கியக் குறிக்கோளாகும்.

### 1.6. சிறப்புக் கவனப் பகுதி

#### 1.6.1. ஆதார மேம்பாட்டிற்கான தொழில்நுட்பம்:

மாநிலத்தின் அனைத்து வேளாண்-தட்பவெப்ப மண்டலங்களைச் சூழ்ந்து வன ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வன மேலாண்மையில் வன ஆராய்ச்சிக்கு வன ஆராய்ச்சிப் பிரிவு, அறிவியல் ரீதியில் எப்பொழுதும் ஆதரவு அளித்து வருகிறது. வனவியல், அறிவியல் இயற்கை ஆதார மேலாண்மைக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது. தோட்ட வனவியல், பாதுகாப்பு வனவியல், மேலாண்மை – வனவியல் மற்றும் பிற வனத்தை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை மேம்படுத்தவும் அறிவியல் கண்டுபிடிப்புகள் உதவுகின்றன. இவை வன விரிவாக்க மையங்கள் மூலமாக மக்களுக்கு வழங்கப்படும். வனவியல் பயன்பெற உதவிபுரியும் பல்நோக்கு மர வகைகள், மரம் சாரா வனப் பொருட்கள் மற்றும் மர அறிவியல், பல்லுயிரினப் பரவல் பாதுகாப்பு, சூழலியல் மீட்பு, மண் உயிர்ச்சத்து மேலாண்மை, மருத்துவச் செடிகள் மேம்பாடு மற்றும் பராமரிப்பு, உயிர் உர உற்பத்தி, அறுவடைக்குப்பின் தொழில்நுட்பம் போன்ற முக்கியப் பகுதிகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். தற்போதைய தேவைகள் மட்டுமின்றி, எதிர்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்யும்வகையில் பாதுகாப்பு மற்றும் விரிவாக்க சேவைகளுடன்கூடிய வேளாண் வனவியலை முன்னிறுத்தி, ஏற்கெனவே உள்ள ஆராய்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படும். பாதுகாப்பும், உயிர் உற்பத்திப் பெருக்கமும் தமிழ்நாடு வன ஆராய்ச்சியின் முக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன.

சிற்றின மீட்புத் திட்டங்களுக்கும், ஊரக வனவியல் தொழிற்சாலைகளுக்கும் ஆதாரமான ஆராய்ச்சித் திட்டங்களை ஆராய்ச்சிப் பிரிவு கண்காணிக்கும். மாஇழை தரவல்ல மரங்கள், இழைமரம், விறகு மரங்கள், கட்டடப் பணிக்காகப் பயன்படுத்தப்படும்



2006 ஆகஸ்ட் 10]

தடிமரங்கள் போன்ற வீரிய மரங்களை உற்பத்தி செய்ய ஆராய்ச்சி மையங்களிலும், கள நிலையங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படும்.

#### 1.6.2. மனித வள மேம்பாடு:

1806 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத் துறை உருவாக்கப்பட்டது. வனவியல் பன்முக அணுகுமுறைகளையும், இணைப்புகளையும கொண்ட பிரிவாக உள்ளதால், இனி இது ஒருமுகப்படுத்தப்பட்ட பிரிவாக இருக்கப்போவதில்லை. வனவியல் பழமை மற்றும் புதுமையான அணுகுமுறைகள் கலந்த பிரிவாக உள்ளது. வனவியல் தொடர்பான புலமை, திறமை மற்றும் நடைமுறை போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் இன்றைய நிலைக்கேற்ப அணுகுமுறைகளைக் கையாள்வது அவசியமாகிறது. கூட்டு வன நிர்வாகம் அறிமுகப்படுத்தப்பட்டபின், பணியாளரமைப்பின் முக்கியப் பங்கினை, மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அணுகுமுறை மற்றும் பல்துறை இணைப்புகள்மூலம் உணர்ந்துகொள்ளப்படுகிறது. மனித வள மேம்பாடு, அனைத்து மட்டங்களிலும் உள்ள பணியாளர்களுக்கும் வேகமாக வளர்ந்து வரும் கடினமான மற்றும் கடுமையான பணிகளை மேற்கொள்ள, தேவையான அறிவுக்கூர்மையினை வழங்குகிறது. இம்மனித வள மேம்பாட்டுப் பணிகள், துறையில் மட்டுமின்றி, வனவியல் துறையோடு தொடர்புடைய பல்வேறு பயனாளி குழுக்களிலும் மேற்கொள்ள வேண்டும். ஏற்கெனவே உள்ள தமிழ்நாடு வனக் கல்விக் கழகம், கோவை மற்றும் வைகை அணையில் உள்ள தமிழ்நாடு வனவியல் கல்லூரிமூலம் இத்தேவைகள் எதிர்கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளும். இது மட்டுமின்றி, வனப் பணியாளர்களுக்கு, புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில், வளர்ந்துவரும் சவால்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

#### 1.6.3. மகளிர் மேம்பாடு:

இலட்சக்கணக்கான கிராமப் பெண்கள், குடும்பப் பாதுகாப்பைத் தங்களது முக்கியப் பணியாக மேற்கொண்டுள்ளதால், குடும்பத் தேவைக்காக விறகு சேகரித்தல், கால்நடைத் தீவனம், நீர் எடுத்தல் போன்ற கடமைகளை அவர்கள் சுமக்க வேண்டியுள்ளது. வன வளங்கள் நலிவடைவது, அவர்களின் பணிகளை மேலும் கடினமாக்குகிறது. எனவே, வன வளங்களையே பெரிதும் நம்பியுள்ள,

ஏழ்மை நிலையிலுள்ள பெண்களை உட்படுத்தி, தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வளங்களைப் பற்றிய முடிவுகளை மேற்கொள்வதில் பங்கேற்க உதவுவதுடன், அவற்றை மேலாண்மை செய்யவும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இயற்கை வள மேலாண்மையில் மகளிரின் முக்கியப் பங்கினைப் பாராட்டுவது அதிகரித்து வருவதுடன், வனவியல் துறையும் இதனைப் பெருமளவில் ஊக்குவித்து வருகிறது.

வனங்களைப் பெருமளவில் பயன்படுத்துபவர்களான மகளிர், வனங்களில் சிறு வனப்படுபொருட்கள் சேகரம், புல் வெட்டுதல் மற்றும் மேய்ச்சல் போன்ற நடவடிக்கைகளில் அதிக நேரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். வனங்களில் ஏற்படுத்தப்படும் உயிரியல் அழுத்தத்தினைக் குறைக்க அவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் வகையில், ஊரக வேலைவாய்ப்பின்மூலம் வருமானப் பெருக்கத்திற்கு உணவு தயாரித்தல், மீன்பிடி தொழில், கூடை முடைதல், நெசவு, ஆடைகள் தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல், ஊதுபத்தி தயாரித்தல் போன்ற பலதரப்பட்ட வேலைவாய்ப்பு வடிவங்கள் மகளிருக்காக உருவாக்கப்பட்டுள்ளன. கூட்டு வன நிர்வாகத்தின்கீழ் மாநிலத்திலுள்ள மகளிர் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டினை அடைவதற்காக, மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளைத் துறை மேற்கொள்ளும். எனவே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டமானது மாநிலத்தின் 27 மாவட்டங்களில், பல்வேறு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சிகளின்மூலம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்திட ஊக்குவித்துள்ளது. தற்போது காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், 3,900 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

**1.6.4. வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் வாழ்க்கைத் தொழில் பாதுகாப்பிற்கான வனவியல்:**

வனங்கள், வன வளங்களைச் சார்ந்து, வனங்களையொட்டி வாழும் பெரும்பாலான சமுதாயத்தினருடன் தொடர்புடையதாகவே உள்ளன. வனத் துறையின் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் பெருமளவில் வேலைவாய்ப்புகளையும், சமுதாயத்தினருக்கு அவர்களது இடத்திலேயே வாழ்க்கைத் தொழில்களையும் வழங்கி வருகிறது. மேலும், கூட்டு வன நிர்வாகத் திட்டத்தின்மூலம் சூழலியல் மற்றும் பொருளாதாரப் பயன்களைத் தொடர்ந்து பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. சூழலியல் மீட்புடன்கூடிய வேலைவாய்ப்புப் பெருக்கத்தினை வழங்கக்கூடிய திட்டங்களை வனத் துறை பரிசீலித்து வருகிறது.





**1.6.5. பல்துறை ஒருங்கிணைப்பு:**

வனத் துறையினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களின் பயன்களை அதிகரிக்க, அதே திட்டப் பகுதிகளில் உள்ள இணைத் துறைப் பணிகள்மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் கிராமப்புற ஏழைகள் பயன்களைப் பெறுவதும், சிறந்த ஒருங்கிணைப்பும் உறுதி செய்யப்படுகிறது. வனத் துறையின் பெரும்பாலான திட்டங்கள் பல்துறை ஒருங்கிணைப்பின்மூலம் வனம் சார்ந்து வாழும் சமுதாயத்தினர் பெருமளவில் பயன் பெறுவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களின்மூலம் திட்டங்களை ஒருங்கிணைத்து, உரிய வழிமுறைகளின் மூலம் சிறப்பான பலன்களைப் பெறும்வகையில் செயல்படுத்தப்படும்.

**1.7. 2005–2006 ஆம் ஆண்டு சாதனைகள்**

**1.7.1. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்–II:**

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்-II-ன் முதலாண்டான 2005–2006–ல், ரூ.76.02 கோடி செலவில் 29,250 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளும், தரங்குன்றிய காடுகளை ஒட்டி அமைந்துள்ள 30 மலைவாழ் மக்கள் கிராமங்கள் உட்பட 135 திட்ட கிராமங்களில் வருவாய்ப் பெருக்கப் பணிகளும், கிராம வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.7.2. அவசரகால சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்:**

கடற்கரையோரங்களிலுள்ள மக்கள் மற்றும் அவர்களின் உடைமைகளைச் சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக, 2005–06 ஆம் ஆண்டில், 2000 எக்டேர் பரப்பில் கடலோரத் தொடர் தடுப்புக் காடுகளும், 700 எக்டேர் பரப்பில் சதுப்பு நிலக் காடுகளும், ரூ.857.13 இலட்சங்கள் செலவில் உருவாக்கப் பட்டுள்ளன.

**1.7.3. தேசிய வன வளர்ப்புத் திட்டம்:**

2002–2003 ஆம் ஆண்டு முதல், மைய அரசின் நிதியுதவி பெறும் காடு வளர்ப்புத் திட்டங்கள் யாவும், கூட்டு வன நிர்வாக அடிப்படையில், வன அபிவிருத்தி முகமைகளின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் செயல்படுத்தப்படும்

[2006 ஆகஸ்ட் 10

கோட்டங்களில் வன அபிவிருத்தி முகமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசு ரூ.5723.18 இலட்சங்களை விடுவித்துள்ளது. இவற்றில், இதுவரை, 32 வன வளர்ச்சி முகமைகளின்மூலம் ரூ.5066.36 இலட்சங்கள் செலவில், 35,879 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.7.4. 2005–2006 ஆம் ஆண்டின் பகுதி–II திட்டங்கள்:

2005–2006 ஆம் ஆண்டில் பாதுகாப்பு, கட்டடங்கள், சாலைகள், வனக் குடியிருப்பு மற்றும் உயிரியல் பூங்கா மேம்பாடு போன்ற 33 பகுதி–II திட்டங்கள், ரூ.526.75 இலட்சங்கள் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.7.5. சந்தன மர வருவாய்:

சேலம், திருப்பத்தூர் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய மூன்று இறுதித் துலக்கக் கிடங்குகளில் நடைபெற்ற 236.320 மெட்ரிக் டன் சந்தன மர விற்பனை மூலம் ரூ.6070.26 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 1.7.6. கஞ்சாச் செடி அழிப்பு:

2005–06 ஆம் ஆண்டில் 0.0238 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த ரூ.2.51 இலட்சம் மதிப்புள்ள 3,598 கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டன.

### 1.7.7. தஞ்சாவூர் கோட்டத்தில் தேக்கு மர விற்பனை:

2005–2006 ஆம் ஆண்டில், தஞ்சாவூர் கோட்டத்தில் 10,399 தேக்கு மரங்களின் விற்பனைமூலம் ரூ.756.02 இலட்சங்கள் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 1.7.8. இந்திய வனப் பணி மற்றும் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி:

வனவியல் ஒரு அறிவியலாகும். இது பல புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது சூழல் முறை மற்றும் அதன் மேலாண்மை பற்றி அறிந்துகொள்ளுமாறு அறிவுறுத்துகிறது. வனம் மற்றும் வன உயிரின மேலாண்மை மற்றும் அதன் அவசியம் பற்றிய புதிய கருத்துக்களை இந்திய வனப் பணி அலுவலர் உட்பட அனைத்து அளவிலான வன அலுவலர்களும் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். 2005–2006 ஆம் ஆண்டில், வன அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வனவியல், விவசாய வனவியல், வன உயிரினம், புவித்தரவு தகவல் தொடர்பு மற்றும் வனவியல் தொடர்பான



2006 ஆகஸ்ட் 10]

பகுதிகள் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இது போன்று தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 160 அலுவலர்களுக்கு பல்வேறு தேசிய நிறுவனங்கள்மூலமாக கூட்டு வன மேலாண்மை குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டிலும் வனவியல் பற்றிய பல்வேறு அம்சங்கள் குறித்து பயிற்சியளிக்க அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 1.7.9. புவித் தகவல் தரவு மையம்:

புவித் தகவல் தரவு மையம், முறையான தேசியத் தகவல் தொகுப்பு அடிப்படையில், பல்வேறு கோட்ட, சரக, பீட், காப்பு வன நிர்வாக எல்லை வரைபடங்களைத் தயாரித்து வருகிறது. இவ்வரைபடங்கள், மேலாண்மைத் திட்டங்கள், வன உயிரினக் கணக்கெடுப்பு அறிக்கை போன்றவை தயாரிக்க வனக் கோட்டங்கள், வன உயிரினப் பிரிவுகள் மற்றும் வனச் செயல்பாட்டு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அனைத்து வட்டங்களிலும் உள்ள வனச் சரகர்கள், வனவர்கள், வனக் காப்பாளர்கள், வரைதொழில் அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் போன்ற 264 அலுவலர்களுக்கு இம்மையத்தின் ஆதார அலுவலர்கள்மூலம் 40 அணிகளாக (batches) 'ஆர்க்ஜிஐஎஸ்' மென்பொருள் பயன்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2001 முதல் 2005 வரையுள்ள ஆண்டுகளுக்கான, தமிழ்நாடு முழுமையான வனத் தீ வரைபடங்கள் செயற்கைகோள் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளன. அனைத்துச் சரகங்களுக்கும் ஜிபிஎஸ் உபகரணங்கள் வழங்கப்பட்டு, மண்டல அளவில் ஜிபிஎஸ் உபகரணங்களைப் பயன்படுத்தவும், கள அளவீடு மற்றும் வரைபடங்கள் தயாரிக்கவும், களப் பணியாளர்களுக்கும், மண்டல அளவிலான அலுவலகப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தொலையுணர்வின்மூலம் மாநில வனம் பற்றிய தகவல்களைப் புவித் தகவல் தரவுமுறையில் சேகரித்து, அக்களத்தில் சிறந்த பணியினைத் தமிழ்நாடு வனத் துறை செய்துள்ளது. தமிழ்நாடு வனத் துறை ஏற்படுத்தியுள்ள புவித் தகவல் தரவு மையம், புதுடெல்லியில் உள்ள சுற்றுச்சூழல் முறை ஆய்வு நிறுவனத்தின் புவித் தகவல் அளிக்கும் சாதனைக்கான சிறப்பு விருதினைப் பெற்றுள்ளது.

[2006 ஆகஸ்ட் 10

## 1.8. வன வருவாய் மற்றும் செலவுகள்

### 1.8.1. வருவாய்:

1979 ஆம் ஆண்டு முதல், இயற்கை மரங்களை வெட்டுவது நிறுத்தப்பட்ட பின், சந்தன மர விற்பனை, மூலப்பொருட்களைத் தொழிற்சாலைகளுக்கு வழங்குதல் மற்றும் பண்ணை மரத் தோட்டங்கள் விற்பனை போன்றவை, வருவாய்க்கான முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே விற்பனைக்காகப் பிரித்தெடுக்கப்படுகின்றன. முதிர்ந்த தோட்டங்களிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்கள், குறிப்பிட்ட காகித மற்றும் தோல் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. வருவாயினை அதிகரிக்க, நீர்ப்பாசனக் குளங்களில் வளர்க்கப்படும் பண்ணை மரத் தோட்டங்கள், ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

2005–2006 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருவாய் (திருத்திய மதிப்பீடு), மற்றும் 2006–2007 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் கீழ்வருமாறு :–

| வரிசை எண் | வருவாய் – இனங்கள் | 2005–2006 திருத்திய மதிப்பீடு | 2006–2007 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| அ. | சந்தன மரம் | 9000.00 | 10200.00 |
| ஆ. | தடிமரம் | 1144.47 | 1027.60 |
| இ. | தொழிற்சாலைக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 1744.94 | 1853.90 |
| ஈ. | இதர சிறுவனப் பொருட்கள் | 50.15 | 50.17 |
| உ. | பண்ணைக்காடுகள் | 1050.00 | 1050.00 |
| ஊ. | மூங்கில், முந்திரி, மென்மர முதலிய தோட்டங்கள் விற்பனை | 23.00 | 22.80 |
| எ. | இதர வருவாய்கள் | 2572.40 | 2938.93 |
| | மொத்தம் | 15584.96 | 17143.40 |
| | மீள் அளிப்புத் தொகையை கழிக்கவும் (–) | 7.38 | 5.20 |
| | நிகர மொத்தம் | 15577.58 | 17138.20 |



2006 ஆகஸ்ட் 10]

### 1.8.2. செலவினங்கள் மற்றும் மூலதனம்:

2006–2007 ஆம் ஆண்டில் வனப் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ.19375.21 இலட்சங்களாகும். 2004–2005 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களில் செலவு செய்யப்பட்ட தொகை பின்வருமாறு:–

| திட்டத்தின் பெயர் | 2004–2005 ஆம் ஆண்டின் செலவினம் (இறுதி செய்யப் பட்டது) | 2005–2006 ஆம் ஆண்டின் செலவினம் (திருத்திய மதிப்பீடு) | 2006–2007 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| மாநில வனத் திட்டங்கள் | 11136.40 | 15387.19 | 18134.95 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 488.90 | 545.56 | 564.13 |
| மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 499.26 | 608.04 | 676.13 |
| மொத்தம் | 12124.56 | 16540.79 | 19375.21 |

## 1.9. 2006–2007 ஆம் ஆண்டிற்கான முக்கிய திட்டப் பணிகள்– (தொடரும் திட்டப் பணிகள்)

### 1.9.1. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்:

தமிழ்நாட்டின் வனப் பகுதி, பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் இவற்றிற்கிடையே உள்ள தக்காண பீடபூமி ஆகியவற்றில் அடங்கியுள்ளது. வன நிலங்களில் அதிக அளவிலான கால்நடை மேய்ச்சல், வனத் தீ மற்றும் மரங்களை வெட்டி விறகாக்கி, தலைச் சுமையாகக் கடத்துதல் போன்ற நிகழ்வுகளால், வனப் பகுதிகளின் குறிப்பிடத்தக்க பரப்பளவு தரம் குன்றிய காடுகளாக

[2006 ஆகஸ்ட் 10

மாறிவிட்டன. வறுமையினால் காடுகள் அழிவதும், காடுகள் அழிவதால் மக்களிடையே வறுமையும் சுழற்சி முறையில் நடந்து வருகின்றன. இதனை மாற்றும்வகையில், இத்திட்டத்தின்கீழ் 1997–98 முதல் 2004–05 வரை சுமார் 4.80 இலட்சம் எக்டேர் பரப்பளவு தரங்குன்றிய காடுகளும், மற்றும் அதனை ஒட்டி அமைந்துள்ள 1,367 கிராமங்களும் சுமார் ரூ.688 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. கூட்டு வன நிர்வாகத்தின் பயன்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு, எஞ்சியுள்ள தரம்குன்றிய காடுகளை மேம்படுத்தவும், அதனைச் சார்ந்த அனேக கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதும் அவசியமெனக் கருதப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டே தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் உருவாக்கப்பட்டு, ஜப்பான் வங்கி, டோக்கியோ (Japan Bank for International Cooperation, Tokyo)–யின் உதவி நாடப்பட்டு, அவ்வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இந்த இரண்டாம் கட்டத் திட்டத்தில், 150 மலைவாழ் கிராமங்கள் உட்பட, 800 இடைபடு கிராமங்களில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 1,77,500 எக்டேர் பரப்பளவு தரங்குன்றிய காடுகள், தரம் மிகுந்த காடுகளாக மாற்றப்படும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி அமைப்பின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்வதாகும். திட்ட கிராமங்களின் வறுமையை ஒழித்து, சமூகப் பொருளாதார உயர்வை அடையச்செய்வதுடன், சுய உதவிக் குழுக்கள் அமைத்து பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் இத்திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறை, பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. பல்லுயிரினப் பரவல் பாதுகாப்பின் முக்கிய அம்சமாக மலைவாழ் மக்கள் விளங்குவதால், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட இரண்டாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள 800 கிராமங்களில், 150 கிராமங்களில் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் அவர்களைப் பொருளாதாரரீதியாக உயர்த்தும்பொருட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. மலைவாழ் மக்களுக்கு மாற்று வேலைவாய்ப்பிற்கான வழிவகைகள் செய்து தரப்படும். இதுமட்டுமின்றி, புவித் தகவல் தரவு அமைப்பு, வன விரிவாக்கம், வன ஆராய்ச்சி, உள்கட்டமைப்பு வசதி மற்றும் மனித வள மேம்பாடு போன்றவற்றிற்கும் இத்திட்டத்தின்கீழ் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. 2005–2006 முதல் 2012–2013 வரை ரூ.567.42 கோடி மதிப்பீட்டில் இந்த இரண்டாம்



2006 ஆகஸ்ட் 10]

கட்ட திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் ஆண்டான 2006–2007 இல், ரூ.101.42 கோடி மதிப்பீட்டில், தரங்குன்றிய காடுகளை ஒட்டி அமைந்துள்ள 40 மலைவாழ் மக்கள் கிராமங்கள் உட்பட, 205 கிராமங்களைச் சேர்ந்த 45,250 எக்டேர் பரப்பளவு தரங்குன்றிய காடுகளில் காடு வளர்ப்புப் பணிகளும், மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 1.9.2. தேசிய வன வளர்ப்புத் திட்டம்:

கிராம அபிவிருத்தி, கிராமங்களில் வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்தல் மற்றும் வனங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஒரே குடையின்கீழ் இணைக்கும் நோக்கத்துடன், வன வளர்ச்சி முகமை எனும் அமைப்பினை 'தேசிய வன வளர்ப்புத் திட்டம்' எனும் திட்டத்தின்கீழ் மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டு முதல், மைய அரசின் நிதியுதவி பெறும் காடு வளர்ப்புத் திட்டங்கள் யாவும், கூட்டு வன நிர்வாக அடிப்படையில், வன வளர்ச்சி முகமையின் மூலம், நிலப் பகுதி மற்றும் வன உயிரினப் பகுதியில் 2006–2007 ஆம் ஆண்டு முடிய ரூ. 9,159.44 இலட்சங்களில் செயல்படுத்தப்பட உள்ளன. இதில் ரூ. 5,723.18 இலட்சங்கள் மத்திய அரசால் விடுவிக்கப்பட்டு, 2005–2006 ஆம் ஆண்டு வரை ரூ. 5,066.36 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இந்த 32 வன வளர்ச்சி முகமைகளுக்கும் 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,815.08 இலட்சங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### 1.9.3. வன உயிரினத் திட்டங்கள்:

மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலுள்ள, தாவர மற்றும் உயிரினங்களைப் பாதுகாப்பதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, வன உயிரினத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் உயிர்வாழ் காப்பிடங்களில் உயிரினச் சூழலை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அறிவியற்பூர்வ வன உயிரினக் கணக்கெடுப்பு, கல்வி விழிப்புணர்வு முகாம்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், சூழல் சுற்றுலா, வேட்டைத் தடுப்பு முகாம்கள் நடத்துதல், தீத் தடுப்பு நடவடிக்கைகள், உள்ளூர் கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து தருதல், மருத்துவ முகாம்கள், விளம்பரப் பலகைகள் அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதன்மூலம் பாதுகாக்கப்பட்ட பகுதி மேலாண்மை, வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு போன்றவற்றிற்குப் புதிய அறிவியல்பூர்வமான

[2006 ஆகஸ்ட் 10

பரிமாணம் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பிட மேம்பாடு மற்றும் உரிய காலத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் போன்றவை, வன உயிரின பிரச்சினைகள் குறித்த தீர்வில், கவனிக்கப்படவேண்டிய அம்சங்களாகும். இருப்பிட வரைபடம், இருப்பிடப் பிரிவு, இருப்பிட மற்றும் பல்வேறு வன உயிரினப் பாதுகாப்பு போன்ற புதிய செயல் முறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, இந்தியாவிலேயே மிகப் பெரிய மற்றும் அறிவியல்பூர்வமாக மேலாண்மை செய்யப்படும் மிருகக் காட்சி சாலைகளில் ஒன்றாகும். இப்பூங்காவில், அருகிவரும் உயிரினங்களைப் பாதுகாத்தல், உயிரினச் சூழலை மேம்படுத்துதல், உயிரியல் கல்வி மற்றும் சுகாதாரம் மற்றும் இப்பூங்காவைப் பார்வையிட வரும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பல்வேறு திட்டங்களின்மூலம் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே மற்றும் தேசிய பூங்காக்களில் வன உயிரினப் பாதுகாப்பிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சர்க்கஸ் மற்றும் பிற முகமைகளிலிருக்கும் மிகையான மற்றும் பிரச்சினைக்குரிய விலங்கினங்களைப் பாதுகாப்பதும், மறுவாழ்வளிப்பதும் மிருகக்காட்சி சாலையின் பொறுப்பிலுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டில், இத்திட்டங்கள் யாவும் ரூ.789.17 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டன. 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டங்களுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.971.10 இலட்சங்கள் ஆகும்.

### 1.9.4. குளக்கரைத் தோட்டங்கள்:

1981 ஆம் ஆண்டு முதல், ஸ்வீடன் நாட்டின் ஸ்வீடிஷ் சர்வதேச மேம்பாட்டு ஆணையத்தின் நிதியுதவியுடன் சமூகக் காடுகள் திட்டம் தமிழ்நாடு வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வந்தது. ஏரிகள் மற்றும் குளக்கரைகளில் கருவேல மரங்கள் நடவு செய்வது இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஸ்வீடன் நாட்டு நிதியுதவி 1996–ல் நிறுத்தப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டில், இத்திட்டம், மாநில நிதி ஆதாரத்திலிருந்து ரூ.342.36 இலட்சங்கள் செலவில் 2,930 எக்டேர் பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.350.00 இலட்சங்கள் செலவில், 2,880 எக்டேர் பரப்பில், இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 10]

### 1.9.5. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மாநிலத்தின் நீலகிரி மாவட்டத்திலுள்ள சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிரந்தரப் பசுமைப் பரப்பினை விரிவாக்கவும், இயற்கை மீதான உயிரினத் தலையீடுகளை முறைப்படுத்தவும், காடு வளர்ப்பு, மண் வளப் பாதுகாப்பு மற்றும் இதர பணிகளின்மூலம் காடுகளைப் பாதுகாத்து, சுற்றுச்சூழலின் மேம்பாட்டை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தரங்குன்றிய காடுகளில் மரங்களை நடுதல், சோலை வனங்கள் மற்றும் வன விலங்குகள் வசிக்கும் காப்புக் காடுகளைச் சுற்றி கம்பிவேலி நிறுவுதல், நீர்ப் பாதுகாப்புப் பணிகள், மண் வளப் பாதுகாப்புமூலம் தரம்குன்றிய சோலைக் காடுகளை வளமாக்குதல், வனத் தீயினைத் தடுக்க தீத்தடுப்புப் பள்ளங்கள் வெட்டுதல், பராமரித்தல், போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.383.79 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் வனப் பகுதி தொடர்பான (Forestry sector) திட்டங்களைச் செயலாக்க 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.282.87 இலட்சம் செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 1.9.6. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:

தமிழகத்தின் மொத்த வனப் பரப்பில், 5,596 சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பினை மேற்குத் தொடர்ச்சி மலை உள்ளடக்கியுள்ளது. வனச் சுற்றுச்சூழல் தரமிழந்து வரும் நிலையைத் தடுக்கவும், தற்போதுள்ள வனங்களையும், மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள விலங்கினம் மற்றும் தாவர இனங்களை அதிகமாக்கவும் ஆங்காங்கே இடைவெளிகளில் மரங்கள் நடுதல், சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி, சிறுவனப் பொருட்கள் தோட்ட உற்பத்தியும், உயிரினங்களுக்காக இயற்கைச்சூழலை நிலை மாறாமல் மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் செய்யப்படும் அனைத்துப் பணிகளும் கூட்டு வன நிர்வாக முறையில் மக்களை ஈடுபடுத்தி, ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்படுத்துதல் முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2005–2006 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.364.28 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.400.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 10

**1.9.7. படுகை நிலங்களில், தேக்கு மரத் தோட்டங்கள் வளர்த்தல்:**

2003–2004 முதல் 2007–2008 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு மற்றும் சேலம் கோட்டங்களில் உள்ள ஆற்றுப் படுகைகளில், 16,050 எக்டேர் பரப்பில், ரூ.2,139.827 இலட்சங்கள் செலவில், தேக்கு மரத் தோட்டங்கள் வளர்க்க அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.470.00 இலட்சம் செலவில் 3,295 எக்டேர் பரப்பில், தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. நடப்பாண்டான 2006–2007 ஆம் ஆண்டில், ரூ.470.00 இலட்சம் செலவில், 3,280 எக்டேர் பரப்பில் தேக்கு மரத் தோட்டங்கள் வளர்க்கப்படவுள்ளன.

**1.9.8. ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்பு:**

தமிழகத்திலுள்ள வனங்களில் ஏற்படும் தீயினைக் கட்டுப்படுத்தி, வனப் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தினை அடைய, இத்திட்டத்தின்கீழ் தீத்தடுப்புக் கருவிகள் போன்றவைகள் வாங்கப்படுவதுடன், தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல், நீர்ப்பிடிப்புக் குழிகள் ஏற்படுத்துதல், கடுங் கண்காணிப்புப் பணிகளை மேம்படுத்த உதவும் வாகனங்கள் மற்றும் தொலைதொடர்பு சாதனங்களை வாங்குவதற்கு, கூட்டு வன நிர்வாகக் குழுக்களுக்கு உதவி செய்தல் போன்ற பணிகளில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.200.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.485.00 இலட்சம் செலவில் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1.9.9. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், மலைவாழ் மக்கள் வாழும் இடங்களில் காடுகள் வளர்த்தல், பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டுதல், சாலைகளை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும், அங்குள்ள சந்தன மரக் காடுகளில் துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 10]

**1.9.10. உயிர் திடப்பொருள்மூலம் கிராமங்களில் எரிசக்தி பாதுகாப்பு:**

தமிழ்நாட்டில் காணப்படும் பெரும்பாலான ஒதுக்கமாக அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் சிறிய குடியிருப்புப் பகுதிகள் ஆகியவை, மின் விநியோக விரிவாக்கத்தின்கீழ் கொண்டுவரப்படாததால், மின் வசதியில்லாத நிலையில் உள்ளன. இவ்வகையான பின்தங்கிய கிராமங்கள் மற்றும் சிற்றடு பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு, புதுப்பித்துக்கொள்ளக்கூடிய மின் வசதி அளிக்க ஏதுவாக புதுப்பித்துக்கொள்ளக்கூடிய எரிசக்தி ஆதாரங்கள் வாயிலாக மின்சாரத்தினை உற்பத்தி செய்ய, "உயிர் திடப்பொருள்மூலம் கிராமங்களில் எரிசக்தி பாதுகாப்பு" என்னும் திட்டம், மத்திய அரசு ஏற்பளித்துள்ளவாறு ரூ.56.36 இலட்சங்கள் செலவில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி முகமையின்மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1.9.11. வன ஆராய்ச்சி:**

தமிழகத்தின் வன ஆராய்ச்சிப் பிரிவு, உயிரினப் பரவல் பாதுகாப்பு மற்றும் உயிரியல் உற்பத்தியினைப் பெருக்குதல் ஆகியவற்றினை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.203.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.203.00 இலட்சம் செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**1.9.12. மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு:**

உலக சுற்றுச்சூழல் நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், ஒருங்கிணைந்த கடலோர உயிரினப் பரவல்களைப் பாதுகாத்தல் மற்றும் கடலோர மேலாண்மையை நிலைநிறுத்துதல் போன்ற பல்வேறு வகையான பயன்பாட்டினைக் கருத்தில்கொண்டு, இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. புதுமையான வழிகளில், நீண்டகால பன்முகப் பாதுகாத்தலை மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு இடங்களில் ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒருங்கிணைந்த கடலோர மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்காகவும், அந்தப் பாதுகாக்கப்பட்ட பகுதியில் பணிகளை மேற்கொள்ளவும், அரசால் உடன்படிக்கை செய்யப்பட்ட ஒரு சுயமான, சட்டரீதியான, அரசு அமைப்பான, ஓர் அறக்கட்டளை (மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு அறக்கட்டளை) மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு

ரூ.140.00 கோடிகளாகும். அதில் உலகச் சுற்றுச்சூழல் நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடு மேம்பாட்டுத் திட்டத்தின் பங்கீடான ரூ.40.00 கோடியுடன் தமிழ்நாடு அரசு, மைய அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் கூட்டுப் பங்கீடான ரூ.100.00 கோடியும் அடங்கும்.

**நிதி விடுவிப்பு மற்றும் பயன்பாடு**

| வருடம் | ஆரம்ப இருப்பு (ரூ.) | UNDP-யிடமிருந்து பெறப்பட்ட தொகை (ரூ.) | அங்கீகரிக்கப் பட்ட செயல் திட்டம் (ரூ.) | செலவிடப் பட்ட தொகை (ரூ.) | மீதத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 2003 | -- | 50,00,000 | -- | 35,02,487 | 14,97,513 |
| 2004 | 14,97,513 | 80,00,000 | 1,60,43,500 | 84,73,687 | 10,23,826 |
| 2005 | 10,23,826 | 91,22,000 | 2,85,15,000 | 86,58,886 | 14,86,940 |

## 1.10. புதிய திட்டங்கள்

### 1.10.1. காட்டாமணக்குச் செடிகள் வளர்ப்பு:

2006–07 ஆம் ஆண்டில், இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ரூ. 1,050 இலட்சங்கள் செலவில், 26 வன வளர்ச்சி முகமைகளில், 350 இலட்சங்கள் எண்ணிக்கையிலான காட்டாமணக்குச் செடிகளை உருவாக்க ஒப்புதல் அளித்துள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட செடிகள் தமிழ்நாட்டில் உள்ள தரிசு மற்றும் பொது நிலங்களில் பயிரிட இலவசமாக விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் மற்றும் 'பயோ டீசலை' ஒரு எரிசக்தி ஆதாரமாக உற்பத்தி செய்ய உதவுவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### 1.10.2. அவசரகால சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் உயிரினப் பரவல் பாதுகாப்பு மற்றும் கடலோர உயிரின வாழ்க்கைச் சூழல் காத்தல் (ETRP):

தமிழ்நாட்டு கடலோரங்களில் உள்ள கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலக் காடுகள், 26–12–2004 அன்று ஏற்பட்ட சுனாமி தாக்குதலின்போது கடலோரங்களில் வசித்து வந்த மக்களையும், அவர்தம் உடைமைகளையும் பாதுகாத்துள்ளன.



மாநிலத்தின் கடலோரப் பகுதிகள், அடிக்கடி ஏற்படும் புயல்சீற்றங்களால் பாதிக்கப்படுகின்றன. எனவே, அப்பகுதி மாவட்டங்களில் உள்ள மக்கள் மற்றும் அவர்தம் உடைமைகளை இயற்கைச் சீற்றங்களான புயல் மற்றும் சுனாமியில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு, 2005–06 ஆம் ஆண்டில், 2,000 எக்டேர் பரப்பில் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்களும், 700 எக்டேர் பரப்பில் சதுப்பு நிலக் காடுகளும் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக, 2006–2007 ஆம் ஆண்டிலும், 2,000 எக்டேர் பரப்பில் கடலோரத் தடுப்புத் தோட்டங்களும் 700 எக்டேர் பரப்பில் சதுப்பு நிலக் காடுகளும் ரூ.10.73 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

### 1.10.3. தேசிய புயல் இடர்பாடு தடுப்புத் திட்டம்:

மக்களையும், அவர்தம் உடைமைகளையும், இயற்கைச் சீற்றங்களான புயல் மற்றும் சுனாமி போன்ற தாக்குதலில் இருந்து பாதுகாக்க, ரூ. 2,491.48 இலட்சங்கள் செலவில், 3,200 எக்டேர் பரப்பில் சதுப்பு நிலக் காடுகளும், 3,600 எக்டேர் பரப்பில் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்களும் உருவாக்குவதற்கான கருத்துரு ஒன்று சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களை, இயற்கைச் சீற்றங்களான புயல் மற்றும் சுனாமியிலிருந்து நிரந்தரமாகப் பாதுகாத்தலே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

### 1.10.4. வனத் துறையால் நடத்தப்படும் பழங்குடியினர் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு:

தமிழ்நாடு வனத் துறையால் நடத்தப்பட்டு வரும், மலைவாழ் மாணவர்கள் பயிலும் 19 பள்ளிகளின் அடிப்படை வசதிகளான கழிவறை, குடிதண்ணீர், மாணவர்கள் தங்கிப் பயிலத் தங்கும் விடுதிகள், கூடுதல் பள்ளி அறைகளை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக ரூ.481.63 இலட்சங்கள் செலவிலான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, 2006-07 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக நாபார்டு வங்கியின் உதவிபெற அவ்வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.10.5. 12–வது நிதிக் குழு பரிந்துரையின்கீழ் வனப் பராமரிப்புப் பணிகள்:

12–வது நிதிக்குழு பரிந்துரையின்கீழ், 2006–2007 முதல் 2009–2010 வரை வனப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள, ரூ.30 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 2006–2007 ஆம் ஆண்டில், வனப்பராமரிப்புப் பணிகள் கீழ்க்காணும் இனங்களில் மேற்கொள்ள,

ரூ.1,332.00 இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சங்களில்)

| | |
|---|---|
| ❖ நீலகிரி மற்றும் பழனி மலைப் பகுதிகளில் பாதுகாப்பு மற்றும் தரங்குன்றிய காடுகளை மீட்டல். | 238.50 |
| ❖ சாலைகளை மேம்படுத்துவதன்மூலம் தகவல் தொடர்பினை மேம்படுத்துதல் | 577.50 |
| ❖ இருப்பிட மேலாண்மைமூலம் பல்லுயிரினப் பரவல் பாதுகாப்பு | 362.00 |
| ❖ வனத்துறை கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் சீரமைப்பு | 135.00 |
| ❖ கொடைக்கானல் கோட்டத்தில் பைன் (Pine) மற்றும் தைலமரங்கள் (Blue gum) வெட்டப்பட்ட இடத்தில், பசுமைக் காடுகளுக்கான தாவர வகைகளை உற்பத்தி செய்தல். | 19.00 |
| மொத்தம் | 1332.00 |

**1.10.8. 2006–2007 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள்:**

2006–2007 ஆம் ஆண்டில் பாதுகாப்பு, கட்டடங்கள், சாலைகள், வனக் குடியிருப்பு மற்றும் உயிரியல் பூங்கா மேம்பாடு போன்ற பின்வரும் 24 பகுதி-II திட்டங்களைச் செயல்படுத்த ரூ.886.20 இலட்சங்கள் மதிப்பீட்டிற்கு நிதி நிலைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது:



| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 15 கோட்டங்களில் வன உயிரினங்களுக்குக் குடிநீர் வசதி அளித்தல் | 30.00 |
| 2 | 12 மருத்துவத் தாவரங்கள் பாதுகாக்கும் பகுதிகளையும், 8 மருத்துவத் தாவரங்கள் அபிவிருத்திப் பகுதிகளையும் பராமரித்துக் காத்தல் | 10.00 |
| 3 | 25 கோட்டங்களில் காப்புக் காடுகளுக்கு வெளியே பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வன உயிரினக் கணக்கெடுப்பு | 5.00 |
| 4 | 4 வனச் செயல் திட்ட மண்டலங்களில் வனச் செயல் திட்டம் தயாரித்தல், உயிரியல் வேற்றுமை கணக்கெடுத்தல் மற்றும் வரைபடங்களில் அடையாளம் காட்டுதல் | 8.00 |
| 5 | 5 பறவைகள் புகலிடங்களுக்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் | 10.00 |
| 6 | கிண்டி தேசிய பூங்கா தங்கும் விடுதியினை மேம்படுத்திப் புதுப்பித்தல் | 3.00 |
| 7 | களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக மேலாண்மை | 13.00 |
| 8 | கிண்டி தேசிய பூங்காவில் உள்ள சிறுவர் பூங்கா மேம்பாடு | 25.00 |
| 9 | தொந்தரவு விளைவிக்கும் வன உயிரினங்களைக் காட்டுக்குள் திருப்பி அனுப்புதல் | 30.00 |
| 10 | கொடைக்கானல் கோட்டத்தில் 500 எக்டேர் பரப்பளவில் பைன் மரங்கள் வெட்டப்பட்ட இடத்தில் பசுமைக் காடுகளுக்கான தாவர வகைகளை உற்பத்தி செய்தல் | 100.00 |
| 11 | 3 கோட்டங்களில் 300 எக்டேர் பரப்பில் மூங்கில் காடுகளை வளர்த்தல் | 28.00 |
| 12 | மதுரை மற்றும் கோவை மண்டலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றிய பகுதிகளில் 170 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் | 12.00 |
| 13 | வன நிர்ணயம் – 2006–2007 ஆம் ஆண்டில் 1,500 எல்லைக் கற்கள் அமைத்தல் | 12.00 |
| 14 | வனப் பணியாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தல் | 7.50 |

[2006 ஆகஸ்ட் 10

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 15 | முதுமலை வன உயிரினச் சரணாலயம் மற்றும் தேசிய பூங்காவில் யானைகள் மீட்பு போக்குவரத்து பயன்பாட்டிற்கான வாகனம் வாங்குவது | 11.00 |
| 16 | கரூர், ஒசூர், வேலூர், கோவை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை கோட்டங்களிலுள்ள 12 பழங்குடியினர் அமைவிடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, நீர்நிலைத்தொட்டிகளில் நீரினைச் சேமித்து குழாய்கள்மூலம் தூய்மையான குடி தண்ணீர் வழங்குதல். | 30.00 |
| 17 | 30 x 45 செ.மீ கொள்கலனில் ஒரு இலட்சம் உயரமான செடிகள் உற்பத்தி செய்தல் | 30.00 |
| 18 | பல்வகையான தாவரங்கள் அதிகரிக்க ஆராய்ச்சி செய்தல் | 5.00 |
| 19 | கோவை, தமிழ்நாடு வனக் கல்விக் கழகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 25.00 |
| 20 | வைகை அணையில் உள்ள தமிழ்நாடு வனவர்கள் பயிற்சிக் கல்லூரியில் களப் பணியாளர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளித்தல் | 15.50 |
| 21 | பனகல் கட்டடத்தில் மேம்பாட்டுப் பணிகள் | 30.00 |
| 22 | கொளப்பாக்கத்திலுள்ள வன ஆராய்ச்சி நிலைய பரிசோதனைக் கூடத்தினை விரிவுபடுத்துதல் | 40.00 |
| 23 | சேலம் மாவட்டத்திலுள்ள குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்காவினை மேம்படுத்துதல் | 45.70 |
| 24 | வனப் பகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்துதல் | |
| (i) | கணவாய்புதூர்–கண்ணப்பாடி சாலையினை மேம்படுத்துதல் (4.5 கி.மீ.) (சேலம் மாவட்டம்) | 13.50 |



2006 ஆகஸ்ட் 10]

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (ii) | கஞ்சேரி – கண்டயனூர் சாலையினை மேம்படுத்துதல் (5.0 கி.மீ.) (சேலம் மாவட்டம்) | 15.00 |
| (iii) | கஞ்சேரி–பண்ணைக்கரடு சாலையினை மேம்படுத்துதல் (4.0 கி.மீ.) (சேலம் மாவட்டம்) | 12.00 |
| (iv) | மலையாண்டிப்பட்டி – நெல்லிவாசல் சாலையினை மேம்படுத்துதல் (2.6 கி.மீ.) (வேலூர் மாவட்டம்) | 30.00 |
| (v) | அரக்கடவு – மண்ணுக்குட்டை சாலையினை மேம்படுத்துதல் (3 கி.மீ.) (கோயம்புத்தூர் மாவட்டம்) | 45.00 |
| (vi) | நல்லவனாய்பட்டி – நடுவளவு சாலையினை மேம்படுத்துதல் (1.6 கி.மீ.) (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | 20.00 |
| (vii) | மூலக்காடு – செம்புலிச்சான்பட்டி சாலையினை மேம்படுத்துதல் (10 கி.மீ.) பச்சமலை, துறையூர் வட்டம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | 100.00 |
| (viii) | ஆர்.கோம்பை – மேத்தாப்பட்டி சாலையினை மேம்படுத்துதல் (2.84 கி.மீ.) புதுப்பித்தல் (ரூ.8.80 இலட்சம் கி.மீ.) (திண்டுக்கல் மாவட்டம்) | 25.00 |
| (ix) | ஓமந்தூர் – புலிவலம் சாலையினை மேம்படுத்துதல் (3.75 கி.மீ.) முசிறி வட்டம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | 32.70 |
| (x) | ஓமந்தூர் – திண்ணனூர் சாலையினை மேம்படுத்துதல் (3.2 கி.மீ.) முசிறி வட்டம், (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | 23.50 |
| (xi) | பொள்ளாச்சி இந்திராகாந்தி வன உயிரின சரணாலயப் பகுதியில் உள்ள டாப்சிலிப் வரகலையார் வழியாக மானாம்பள்ளிக்குச் செல்லும் சாலையினைப் பராமரித்தல் (3.4) கி.மீ. (கோயம்புத்தூர் மாவட்டம்) | 43.80 |
| | மொத்தம் .. | 886.20 |

[2006 ஆகஸ்ட் 10

## 1.11. கழகங்கள்

### 1.11.1. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி:

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக்கொண்டு 1974 முதல் செயல்பட்டு வருகிறது. இக்கழகம், தமிழ்நாடு வனத் துறையிலிருந்து சுமார் 74,917 எக்டேர் வனப் பரப்பினைக் குத்தகை அடிப்படையின்கீழ் பெற்று, புதுக்கோட்டை, அறந்தாங்கி, காரைக்குடி, விருத்தாசலம், விழுப்புரம் மற்றும் திருக்கோயிலூர் என ஆறு மண்டலங்களாக நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது.

காகித உற்பத்திக்கு மூலப்பொருளான மரக்கூழ் தோட்டங்களை உற்பத்தி செய்து, காகிதத் தொழிற்சாலைகளுக்கு, முக்கியமாக திருவாளர்கள் தமிழ்நாடு காகித நிறுவனம், கரூர் மற்றும் சேஷசாயி காகித நிறுவனம், பள்ளிப்பாளையம், நாமக்கல் மாவட்டம் ஆகியவற்றிற்கு விநியோகம் செய்வது இக்கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். அந்நியச் செலாவணி ஈட்டும் முந்திரித் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, முந்திரிக் கொட்டைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பெருமரங்கள், மென்மரங்கள் மற்றும் தீக்குச்சி தயாரிப்பிற்குரிய மரங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதும் இக்கழகத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

அதிக மகசூல் தரக்கூடிய உயர்ரகக் கலப்பின விதைகள் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு, தோட்டங்கள் வளர்க்கப்படுகின்றன. மிக வேகமாக வளரக்கூடிய யூகலிப்டஸ் மர குளோனல் கன்றுகள், நுண்ணுயிர் உரங்கள் இடப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழில்நுட்பத்தால் கூழ்மர உற்பத்தி தற்போது ஆண்டு ஒன்றுக்கு கிடைத்திடும் ஒரு இலட்சம் டன்னிலிருந்து, மூன்று இலட்சம் டன்னாக உயரும். இதுபோன்று, ஆராய்ச்சி அடிப்படையில் கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்களைக் கையாண்டு, அதிக மகசூல் கிடைக்கக்கூடிய முந்திரித் தோட்டங்கள் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டுகளில், காவிரி மற்றும் அக்னியாறு படுகை நிலங்களில் சவுக்கு மற்றும் தேக்கு மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆற்றில் போதிய நீர்வரத்து இன்மையால், நடப்பட்ட கன்றுகள் அதிக அளவில் காய்ந்து விட்டன. எனவே, வறட்சியினைத் தாங்கக்கூடிய புதிய வகை



2006 ஆகஸ்ட் 10]

சவுக்கு இன விதைகள் கண்டறியப்பட்டு ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, தோட்டங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இத்தோட்டங்களில், தரமான மரங்கள் கண்டறியப்பட்டு, அவற்றிலிருந்து விதைகள் சேகரம் செய்து, தோட்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன், பொது மக்களுக்கும் சவுக்குத் தோட்டங்கள் உற்பத்திக்காக விதைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'கட்டுமானப் பணி மரத் தேவையினைப் பூர்த்தி செய்ய, வறட்சியினைத் தாங்கி வேகமாக வளர்ந்திடும் விலை மதிப்புமிக்க ஆப்பிரிக்க மகாகனி விதைகள் ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, தோட்டங்களாக எழுப்பப்பட்டுள்ளன.

இக்கழகத்தில் உள்ள ஆறு மண்டலங்களிலும், பயோடீசல் தயாரிப்பதற்குரிய அதிக மகசூல் தரக்கூடிய காட்டாமணக்கு விதைகள் ஜிம்பாப்வே நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து தரமான, மிகச் சிறந்த மகசூல் கொடுக்கும் காட்டாமணக்குச் செடிகள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிலிருந்து பெருமளவில் விதைகள் சேகரம் செய்யப்பட்டு, தோட்டங்கள் எழுப்பப்படுவதுடன், பொது மக்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோன்று, மேல்செங்கம் பண்ணையில் 4,000 எக்டேர் பரப்பளவில் ஒரு பயோடீசல் மண்டலம் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பண்ணையில் பயோடீசலுக்காக காட்டாமணக்கு மற்றும் புங்கன் தோட்டங்களுடன், வேகமாகவும், வீரியமாகவும், வளரக்கூடிய கூழ்மரத் தோட்டங்கள் மற்றும் முள் இல்லாத வேகமாக வளரும் புதிய இன மூங்கில் தோட்டங்களும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த (2005–2006 ஆம்) ஆண்டில் 80 லட்சம் யூகலிப்டஸ் மர குளோனல் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் (2006–07) சுமார் 100 இலட்சம் தைலக் குளோனல் கன்றுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 80 இலட்சம் கன்றுகள் இக்கழகத் தோட்ட உற்பத்திக்காகவும், 20 இலட்சம் கன்றுகள் தமிழ்நாடு காகித நிறுவனத்தின்மூலம் விவசாய நிலங்களில் ஒப்பந்த அடிப்படையில் நடவு செய்யவும் வழங்கப்படவுள்ளது.

வேலூர் மாவட்டம், தெக்குப்பட்டிலுள்ள சந்தனப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலையில், சந்தன மர எண்ணெய் தயாரிப்பதுடன், சந்தன மரப்பொருட்களான துண்டுகள், துகள்கள் முதலியன உற்பத்தி

[2006 ஆகஸ்ட் 10

செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் (2006–2007) வாணியம்பாடியில் உள்ள சந்தன மரப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலைமூலம் ரூ.339.38 இலட்சங்கள் இலாபமாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை வளாகத்தினுள் கழகத்தின்மூலம் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கவும் கழகம் பரிசீலித்து வருகிறது.

இக்கழகம் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ச்சியாக இலாபம் ஈட்டியுள்ளது. இக்கழகத்தின் நிதி சாதனைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

**நிதி சாதனை**

| வ. எண் | இனம் | 2004–2005 (உள்ளபடி) | 2005–2006 (திருத்தப்பட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சங்களில்) | |
| (அ) | மொத்த வருவாய் | 3765.60 | 3580.75 |
| (ஆ) | மொத்தச் செலவு | 3082.58 | 2844.35 |
| | நிகர லாபம் (+) / நட்டம் (–) (அ–ஆ) | (+) 683.02 | (+) 736.40 |

நடப்பாண்டிலும் தனது செயல்பாட்டினை மேம்படுத்த கழகமானது தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளும்.

### 1.11.2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்:

சாஸ்திரி–ஸ்ரீமாவோ உடன்படிக்கையின்படி, இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளின் மறுவாழ்விற்காக, சமூகப் பொருளாதார நோக்கத்துடன், தேயிலைத் தோட்டங்களை உருவாக்க 1968 ஆம் ஆண்டில், தமிழக அரசால் அரசு தேயிலைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, வனத் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து டான்டீ என்று வெகுவாக அழைக்கப்படும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1956 ஆம் வருடத்திய கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 01–04–1976–லிருந்து ஒரு கழகமாகச் செயல்படத்



2006 ஆகஸ்ட் 10]

துவங்கியது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ.10.00 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.96 கோடியாகும்.

தோட்ட உற்பத்தி மற்றும் மறுவாழ்வுப் பணிகள், இக்கழகத்தால் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. இக்கழகம், 4,431.92 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டத்தினை உற்பத்தி செய்து, 2,445 இலங்கை அகதிகளின் குடும்பங்களுக்கு மறுவாழ்வளித்து வருகிறது. தற்போது 6,250 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், 3,000 தொழிலாளர்களுக்குத் தினக்கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது.

நிரந்தரத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகளான இலவசக் குடிநீர், இலவச மருத்துவச் சிகிச்சை, குழந்தைகள் காப்பகம், தொடக்கக் கல்வி, மகப்பேறு பயன்கள், நோய்நிலைப் பயன்கள், ஊதியத்துடன் விடுப்பு, தேசிய மற்றும் விழாக்கால ஊதியம், வெப்ப உடைகள், போனஸ், பணிக்கொடை, சேம நல நிதி போன்ற பலன்களை இக்கழகம் வழங்கி வருகின்றது.

இக்கழகத்தின் வரவு-செலவு விவரம் மற்றும் பசுந்தேயிலை உற்பத்தி மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலை உற்பத்தியின் 2005–2006 மற்றும் 2006–2007 ஆம் ஆண்டிற்கான செயல் சாதனை விவரங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

### 1.11.3. (அ) பசுந்தேயிலை உற்பத்தி:

(இலட்சம் கிலோவில்)

| 2005–2006 (உள்ளபடி) | 2006–2007 (மதிப்பீடு) |
|---|---|
| 443.24 | 480.45 |

### (ஆ) பதப்படுத்தப்பட்ட தேயிலை உற்பத்தி:

(இலட்சம் கிலோவில்)

| 2005–2006 (உள்ளபடி) | 2006–2007 (மதிப்பீடு) |
|---|---|
| 106.38 | 115.31 |

### 1.11.4. வருவாய் மற்றும் செலவின விவரங்கள்:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | இலாபம்(+) நட்டம் (–) |
|---|---|---|---|
| 2004–2005 (உள்ளபடி) | 5394.13 | 4871.16 | (+) 522.97 |
| 2005–2006 (தற்காலிகமானது) | 4213.00 | 4913.10 | (–) 700.10 |
| 2006–2007 (தற்காலிகமானது) | 5349.00 | 5269.00 | (+) 80.00 |

### 1.11.5. அரசு இரப்பர் கழகம், நாகர்கோவில்:

அரசு இரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறையின் 4279.78 எக்டேர் வன நிலங்களிலுள்ள இரப்பர் தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே இரப்பர் பயிரிட ஏற்ற மண்வளம், தட்ப வெப்பநிலை மற்றும் இட அமைப்பு ஆகியவை உள்ளன. 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 20–08–1984 அன்று, அரசு இரப்பர் கழகம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 4.00 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.2.00 கோடியாகும். இக்கழகத்தில் 386 இலங்கை அகதிகள் உட்பட 1,588 நிரந்தரப் பணியாளர்கள் உள்ளனர்.

அரசு இரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட இரப்பர் மரங்கள், 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் நடப்பட்ட மரங்கள் ஆகும். இரப்பர் வாரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் மரங்கள், குறைந்த அளவு விளைச்சலை வழங்குவதால் இவற்றைப் பராமரிப்பது



பயனற்றதாகும். எனவே உற்பத்தி இழப்பை ஈடுகட்டவும் உற்பத்தியைப் பெருக்கவும், கழகம் சிறப்பாகச் செயலாற்றவும், ஏற்கெனவே உள்ள தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பளிக்கவும், இரப்பர் வாரியத்தின் அறிவுரையின்படி, முதிர்ந்த இரப்பர் மரங்கள் விழுந்தபின் இப்பகுதிகளில் உயர்நுட்பவியல் ஒட்டு மரங்களை மறுநடவு செய்ய முடிவெடுக்கப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டில் 95.20 எக்டேர் பரப்பிலும், 2005–2006 ஆம் ஆண்டில், 10.20 எக்டேர் பரப்பிலும் மறுநடவு செய்யப்பட்டுள்ளது. 2006–07 ஆம் ஆண்டில் மறுநடவுப் பணிகளை மேற்கொள்வதற்கென நாற்றங்கால் பண்ணை ஒன்றை நிறுவி, அதைப் பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 1.11.6. உற்பத்தி மற்றும் விற்பனை (வருவாய் மற்றும் செலவுகள்):

(ரூபாய் இலட்சங்களில்)

| வருடம் | இரப்பர் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | இரப்பர் மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | நிகர லாபம் (+) நட்டம் (–) |
|---|---|---|---|---|
| 2004–2005 (உள்ளபடி) | 2037.00 | 1492.01 | 1471.09 | (+) 20.92 |
| 2005–2006 (மதிப்பீடு) | 2500.00 | 1979.79 | 1699.80 | (+) 279.99 |
| 2006–2007 (திட்ட மதிப்பீடு) | 2500.00 | 1872.28 | 1534.00 | (+) 338.28 |

### 1.12. தொடரும் பாதை:

சுற்றுச்சூழல் பாதுகாப்பினை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் வனங்கள் உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்படுவதுடன், வன உயிரினப் பெருக்கம் மற்றும் பாதுகாப்பிற்குத் தேவையான பணிகளும் மேற்கொள்ளப்படும். மாநிலத்தில் நிலைத்திருக்கக்கூடிய மேம்பாட்டினை அடைவதற்காக தமிழ்நாட்டின் தனித்துவம்மிக்க வன விலங்குகள் மற்றும் பறவைகள் உள்ளிட்ட இயற்கை ஆதாரங்களைப் பாதுகாக்க, தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

[2006 ஆகஸ்ட் 10

## 2. சுற்றுச்சூழல் துறை

ஒரு நாட்டின் வளர்ச்சியானது, நீடித்து நிலைத்து நிற்கும் சமூக மற்றும் பொருளாதார மேன்மையை வழங்குவதாகவும், எதிர்காலச் சந்ததியின் தேவைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தாத வளர்ச்சியாகவும், அமையப்பெற வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது சமூகப் பொருளாதார வளர்ச்சியுடன் ஒருங்கிணைந்த அம்சமாகும். பெருகி வரும் மக்கள் தொகையும், பெருகி வரும் தொழில்மயமாக்கலும், நிலம் மற்றும் நீர்வாழ் உயிரின அமைப்பின் பாதுகாப்பிற்குப் பெரும் சவாலாக விளங்குகின்றன. இம்மாநிலத்தின் நிலம், நீர் மற்றும் வன வளங்கள் மற்றும் உயிர்ப்பன்மயம் உள்ளிட்ட வாழ்க்கைச் சங்கிலித் தொடரைச் சிதைக்காமல், சூழலியல் பாதுகாப்பினை மேம்படுத்துதல் இன்றியமையாததாகும். இதனைக் கருத்திற்கொண்டு இவ்வரசினால், நதிகள் மற்றும் ஏரிகளின் மாசு களைதல் மற்றும் பள்ளி மாணாக்கர், பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.1. சுற்றுச்சூழல் துறையின் குறிக்கோள்கள்:

சுற்றுச்சூழல் துறை, 1995-ல், சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தும் பொருட்டு, ஓர் இணைப்புத் துறையாக மாநிலத்தில் உருவாக்கப்பட்டது. இத்துறை காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆறுகள் மற்றும் சென்னை நகரின் நீர் வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகள், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவற்றைத் தவிர, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத பிற சுற்றுச்சூழல் பணிகளையும் இத்துறை செய்து வருகிறது.

திட மற்றும் திரவக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், இயற்கை உரம் தயாரித்தல், மழைநீர் சேகரம் செய்தல், மரம் நடுதல் போன்ற நடவடிக்கைகள் சூழல் பாதுகாப்பிற்கு வழிவகுக்கும். மக்களின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படுத்தி, அதன் வாயிலாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வைத் தோற்றுவிப்பது, சூழல் பாதுகாப்புக்கு இன்றியமையாததாகும். இதனை நன்றாகச் செயல்படுத்துவதற்கு, இம்மாதிரியான சிந்தனைகளைப் பள்ளி மாணாக்கர்களின் இளம் மனங்களில் பதியும்வண்ணம் புகட்டப்படுதல் வேண்டும். ஆகையினால், 2006-2007ஆம் ஆண்டுக்கான திட்டங்கள், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட கருத்துருவை அடிப்படையாகக் கொண்டுள்ளன.



2006 ஆகஸ்ட் 10]

### 2.2. கடற்கரைப் பகுதி மேலாண்மை:

கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கும், "கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை" 1991-ஐச் செயலாக்குவதற்கும், மத்திய அரசு, மாநில சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை செயலாளரைத் தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர்-செயலாளராகக் கொண்ட மாநில கடற்கரை மேலாண்மைக் குழுமத்தை அமைத்துள்ளது. பல்வேறு கருத்துருக்களை இக்குழுமம் பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இதேபோன்று, "அனல் மின் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக வல்லுநர் குழு" மற்றும் "அனல் மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் எரிசாம்பல் தொடர்பாக மைய அரசு வெளியிட்ட அறிவிக்கைகளினை கண்காணிக்கும் குழு" ஆகியவற்றின் செயல்பாடுகளினை இத்துறை ஒருங்கிணைத்து வருகிறது.

### 2.3. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை (இமேட்):

2.3.1. மைய அரசு மற்றும் மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் பல்வேறு முகமைகளினை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தவும், தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களைத் துரிதப்படுத்தவும், அவற்றிற்கான மைய அரசின் நிதி உதவியை அவ்வப்போது பெற்று, ஒருங்கிணைத்து, பணிகளை மேற்பார்வையிடவும், தன்னாட்சி அடிப்படையில் சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை ஒன்று 2002-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த முகமை, சுற்றுச்சூழல் துறையினால் செயலாக்கப்படும் ஆறுகளைத் தூய்மைப்படுத்தும் செயலை வலுவூட்டுவதற்கு உதவுகிறது. கீழ்க்கண்ட திட்டங்கள் சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையினால் ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறது:

#### 2.3.2. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்:

இத்துறையானது, மைய அரசின் நிதி ஆதாரத்துடன், "காவிரியாற்றில் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்த ஐந்து பகுதிகளில் மாசுத் தடுப்புப் பணிகள்" திட்டத்தினை ரூ. 3,627.75 இலட்சங்கள் மொத்த திட்டச் செலவில் 1996-1997ஆம் ஆண்டு முதல், 10 வருட காலத்திற்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு ரூ. 2,105.33 இலட்சங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்மூலம் செயலாக்கப்பட்டு, 31-03-2006 வரை செலவிடப்பட்டுள்ளது. மைய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டப் பணிகள் நூறு விழுக்காடு நிதி உதவியுடன் 2006-2007ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

[2006 ஆகஸ்ட் 10

சிறு பணிகள் எனப்படும் குறைந்த செலவிலான சுகாதார வசதி ஏற்படுத்துதல், எரியூட்டு மேடை, ஆற்றங்கரை பாதுகாப்புப் பணிகள், உள்ளாட்சி அமைப்புகள்மூலம் நிறைவு பெற்றுள்ளன. பெரும்பணிகள் எனப்படும் கழிவுநீரைத் தடுத்து வழிப்படுத்துதல், கழிவுநீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால், ஈரோடு, பவானி, குமாரபாளையம், பள்ளிப்பாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகரங்களில் செயல்படுத்தப்படுகின்றன. அனைத்துப் பணிகளும், திருச்சி, குமாரபாளையம் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் முடிவடைந்துள்ளன. பணிகள், பவானி நகரத்தில் முன்னேற்றத்தில் உள்ளன. பள்ளிப்பாளையம் நகரத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு மைய அரசின் ஒப்புதல் வரவேண்டி உள்ளது.

**2.3.3. சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்:**

மைய அரசு, ரூ.49,152 இலட்சங்கள் நிதி உதவியினை, சென்னை நகரின் நீர் வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளைச் செயல்படுத்த சென்னை நகரத்தின் ஆறு முக்கிய நீர்வழித் தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி ஓடை, காப்டன் காட்டன் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் சேரும் 314 கழிவுநீர் சாக்கடைகளைத் தடுத்து நிறுத்தி குழாய் மூலம் மாற்று வழியில் எடுத்துச் செல்லும் பணிகள், சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்மூலம் செயல்படுத்துவதற்கு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் மொத்தமுள்ள 16 பகுதிகளில், 13 பகுதிகளில் பணிகள் முடிவுற்றுள்ளன. ஏனைய 3 பகுதிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தில் 99.8 விழுக்காடு பணிகள் மார்ச், 2006 முடிய ரூ.35,845.90 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**2.3.4. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் – கூடுதல் ஏழு நகரங்கள்:**

மைய அரசு, காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் ஏழு முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மதுரை, மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில், நதிநீரைத் தூய்மைப்படுத்தும் திட்டத்தினை, ரூ.57,530 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஏற்பளித்துள்ளது. இதில் ரூ.28,215 இலட்சம் மைய அரசின் பங்காகவும், மீதமுள்ள தொகையினை தமிழக அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மக்கள் பங்கேற்பு மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் நான்கு ஆண்டு காலத்திற்குள், பாதாளச் சாக்கடை அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்,



2006 ஆகஸ்ட் 10]

குறைந்த செலவில் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்படுத்தி ஆற்றின் மாசினைக் களைந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாசினைக் களையும் இத்திட்டங்கள், 7 கூடுதல் நகரங்களிலும் 2006–2007–ல் மைய அரசின் தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு இயக்குநரகத்தின் உதவியுடன் தொடரப்படும். ஏழு நகரங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை மைய அரசால் ஒப்பளிக்கப்பட்டது. மதுரை மற்றும் கும்பகோணம் நகரங்களின் திட்டப் பணிகள், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்மூலம் நிறைவேற்றப்படுகின்றன. கரூர், தஞ்சை, மயிலாடுதுறை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து நகரங்களில் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் மார்ச், 2006 வரையில் 32,592.38 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2.3.5. பாலாற்று நதி பாதுகாப்பு:**

சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீரில் உள்ள உப்புத் தன்மையைக் குறைக்க, சுத்திகரிக்கப்பட்ட நகராட்சி கழிவுநீரினை அதனுடன் கலந்திடவும், ஆம்பூர் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடை அமைத்திடவும், ரூ.25 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதேபோன்று இராணிப்பேட்டை மற்றும் வாலாஜா நகராட்சிப் பகுதிகளில் உருவாகும் கழிவுநீரைச் சுத்திகரித்து, சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலை கழிவுநீரில் கரைந்துள்ள உப்புத் தன்மையைக் குறைக்க, ரூ.25 கோடி செலவில் ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் 70 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவியுடனும், மீதமுள்ள பங்கில் 25 விழுக்காடு நகராட்சிகளும், 5 விழுக்காட்டினை தொழிற்சாலைகளும் ஏற்றுக் கொள்ளும். இவ்விரு திட்டங்களுக்கும் மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது

**2.3.6. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்:**

சூழல் மேம்பாட்டிற்கான பணியினை, நுண்ணுயிரியல் அடிப்படையில், உதகை மற்றும் கொடைக்கானல் ஏரிகளில் மாசினைக் களைந்து, தூய்மைப்படுத்துவதற்காக தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.684 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்மூலமாக

நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் ரூ.33.90 இலட்சங்கள் கொடைக்கானல் ஏரியினைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்காகவும் ரூ.162.90 இலட்சங்கள் உதகை ஏரியினைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்காகவும் மார்ச், 2006 வரை செலவிடப்பட்டுள்ளன. உதகை ஏரியில் மறுசீரமைப்புப் பணிகள் முடிவுற்றன. தற்போது சுத்திகரிப்பிற்குப் பின்னர் உதகை ஏரி சுத்தமாக உள்ளது.

## 2.4 சுற்றுச்சூழல் துறையின் பணிகள்

### 2.4.1 சுற்றுச்சூழல் விருதுகள்:

மாநில அரசால், சுற்றுச்சூழல் பணிகளில் சிறப்பாகச் செயல்படும் அரசுசாரா நிறுவனங்கள், வல்லுநர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோரை ஊக்குவிக்க, சுற்றுச்சூழல் விருதுகள், ஆண்டுதோறும் உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 ஆம் தேதி அன்று வழங்கப்படுகிறது.

### 2.4.2 சுற்றுச்சூழல் மன்றங்கள்:

சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பள்ளி மாணவர்களிடம் ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்டங்களிலும் 1,260 சுற்றுச்சூழல் மன்றங்கள், இத்துறையால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இம்மன்றங்கள் அன்றி சுற்றுச்சூழல் கருத்தரங்குகள், கருத்துப் பட்டறைகள் ஆகியவை மாவட்ட அளவில் வனத் துறை அலுவலர் உதவியுடன் நடத்தப்படுகின்றன. இத்திட்டம் 2006-2007 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.

### 2.4.3. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு:

நுண்ணுயிர் கலவை மூலமாக ஏரிகளைத் தூய்மைப்படுத்தவும், உகந்த மரத்தொகுப்புமூலம் கழிவுநீரால் பாதிக்கப்பட்டுள்ள நிலங்களைச் சீரமைக்கவும், புதுமையான சூழல் ஆராய்ச்சித் திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளின் சூழல் தாக்க மதிப்பீடு ஒன்று, பிப்ரவரி 2005–ல் மேற்கொள்ளப்பட்டது. 2004–2005–ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.10 இலட்சத்தில் ரூ.4.94 இலட்சம் இதற்காக விடுவிக்கப்பட்டது. மீதமுள்ள தொகை 2006–2007 ஆம் ஆண்டில் செலவிடப்படும்.





### 2.4.4. கடற்கரைச் சூழல் பாதுகாப்பு:

கடற்கரைப் பகுதிகள் மிகவும் சிக்கலான, சக்திவாய்ந்த சூழல் நிலையைக் கொண்டிருப்பதால், வளர்ச்சிப் பணிகள் மற்றும் நகரமயமாக்குதல் ஆகியவற்றால் பாதிப்புக்கு உட்படுகின்றன. ஆக்கப்பூர்வமான கடற்கரை மேலாண்மைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் நமது கடற்கரைச் செல்வத்தை அழியாமல் பாதுகாக்கவும், பாதிப்புகளைக் குறைக்கவும் இயலும். கடலோரத்தில் இப்போதுள்ள அலையாத்திக் காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மறு உற்பத்தி செய்வதை வனத் துறையும், சுற்றுலா நடவடிக்கைகளை சுற்றுலாத் துறையும் மேற்கொள்கின்றன. மேலும் மீன்வளர்ப்பு, துறைமுகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் கடற்கரைப்பகுதியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

புலிகட்டு ஏரி முதல் பாலாறு முகத்துவாரம் வரை உள்ள தமிழக கடலோரப் பகுதியில், ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைக்கான திட்டம் தயாரிக்கும் பணி சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் கடல் மேலாண்மை நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்படும். இதற்கான ஒதுக்கீடு ரூ.10 இலட்சத்தில், ரூ.4.95 இலட்சம், 2004–05–ல் விடுவிக்கப்பட்டது. மீதமுள்ள தொகை, நடப்பு ஆண்டில் இறுதி அறிக்கை பெறப்பட்டதும் வழங்கப்படும்.

1986 ஆம் வருட சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட 1991 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையினை இத்துறை செயல்படுத்தி வருகிறது. கடலோரங்களில் நிகழ்கின்ற அறிவிக்கை மீறல்களை, மாநில அரசு தீவிரமாகக் கண்காணிப்பதன்மூலம் கட்டுப்படுத்த இயலுமென மைய அரசு வலியுறுத்தி உள்ளது. கடலோரச் சூழல் பாதுகாப்பினை மேம்படுத்த கடலோரப் பசுமைப்படை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கென தொடர் செலவினமாக ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.5. மைய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.5.1. தேசிய பசுமைப் படை:

சுற்றுச்சூழல் விழிப்புணர்வினைப் பள்ளி மாணாக்கர்களிடையே வலுப்படுத்த, மாவட்டம் ஒன்றிற்கு 150 பள்ளிகள் வீதம் 30 மாவட்டங்களில் 4,500 பள்ளிகளில் தேசிய பசுமைப்படை

தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மைய அரசு ஆண்டுதோறும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.2,500/– மானியமாக ஒப்பளித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைமை பயிற்றுநர் மற்றும் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலுமான கண்காணிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, இத்திட்டம் கண்காணிக்கப்படுகிறது. 100 விழுக்காடு மைய அரசு நிதி உதவியுடன் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. நடப்பு 2006–2007 ஆம் ஆண்டில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூடுதலாக 100 பள்ளிகளில் இத்திட்டம் தொடங்கலாம் என மைய அரசு தெரிவித்துள்ளது. எனவே இந்த ஆண்டு முதல் மேலும் 3,000 பள்ளிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படும். தேசிய பசுமைப் படை மற்றும் சூழல் மன்றங்களின்வாயிலான விழிப்புணர்வு இயக்கத்தில் சுமார் 2.5 இலட்சம் மாணாக்கர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் கூடுதலாக 1.5 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்படுவர்.

### 2.5.2. சூழல் தகவல் மையம்:

சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS - Environmental Information System) ஒன்று, மைய அரசின் நிதியுதவியுடன் இத்துறையில் இயங்கி வருகிறது. வலைதளம் வாயிலாக, தமிழகச் சுற்றுச்சூழல் பற்றிய பொதுவான தகவல்களை அளிப்பது மட்டுமன்றி, சுற்றுச்சூழலின் தற்போதைய நிலை, மாநிலத்தின் வளமான உயிர்ப் பன்மயம் மற்றும் ஆறுகளைத் தூய்மைப்படுத்தும் பணிகள் ஆகிய விவரங்களைச் சூழல் தகவல் மையம் வழங்கி வருகிறது. மைய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் இத்திட்டம் 2006–2007 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 2.5.3. சூழல் நிலை அறிக்கை:

மாநிலத்தின் சூழல் நிலை அறிக்கை தயாரிக்கும் பணி ரூ.12.50 இலட்சம் மைய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2006–07–ல், சுற்றுச்சூழல் வரைபடம், தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் புகைப்படத் தொகுப்பு, சுற்றுச்சூழல் நிலை குறித்த குறுந்தகடு, வலைதளம் போன்ற கூடுதல் தகவல்களுடன், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



## 2.6. உலக வங்கி உதவியுடன் 2006–2007–ல் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்

### 2.6.1. தமிழகக் கடலோரத்தின் பாலாறு முகத்துவாரம் முதல் குமரி மாவட்டத்திலுள்ள தேங்காய்ப்பட்டினம் வரை உயர் அலைமட்டம் குறியிடுதல்:

சுற்றுச்சூழல் துறை ஏற்கெனவே டேராடூன், முதன்மை நேவல் ஹைட்ரோகிராபர்மூலம், புலிகட்டு ஏரி முதல் பாலாறு வரை உயர் அலைமட்ட குறியீட்டுப் பணியை, ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொண்டது. எஞ்சியுள்ள கடற்கரைப் பகுதி மற்றும் அலைநீர் தாக்கத்திற்கு உட்படும் நீர்நிலைகளின் உயர் அலை மட்டத்தினைக் குறியீடு செய்து, அதற்கான வரைபடத்தில் 1:25000 என்ற அளவீட்டில் குறிப்பு செய்யவும், இதனையே கிராம வரைபடங்களில் 1:5000 என்ற அளவீட்டில் குறிப்பு செய்யும் பணிகள் ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணி நடப்பு ஆண்டு 2006–2007–ல் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### 2.6.2. உயர் அலைமட்ட குறியீடு செய்யப்பட்ட இடங்களில் கல் தூண் நடுதல்:

கடலோரத்தில் வசிக்கும் மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக, உயர் அலை மட்டம் குறியீடு செய்யப்பட்டு, தேவைப்படும் இடங்களில் கல் தூண்கள் நடப்படும் பணி, ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இப்பணி நடப்பு ஆண்டு 2006–2007–ல் தொடங்கப்படும்.

### 2.6.3. ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம்:

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் தொழிற்சாலைகள், சுற்றுலா, மீன் பிடித்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் மிகுந்துள்ளன. விருப்ப முரண்பாடுகளைக் குறைப்பதற்காக அனைத்துப் பயனாளிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, தகுந்த ஒரு மேலாண்மைத் திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பினை இழக்காத வகையில் பொருளாதார மேம்பாட்டினை அடைவதற்கு, ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம், ரூ.2.50 கோடி செலவில் தயாரிக்கப்பட உள்ளது. இப்பணி 2006–2007–ல் தொடங்கப்படும்.

[2006 ஆகஸ்ட் 10

## 2.6.4. அதிக அளவில் பாதிப்பிற்குள்ளாகும் கடற்கரையோரப் பகுதிகளின் வரைபடம் தயாரித்தல்:

இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளால் பெருமளவில் சிரழிவிற்குள்ளாகி இருக்கும் கடற்பகுதிகளின் வரைபடம் தயாரிக்கப்பட வேண்டும். வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கடல் மட்ட உயரம், புவியியல், புவி மாற்றம், கடல் மட்ட மாறுபாடுகள், கரையோர மாறுபாடுகள், அலை உயரம், அலை வரம்பு மற்றும் அலை மட்டப்போக்கு ஆகிய ஏழு அளவீடுகளின்படி பாதிப்பிற்குள்ளாகும் கடலோரப் பகுதிகள் வரைபடத்தில் குறியீடு செய்யப்படும். 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.2 கோடி செலவில் இப்பணி தொடங்கப்படும்.

## 2.6.5. உயிரியல் அடிப்படையில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட நீர்நிலைகளைச் சுத்திகரித்தல்:

நிலத்தடி நீரின் அளவு மற்றும் அதன் தரம் ஆகியவற்றினைக் கணக்கிற் கொண்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட சென்னை, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புதிய வளர்ச்சி நடவடிக்கைகளான வீடு கட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீன் வளத்தைப் பெருக்கவும், நீரின் தரத்தை உயர்த்தவும், கடலோர நீர்நிலைகளின் மாசினை நீக்கவும் விரிவான ஆய்வு அவசியமாகும். இதற்கு உயிரியல் முறையிலான சுத்திகரிப்பு முறை கையாளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், சுற்றுச்சூழலையும் இதனால் மேம்படுத்தலாம். இதனைக் கருத்தில்கொண்டு, உயிரியல் சுத்திகரிப்பு முறையால் சென்னை, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்நிலைகள், ரூ.4 கோடி செலவில் மாசு நீக்கப்படும். இப்பணி, 2006–07–ல் தொடங்கப்படும்.

## 2.6.6. தகுதி மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு உண்டாக்குதல்:

ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மைத் திட்டம் மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் கடலோரம் பற்றிய முக்கியத்துவம் குறித்து பலதரப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும். இதற்கான பயிற்சித் திட்டத்தினை வடிவமைத்து, கடலோர மேலாண்மைத் திட்டம் பற்றிய விழிப்புணர்வினைப் பயனாளிகளுக்கு ஏற்படுத்த, ரூ.1 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 10]

பஞ்சாயத்துத் தலைவர்கள், அரசுத் துறை மற்றும் உள்ளாட்சி மன்ற அலுவலர்கள் ஆகியோர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும். மேலும் தேசிய பசுமைப்படை மாணவர்களுக்கும், கடலோரம் வசிக்கின்ற மக்களுக்கும், சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். உள்ளூர் கல்வியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தி கருத்துப் பட்டறை, கருத்தரங்கம், தெருமுனை நாடகங்கள், கண்காட்சிகள் ஆகியவை நடத்தப்படும். 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்படும்.

## 2.6.7. நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இரண்டு இடங்களில், இரண்டு திட்ட ஒருங்கிணைப்பு அலகுகள் மற்றும் சென்னையில் ஒரு தொழில்நுட்ப அலகு தொடங்குதல்:

உலக வங்கித் திட்டங்களின் சுமுகமான முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையிலும், செயல்படுத்தவுள்ள ஆலோசகர்கள் மற்றும் அரசுத் துறைகள் ஆகியவற்றுக்கு இடையே ஒருங்கிணைப்பைத் தோற்றுவிக்கவும், சென்னையில் ஒரு தொழில்நுட்ப அலகும், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடியில் திட்ட ஒருங்கிணைப்பு அலகுகளும் ரூ.53 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 2006–07–ல் இவ்வலகுகள் மேலும் வலுப்படுத்தப்படும். இதேபோன்று 2006–07–ல் தலைமையகத்தில் தொழில்நுட்ப அலகும் தொடங்கப்படும்.

## 2.6.8. கடலோரப் பகுதிகள் குறித்த விழிப்புணர்வுத் திட்டம்:

கடலோர ஒழுங்குமுறைப் பகுதியில் ஏற்படும் நிகழ்வுகள் குறித்து, கள அளவில் கடலோர மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு, விழிப்புணர்வு முகாம்கள் நடத்த, ரூ.4.84 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்படும்.

## 2.7. 2006–2007 ஆம் ஆண்டில் மாநில அரசு உதவியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்

### 2.7.1. சூழலுக்குகந்த திருவண்ணாமலை நகரம்:

பாரம்பரியமிக்க நகரமாகிய திருவண்ணாமலை நகரத்திற்கு, சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரிக்க, ரூ.6 இலட்சம் 2005–2006 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.2 இலட்சம் நடப்பு ஆண்டில் செலவழிக்கப்படும்.

### 2.7.2. பழனி மலைக் குன்றில் சூழல் மேம்பாட்டுப் பணிகள்:

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் குன்றினைப் பசுமையாக்குவதற்காக ரூ.5 இலட்சம் செலவில் 2005–2006–ல் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தொகையான ரூ.5 இலட்சம், நடப்பு ஆண்டில் செலவிடப்பட்டு திட்டம் நிறைவேற்றப்படும்.

### 2.7.3. சென்னை மாநகரைச் சுற்றியுள்ள ஏரிகளில் சூழல் மறுசீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளல்:

ஏரிகள் சூழல் மறுசீரமைப்புக்கான விரிவான திட்டம், சென்னை நகரிலுள்ள கீழ்க்கண்ட ஏரிகளில் ரூ. 10 இலட்சம் செலவில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. 1. பள்ளிகரணை சதுப்பு, 2. சிட்லபாக்கம் ஏரி, 3. திருநீர்மலை பெரிய ஏரி, 4. பல்லாவரம் பால்கேணி, 5. மடிப்பாக்கம் ஏரி. ரூ.3 இலட்சம் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, இந்நிதியாண்டில் செலவு செய்யப்பட்டு, விரிவான திட்ட மதிப்பீடுகள் மைய அரசின் நிதி உதவி பெற அனுப்பி வைக்கப்படும்.

## 2.8. 2006–2007-ல் செயல்படுத்தப்பட உள்ள பகுதி–II திட்டங்கள்

### 2.8.1. மாவட்டந்தோறும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பான போட்டிகள் நடத்துதல்:

சுற்றுச்சூழல் மன்ற மற்றும் தேசிய பசுமைப் படை மாணவ உறுப்பினர்களிடையே, சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு சுற்றுச்சூழல் தலைப்புகளின்கீழ் போட்டி நடத்த, மாவட்டத்திற்கு ரூ.25,000/– வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 7.50 இலட்சம் செலவில் இத்திட்டம், 2006–2007–ல் மேற்கொள்ளப்படும்.

### 2.8.2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் நடத்துதல்:

சுற்றுச்சூழல் துறையால், ஒவ்வொரு மாவட்டத்திலும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களுக்கு, மூன்று நாட்கள் சுற்றுச்சூழல் முகாம் நடத்தப்படும். மாவட்டத்திற்கு ரூ.50,000/– வீதம் ரூ15 இலட்சம் செலவிலான இத்திட்டம், 2006–2007–ல் மேற்கொள்ளப்படும்.



### 2.8.3. கே.கே. நகர், அரசு அலுவலர் குடியிருப்பில் மாதிரி கழுவுநீர் மறுசுழற்சிப் பணிகள்:

வீட்டு உபயோகக் கழுவுநீரில், கழிவறை நீங்கலாக, சமையலறை, குளியலறை துவைக்குமிடம் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் நீரை, கழுவுநீர் என அழைக்கலாம். இந்தக் கழுவுநீரை, சரியான கழுவுநீர் மேலாண்மையின்மூலம் தோட்டக்கலை, விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்டங்களில், மதிக்கத்தக்க ஆதாரமாக உபயோகிக்க முடியும். சாதாரண சுத்திகரிப்பு முறையின்மூலம் பசுமையான தோட்டங்களும், பூங்காக்களும் அமைப்பதால், கட்டுமானப் பணிகளின் மதிப்பு பன்மடங்கு உயர வழி வகுப்பதோடு, கழுவுநீர் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவோருக்கு, இது ஒரு வரப்பிரசாதமாகவும் அமையும்.

**கழுவு நீர் சேகரிப்பதன் பயன்பாடுகள்:**

- கழுவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பளு குறைந்து செலவும் குறைகிறது
- தூய்மையான நீருக்கான தேவை குறைவதால் நீராதாரங்களைப் பாதுகாக்கிறது
- தோட்டங்களும் பூங்காக்களும் அமைக்க உதவுவதால் பசுமையான கண்கவரும் சூழலை உருவாக்குகிறது
- உபரி நீரை நிலத்திற்குள் செலுத்த உதவுகிறது
- மக்கள் பங்கேற்பை எளிதாக ஈர்க்கிறது

**செயல்பாடுகள்**

- 6 குடியிருப்புகளைக் கொண்ட 10 அடுக்குமாடி வீடுகளில் (மொத்தம் 60 வீடுகள்) இருந்து கழுவுநீர் சேகரிப்புக் குழாய் மூலம் கழுவுநீர் சேகரித்தல்
- நாளொன்றுக்கு 10,000 லிட்டர் கழுவுநீர் சேகரிக்க சுத்திகரிப்பு கலன் அமைத்தல்
- தேவையான நீரேற்றி மற்றும் சார்பொருள்கள் நிறுவுதல்
- சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிப்புத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைத்தல்
- தோட்டங்கள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல்
- உபரிநீரை நிலத்திற்குள் செலுத்துதல்.

இத்திட்டம் 2006-2007-ல் ரூ. 5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

[2006 ஆகஸ்ட் 10

## 3. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாசு தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் குறைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக 1978 மற்றும் 1988-ல் திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, 1991-ல் திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1977, 1987-ல் திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆகியவற்றையும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-ன் உரிய அம்சங்கள் மற்றும் விதிகளையும் செயல்படுத்துகிறது.

### 3.1. நிறுவன அமைப்பு:

வாரியம், 1982 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, சென்னையை அதன் தலைமையிடமாகவும் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களுடன், செயல்பட்டு வருகிறது. வாரியம், பகுப்பாய்வு மற்றும் விஞ்ஞானத் துறையில் உதவிடும் வகையில் 3 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், 10 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் மற்றும் ஒரு நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

### 3.2 தொழிற்சாலை மாசு கண்காணிப்பு மற்றும் இசைவாணை வழங்கும் நடைமுறை:

தமிழ்நாட்டில் வேகமாகப் பெருகிவரும் தொழிற்சாலைமயமாக்கல் காரணமாக, தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. வாரியம், முறையான ஆய்வு மற்றும் மாதிரிகள் பகுப்பாய்வு ஆகியவற்றின்மூலம் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பணிகளுக்காக, தொழிற்சாலை செயல்பாடுகளைக் கண்காணித்து வருகிறது. வாரியம், 31-3-2006 வரை நீர் மற்றும் காற்று சட்டங்களின்கீழ், முறையே தொழிற்சாலை அமைப்பதற்கு 6,034 மற்றும் 5,962 இசைவாணைகளையும், தொழிற்சாலை இயக்குவதற்கு 24,957 மற்றும் 22,103 இசைவாணைகளையும் வழங்கியுள்ளது. மாசு தடுப்பு நடவடிக்கைகளை தொழிற்சாலைகள் முறையாக செயல்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாசு தடுப்பு சாதனங்களின் செயல்பாடுகளை சீரிய முறையில் கண்காணித்து, வாரியத்தின் தொடர் இசைவாணை, மாசு தடுப்பு முறைகளை முழுமையாக நிறைவேற்றிய தொழிற்சாலைகளுக்கு குறித்த நேரத்தில் வழங்கப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 10]

### 3.3. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்:

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டாக அமைந்திருக்கும் சிறு முதலீட்டு தொழிற்சாலைகள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் தீவிரமான திட்டத்தில் வாரியம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறு முதலீட்டு தொழிற்சாலைகளுக்கு, பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிதி ஆதாரங்கள் திரட்டுவதிலும், நிலங்கள் வாங்குவதிலும், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டக் கருத்துருக்களைத் தொழில்நுட்ப நுண்ணாய்வு செய்வதிலும் உதவி செய்கிறது. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்கள் கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகளுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது:

| பிரிவு | பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அ. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 24 திட்டங்கள் |
| ஆ. சலவை மற்றும் சாயப் பட்டறைகள் | 25 திட்டங்கள் |
| இ. உணவகம் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் |

இதுவரை 'உத்தேசிக்கப்பட்டுள்ள 50 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களில், 14 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காகவும், 18 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 'சாயப் பட்டறைகளுக்காகவும், 1 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், உணவகம் மற்றும் தங்கும் விடுதிகளுக்காகவும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 10 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காகவும், 7 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சாயப்பட்டறைகளுக்காகவும் பல்வேறு கட்டங்களில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழக அரசு, 48 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 25.90 கோடியினை மானியமாக வழங்க அனுமதி அளித்துள்ளது. இதில் 31-03-2003 வரை ரூபாய் 22.66 கோடி, வாரியம் மற்றும் தமிழ்நாடு தோல் மேம்பாட்டுக் கழகம்மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2003-2004, 2004-2005, மற்றும் 2005-2006 ஆண்டுகளில் மாநில அரசு மானியம் ரூபாய் 86.49 இலட்சம், திருவாளர்கள் கோவை தெலுங்குபாளையம்

[2006 ஆகஸ்ட் 10

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கும், ரூ.114.32 இலட்சம் திருவாளர்கள் பெருந்துறை பொது சுத்திகரிப்பு நிலையம் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

### 3.4. காற்றின் தன்மை கண்காணிப்பு:

நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளிலிருந்தும், வாகனங்களிலிருந்தும் வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும் புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை மாசடைகிறது. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) 1981 சட்டத்தின்படி தமிழ்நாடு அரசினரால் மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3.4.1. சுற்றுப்புற காற்றுத் தன்மை கண்காணிப்பு:

தேசிய சுற்றுப்புற காற்றுத்தரக் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ், சென்னை (3 இடங்கள்), கோயம்புத்தூர் (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்) மற்றும் சேலம் (1 இடம்) ஆகிய பெரிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தன்மையை வாரியம் கண்காணித்து வருகின்றது. மாநில சுற்றுப்புற காற்றுத்தர கண்காணிப்பு திட்டத்தின்கீழ் வாரியம், சென்னை மாநகரத்தில் 5 சுற்றுப்புற காற்று தரக் கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்துள்ளது. இத்திட்டங்கள் சுற்றுப்புற காற்றின் தன்மையினை நகரங்களின் குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் நுட்பப் பகுதிகளில் கண்காணிக்கின்றன.

### 3.4.2. வாகனப் புகை கண்காணிப்பு:

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆலந்தூர், மாதவரம் மற்றும் அம்பத்தூர் ஆகிய 3 இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்களை அமைத்து, சரக்குப் போக்குவரத்து வாகனங்களுக்கு வாகனப் புகை கண்காணிப்பினை 1992 ஆம் ஆண்டு முதல் செய்து வருகிறது.

வாகனங்கள் வெளியேற்றும் புகை தரக் கட்டுப்பாட்டினை மீறும் பட்சத்தில், அதனைச் சரிசெய்து வாகனப் புகையினைத் தரக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபிறகு, வாகனங்களுக்குத் தரச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மேலும், போக்குவரத்துத் துறை, சென்னை நகரக் கூட்டுப்பகுதியில் வாகனங்கள் வெளியேற்றும் புகையினைக் கண்காணிக்க 97 தனியார் அமைப்புகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.



06 ஆகஸ்ட் 10]

### 5. நீரின் தன்மை கண்காணிப்பு:

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் ்க்கிய நோக்கமானது, நீரின் முழுத் தன்மையைப் பேணுதல் மற்றும் ரமைத்தல் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற நீரின் தன்மையை ழுங்காக கண்காணிப்பது அவசியமாகிறது. தமிழ்நாடு மாசு ட்டுப்பாடு வாரியம், நீரின் தன்மையை இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டம் (மினார்ஸ்) மற்றும் புவி ற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு திட்டம் (ஜெம்ஸ்) மூலம் கண்காணித்து ருகிறது. இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு ிட்டத்தின்கீழ் (மினார்ஸ்) தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை போன்ற ஆறுகள், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஏரிகளின் ரின் தன்மையும் கண்காணிக்கப்படுகிறது. மேற்கூறிய இரண்டு ிட்டங்களின்கீழ் காவிரி ஆறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் நிதி உதவியளிக்கிறது. சென்னை மாநகர நீர் வழிகளின் மாசு அளவை அறிய, ஒவ்வொரு மாதமும், நீர் மாதிரிகள் மற்றும் அவற்றில் கலக்கும் தொழிற்சாலை கழிவுகளின் நீர் மாதிரிகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

### 3.6. தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் மேலாண்மை:

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை எடுத்து வருகிறது. வாரியம், இதுவரை, 2,610 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்துள்ளது. அவற்றுள் 2,512 தொழிற்சாலைகளுக்கு, தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 1989 மற்றும் 2000, 2003 ஆண்டு திருத்தங்களின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்தில், தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களை சுத்திகரித்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்த தேர்வு செய்யப்பட்டு, அந்த இடம் அரசினால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. வாரியத்தின்

நிறுவுவதற்கான இசைவாணை வழங்கப்பட்டபோதிலும், சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் மேற்கொண்டு முன்னேற்றம் ஏதுமில்லை.

இதைத் தவிர்த்து, திருப்பூர் மற்றும் கரூர் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு முறையே திருப்பூர் தாலுகா, நல்லூர் கிராமம், கருப்பக்கவுண்டர்பாளையம் மற்றும் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் அமைந்துள்ள மத்தகிரி கிராமத்தில் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுத்திகரித்து, பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்த இடத்தைத் தேர்வு செய்துள்ளனர். மேலே குறிப்பிட்ட இடங்கள், அரசினரால் மேற்கூறிய வசதிகளை ஏற்படுத்துவதற்கான இடம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**3.7. மருத்துவ நுண்ணுயிர் கழிவு மேலாண்மை:**

வாரியம், இதுவரை, 2,449 தனியார் மருத்துவமனைகளையும், 317 அ சு மருத்துவமனைகளையும் கண்டறிந்துள்ளது. மாநிலத்தில் உள்ள தனியார் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களுக்காக, மருத்துவ நுண்ணுயிர் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் பொது அமைப்புகளை ஏற்படுத்த 11 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் 9 அமைப்புகள் இயக்கத்தில் உள்ளன, மீதமுள்ள இரண்டு அமைப்புகளின் பணிகள் பல்வேறு கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**3.8. நகர திடக் கழிவுகள் மேலாண்மை:**

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக் கழிவுகள் உருவாகும் அளவு அதிகரிப்பதாலும், அறிவியல்ரீதியாக, நகர திடக் கழிவுகளை மேலாண்மை செய்வது அவசரத் தேவையாகிறது. வாரியத்தால் 90 நகராட்சிகளுக்கும் மற்றும் ஒரு மாநகராட்சிக்கும் தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 45 நகராட்சிகளுக்கு வழங்கப்பட்ட தடையில்லாச் சான்று அனுமதியாக மா ற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நகராட்சி அல்லது ஒரு சிறப்பு ஊராட்சிக்கும் முறையே ரூபாய் இரண்டு இலட்சம் மற்றும் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் முன்னோடி நகர திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த வழங்கப்பட்டுள்ளது.





**3.9. பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை:**

தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் வரைமுறையற்ற உபயோகம் மற்றும் வெளியேற்றத்தினால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவது உணரப்பட்டு, வாரியம் பல்வேறு நிகழ்ச்சிகள்மூலம் விழிப்புணர்வு இயக்கங்களைத் துவக்கியுள்ளது. இந்த விழிப்புணர்வு இயக்கத்தின் நோக்கமானது தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தைத் தவிர்ப்பதையும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பிளாஸ்டிக் அற்ற மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துவதையும் விளக்குவது ஆகும். வாரியம் 1,635 பிளாஸ்டிக் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு இயக்க இசைவாணை வழங்கியுள்ளது.

**3.10. வாரியத்தின் இதர செயல்பாடுகள்**

**3.10.1. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்:**

சுற்றுச்சூழல் பயிற்சி மையம், டென்மார்க் நாட்டின் டானிடா நிதி உதவியுடன் 1994–ல் கிண்டியிலுள்ள தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டது. 31–03–2006 வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் 293 பயிற்சிகளையும், 12,618 நபர்களுக்கு பயிற்சியினையும் அளித்துள்ளது.

**3.10.2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு:**

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்க்க, சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முக்கிய சுற்றுச்சூழல் தகவல்களின் சிறப்பினைக் கூறுவதற்காக, பல விழிப்புணர்வு இயக்கங்கள், பயிலகங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தீபாவளி மற்றும் போகி போன்ற விழாக் காலங்களில் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கெதிராக சிறப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது

**3.10.3. தூய்மையான தொழில்நுட்பங்கள்:**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகள் கழிவுநீரைச் சுத்திகரிக்க மேற்கொள்ள் செய்வது மட்டுமன்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தத் தூய்மையான தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளது. தொழிற்சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்முறைகளுக்கு மாறி வருகின்றன.

**3.10.4. பசுமை போர்வை திட்டம்:**

மாசினைத் தடுக்கும் வழிமுறையாக, தொழிற்சாலைகள் தனது வளாகத்தில் 25 சதவீதம் நிலப்பரப்பில் அடர்த்தியான கிளைகளைக் கொண்ட மரங்களை வளர்க்க வலியுறுத்தப்பட்டது. அதன்படி, தொழிற்சாலைகள் போதிய அளவு மரங்களைத் தனது வளாகத்திலும் மற்றும் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொண்டன.

**3.10.5. சுற்றுச்சூழல் வரைபடம்:**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது. இதன் முதல் கட்டமாக திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கோயம்புத்தூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடம் மற்றும் சென்னை மாநகருக்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடம் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3.10.6. பசுமை விருதுகள்:**

சீரிய பணியின் மூலம் நிலைத்தகு வளர்ச்சியினை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகிய பணியினைத் தனது மாவட்டத்தில் ஊக்குவிக்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்குப் பசுமை விருதுகளை வழங்க, தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள், அவர்களது தனி முயற்சியாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும், நிலைத்தகு வளர்ச்சிக்காகவும் மேற்கொண்ட பணிகளைக் கருத்தில்கொண்டு, பசுமை விருதுகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இவ்விருதுக்கான மாவட்ட ஆட்சியாளர்களை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அரசு செயலா அவர்கள் தலைமையிலான குழு ஒன்று தேர்வு செய்யும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227423
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.